உ

வேலுமயிலுந் துணை.

நாவினுன் மழுவெடுத்த ஞானப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

செங்குந்த புராணம்.

இஃது

வட ஆற்காடு திருப்பத்தூர்

வித்வான் ஆ. க. குமாரசுவாமி முதலியார்,

அவர்களால் தொகுத்து வைக்கப்பட்டு

அன்னார் குமாரர்

திருப்பத்தூர் முனிசிபல் ஐஸ்கூல் தலைமைத்

தமிழ்ப்பண்டிதர்

ஆ. கு. முருகைய முதலியார் அவர்களால்,

வேலூர்,

விக்டோரியா அச்சியந்திர சாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1933

இதன் விலை] [ரு. 0 12 0.

முகவுரை.

பூவுலகின் கண் நமது செங்குந்த குலத்தவரின் பெருமையினை நிலை நாட்டற் பொருட்டு நாவினுன் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகள் நமது செங்குந்த புராணத்தையுஞ் செய்யுளாகப் புனைந்து வைத்துள்ளார் என்னும் செய்தி நெடுங்காலமாகத் தமிழ்ப் புலவர்களிடையே கர்ண பரம்பரையாக உலவி வந்துளது. தமிழ்ப் புலவர் திரு. ஆ. க. குமாரசாமி முதலியார் அவர்கள், அந்நூலினைத் தேடிக்கொணர்ந்து அச்சேற்றிவைக்க வேண்டுமெனும் அவா வினைத்தம் மனதிற்கொண்டு அம்முயற்சியில் அல்லும் பகலும் ஈடுபட்டுழைத்து அப்புராணப் பிரதியொன்றைக்கண்டெடுத்துச்செப்பனிட்டு வெளியிடச் சீர்படுத்தி வைத்திருந்த தருவாயில், தம் எண்ணம் நிறைவேறாது செங்குந்தவுலகம் வருந்த விண்ணுலகடைந்தனர். தந்தை மேற்கொண்ட பணியைத் தாமும் என்று. அதனை முந்தை எண்ணியாங்கு முற்றுவித்தலே மகன்றந்தைக் காற்றும் மாணுதவி என்பதைத் தமது வாழ்க்கையின் சீரிய இலட்சியமாகக் கடைப்பிடித் தொழுகிய, திருப்பத்தூர் ஐஸ்கூல் தமிழ்ப் புலவர், திரு ஆ. கு. முருகைய முதலியாரவர்கள் தமது நெடுநாளைய முயற்சியின் பயனாகக் குலாபிமானமிக்க பல செங்குந்த திருவாளர்களின் பொருளுதவி கொண்டு செங்குந்தர் புராணத்தினை அச்சேற்றி முடித்துச் செங்குந்த மக்களின் நன்றிக்குப் பாத்திரரானது மட்டுமன்றிப் பழந்தமிழ் நூலொன்றைத் தமிழுலகிற்குப் பரிசளித்த பெரும் பேற்றைப் பெற்றாராயினர்.

இவர்கள் தம்புகழ் என்றும் நிலவுக.

சேத்துப்பட்டு,
சென்னை,
26—2—1933.

ம. சண்முகசுந்தர முதலியார்,
எம். ஏ. எல். டி.,
செங்குந்த மித்திரன், சென்னை.

சாற்று கவிகள்.

பூவினன் முகன்றிருமால் புத்தேளிர் பூத்தொளிர்பொன் னுலகங் காக்கும்,
காவினு னிவர்வேண்டச் சூர்மாய்த்த கந்தவே ளிளைஞர் தஞ்சீர்,
சேவினு னருள்கொண்டு செந்தமிழாற் கவிசெய்தான் சேய்ஞ லூர்வாழ்
நாவினன் மழுவெடுத்த ஞானப்பிர காசனருந் தவத்தோ னம்மா.

சங்குந்து வயல்மேவு திருப்பத்தூர் சார்ந்தவனற் றமிழில் வல்லான்,
நங்குந்த குலப்பெரியன் குமரசா மிக்குரிசில் நாடி வைத்த,
செங்குந்தர் புராணமதை யவன்றவச்சே யச்சேற்றிச் சிறப்பி னீந்தான்,
எங்குந்தன் சீர்பரவத் தமிழ்ப்புலவன் முருகைய னெனுந்தக் கோனே.

ஐயங்கார்குளம் சைவ புராணிகர்

அ. க. பொன்னுசாமி முதலியார்,

அவர்களால் இயற்றியவை.

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901

பதிப்புரை.

உலகின்கண் வடக்கே பனிவரைக்கும் தெற்கே கன்னியாகுமரிக்கும் இடையே பரதகண்டமென்று வழங்கப்படும் இந்நிலப் பரப்பில் பல நாடுகளும் அந்நாடுகளில் பல் வேறு குழுவினரும் பண்டைக்காலந் தொட்டு வழி வழி வாழ்ந்து வருகின்றனர். மக்கள் பொதுவாகத் தோற்றத்தில் ஒத்த தன்மையினராயிருந்தும் தொழில் வேறுபாட்டால் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என அழைக்கப்பட்டனராயினும் வேறு பாடின்றிக் கலந்து வாழ்ந்து வந்தனர்.

பிற்காலத்தில் இப்பரதகண்டத்திற் கப்பாலுள்ள பல நாடுகளிலிருந்து இங்கு குடியேறிய மக்களின் பல வேறுபட்ட ஒழுக்கத்தோடுங் கலந்து நாளடைவில் தத்தம் பிறப்பொழுக்கம் குலவொழுக்கம் இன்னதென்பதையும் விதிவிலக்கு இன்னதென்பதையும் அறியாது மாறுபட்ட ஒழுக்கத்தால் தற்போது எண்ணிறந்த குலங்களாக மதிக்கப்பட்டு இதனால் இயற்கை வாழ்க்கைக்கு இடையூறுறுய் பெருங் குழுவினர்களும், ஒரு சிறுங் குழுவினரான பாகு பாடுற்று துன்புறுகின்றனர். அவரவர்கள் தத்தம் பழைய பிறப் பொழுக்க மின்ன தென்றுணர்ந்து விதிவிலக்குகளை ஒட்டி ஒழுகின், வாழ்க்கை சிறப்புறும். ஆதலின் அவர்கள் அவரவர்களது பண்டைய சரிதங்களை யுணர்ந்து நடத்தல் இன்றியமையாத தாகும்.

நமது செங்குந்த குலத்தின் வரலாறுகள் சிறுசிறு நூலளவில் சிதறுண்டிருப்பதை ஒருங்கு சேர்த்து நம்மக்கள் யாவரும் எளிதில் உணர்ந்தொழுகும் வண்ணம் அவைகளைக் கோர்வைசெய்து அச் சேற்றிவைக்க அவாக்கொண்டு என் தந்தை தமிழ்ப்பண்டிதர் ஆ. க. குமாரசாமி முதலியார் பல இடங்களில் தேடுகையில் நாவினுன் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றிவைத்திருந்த செங்குந்த புராணமென்னும் நூல் கிடைக்கப் பெற்றுக்கொணர்ந்து செப்பனிட்டு அச்சேற்ற முயன்றும் அவர் காலத்தில் அவர் கொண்ட அவாமுற்றுப் பெற்றிலது.

இந்த செங்குந்த புராணம் நம் செங்குந்த உலகிற்குப் பெரும் பயனளிக்கு மெனக் கருதி இதனை நான் அச்சிடத்துணிந்தேன்.

ஆகையால் ஒவ்வொரு செங்குந்த மக்களும் செங்குந்தப் புராண
புத்தகம் ஒவ்வொன்று தவறாமல் வாங்கிப் படித்தறிந்து பொன்னே போல
போற்றி ஒழுகத்திருவருள் புரியுமாறு நங்குல தெய்வமாகிய முருகப்பெ
மானைப் பன்முறை இறைஞ்சுகின்றேன்.

இப்புராணம் அச்சிடத்தொடங்கிய முதல் முற்றுப்பெறும் வரையி
உடனிருந்து உதவிய நளாயனிவெண்பா நூலாசிரியர் திருவாளர் கா. ஆ
சண்முக முதலியார் அவர்களுக்கும் இதற்கு நன்கொடையாகப் பொருளுத
முற்றுவித்த திருவாளர்களுக்கும் எனது மனமுவந்த நன்றி செலுத்த
கடமைப்பட்டுளேன்.

நம்மவர்களும் ஏனையோரும் வாங்கிப் படிக்கும் பொருட்டு இதன்
விலை 0—12—0 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கும். சென்னை
செங்குந்த மித்திரன் ஆபீசிற்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் தபா
செலவு வேறு.

இங்ஙனம்;

ஆ. கு. முருகைய முதலியார்,
தமிழ்ப் பண்டிதர்,
செங்குந்தர் வீதி திருப்பத்தூர்,
N. A. D

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com

உ

வேலுமயிலுந் துணை

செங்குந்தபுராணம்

பாயிரம்

முத்தபிள்ளையார்.

பொன்னாரும் வடிவமறைப் பொலிவாரு மோங்காரப் பொருளைக் காட்ட
மின்னாருஞ் சடைமுடியிற் றண்ணாரும் விரிநிலா விளக்கங் காட்டச்
சொன்னாறுங் கழலிணைகள் தொழுவார்க்குத் துணையாகத் துலக்க மில்லாக்
கன்னாறு மனங்கனியக் களிற்றுனை முகத்தானைக் கருத்துள் வைப்பாம். 1

இறையனார்.

விருத்த ராகியும் விடையின ராகியும் வெய்தாம்
வருத்துஞ் சூலைய தாகியுங் குருந்தடி வந்துந்
திருத்த மாயிகந் தோன்றுசுந் தரன்முதற் றெளிஞர்க்
குரைத்த தெப் பொரு ளப்பொரு ளருட்டுணை யுணர்வாம். 2

இறைவியார்.

சிவமெ னும்பொரு ளிடத்திருந் தெவ்வுயிர்த் திரளு
நவந வந்தரு போகமுண் டுஞ்சலி னடிப்பத்
தவமி ருந்தவர்க் காந்துணை யாய்ப்பதி சார
வெவ்வ ருட்செயு மவண்மல ரடிமனத் தெணுவாம். 3

இளையபிள்ளையார்.

ஒப்புயர்வொன் றில்லாத வுமைகேள்வ னுதல்விழியி னூடு தோன்றி
யப்பரமன் றனேயா யனைத்துலகும் படைத்துக்காத் தழிப்பா னாகி
செப்புறுவின் னவர்முனிவ ருயிர்க்குயிரா யுள்ளொளியாய்த் துலங்கி நின்ற
சுப்பிரமா மணிப்பெருமா டுணைமலர்த்தா ணந்தமக்குத் துணையா மன்றே. 4

நவவீரர்.

வேணிக்க ணற்குரு மீதடர்ந்த வெற்பிமயப் பைங்கொடியே வித்தாச் சென்று
காணிச்செ நிறமாறித் தத்தஞ் சோதி காலுநவ மணியூடே பதிந்திட் டவ்வே
ராணிச்சி வாதித்த னுதயத் துஞ்செல் லூற்றருளா லதுதழைத்துப் படரு மொன்பான்
மாணிக்க வல்லிமுதற் கொடிய லர்ந்த மலர்களகத் தாமரையில் வைத்தா மன்றே 5

நால்வர்.

என்புருவம் பெண்ணுருவ மாக்கினோன் மறைப்பனவ னீன்றெ டுத்த
நன்புதல்வர்க் குயிரளித்தோ னுவாரச் செந்தமிழை நயந்து பாடி
முன்புகரா விழுங்கியசேய் வரப்பெற்றோர்க் குறுதுயர முன்னொழித்தோ
னன்புருவந் தன்னுருவ மாயினோ னிவரெம்மை யாண்டா ரன்றே. 6

திருத்தொண்டர்.

சேய வேனம்பி யென்றொரு நம்பிசெப்
பாய தொண்டத் தொகையுண்மெய் யன்பர்க
டூய தாண்மல ரேத்தித் துகளின்மா
மாயை வென்று மனஞ்சலிப் பாறுவாம். 7

கலைமகள்.

வெள்ளைத் தாமரை மீதமர் செல்விநாற்
கள்ளை யுண்டு களிக்குங் கவிஞர்கள்
கொள்ளை கொள்ளக் குலவரு ளீவளென்
னுள்ளத் தாண்மலர்த் தாளெமை யோம்புமே. 8

ஒட்டக்கூத்தர்.

கோறலினாற் சிவனென்கோ வாயிரத்தெண் குறைத்தலையுங் கவந்தத்தோ டொட்டிச் [சீவன்
றேறவினா லயனென்கோ வென்றுநந்தாச் செல்வமுற வாழ்த்துதலாற் றிருமாலென்கோ
வீறணிள நகையமுத வாயாற்குந்த ம்விளம்புதலா னந்தியெனு ம்வீர னென்கோ
கூறவலேன் கவியொட்டக் கூத்தனென்றே குலோத்துங்க வரசுமகிழ் குரிசிற் றாழ்வாம்

வாழ்த்து.

மாமறைத் தமிழ்வி ளங்க மறைநெறிச் சைவ மல்க
பூமரும் பயிரா னோங்கப் பொழியவா னுலகம் பல்க
காமருஞ் சுரர் விளங்க கதிரவன் குலத்தோ டொன்றுங்
கோமா னினிது வாழ்க குவலயத் தாசன் வாழ்க. 10

அவையடக்கம்.

நாட்டிலெலாஞ் சொற்றனபோ லன்றுபெரும் புகழணவ நாட்டிற் சொற்ற
வீட்டியெழு பதுகனகக் குடமதனிற் றமிழமுத மிடுமெங் கூத்த
னீட்டுபொருட் கருநூல மற்றதனை விளக்குகின்றே னென்னுக் கொண்டே
பாட்டினரும் பொருளுள்ள வாறுரைத்தாற் பழுதுரைக்கும் பாரு முண்டோ.

அதிகாரி.

வஞ்சச்சூ ரகன் றன்னை மாய்த்தவீர வாகுவெனல்
விஞ்சவ்வாகு வையென்ன வீரங்கோனென் றிடமருவி
செஞ்சொற்புனை வைக் கோள்வலவர் தேர்வ ரன்றி யிந்நூலை
நெஞ்சி லழுக்கா றில்லாரு நேரி தென்னக் கொள்வாரே. 12

விடயம்.

எண்ணுந் தமிழா லினிதாகும் விருத்தப் பாவா லிசையிந்நூல்
வண்ணப் புனித நிலையாகி வாழை யடியின் வாழையென
மண்ணிற் பொலியுஞ் செங்குந்த மக்கட் கெல்லாங் காதலத்தி
னண்ணு கெல்விக் கனியதனி னூட்டுந் தங்கள் குலநலமே. 13

சம்பந்தம்.

முனிவர் மூல நதிமூல முளரி மூலஞ் சசிமூலம்
பனிதன் பகையா னவன்மூலம் வந்து தோனறும் பரிசன்று
சனியெண் குணமூர்த் தானுஞ்சங் கரனெம் பரமன் றன்மூலம்
தனிசெங் குந்தங் கைக்கொண்ட தக்கார் மூலஞ் சாற்றிடினே. 14

பிரயோசனம்.

திங்கட் பிறைவெம் பணியணியுஞ் சிவனார் மைந்தர் வழிவந்தார்
தங்கட் குரிய குலதருமந் தருந ஞ்சைவ சார்புதருந்
துங்கத் தவமே தருமறிவுந் தூய்மை தருமெய் யுணர்வுதரும்
பங்கப் பிறவிக் கின்மைதரும் பரமன் சரணப் பதிதருமே. 15

சிறப்புப்பாயிரம்.

பூவினு காதநறு மணநாறு கூந்தலுமை புதல்வர் கூத்தர்
பாவினன் மணநாறுஞ் செங்குந்தர் சரிதமதைப் பகர்ந்தான் கும்பக்
கோவனன் செந்தமிழாற் றிருச்சேய்ஞ்ஞ லூரானோர் குலம்வெல் பாக்கு
நாவினன் மழுவெடுத்த ஞானப்பிர காசநா வலவ ரேறே. 16

பாயிரமுற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை

நாட்டுப்படலம்

நிறையு மாமுகில் பெயலரு தோங்க மெய்ந்நிலவ
மறையொ ழுக்கமெக் குடியினும் பொதுவெ னல்வளாக்
கறைமி டற்றவ னடிமருக் கவின்முடி வளவர்
முறைசெ லுத்திய சோழநாட் டணிவள மொழிவாம். (1)

சோதி மீண்டுமீந் திடுமென வஞ்சிவெண் சுதையம்
போதி விண்படர்ந் தாலென விளங்கிவான் பொதிகை
யாதி மாமுனி பருகுமென் றஞ்சிக் கார்க் கடல்விண்
மீதெழுந் தெனக் கடல்குடித் தெழுந்தன மேகம். (2)

மயின டித்திட வானளா வியமலர்க் காவிற்
குயிலொ ளித்திடக் குறித்திடு முழவெனக் குமுறிப்
புயல கத்தெழு முறுமொலி யெழுப்பிவெம் போர்க்கு
வெயில்செய் கோடையாம் பகைகெட வெழுந்தன வன்றே. (3)

மண்ம டந்தைத ளுகவெப் பாற்றுவான் மகிழ்ந்தே
நண்ணும் வர்னதி முகந்துபே ரொலியெழ நக்கா
ரெண்ணில் பற்பல குடங்கொடங் கெழின்மலைத் தலையில்
விண் மடந்தைநீர் சொரிந்தெனச் சொரிந்தன வானம். (4)

வெப்பு நீங்குமண் மகண்முலை சுரந்தகம் விழையா
வொப்பி லாருயிர்க் குழவிக ளுண்டுயிர் வாழத்
தப்பில் பாலெனச் சையகின் றிழியரு விகடா
மெப்ப ரப்பினு மோடியொன் ருயிணங் கினவே. (5)

காந்து பன்னிற மணியொடு மலரலைக் கையாற்
சாந்த மும்மகிற் றுண்டமு மாஞ்சினைத் தளிரு
மேந்தி நஞ்சிவ பூசனைக் கேகுறு மிமையோர்
வேந்தெ னும்படி நடந்தது காவிரி வெள்ளம். (6)

வெயின்ம ணித்திர ளேந்திப்பல் பொருளுடன் விரவிப்
பயிலு மாவினம் படர்தரப் பாய்ந்திறை பொன்னி
செயிரு ருவிறல் வளவனுண் மகிழ்வளஞ் சேர்க்கும்
வயிர மாற்றிய மாப்படைத் தலைவனே மானும். (7)

---

(1) கறைமிடற்றவன்—சிவன். வளவர்—சோழர். (2) சோதி—சிவபிரான். சுதை—பால். அம்போதி—கடல். (3) உறும் ஒலி—இடியொலி. (5) சையம்—காவிரிநதி தோன்றும் மலை. (7) மாவினம்—வனவிலங்குகள்.

யாவ ரேனுநல் கூர்ந்தவ ருளர்கொலோ வென்றே
யாவ லோடவர் வயினடைந் தளிதலைக் கொடைபோற்
கூவ மோடைநீள் தடமடு குளநிறை பொன்னி
காவ யற்புறங் கால்கொடு கடந்தளித் ததுவே. (8)

வேயின் முத்தமு மணிகளும் வெற்பிட மேற்றங்
காயர் முல்லையின் மாறியா னமுதமங் கேற்று
நேய பானலங் கூறிநென் முதலவை ணேற்று
பாயு மோதமே பண்டமாற் றெட்டியர் போலும். (9)

போக முண்டவந் நாகம்விண் டைவகைப் பொறியின
சோகம் விண்டுசி வானந்த வாரியாழ் சூரர்போல்
வேக மும்பல வலைச்சலுஞ் செயத்தகும் வினையுஞ்
சாக ரங்கலந் தொழிந்தது பொன்னிதற் போதம். (10)

வேறு.

செய்யவடி வேலிறைதாட் செங்கமலந் தொழுதுசிலைக்
கையகலா வனசரர்கள் காடெறிந்து கொத்திடங்க
ளொய்யெனலை கடலாடை யுலகமகண் முலைமீது
தொய்யிலெழு தியதேய்ப்பத் தோன்றியவான் மலைகளெல்லாம். (11)

மறந்தாங்கு திருநேமி மான்மகிழுஞ் சிறப்பாற்றி
யறந்தாங்கு மாயரெலாங் குழலூத முல்லைநிலம்
பிறந்தோங்கு மெருதினங்க டிணைத்துணையாய்ப் பிணிப்புண்டு
நிறந்தாங்கும் பலவேறு நிலம்புழுதி படவுழுமால். (12)

நத்தூறு மருதநில நாதவெனப் பொன்னுலகப்
புத்தேளிர் கோவையுனிப் பொன்னேர்முன் னுறப்பூட்டி
யொத்தூறும் பகடுநிறை யுறுமுறையிற் செலப்பாடிச்
சிற்றூருண் மள்ளரெலாஞ் செறிந்துழுத றலைப்பூண்டார். (13)

ஆறெழுகுங் காலொலியு மந்நீரைத் தடுமொலியுங்
காறெழுகு பேரொலியுங் களமரிடு வித்தொலியு
நீறெழுகு நுதலினலார் நிரைநிரையாய் நடுமொலியு
மாறெழுகு மொலியாகி மலிகடல்வா யடக்கினவே. (14)

(8) நல்கூர்ந்தவர் — வறுமையுற்றோர். (10) நாகம் — விண்ணுலகம். (11) வனசரர்-வேடுவர். தொய்யில்-முலையிலெழுதுங்கோலம். (13) நத்து—சங்கு. பகடு—எருமைக்கடா. (14) காறு—உழுபடை. களமர்—உழவர்.

வேறு.

மட்படாம் விலகிக் கொங்கை வயன்முகம் பார்க்கப் பைங்கூழ்
கட்படா முன்ன நோக்கிக் கடைச்சியர் களைக டீர்ந்தார்
நட்படு படைக ளாகி நாயகர்த் தணைந்தார் நெஞ்சி
னுட்படு கமல நீல முறுபகை யாகு மென்றே. (15)

சுரும்புக ளுதைந்து பாடுஞ் சோலைவாய் புதுமை யாய
வரும்புகட் டவிழுந் தேற லாம்பிரக் கனியின் றேற
லரம்பையங் கனியின் றேற லம்புயத் தேற லோடும்
வரம்புகட் டவிழ வோடி வளர்ந்தன சாலி யெல்லாம். (16)

தாரணி யுயிர்கண் முன்னைத் தாஞ்செய்நல் வினைப்ப யன்றா
னேருமற் றுடம்பிற் சாரு நிழலெனல் விளங்க வன்றே
யேரணி யுழவர் தாளா லிகமெலாஞ் சுகமு ணர்க்கே
பூரண விளைவுண் டாகிப் பொலிந்தன பைங்கூ ழெல்லாம். (17)

மாலெனப் பசந்து முன்னை மண்ணினை யளந்த வன்னோன்
போலென நெடிய வோங்கிப் பொன்னிறக் கதிர்கள் வாய்ந்து
மேலெனுங் கற்பு வாய்ந்த மின்னனா ரென நுடங்குஞ்
சாலியைப் பருவத் தோங்குந் தமனிய மலையிற் சேர்த்தார். (18)

இரவலர் தெய்வந் தம்பா லேற்றவர்க் குதவி மற்றுங்
கரமுகந் தளவிட் டாறி லொன்றெனுங் கடமை காக்கும்
புரவலர்க் கீந்து நன்செய் புன்செயின் விளைவும் பூமி
நெரிபடச் சகட்டி லேற்றி நிறைப்பர்த மில்லின் மாதோ. (19)

மணங்கமழ் முல்லை யீன்ற வாலரும் பனைய மூரல்
பணஞ்செயும் பொன்னை யன்ன பருப்பிர சதப்பொ ருப்பி
னிணங்கெழிற் சிகர மென்ன விட்டுபுத் துருக்கு நெய்வார்த்
துணும்பொருட் டியாவ ரென்ன ஆட்டுவ ரினிய கூறி. (20)

சங்கம ரென்று வந்தாற் றடையிலா தவர்கள் வேட்ட
வங்கையிற் கொடுப்ப ரன்ன நடுநிசி யதினு மீவர்
தங்குல மடந்தை யோடுந் தட்டினின் றிடையுஞ் செய்வர்
தங்கற மிவர தென்றாற் சாற்றுவ தெவனோ வம்மா. (21)

---

(16) ஆம்பிரம்—மாமரம். அரம்பை—வாழை. (17) தாள் — முயற்சி.
(18) சாலி—நெற்பயிர். (20) மூரல்—சோறு.

இல்லறம் புரியு நன்கா மியல்பினர் துணையான் மன்னர்
சொல்லறம் புரியுஞ் செங்கோற் றுணைகொடே முனிவ ரெல்லா
நல்லறம் புரிவ ரன்னோர் நற்றுணை கொண்டே யும்பர்
செல்லறம் புரிவ ரிந்த தேயத்தி லென்று மாதோ. (22)

வேறு.

சந்திழை சேருங் கலவையுந் திமிர்ந்த தமனியக் குடம்புரை தனந்த
சுந்தரப் பருவ மாதரி னரம்பை தொடைகடி தடமா சிலையா
நந்தனச் சூத மேனியாய்க் குயில்க ளுதமாய் முலையிள நீராய்க்
கந்தரங் கமுகாய்க் கமலநன் முகமாய்க் கவின்செயுங் கடிகமழ் காவே. (23)

தடமெலாங் குவளை மலர்களுங் கஞ்சத் தண்டிரு மலர்களுங் காவி
னிடமெலாஞ் சூத மலர்களும் பிண்டி யெழினறு மலர்களுங் கானத்
தடமெலா முல்லை மலர்களு மருதச் சார்பெலாங் கன்னலும் பொலிந்து
மடமுலாம் பெண்க டானையாய் மிகுத்த மதன்சரத் தூணியைக் கடுக்கும் (24)

கழைபடப் பிழியு மாலைவா யிரதங் காய்ச்சலா லெறிநறும் புகையுங்
குழைபடு செவிய ரந்தண ரவியாற் கொழுந்தெழு மகம்புரி புகையு
முழைபடு மலையி னிரவுளர் திருத்தி முதுபுன மெரிமடு புகையு
மழையொடு முரணி புகையுருக் கரந்து வானகத் திடமெலாம் பரந்த. (25)

காவெலா மிறையை வழிபடற் கைந்து கவின் பொருளீமென வுதிரும்
பூவெலா மெலிய பஞ்சணை யாக்கிப் புதுமலர் தேன்றுளி துளிப்ப
வாவெலாங் கான நின் றெறீஇக் கன்றோ டவ்விய னுறங்குவ குழலாற்
கோவலா ரிசைக்கு மிசை செவி மடுத்து குன்றுறங் குவமயிற் றொகையே (26)

பொன்னியை யொக்குந் தெய்வத கங்கைப் பொழிலதைக் கற்பகம் பொருந்து
மக்கலா ரெழிலை யணங்கின ரொப்ப ரானிரை தேனுவைப் பொருந்து
மன்னனை யொப்பன் மகபதி நிதிகள் வள்ளியோர் மனந்தனை யொக்குஞ்
சென்னியி னுட்டைத் தேவரா டொக்குஞ் சிவன்றளி கைலையை யொக்கும். (27)

வேறு.

நீறு சூழ்வன நெற்றியைக் காவிரி
யாறு சூழ்வன வவ்வயி னெங்கணும்
பாறு சூழ்வன சோழன் படைப்பெரும்
பேறு சூழ்வன குந்தர் பிறப்பெலாம். (28)

---

(22) உம்பர்—மேலுலகம். (23) கடிதடம் — பெண்குறி. கந்தரம் —
கழுத்து. கா—சோலை. (24) சூதம் — மாமரம். பிண்டி — அசோகு.
(28) பாறு—பருந்து.

பூவி ளங்குவ வண்டொலி யாற்புக
ழாவி ளங்குவ வாய்மையி னற்சொலிற்
பாவி ளங்குவ நாவலர் பான்மறைத்
தேவி ளங்குநற் செந்தமி ழாலரோ. (29)

தாம நாறிய தாழ்குழ லாரகிற்
றூம நாறுவ சூழ்கட லம்பிகை
வாம நாறிய மானிட னன்பெனு
நேம நாறுமிந் நீணிலத் தோர்க்கெலாம். (30)

மருளி ழந்தவிம் மண்டல முன்னிலா
துருவி ழந்தரு வாயின னேமதன்
றெருளி ழந்துகீழ் சேடனுஞ் சென்றனன்
பொருளி ழந்துதக் கேகுங்கு பேரனே. (31)

ஒருவ ராமிரு வோர்க்குறை கோயிலாற்
பெருகு மாவளத் தாலுறும் பெட்பினுன்
மருவு காவிரி வான்புன லாலெழி
றருவ திப்பெரு நாடுத ரைக்கணே. (32)

பேறு நான்கும் பெறற்கிட மாகிய
வாறு சூழ்புன னாட்டி னணிவளங்
கூறு நாப்பல கொண்டு முடிவுறத்
தேறி யிற்றெனச் செப்ப லரிதரோ. (33)

---

(30) தாமம்—மாலை. வாமம்—இடப்பாகம். (31) உதக்கு — வடக்கு. (32) ஒருவராமிருவோர் — சிவனும், திருமாலும். (33) பேறு நான்கு:— அறம், பொருள், இன்பம், வீடு. புனல்நாடு—சோழநாடு.

நாட்டுப்படலம் முற்றிற்று.

வேலுமயிலுந்துணை

நகரப்படலம்

உடல்கொண்ட வுறுப்பொக்குங் குடிமுதல நிரம்புநல முடைய தாகி
யடல்கொண்ட வரசுரிமை பெற்றுயர்ந்தா ரருளுடையா ரான்ற கேள்வி
மடல்கொண்ட தாரார்வேல் வளவர்வழி வழியாளும் வனப்பிற் றுருங்
கடல்கொண்ட புகாரென்ன விளங்குறையூர் வளஞ்சிறிது கழறு வேமால். (1)

ஆழிசுல வுலகில்பல நாடுளவந் நாடுகளை யணிசெ யூர்க
ளூழினுள பலவவற்று ளொவ்வொன்று மோரரசா லுறுமால் வென்றி
வாழியிதைக் கேட்டளவி லாருக்கு மொருவியப்பு மனத்துட் டோன்றக்
கோழிமத மாவென்ற வூரிதெனி லிதன்பெருமை குறிக்க லாமோ. (2)

கால்கொண்டு மழைபொழியக் கவிகைநிழல் செயச்செலுத்துங் கடனு குஞ்செங்
கோல்கொண்ட தான்மன்னன் குளிர்வரையிற் பெறுவளன்மாக் குழுமு கானின்
மேல்கொண்ட வளநாடு தருவளனன் னகர்வளனும் விண்ணிற் பாயுஞ்
சேல்கொண்ட கடல்வளனுந் தன்னகஞ்சே ரிந்நகர்ச்சீர் செப்ப லாமோ. (3)

அறநெறியிற் பிறழாத படைத்தலைவர் வாழிடனு மஞ்சா நெஞ்ச
விறல்வீரர் வாழிடனு மேற்கொடிஞ்சித் தேரிருப்பு வீதி தானுங்
கறையடிவாம் பரிமுதல கட்டிடனு மெயிலரண்சூழ் காவலாக
விறையானை யெதிர்நோக்கி மாறுட்கப் புறவூரி லிருக்கு மன்றே. (4)

விண்ணியங்கு மெற்றேரின் விளங்குவதாய்ப் பரியீர்ப்ப விரைந்து செல்லின்
மண்ணியங்கு முருட்சுவடென் றறியளவா மன்றியுள மதிப்பக் கற்ற
வெண்ணியங்கு வலவர்செலுத் தணிநெடுந்தேர் வீதியிருந் தேற நோக்கிற்
கண்ணியங்கு நெறிகாண விமையவர்க்கு மரிதாவ கணக்கின் றம்மா. (5)

இருப்புலக்கை கையனதன் னிவர்நிழலைச் சுளிவனமற் றிணங்கார்ப் பாயு
மருப்பினவான் மழையென்ன மதவருவி சொரிவனவெவ் வளியிற் செல்வ
பொருப்புறழுந் தோற்றத்த புகர்முகத்த தருகண்ண புரியும் போர்க்கு
விருப்பினகார்க் களிறுறையு ளெண்ணிறந்த நிரைநிரையா விளங்கு மங்கண் (6)

ஐவகையிற் செல்கதிய வணிநலனை மேலுடைய வமர்முகத்த
கைவருகூ ரீட்டியுடை காளையர்சொல் வழிசெல்வ கவினி றத்த
தைவருமே னியவுறுப்பிற் சார்மறுவொன் றில்லனநற் றலையாட் டத்த
கொய்யுளைய பரியினமாழ் கடலலையிற் குழுமினவாற் குணிக்க லாகா. (7)

---

(4) கறையடி — யானை. மாறு -- பகைவர். (5) எல் — சூரியன்.
(6) இணங்கார் — பகைவர்.

தோல்காக்குங் காலுடையர் தொடுகழலர் வயமாலை சூடுந் தோளார்
மேல்காக்கு மங்கியினர் மிளிர்சீரா வணிதலையர் வில்வாள் வட்டம்
வேல்காக்குங் கையினர்வெண் டண்குடைய சோழனெனும் வேந்தற் குச்செங்
கோல்காக்கும் படைவயவர் குளிர்கடலிற் பரந்திருப்பர் கோடி கோடி. (8)

களவொழுக்க முடையோரிற் புறந்தூய்தாய் மறைமுதல கவினக் காட்டி
யுளவாழ மறிவரிதா யுள்ளிழியி லுற்றவுயிர்க் குறுகண் காட்டு
முளியீந்தின் வெரிந்கரவி னிலைஞ்செறியு மகழுடுத்து முற்று மாற்ற
லளவுவெளி காட்டாரிற் பொலிவெயிலைப் புறநகர மணியு மன்றே. (9)

வினைவகையால் வேறாகி யொன்றாகும் விழுக்குடிகண் மிடைந்து செய்யு
மனையறங்கள் வழுவாது வாய்த்ததம மக்கள்கிளை மருவிச் சூழ
வெனைத்துளவின் பமுமார்ந்திங் கெண்ணியவா றேமுடிக்கு மிகவி லாத
கனைகழற்கால் வேந்துவந்து மதிக்குநர்வா ழகநகரங் காணு மாதோ. (10)

அரக்கெரிதா மரைத்தவிசி லரசெனவோ ரனமிருப்ப வணித்தாய்ப் பூத்த
வுருப்படுபூந் தவிசேறி மற்றதன்பே டமர்ந்திருப்ப வுவந்த வண்ட
ருருக்கமொடும் பண்பாட ஆடிருக்கும் பறவையின மொருங்கே சூழத்
திருக்கிளரு மரசமர்மண் டபமொத்த தடமனந்தந் திகழு மன்றே. (11)

வேறு.

சுத்த கோமய மெழுக்கெ றிந்ததிற் றுலங்கு குங்குமத் துகள்கடூஉய்
முத்த வெண்பொடி யடுத்த கோலமிடு முன்றி னின்றெரி விளக்கமு
நெய்த்த மென்னறும் புகையு மிட்டுநீர் நிறைகு டங்கள்முளை பாலிகை
வைத்து பாளித முறும்ப டீரவகை வாச நாறுமறு கெங்குமே. (12)

அந்த லாருரையு மிடறு மந்தொடையு மம்ம முன்னணி பெறுதுபோ
யிந்த கர்ப்புற மிருந்தி ழைத்துதவ மேமு டித்துமென வந்தெனக்
கன்ன லங்கமுகு கதலி நின்றன கருங்கு ரும்பைகுலை நாணியே
முனன நின்றன நெடுந்தெ ருக்கடை முகப்பி னின்றபல பந்தரே. (13)

ஆம்பு ழைக்கர வெறும்பி பந்திமத வாறு மாறுமன வேகமாய்
வாம்ப ரித்திரள் விலாழி யாறுமிகு மகிட முஞ்சூபி யுஞ்செலுந்
தாம்ப திற்கவைய பதமி தித்தளறு தோன்று மங்கிரத பந்தியாற்
சாம்ப ரிற்றுக ளெழுந்த வங்கதனை சாடு மாடநிறை கொடிகளே. (14)

---

(7) தலையாட்டம்—குதிரைக்குத் தலையிலணியும் அணி. 8. சீரா — அங்கி.
(9) கரவு — முதலை. (12) பாளிதம் — கருப்பூரம். படீரம் — சந்தனம்.
மிடறு—கழுத்து. (14) விலாழி—குதிரை வாய்நுரை.

தூங்க வெண்சுதைய மாட மேனிலையில் சொன்ன விண்ணுலக நின்றுறீஇ
யங்க ணுற்றெழுது சித்தி ரம்புரைய னங்கள் வேறறவி ருந்துபின்
கொங்க லிக்குல மிலங்க வாடுபூங் கொம்ப ரென்னுமட மாதரார்
பங்க யத்திதழ்க ளென்று மங்கவர் பதம்பெ யர்க்குநடை கற்குமால். (15)

அன்ப ரன்புமிக வந்த லார்மிடறு மணிந ரம்புமிசை யோசையு
மின்பு றுந்திரு மணஞ்செய் வோர்களிலி னின்னி யத்திலெழு மோசையு
மன்பி னிற்கடவு ளால யங்களின்மெ யடியர் பாடுபணி ஞோசையு
மென்பு ருக்கவெழு மின்ன வந்நகரி னேர்செ விக்கினிமை யூட்டுமால். (16)

பாவை யின்படிவ மாம டந்தையரில் பதித ணந்தவர்க ளேவுமுன்
னேவ லாளரி னிருந்து தூதுரை யிசைக்கு மாற்றமெது வோவெனப்
பூவெ லாமணமுண் மதுக ரத்தினமும் புரமெ லாஞ்சிவதி மார்களுங்
காவெ லாம்புயலு நாரை யுங்கிளியுங் கரும முன்னியவண் வைகுமே. (17)

வேறு.

ஆட ரங்கமு மருமணி யாலிழைத் தமைத்த
நீடு குன்றமும் வைகலு நீர்நிறை தடமு
மாடு பூந்தடஞ் சோலையு மவ்வயின் மாதர்
கூடி யூசலி னுடுவ குளிருமண் டபமும். (18)

கல்வி கற்குநற் கழகமுங் கலைபல வுசாவி
நல்வி ருந்தெனக் கலைவலோர் நாடொறுங் குழுமிப்
புல்வி டங்களும் பொருந்தறு சுவையொடு முண்டு
செல்வி டங்களு மெண்ணில வவ்வயிற் செறியும். (19)

கூல மும்பல பொருள்களுங் குறித்துவிற் குநரு
மேல மார்விரைக் கலவையு மிதழ்விரி மலரு
மால விட்டமும் பந்தரி னவின்றுவிற் குநருஞ்
சால வாவணங் காண்பவ ருளங்கவர் தகைத்தே. (20)

குடிவ ளந்தனுற் பெற்றபேர் வளவனுங் குரிசி
லடித ழீஇயவக் குடிசெறி யந்நகர் வளனை
முடியக் கற்றறி புலவரு முற்றுபு முன்னி
வடித்துக் கூறுத லரிதெனில் வழுத்தலா மளவோ. (21)

(20) கூலம்—பலபண்டம்.

சொன்ன விக்கசர் மேழியாற் றொல்லுல கத்துத்
துன்னு மாருயிர்க் குணவளித் திடுந்தொழி லாளர்
நன்ன ரென்பன நாடொறும் புரிபவர் சீர்த்தி
மன்னு பின்னவர் மருகவை மாறுற வயங்கும். (22)

ஏவ லாளரைச் சினந்தவ ரில்லையீ ரிரண்டு
சேவி லார்களு மில்லையாற் செழிக்குமை வேலிப்
பூவி லார்களு மில்லைதங் கொழுநரைப் போற்றாப்
பாவை மார்களு மில்லையத் திருவுறை பதியில். (23)

கவிக்குங் கூழிடுந் தம்மையோர் காலத்தி லோம்பு
தவிக்குங் கூழிடுந் தண்கட லோடுவார் தம்மிற்
குவிக்குஞ் செம்பொனிற் குவித்திடு குறைவறு விளைவாற்
புவிக்குங் கூழிடுங் கூழிடும் புரவலன் றனக்கே. (24)

பூவின் மெல்லிய விருந்தினர்ப் பொருந்தவின் சொல்லாற்
பாவை யன்னவர் மகிழ்வொடு பரிந்துபே சொலியு
மோவி லாதமு தளித்திடுங் கைவளை யொலியுந்
தாவி னூபுரத் தரவமுந் தயங்குமத் தெருவால். (25)

பானி றச்சுதை தீற்றிய மாளிகைப் பந்தி
மேனி வந்தெழி னிரம்புமன் னவர்மறு கிதுமேல்
வான கத்துயர் மாடமார் வணிகர்வாழ் வாரு
மூன மின்றிய தெருப்பல வோங்குமங் கன்றே. (26)

திரைக டற்பல வோடியுந் திரவியந் தேடும்
பரிவி னுலிளம் பார்ப்புடைப் பறவையே முன்றி
லுரையி லாப்பொருட் கோடலான் மலையாரா வொப்பர்
கரையி றந்துசெய் பேரறங் காணுமெட் டியரே. (27)

சச்சி றுக்கிய தனத்தவர் கலன்றாக் கிடக்கும்
வச்சி ரம்பசு மரகத மணிப்பிர வாள
முச்சி தத்தசெம் மணிக்குல மொளிதிகழ் நீலங்
கொச்சை யில்லா தனமவர் வீதியிற் குப்பை. (28)

சாலி யின்பல குவையல தமனியக் குவையல்
கோலத் தண்டுலக் குவையல வெண்பொனின் குவையல்
சீல வாடகிக் குவையல செம்பொனின் குவைய
லேலத் தோன்றுவ மாடமுங் கூடமு மெங்கும். (29)

வாணி பக்தனின் வருவன விம்மியும் வரைந்து
சாணி காணியாய்த் தேடியுங் கோடியுங் கருதா
தாணிப் பொன்னரங் காடிய வள்ளலாங் கங்கை
வேணி யான்றிருப் பணிசெயச் செலவிடும் விரவோர். (30)

வேறு.

ஓதநீர் குடைந்து செய்வ செய்சிறு காலை சேர்ந்தின்
மாதரோ டெரியை யோம்பி வானவர்க் கூட்டி மண்ணோர்
நீதற வாழு மாறு சிந்தையிற் கருதி வந்த
கோதறு விருந்தை யோம்பிக் குழுமிநூ லாய்வ ரையர். (31)

உயிர்க்குறு மூறென் றஞ்சி யுலவடி பெயர்ப்பர் யார்க்கு
மயிர்ப்பிலா வாழ்க்கை யாள ரருமறை யாதி கற்றோர்
செயிர்ப்பிலா ரெக்கு லத்துந் தியவை செய்யாச் செல்வர்
பயிர்ப்பிலார் பார்ப்பார் வாழ்வர் பன்னெடு மாட வீதி. (32)

மன்னுறை கோயிற் பாங்கர் மற்றவன் சுற்ற மாய
தொன்னெடுங் குலத்தோர் வீர வாகுவின் றொல்கு லத்தோர்
மன்னியே வாழ்ந்தி ருக்கு மாமணி மருகின் மாடச்
சென்னியிற் கொடிக ளாடற் றேவரை யழைப்ப போலும். (33)

படைக்கலம் பயில்சி லம்பம் பயிலுமற் போர்ச் சிலம்பங்
கடகளி றிவுளி மான்றேர் கடுவெளி வளியிற் செல்ல
நடைபயில் சிலம்ப மின்ன நல்லிளங் குமா ருள்ளா
ரடைவொடு பயில்வா ராங்க ணொளிக் குருளை யன்னார். (34)

பூழ்தகர் சேவல் கோழி யின்ன பொரவிடு மமலை யோர்பால்
வீழ்மதஞ் சிந்தத் தாக்கும் வெங்கரிப் பிளிற லோர்பாற்
சூழ்நடைப் பரியோட் டத்தைத் துலக்குவோர் துழனி யோர்பால்
சாழிலாப் பொய்ப்போர் செய்யுங் காளையர் கவலை யோர்பால். (35)

நலனிறை மாத ராரு நல்லிள மகாரை நாளும்
வலனிறை வீர வாழ்க்கை மாட்சியை விளக்கு விப்பர்
கலனிறை கல்வி யாக்கிக் காமரு தகைமை யாண்மை
குலனிறை தந்தை மாருங் குலவிட விளக்கு வாரே. (36)

(26) மறுகு—தெரு. (32) செயிர்ப்பு—சினப்பு. பயிர்ப்பு—அருவருப்பு.
(35) பூழ்—காடை, கவுதாரி.

இன்னன தெருக்கள் சூழ வெழுநிலை மாட மோங்கு
மன்னவ னுறைமாக் கோயில் வல்லா ணிடைவ யங்கித்
துன்னலர் கண்டு ளூட்கத் துணிவய வீரர் காக்க
மன்னிய வலிருங் கோட்டு மால்பொனின் வரைபோன் மாதோ.(37)

நகரப்படலம் முற்றிற்று.

ஆகபடலம் 2-க்குச் செய்யுள் 70.

உ

வேலுமயிலுந்துணை

புராண வரலாற்றுப்படலம்

இந்த வுறையூர் தலைநகரா வெழிலார் பொன்னி வளநாட்டை
முந்தை முறையி லரசாள்வோன் முடிமா மன்னர் திறையளக்க
வந்து குடங்கை யணையுறங்கி வதியு மணியார் முன்றிலுளான்
சிந்தை வயிரங் கொண்டெதிருஞ் சேரார்க் கரியி னேறனையான். (1)

பாயும் புலிசேர் தன்கொடியைப் பனிமால் வரையிற் பொறித்திட்டோன்
காயுங் கதிரோன் றன்குலத்தோன் கலிங்கத் தரசைப் புறங்கண்டோன்
சேயை யாவின் கன்றுக்காச் செல்லுந் தேர்க்கீழ்ச் செலுத்தியவ
னேயுங் கரிகால் வளவன்செங் கண்ணா னிவர்தம் வழிவந்தோன். (2)

கலையார் நற்றீந் தமிழ்க்கடலைக் கடந்தோன் கூத்த மீகானா
விலையார் பழுமா மரமொப்ப வீயுங் கரத்தோ னிரவலர்க்கு
நிலையார் கைக்கோட் படைக்கடலோ னீண்ட புகழோ னெடுவயிர
மலையார் திண்டோட் குலோத்துங்க வளவ னென்னு மன்னவர்கோன்(3)

பொன்மா மணிமண் டபந்தன்னிற் புரையி லமைச்சர் படைத்தலைவர்
பன்மாண் புடைய பேரறிஞர் பலருஞ் சூழ வரியணையிற்
றன்னே ரில்லான் கொலுவிருக்கத் தலைகள் வந்து குவிதலினா
லென்னே யெந்தாய் கூத்திதென விசைப்பான் கூத்தன் மன்னற்கே.(4)

காளை யனைய வெம்மரபோர் கவியைக் கேட்டா ரன்னவர்க்கு
வேளை யனையார் தந்தலைகள் விரும்பும் பரிசென் றியாமுரைப்ப
வாளை யுருவித் தலையரிந்தே வந்தா ரெழுபத் திருநாட்டார்
நாளை யுரைத்து மிக்கூத்தை நன்கெல் வீருங் காண்மினென்றே. (5)

தலையை யடுக்கி யரியணைபோற் சமைத்த பீடந் தனிலிருந்து
மலையு மீட்டி யெழுபதென வகுத்தான் மாண்பார் மன்னவையோ
ரலகி லெவருங் கேட்டிருந்தா ரன்ன தலைக ளாருயிர்பெற்
றிலக வுடலி லொட்டியதா லீண்டி யிருந்தோ ரதிசயிப்ப. (6)

மன்ன னன்றங் கடிவணங்கி மாண்டா ருயிரைத் தரும்வல்லாற்
சொன்ன வீட்டி யெழுபதெனுந் துகளி லாத பிரபந்தந்
தன்னி னிலவு புகழ்ச்சரிதந் தன்னை விரித்தல் வேண்டுமென
நன்ன ருரைத்துங் கேளென்ன நவின்று னவற்கு நலமுறவே. (7)

ஈச னொருபா லமர்ந்துலக மெல்லா மீன்றாள் வயின்வந்தார்
மூச வண்டார் பூங்குழலார் முதல்வன் றன்னாற் கருவுற்று
தேசின் விளங்கு நுதலாறு விழியிற் றோன்றுஞ் செவ்வேளோ
டாசில் லாது வருமொன்பான் வீரர் பிறப்பி னுதியதா. (8)

தேவர்க் கிடுக்கண் செய்திருந்த தீய வசுரர் கடல்சுவற
மூவர் முதல்வன் றன்புதல்வர் முற்றிப் போரை முடித்ததன்பி
னுவ லோடு மமரர்பிரா னளித்த தேவ யானையெனும்
பூவை தன்னை யாறுமுகன் பொருந்த மணந்த கதையீறு. (9)

தேவ காண்ட மெனும்பெயராற் செப்பி முசுமா முகச்சோழன்
காவல் புரிய வுலகமெலாங் கந்த வேட னேன்பாற்றி
மேவு மொன்பான் வீரர்தமை விமலன் றன்பா லேற்கவவர்
தாவின் மக்கள் யாக்கைபெறுந் தகையா லந்த பெரும்பிரிவை. (10)

முதலா மனித காண்டமென முறையிற் கூறி யிற்றைவரை
வதியு மன்னோர் வழிவந்தார் மன்னர் வீரர் மெய்யடிய
ரிதஞ்சேர் சரித மாயவிவை யிசையார் புலவர் தம்பெருமா
னசைவில் கூத்தன் குலோத்துங்கற் கறைந்த வாறிங் கறைகுதுமால் (11)

புராண வரலாற்றுப்படலம் முற்றிற்று.

ஆகபடலம் ௩-க்குச் செய்யுள் 81.

பொன்னாட்டினரும் பூவுலகத்தில் எந்நாட்டினரும் முன்னாட்டிப் புகழும் நன்னாடாகிய தென்னாட்டின்கண், பருவந்தவறாது மழைபெய்தலினால், செந்நெல், கன்னல், வாழை, மா, பலா, கமுகு, தெங்கு முதலியன செழித்தோங்கவும், ஓடை, மடு, தடாகம், குளம் முதலிய நீர் நிலைகள் நிறையவும், பெருகியொழுகும் பல்பெரும் வாய்க்கால்களையுடையதும், இருமருங்கினும் கருமுகில் தவழும் மருமலர்ச்சோலைகள் செறிந்து கங்கையிற் சிறந்த காவிரியாற்றின் நீர்வளத்தாலோங்குவதும், சத்தியம் ஒழுக்கம் அன்பு அருள் பொறையாகிய நற்குணங்கள் யாவரிடத்தும் பொருந்தும்படி சூரியகுல வீரர்களாகிய சோழமன்னர்களால் வழிவழி செங்கோல் செலுத்துவதுமான பெருமை வாய்ந்த "சோழநாடு" என்று ஓர் நாடு.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் பேறு நான்கினையும் பெறுதற்கிடமாகி, பூலோக கைலாயமும் பூலோக வைகுந்தமுமாகிய பொன்னம்பலம் திருவரங்கம் என்னும் இருபெருந் திருக்கோயில்களையும், மற்றும் தமிழ்மறை மணங்கமழும் பல்பெருந் தேவாலயங்களையும் தன்னிடத்திற்கொண்டு, மதனனிற்சிறந்த ஆடவரும், தேவமாதரிற் சிறந்த மாதர்களும், சேடனின்மிக்க நாவலர்களும், குபேரனின்மிக்க திருவாளர்களும் மன்னிவாழும் அந்நாட்டில், வேடுவர் குறிஞ்சிநிலத் தெய்வமாகிய அறுமுகற்கும், ஆயர்கள் முல்லைநிலத் தெய்வமாகிய திருமாற்கும், மள்ளர்கள் மருதநிலத் தெய்வமாகிய இந்திரற்கும் விழாச்செய்து உழுதொழில்களைத் தொடங்குவார்கள். வாய்க்கால்களில் நீரோடுமொலியும், உழவர்கள் நீர்பாய்ச்சுமொலியும், விதைவீசுமொலியும், உழத்தியர் நாற்றுநடுமொலியும், களைகளையுமொலியும் கடலொலியின் மாறுகொண்டொலிக்கும். சோலைகளில் பூத்தமலர்களினின்றும், பலவகைக்கனிகளினின்றும் வழியும் தேனும்பாய்ந்து திருமாலெனப் பசந்து வளர்ந்து கதிர்கொண்டு முதிர்ந்து தலைவணங்கிக்கற்புடைய மகளிர்போல் விளங்கும் செந்நெற்களையும், மற்றும் பலவகைப்பட்ட விளைபொருள்களையும் மலைகளெனக் குவித்து தெய்வங்களுக்கும் யாசித்தவர்களுக்கும் பகிர்ந்து ஆறிலொருகூறு மன்னற்களித்து, மிகுதியைத் தாங்கொண்டுசென்று சேர்ப்பார்கள். அந்தணர் செய்யும் வேள்விப்புகையும், கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும்புகையும், நிலந்திருத்தக்காடெரிக்கும் புகையும் மேகத்தோடு மாறின்றித் தோன்றும். ஆங்குள்ள சோலைகளுக்கு ஐந்தருவும் பசுக்களுக்கு காமதேனுவும் ஒப்பாகும். சோழன் இந்திரனை ஒத்திருப்பன். அந்நாட்டு மாந்தர்கள் என்றும் அடியார்களைத் தேடி இன்சொற்கூறி அறுவகைச்சுவையோடு கூடிய அன்னம் படைத்து விருந்தோடுண்டு இரவலர்க்களித்து மகிழ்வார்கள்.

தெய்வத்திருமணங்கமழும் இத்தகைய மேன்மைவாய்ந்த சோழ நாட்டின்கண் எல்லாப்பேற்றினையும் பெற்றுயர்ந்த பழங்குடிகளையுடையதாய் எதிர்த்து வந்ததோர் மதயானையை கோழி போர்புரிந்து வெற்றியுற்ற இடப் பெருமையுடையதாய், தன்னுயிரொன்ன மன்னுயிரைக் காக்கும் சோழமன்னர் களுக்குத் தொன்றுதொட்டு உறையிடமாய், மன்னன் உறையுமூர், மலர்மகள் உறையுமூர் எனப் பொருள்படுவதாய் திருவுறையூரென்னும் பெயரினையுடைய சிறந்ததோர் நகரம்.

அந்நகரின்புறத்தே நாற்புறங்களிலும் வானளாவிய சோலைகள்சூழ்ந்து காட்டரண்போன்ற தோற்றமுடையதாய், பகைவர்கள் அஞ்சுமாறு படைத் தலைவர்களாலும், படைவீரர்களாலும், அன்னோர்வதியும் பற்பலமாடங்களாலும், தேர்நிலைகளாலும், யானைப்பந்திகளாலும், குதிரைப்பந்திகளாலும் இடையறாத காவலமையப்பெற்றதாய், ஆழ்ந்தகன்று அகழிசூழ்ந்து விண்ணைத்தாவும் கோபுரங்களோடும் எந்திரப்பொறிகளோடுங்கூடிய மதில்கள் நிலவும். உள் நகரத்தில் தாமரைத்தடாகங்களும், தேமலர்ச்சோலைகளும், நாடகச்சாலைகளும், பந்தாடுமேடைகளும், நீராழிமண்டபங்களும், கல்விக்கழகங்களும், கைத் தொழிற்சாலைகளும், உழுதொழிலாளர் வணிகர் அந்தணர் மன்பெருங்குழுவின ராகிய விரவாகுதேவராதியரின் வழிவந்த செங்குந்தர் முதலியோர் தனித்தனி வாழும் கொடிகளுயர்த்திய மாளிகைகளால் நிறையப்பெற்றதும், தெய்வத் திருவுலாக்களாலும் திருமணவுலாக்களாலும், பொலிவுறுவதும், யானை மதங் களாலும் குதிரைவிலாழிகளாலும் சேறுபடுவதும், தேர்களோடுவதால் துகள் படுவதும், மாதர்களணிந்த ஆபரணங்களினின்றும் சிதறிய இரத்தினங்களைக் குப்பையாகவுடையதுமான தெருக்கள் பற்பலவுள்ளன.

அத்தெருக்களில் வெண்சுதை தீட்டப்பெற்று ஒள்ளியவெள்ளிக் குன்றமொத்த மாளிகைகள், மலர்மணமும் கலவைச்சாந்தின் வாசமும் கமழப் பெற்று, அழகிய அரதனக் கோலங்களிட்ட முன்றில்களையுடையவாய், என்றும் மன்றல்நாள்போல நிறைநீர்க்குடங்கள் அடுக்கப்பெற்றும், வாழை கமுக முதலியன நாட்டிப் பந்தரிடப்பெற்றும் விளங்கும். மேழிச்செல்வ முடையோரில்லங்கள் தமிழ்மறைப்பண்ணினாலும், விருந்தினரோடு பரிந்து பேசுமொழியாலும், தங்கள் தங்கள் கணவன்யார்களையே தெய்வமாக வழி பட்டொழுகும் கற்புடை மாதர்களாலும், கல்வியறிவுடைமையால் தொழி லாளரைச் சினவாத தலைவர்களாலும், தலைவரை வெறுத தொழிலாளராலும் விளக்கமுற்றிருக்கும். கடல் கடந்தும் வாணிபஞ்செய்யும் வணிகர்கள்

கணக்கில் இம்மியும்விடாமல் காணிகாணியாகச் சேர்த்துச் சிவபெருமான் திருப்பணிகளுக்கு கோடிகோடியாகச் செலவிடுவார்கள். ஆர்கலியென ஒலிநிறைந்த ஆவணங்களில் நெல் அரிசி துவரை முதலியனவும், பொன் வெள்ளி முத்து பவளம் முதலியனவும் குவையல்குவையல்களாகப்பார்ப் போர் கண் கவருமாறு குவிக்கப்பெற்றிருக்கும். அன்பும் அருளும் உயிர்க் குறுகண் செய்யாமையாதிய நற்குணம்வாய்ந்த அந்தணர்கள் மனைவிமாரோ டிருந்து, உலகோர் நன்குவாழுமாறு கருதி, வேத விதிப்படி தீயோம்புதல் முதலியன செய்வார்கள். மன்னர்பெருங்குழுவினர் போர்க்குரிய சாதனங்களை மேன்மேலும் பயின்று, பகைவரின்மையால் தோள்கள் தினவுகொண்டு தங்களுக்குள் பொய்ப்போர் புரிவார்கள். மன்னர்குலப் பெண்கள் தங்கள் இளங்குமரர்களுக்கு மூதாதையர் புரிந்த வீரச்செயல்களின் தன்மையைப் புகட்டுவார்கள்.

இவ்வண்ணம் குலவும் தெருக்களுக்கிடையில் மேகத்தைத் தடவும் கொடிகளாடப் பெறுவதும் வெற்றிமுரசம் முழங்கப்பெறுவதும் திறை கொணர்ந்த அரசர்கள் காத்திருப்பதுமான தலைவாயிலையுடையதாய் எழெழு நிலைகளோடு மேருமலைபோல் பொன்னாலும் மணிகளாலும் அமைக்கப்பெற்ற அழகிய இராஜமாளிகைகள் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

இந்நகரைத் தலைநகராகக்கொண்டு பசுங்கன்றின் பழிக்காகத்தனதரிய ஓர்மகனை தேர்ச்சக்கரத்திற் செலுத்திய மனுமுறைகண்ட சோழன் வழிவந்த குலோத்துங்கச் சோழனென்னும் மன்னவன் ; செங்குந்த குலதிலகரும், கவிச்சக்கிரவர்த்தியுமான ஒட்டக்கூத்தப்பெருமான் துணைகொண்டு இமாசலம் வரையில், முறைவழுவாது செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தான்.

அம்மன்னவன் ஓர்நாள் அமைச்சர்கள், அறிஞர்கள். படைத்தலைவர், தண்டத்தலைவர் முதலியோர் புடைசூழ சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக் கையில் தலைகள் வந்து குவிந்தன. அதைக்கண்ட அரசன் வியப்புற்று கூத்தப்பெருமானை நோக்கிப் புலவரேறே; இஃது என்னகூத்து? எனவினவ கூத்தப்பெருமான் அரசே ; நம்மரபினர் நம்மரபைப்பற்றி ஓர் பிரபந்தம் பாடுகவென்றார்கள். ஆயிரத்தெட்டுத் தலைகளைப் பரிசாகக் கொடுத்தால் பாடுவோம் என்றோம். அதற்கிசைந்து எழுபத்திரண்டு நாட்டாரும் கவிக் காகத் தலைப்பரிசு கொண்டுவந்திருக்கிறார்கள் இதனை நாளை விளக்குதும் என்றார்.

மறுநாள் அத்தலைகளை ஆசனமாக அடுக்கி அதன்மேல் இரத்தப் பாவாடையிட்டு வீற்றிருந்து கலைமகளருளால் ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்தைப் பாடியருளினர். பாடவே அவையின்கண் திரண்டு குழுமியிருந்த யாவரும் அதிசயிக்க அத்தலைகள் தத்தம் உடலிற்பொருந்தி தலைதந்த யாவரும் உயிர்பெற்றெழுந்தார்கள். அதைக்கண்ட மன்னன் கூத்தப் பெருமான் அடிகளை வணங்கி, தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய அற்புதப் பிரபந்தத்தில் விளங்கும் பெரியோர்களின் சரிதங்களை விரித்துரைக்கவேண்டுமென, வேண்டற்கிணங்கி, உலகமாதாவாகிய உமாதேவியாரின் பிரதிபிம்பத்தினல் பாதச்சிலம்பினின்றும் வெளிவந்த ஒன்பதுமாதர்கள் சிவபெருமானல் கருவுற்றுத்தோன்றி, அன்னேன் நுதல் விழியிற்றோன்றிய அறுமுகப் பெருமான் தம்பிமார்களாய் விளங்கும், நவவீராதியரின் பிறப்புமுதலாகத் தேவர்க்கிடுக்கண் செய்த சூரபன்மனதிய அவுணரைப் போரிற்றொலைத்து யாவர்க்கும் இன்பமூட்டிய சண்முகப்பெருமான் இந்திரனல் மகிழ்ந்தளித்த தேவயானையை மணம்புணர்ந்த தீருகத் தேவகாண்டமென்றும், உலகெலாம் தனியரசாளவேண்டிச் செய்த தவத்திற்கிரங்கி சண்முகப்பெருமானல் முசுகுந்த மன்னற் களிக்கப்பெற்று, மனிதயாக்கைகொண்டு உலகிற்கு வந்த வீரவாகாதிய ஒன்பதின்மர் சரிதங்களையும், அன்னர் வழிவந்த அரசர்கள், வீரர்கள், அடியார்கள் சரிதங்களையும் மானவகாண்டமென்றும், குலோத்துங்க மன்னற்கு கூத்தப்பெருமான் கூறியவண்ணம் கூறத்தொடங்குவோம்.

உ

வேலுமயிலுந்துணை

தேவகாண்டம்

திருக்கைலாயப்படலம்

காக்கு மின்னற ரும்மலக் கட்டற
வீக்கு மின்னனி கர்பவம் வேரொழ
தேக்கு மின்ன முதத்தமிழ்ச் சீருற
வாக்கு மன்னருண் மாமத வேழமே. (1)

வேறு.

பூவார் புவனை யென்றெடுத்துப் புண்ட ரீகத் தவிசமர்ந்த
தேவா யலரோ னுத்தண்டாச் சிறப்பார் கலைமா தருள்வாக்கா
நாவா வீட்டி யெழுபதென நவின்று தலைகள் பரிசளித் தோர்
சாவா தருள்செய் கூத்தன்பொற் றுள்சேர்ந் தாசன் வேண்டிடவே (2)

நிலைக்குங் கல்வி கற்றுணர்ந்து நிலையாப் பொருளி னசையாலே
மலைக்கு மதியைப் பயன்படுத்து மற்றோர் போல வரும்பரிசாம்
விலைக்குப் பாடா தைம்புலனும் விரிந்த தலைக்குப் பாடுமெணெண்
கலைக்குப் புலவன் கூத்தன்வெண் கவிதை வேந்தைக் குறித்துரைப்பான். (3)

துன்று புகழா னிறைந்தகுலோத் துங்க வளவ சொலக்கேளிங்
கொன்று முனத்தார் நால்வகைத்தா முயர்நன் னெறிக்க ணின்றபயன்
றன்று முடலம் பொருளாவி துணைவர்க் காக்கு மெய்யன்பர்
சென்றங் கமரு மேனிலமாந் திருக்கை லாய வரைச்சிறப்பே. (4)

நிலையா வணுவின் றிரட்புணர்ப்பா னெடிய பெரிய தோற்றமுடை
மலையாம் பலவு மூழிதொறு மாய்ந்துண் டாகு மற்றவைபோ
விலையா யென்று மொருபடித்தா யிணைமிக் கீறி லிறைக்கிடமா
யிலையாப் பெற்றித் தாங்கைலை யென்னு மசல மொன்றுளதால். (5)

நம்பாற் சயனங் கொண்டிருக்கு நாரா யணற்குத் துயிலிடமா
யம்பாம் வடிவாய்த் தாழ்ந்தாழ்ந்த வாழி யுருவ மகன்றரனூர்
தம்பாற் சென்றப் பரன்சரணந் தாங்கற் குயர்வேன் றமியனென்
வம்பாற் கடலே திரண்டுமலை யான தொத்த தருங்கைலை. (6)

வேதஞ் சிவாக மங்களுப நிடதம் புராணம் விதித்தனசொன்
னீத மெவைக்கு மீக்கூற்ற நிலவுஞ் சிவச்சீ ரிடையிடையே
யோதுஞ் சீர்த்தி யுள்ளவெலா மொளிவெண் ணிலவா யுற்றவெனச்
சீதந் தரும்வெண் பொன்மலையாய்த் திகழ்ந்த தொத்து விளங்கினதே. (7)

பானு கோபன் சசிகோப னாகிற் பண்ண லென்னென்ன
பான னன்ப ராயிரத்தெட் டண்ட முள்ள பதமாய
தானந் தணந்து போந்தனர்போற் சவிகொள் குவையாம் வெண்ணிலவே
வான மட்டு மொளியுருவா யோங்கி வளர்ந்த வெள்ளிமலை. (8)

கண்பாய்ந் துணர வொண்ணாத கவினார் கைலைத் தடமுடியில்
பண்பாங் கோயின் மணிமாடப் பந்தி நெடிய பொற்சிகரி
நண்பா மேரு பொறித்தபட நால விருந்து வருந்தோற்றம்
வெண்பா ளிதக்கு வான்முடியின் விளக்க மென்ன விளங்கினதே. (9)

பனக னோரா யிரநாவிற் பகர்தற் கரிய வியன்சீரார்
சினக ரச்சீ ரணியாது சென்று னென்றே யிகழ்வாரில்
லனக னமலன் பரமசிவ னநாதி முத்தன் சாம்புநதக்
கனக மணியா சனத்தமர்ந்தான் காமக் கண்ணி வாமமுற. (10)

விண்பொத் தியவம் புயலளக விமலை யமலன் கதிரிந்து
கண்பொத் தியகைக் கண்ணெழுந்த கங்கை தங்கு சடைமுடியும்
பண்பொத் தமர வலம்புரியாய் முடிந்த பணியின் சிரமணியு
நண்பொத் திளஞ்சந் திரப்பிறையு நகுவ நிலவி னொளிநிலவ. (11)

அண்ட கோடி கட்கின்றி யமையாச் சுடர்மூன் றுயவிழி
புண்ட ரீக மன்றலர்ந்த பூப்போன் மிளிர வடியரகங்
கொண்ட வன்பிற் கருளமுத மூற்றுங் கடைக்கண் குறிநோக்
குண்ட லத்தி னொளிகாலக் குலவ வரும்புங் குறுநகையே. (12)

உற்ற மகவான் முதலாய வுவரைக் காத்த குறியாக
வைத்த நீல கண்டத்தின் வடிவந் தோன்ற வுலகுக்கா
யத்த னிவனென் றுணர்விக்கு மதுபோ லிடத்தி லொருமானை
வைத்த னேக்கி வலத்தொருமான் வந்து மருண்ட வியறோன்ற. (13)

தஞ்ச மென்றே மெய்ப்பொருளென் றறிந்தே தற்சேர்ந் தார்தம்மை
யஞ்ச லென்னு மபயகர மழகு செய்ய மலக்காடாம்
பஞ்சை மெய்ஞ்ஞா னக்கனற்கே யிரைசெய் பண்டைத் தொண்டரெலா
முஞ்சு போமா ரீதென்ன வரத கரமொன் றொளியூற்ற. (14)

அநாதி மலமால் விட்டகல வகலுட் கரண மொன்றுணரத்
தனது கருணை யுட்டதும்புந் தாயிற் சிறந்த தயாநிதியாய்
மனதிக் கெட்டா மறைக்கெட்டா மாறு முத்தி நீழலெனு
மினுத வின்பந் தருமுருவ மென்னக் கமல வடிதோன்ற. (15)

ஆறு பூத்த சடைமுடிமே லாத்தி கொன்றை யலங்கலுறப்
பாறு லாத்த முத்தலைவேல் பாங்க ரிருப்பப் பதியுணரா
வீறு பூத்த நாத்திகரால் விடுத்த புற்றேந் றேற்றேலார்
நீறு பூத்த நெருப்பாய நிமல னிருந்தா னிடத்தமர்ந்தாள் (16)

ஈசன் முக்கட் சுடர்க்கிரியா விருளா மென்ன வியற்கைமணம்
வீசு மைம்பான் முதற்பாத முற்ற வணியை யணியமனங்
கூசு மிமய வரசுதவுங் குமரி யாகிப் பொருட்குறைபா
டாசொன் றில்லா ளெண்ணான்கா மறத்தை வளர்த்தா ளொருதவினல். (17)

எண்ணெட் டிங்க ளம்மைநுதற் கிணையா மென்னிற் கலைமூன்றும்
விண்ணூர் மேரு விற்புருவ மொக்கு மென்னில் வீறில்லை
கண்ணு மதனைப் பிணைசுணையே கமல மலரே யென்னுமற்
றண்ணு ரமுத நிறைவுற்ற ததும்பு கருணைக் கடலென்பாம். (18)

அத்த னீர்ஞ்சா ரசவதன வபிரா மங்கண் டகமகிழா
முத்த மொளிபுக் கிருந்தசிறு முறுவற் குமுத விதழரும்பத்
தத்து மழலை மொழிதிரம்பாச் சம்பந் தற்கு ஞானப்பா
லத்தங் கொடுத்த பொற்கும்ப மம்மென் கச்சுக் கழகுசெய. (19)

கைத்தா மரையிற் காட்டியனு பூதி பேசுங் களிக்கிள்ளை
வைத்தா வித்தே யருட்டாயாய் வணங்கத் தன்னைச் சிவப்பேற்றின்
வித்தா யரும்பி யன்றலர்ந்து விரிந்த விதழம் போருகமாஞ்
சித்தாய்த் தண்டை சிலம்பணிந்த திருத்தா ளணிகட் கழகுசெய. (20)

பாங்க ரெம்மை யாளாக்கு மம்மைக் குகந்த பணிசெய்வோர்
பூங்கொம் பென்ன வன்னமெனப் பொருவில் சத்திப் பெண்கணிந
டாங்க டங்க டொழினியமந் தவாது கடைக்க ணருளேந்தி
நீங்கா நிழல்போ லணியாக விருபா லணைந்து நிலவமயம். (21)

அந்திற் சிந்தை யரன்கோயி லாந்தும் புருநா ரதமுனிவர்
சந்தத் திவவி யாழ்வருடிச் சாமகீத மறைபாட
முந்த வித்தி யாதரகந் திருவர் நரப்பு முருக்கிசையே
சிந்த வந்தி வண்ணனருட் சீர்பெற் றிருபா லிருந்தனரால். (22)

வெண்ணீ ரக்க மணிபூண்டு விமல ருருவங் கண்டுகனிந்
துண்ணீர் மையிற்றும் வழிபட்டுத் துதித்துப் பூசித் துடல்கம்பித்
தெண்ணி யெண்ணி யுடலுருகி யென்புங் குழைய விசைபாடிக்
கண்ணீர் ததும்பி யடியர்குழாங் கலந்து மகிழ்வா ரங்கொருபால். (23)

பஞ்சாக் கரத்தை யுண்முகமா யெண்ணிப் பாரெங் குஞ்சிவமாய்
நெஞ்சாற் காண்ட லாங்கவனைப் பூசித் தடங்கு நிலைப்பேற்றி
லெஞ்சா தியோகு செயுஞ்சித்த ரிருடி கணங்க ளொருபானெஞ்
செஞ்சா திருந்தே சம்புபக்க மெடுத்தங் குரைப்பா ரவைநிறைவார். (24)

தாரு நீழ லரசிருக்குஞ் சசிதன் கேள்வன் சுரருரக
ராரு நெருங்க வேத்திரக்கை யதிகா ரத்தெ னந்திதன
தோருங் கடனுற் சந்நிதியை விலக்கிப் பலகா லொதுக்குநிற்ப
ஆருஞ் சங்க வொலிமுதல வியங்க ளியக்கு மோதமென. (25)

சோதி மலையி னின்றிழியு மருவி யென்னத் தூயகணை
நாதர் வெண்சா மரையிரட்ட நாளுமுலவா நலம்பெற்ற
பூத கணங்கள் சாந்தாற்றி யசைப்பப் புரையொன் றில்லாத
வாதி பகவ னம்மையுட னிருந்தான் போக மண்டமுற. (26)

வேறு.

சோம னோடரா வுறவும் முடிக்கணி தூயோன்
வாம முற்றவெம் மன்னையப் பரமனை வணங்கி
தீமை பற்றிய சிறுவிதிக் கொருமக ளாமிந்
நாம வாகமிங் ககற்றிட வருளென நவின்றாள். (27)

சொற்ற பெற்றியைப் பற்றிலா முற்றுணர் தூயோன்
மற்ற மால்பனிக் குறிச்சிவேந் துன்னையின் மகவாய்ப்
பெற்றி ருப்பதென் றெனத்தவ மாற்றினன் பெரிது
மற்ற மேகுதி யவன்மக ளாகநோன் பாற்றி. (28)

தணந்து பொன்னிம மலைமக ளாமுனைச் சார்ந்து
மணந்து கொள்வலென் றையனோ தலுமக மகிழ்ந்தே
விணையி லாவியங் கியற்பொரு ணிலைப்பொரு ளவைக்குங்
குணங்கொள் தாயவள் வந்தனள் பனிவரைக் குவட்டின். (29)

நாள தாமரை வாய்ப்பசுங் குழவியாய் நண்ண
நீள வாற்றிய தவப்பய னுந்தநீ ராடு
வேலை யங்கம லத்தமர் குழவியை வெற்பன்
மீள வேந்தினன் மனைக்கரந் தாமுலை விம்மி. (30)

பால்சு ரந்தன வகமகிழ் சிறந்தன பரனம்
மேல்சு ரந்தபே ரருளிதோ வெனவியந் தணைத்துக்
கோல்சி றந்ததன் னிறைவனுற் குமரியைப் பெற்று
மேல்சி றந்தனண் மேனைமற் றவடவ மென்னே. (31)

தண்ண வன்கலை யென்னநா ளுக்குநா டழைத்துப்
பெண்ண ருங்குழ விப்பரு வஞ்செலப் பேதை
வண்ண முற்றபோ தருந்தவத் திருந்தனள் வதிந்தாள்
விண்ண வாம்பொழில் சேடியர் பணிசெய விமலை. (32)

அத்த கோரையி லம்புயத் தவன்றரு குமா
ருத்த மத்தவெண் டாதுவெற் படைந்தக முவந்து
கைத்த லத்துவேத் திரப்படை நந்திதாட் கண்டு
நித்த னிண்டையம் பதமலர் வணங்கினர் நின்றார். (33)

கண்ட கண்கணீர் சொரிதாக் கைத்தலந் தலைமேற்
கொண்டு மெய்ந்நடுக் குற்றுமெய் யன்புமீக் கூர்ந்து
விண்ட நாத்தழு தழுத்தகங் குழைந்துவிம் முற்றுத்
தொண்ட ரேந்தமை யாண்டரு ளெனப்பதந் தொழுதார். (34)

அளக்க ருங்கலை யாய்ந்துளே மையநீத் தில்லேம்
விளக்க மாருதத் தலைத்தென வெய்த்தக தெலிந்தேர்
துளக்கி லாப்பெருந் தூசிலை யெமக்கரு ளென்றே
யுளக்க ருத்தினை யுள்ளவா றறைந்தன ரொருவன். (35)

நந்தி யெம்பெரு மான்றனை விளித்துநந் நந்தி
மந்த மாருதத் தேரவ னலதுமற் றெவரும்
வந்து ளோரையுள் விடுகலை யென்றயன் மகாரை
முந்து மாமறை யுணரொணு முழுப்பொருண் மொழிவான். (36)

யோகி யாகிக்க லாலின்கீழ்த் தெற்குநோக் குற்றுப்
போகி மீளவந் தாசல்போந் பிறப்பினிற் புகுத்து
மோக மாதிவந் தணுவகைத் தாந்தரு மோன
மாகு முத்திரை காட்டின னிருந்தன னறவோர். (37)

மோன மாகிலை மொழிதர வோவிய விளக்க
மான புந்தியு மொடுக்கமுற் றிருந்தன ரையன்
றானு மோர்கண மிருந்தனன் றுபத னென்ன
வான நாடருக் குகம்பல வாயின வன்றே. (38)

தேனமர் கடுக்கை வேணிச் சிவபிரான் கைலைதன்னிற்
கானமார் முனிவர்க் குண்மை கழறிய பரிசுரைத்தா
மூனமுற் றசுரர் தம்மா லுயர்பத மிழந்து வாடும்
வானமர் சுரர்கண் மேவி வரம்பெறு கதைவ குப்பாம். (39)

திருக்கைலாயப்படலம் முற்றிற்று.

ஆகபடலம் 4-க்குச்செய்யுள் 120.

பூவார்புவனையென்று தொடங்கிக் கலைமகளருளால் சிரச்சிம்மாதனத்திலிருந்து ஈட்டியெழுபதென்னும் பிரபந்தத்தையும், அற்றதலைகளெல்லாம் தத்தம் உடலிற் பொருந்தி உயிர்பெற்றெழுமாறு எழுப்பெழுபதென்னும் பிரபந்தத்தையும் யாடியருளிய ஒட்டக்கூத்தரென்னும் புலவர் பெருமான் குலோத்துங்கச்சோழனை நோக்கிக்கூறுவார், மன்னர் மன்ன! ஐம்புலன்களையு மடக்கி மனமொன்றுபட்டு, சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நன்னெறியிலே நின்று, உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனுக்குரிமையாக்கிய மெய்யன்பர் சென்றடைவதும், ஊழிக்காலங்களில் அழியும் மற்ற மலைகள் போலன்றி எக்காலத்தும் ஒருதன்மைத்தாய், ஒப்புயர்வற்ற சிவபெருமான் எழுந்தருளியிருப்பதால் அழியாத தன்மைவாய்ந்தது திருக்கைலாயமென்னும் மலை.

அவ்வெள்ளிமலையானது திருமகள் கொழுநன் அறிதுயில்கொள்ளும் இடமாய் நீருருவாகிய பாற்கடலானது ஆழ்ந்தவடிவத்தை ஒழித்து உயர்ந்த மலையுருவங்கொண்டது போலவும், வேதாகம புராணேதிகாசங்களில் விரித்துரைக்கும் சிவத்தின் புகழெல்லாம் திரண்டு ஒளிர்வதைப்போலவும், கதிரவனைக்கோபித்துப்பற்றிய பானுகோபன் நம்மீது கோபங்கொண்டு ஓர்கால் பற்றுவனென்னும் அச்சத்தால் ஆயிரத்தெட்டு அண்டங்களில் உள்ள சந்திரர்களெல்லாம் ஓரிடத்தில் குழுமியிருத்தல் போலவும் கண்கூசும் வெள்ளிய வொளியோடு விளங்கிக்கொண்டிருக்கும்.

இரண்டாயிரம் நாவுடைய சேடனுலும் புகழ்தற்கரிய சிறப்புவாய்ந்த அம்மலையில் கர்ப்பூரக்குன்றின்மேலேற்றிய விளக்கைப்போல் ஏற்றுக்கொடியாடும் பொற்சிகரங்களையுடைய பொன்னுலும் மணிகளாலும் இயன்ற கோயிலில் பொன்னரியாசனத்தில் கங்காநதியையும், அணியாக அணிந்த பாம்பின் சிரமணியையும், இளம்பிறையையும், ஆத்திகொன்றைமாலையையுமணிந்த சடைமுடியும், சோமசூர்யாக்கினியென்னு முக்கண்களும், அக்கண்களினின்று தோன்றும் கடைக்கண்ணேக்கமும், காதிலணிந்த குண்டலங்களும், குறுநகைபூத்தமுகமும், நீலகண்டமும், மான்மழுவைத் தாங்கிய இரண்டு கரங்களும் வரதம் அபயம் என்னும்மற்றிரண்டு கரங்களும்; பிறவிப்பெரு வெப்புநோய் நீக்கி மாறுமுத்தி நிழலைத்தரும் திருவடித் தாமரைகளும் தோன்ற, சூலப்படையொருமருங்கிப்ப, புலித்தோலாடையசைய எழுந்தருளியிருக்கும் எம்பிரானது இடதுபாகத்தில் எம்பிராட்டியும்; இயற்கை மணமமைந்த கூந்தலும் எண்ணுட் சந்திரப்பிறையையொக்கு நெற்றியும் வில்லையொத்த புருவமும், அருண்மடை திறந்தொழுகும் திருக்கண்களும், ஞானசம்பந்தப்பெருமானுக்குப் பால்சுரந்தருளிய பொற்கலசங்களும், தண்டை சிலம்பணிந்த திருத்தாள்களும் விளங்கப் பலசத்திமார் தங்கள் தங்கள் தொழில் நியமங்களை யாற்றுவதற்குக் கடைக்கண்ணருள் நோக்கி மருங்கே சூழ்ந்திருக்க ; எழுந்தருளியிருந்தனர்.

இவ்வாறு அம்மையப்பராயெழுந்தருளியிருக்கும் அம்மண்டபத்தில் யாழோடிசைந்த சாமகீதம்பாடித் துதிக்கும் தும்புருநாரதமுனிவர் ஓர்பாலும், பல்வகை நரப்புக் கருவிகளின் இசையெழுப்பிப்பாடும் வித்தியாதர கந்தருவர் ஓர்பாலும், சிவசின்னங்களைத் தாங்கிப் பரமனது திருவுருவங்கண்டு பரவசப்பட்டுத் துதித்து உடலம் கம்பித்து நெக்கு நெக்குருகி யானந்தக்கண்ணீர் சொரியும் அடியார்களோர்பாலும், பஞ்சாக்கரத்தின் உண்மைப்பொருள்

உணர்ந்து எங்குஞ்சிவமயமாய்க்காணும் யோகியர்சித்தர்கணங்கள் ஓர்பாலும், இந்திரன் முதலிய தேவகணங்கள் ஓர்பாலும் குழுமியிருப்ப ; நந்தியெம் பெருமான் பிரம்பைக் கையிற்றாங்கித் திருமுன்னின்று பலமுறையொதுக்க, சங்க முதலிய இன்னியங்கள் கடல்போலொலிப்ப, கணநாதர்கள் வெண் சாமரையிரட்ட, பூதகணங்கள் விசிறியாற் காற்றையசைப்பப்பொலிவுற்றிருந்த அச்சமயத்தில் அம்மையார் பரமனைப்பணிந்து எம்பரம! தீச்செயல்புரிந்த தக்கன் மகளாகத்தோன்றிய இவ்வுடம்பொழிய அருள்புரியவேண்டுமென்று விண்ணப்பம் செய்ய ஐயனும் அம்மையை நோக்கி நங்காய்! இமையவரசன் உன்னை மகளாகப் பெறவேண்டித் தவஞ்செய்திருக்கிறான் அவன் விரும்பிய வாறு அன்னோன் மகளாகத்தோன்றி நோன்பாற்றியிருப்பின் பிறகுநாமுன்னை மணந்துகொள்வோம் எனக்கட்டளையிட ; அவ்வண்ணமே அம்மையாரும் பனிமலையின்கண் ஓர் பொய்கையில் ஓர் தாமரைமலரில் இளங்குழந்தையா யிருக்க ; நீராடச்சென்று கண்ணுற்ற மலையரசன் ; கையகத்தேந்தித் தன் மனைவியாகிய மேனையின்பாற் கொடுக்க அவளும் நாம் செய்த தவப்பயன் கைகூடிற்றென்று மகிழ்ந்து, இருகையாலும் வாங்கி மார்போடணைத்து உச்சி மோந்து பாலூட்டி வளர்த்து மகிழ்ந்திருந்தனள்.

இவ்வாறு பார்வதி தேவியார் பரமனைப்பிரிந்து பனிமலையில் வளருங் காலத்தில், நான்முகன் மக்களாகிய சனகன் முதலிய நான்கு முனிவர்கள் பன்னெடுங்காலமாக பலவேதங்களை யோதியுணர்ந்தும் உண்மைநிலையுணராது மயங்கித்தங்களுக்குள்ள ஐயம்போக்கிக் கொள்ளுமாறு கைலாயகிரியடைந்து நந்திதேவர் விடைபெற்று உட்புகுந்து சிவபிரானைக் கண்ணாரக்கண்டு களித்து மும்முறை வலம்வந்து வீழ்ந்தெழுந்து துதித்துப்பணிந்து உண்மைஞான நிலையையுணர்த்தி ஆட்கொண்டருளவேண்டுமென்றிரந்தனர்.

அன்னோர்க்கு அவ்வாறேயாகுகவென்று இன்னருள்பாலித்து நந்தி தேவரை விளித்து நாமிருக்கும் இடத்தில் மாரவேள் ஒருவனைத்தவிர எவரையும் புகவிடவேண்டாம் என்று கட்டளையிட்டு கல்லால நீழலில் குருமூர்த்தமாய் எழுந்தருளியிருந்து அந்நான்கு முனிவர்க்கும் உண்மை நிலையை உணர்த்தச் சொல்லாது சொல்லும் மோனநிலையைச் சின்முத்திரை யாற்காட்டி வீற்றிருந்தார். முனிவரும் ஐயம் நீங்கி உண்மை நிலையுணர்ந்து சித்திரத்தில்வரைந்த தீபம்போல் உள்ளமொடுங்கியிருந்தார்கள். எமதையனும் யோகியைப்போல் ஓர்கணப்பொழுது மோனமுற்றிருந்தனன். அக்காலவளவு தேவர்களுக்குப் பல்லுகங்களாகக் கழிந்தன என்பர்.

அரசர்பெருமீ ! தேன்தங்கிய கொன்றைப்பூவைச் சடையிற் சூடிய தனிநாயகன் ; தான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாயகிரியை யடைந்த முனிபுங்கவர் நால்வர்க்கு உண்மை நிலையாகிய ஞானோபதேசம் செய்ததை சொன்னோம். இனி சூரபன்மனுதிய கொடிய அசுரர்களால் இடருற்ற தேவர்கள், அக்கைலாயத்தையடைந்து வரம்பெற்ற வரலாற்றைக்கூறுவோம்.

உ

தேவர்கள் வரம்பெறுபடலம்.

அன்ன காலையின் மாயைதான் கசிபனை யணைந்தே
கொன்னி கம்பெறச் சூரமன் மாகொடும் புலித்தோ
வின்ன வானனச் சூரரை யசமுகத் திளையா
டன்னை யீன்றனள் வளர்ந்தனர் தவஞ்செயக் கருதி. (1)

அசுர மாமக மாற்றினர் சூருயி ரவியக்
கசியு மற்றிரு வோருமன் னணஞ்செயக் கருத
பசுவி னுயகன் முதியவன் போலவண் படர்ந்தான்
முசித வில்லரி முகனவன் முன்முறை யிட்டான். (2)

அம்ம வெம்பரன் சூரெழ வருளியா ரடலுஞ்
செம்மை யாயிரத் தெண்வகை யண்டமாள் சிறப்பும்
வெம்மை யேறரி யாழிதே ரினையன வேட்ட
தம்மு னேடிரு வருமுற வளித்தனன் றணந்தான். (3)

மறிதி ரைக்கடல் வைப்பிலோர் மகேந்திர புரியி
னெறியி லாவர சியற்றினர் தேவர்க ணியம
மறவ ழித்தனர் சயந்தனைப் பற்றின ரமரார்
சிறைபி டித்தன ரொழிந்தனர் சென்றனர் மேரு. (4)

அற்ற மும்பருக் கரயனு மிந்திர னசுரார்
செற்ற பெற்றியிற் கலங்கினன் றவஞ்செயச் சிவனூர்
பெற்ற மூர்ந்துவந் தென்னுனக் குற்றது பேசுங்
கொற்ற வாவென வசுரர்செய் குறையெலாங் குறித்தான். (5)

தக்கன் வேள்வியி லவியுணுந் தவறதா லடைந்த
துக்க நீங்கு மிமக்கொடி மணத்திலாஞ் சுதனு
லக்கொ டுந்தகு வரைச்சவுட் டுதுமுன தாசு
புக்கி ருந்தனை போதியென் றறைந்தனன் மறைந்தான். (6)

யோகி யாயிறை நிற்றலு முலகமுள் ளுயிர்கள்
போக முண்கிலர் கருவுயிர்த் திலர்மட மகளி
ராக வாயிரங் கண்ணனர் காத்தவ ருடனாய்
வேக மாகிவர் தலைடந்தனன் மனோவதி விரும்பி. (7)

தனது செய்தொழி லின்றியே தாபதர் குழுவின்
முனம மர்ந்திடு நான்முகக் கடவுடன் முற்போய்
கனக நாட்டவன் கண்டனன் தொழுதனன் கரைவா
னனக னியோகியா வானுமை மலைமக ளானர். (8)

முருக னைத்தா லெத்தினஞ் சூர்முத றடிய
வருகை யெத்தினம் போரு ருற்றனம் வள்ளா
லொருக ருத்திதற் கோதென வொதிமக் கொடியோன்
மருத நன்னில வேந்துநா மாலிடஞ் சார்வாம். (9)

என்ன நான்முக னேதலு மமரர்கோ னிசைந்தான்
கன்னி யந்துழா யலங்கலான் காமர்பூம் புரம்போய்
முன்னி ருந்தவன் விசுவசே னன்னவன் மொழியாற்
பன்ன கந்துயின் மாற்சரோ ருகப்பதம் பணிந்தார். (10)

அறிது யிற்கொளு மையவெஞ் சூர்செயு மகமு
மிறைவ னியோகுசெய் திருத்தலு மெம்மையீன் றவள்போய்
நிறையி மக்குலக் குறிச்சியிற் சிறுமியா நிலையு
மறிதி மேற்செய லென்னென வரியுமங் கறைவான். (11)

மன்ற லுந்தியந் தாமரை மலர்வரு மறையோ
யொன்று நால்வருக் கொருமொழி யுரைப்பதன் பொருட்டாங்
குன்ற வில்லியி னியோகெழக் கருப்புவிற் குனிக்குந்
தென்ற லந்திருத் தேரனை விடுமினுங் கென்றான். (12)

பேர வைக்கணக் காமனை நினைத்தனன் பிரமன்
மார வேளது மறுக்கலன் வந்தனன் மறையோன்
சூர னுற்படுந் துயரற வாலமர் சுடரந்
நீர யோகெழ நீமலர்க் கணைதொடென் றுரைத்தான். (13)

வேளை யாண்டுற விடுத்திடின் மூண்டெழு தீமுன்
பூளை யாமெனப் போவது மெய்யெனப் புகன்றான்
காளை யாமதன் பங்கயன் றேவரைக் காப்ப
நாளை நிற்றியேற் சொல்லுனை நலியுமென் றுரைத்தான். (14)

அஞ்சி யேமத னுன்னதே யாகவென் றிசைந்து
நஞ்சை யொத்தவெஞ் சாபமேற் றலினவ ணூடி
பஞ்சின் மெல்லடிப் பாகனுற் பகைபட விறத்த
லுஞ்சு போகுமா றருள்செயு மமுதென வுன்னி. (15)

புந்தி யொத்தறத் தேறின னடந்துதன் புரம்போய்
சுந்த ரத்தத னிரதிபாற் சொல்லின னெழுந்து
மந்த மாருத வெந்திரங் கடாவினன் வெள்ளி
விந்த நந்தியைக் கண்டனன் விடைகொடு வேளை. (16)

ஆல நீழலிற் றென்முக மூர்த்தமா மமலன்
கோல மோர்ந்திலன் கருப்புவில் விலக்குறக் குனித்து
சால வம்புய மாதிய கணைகொடு சமர்செய்
காலை யங்கியங் கண்ணெரி பட்டது கரிந்தான். (17)

காத லற்பிரிந் தாற்றலா திரதியாள் கலங்க
நாத னுன்றனக் குருவமாய் நானிலந் தனக்கெப்
போதுங் காண்பதற் கருவமா யிருப்பனுற் புலம்பி
மாத யர்ந்திடே லெனத்துயர் நங்கையு மகிழ்ந்தாள். (18)

வேறு.

மீனகே தனனை நெற்றி விழியினு லெரித்த வண்ணல்
ஞானமா தவர்கட் கந்த ஞான்றுள சங்கை நீங்க
வானமு மண்ணு மென்றும் வழிவழி வீடு வாய்ப்ப
மோனமுத் திரையால் வேத முடிவுரைத் தியோகி னின்றான். (19)

பூங்கணை மதன வேளைப் பொடித்தநம் புனிதன் யோகு
நீங்கில னென்செய் கிற்பா மென்றயன் முதலோர் நேயந்
தாங்கின ராகி நந்தி காப்புடைச் சயில மேகி
யேங்கினர் நின்றா ரையன் விடைதா வீசற் கண்டார். (20)

ஆனு ரெய்தி யாரு மாற்றின ரழுது விம்மிச்
சூரனு விடுக்க ணெய்தித் தொன்னக ரிழந்து மாழ்கி
மாரனை விடுத்த வாசு மறந்தரு ளென்றார் தஞ்சொ
லாரமு தாகி யூட்ட வஞ்செவி மடுத்த வையன். (21)

பங்கய னாதி யாய பண்ணவர் கேண்மி னந்த
மங்கையை மணந்து வைவேன் மதலையைத் தந்து சூற்

சங்கரித் தூங்க டானந் தருதுமா லென்னக் கேளாப்
புங்கவர் மகிழ்வு கூர்ந்து தத்தம புரம்புக் காரே. (22)

தேவர்கள் வரம்பெறு படலம் முற்றிற்று.

ஆகபடலம் 5-க்குச்செய்யுள் 142.

சிவபிரான் இவ்வாறிருக்குங்காலத்தில் அசுரர்குல மகளாகிய மாயையென்பவள் காசிபமுனிவரைக்கூடிச் சூரபதுமன் சிங்கமுகன் தாருகன் என்னும் ஆண்மக்கள் மூவரையும் அசமுகியென்னும் பெண்மகள் ஒருத்தியையும் பெற்றாள். இந்நால்வரும் வளர்ந்து பருவமுற்றியகாலத்தில் அசமுகியொழிந்த மூவரும் தவஞ்செய்யக்கருதிச் சிவபெருமானைக் குறித்துப்பல காலம் அசுரயாகஞ்செய்யவும் அப்பெருமான் காட்சிதாராமையால் சூரபதுமன் வேள்வித்தீயிற் குதித்திறந்தனன். மற்றிருவரும் தம் முன்னவனைப்போல் அவ்வேள்வித்தீயிற் புகுந்திறக்கத் துணிந்தகாலையில் கங்கைவேணியன் காட்சி தந்து சூரபதுமனை உயிர்பெற்றெழச்செய்து பன்னெடுநாள் நோற்றனை வேண்டும் வரம்கேள் ; என்ன அவன் கேட்டவண்ணமே ஆயிரத்தெட்டண்டங்களையாளும வன்மையும், இந்திரஞாலத்தேரும் அவ்வண்டங்கள்முற்றும் சென்றுலவும் ஆழியும், சிங்கவாகனமும், பாசுபதமுதலிய படைகளும், வச்சிரயாக்கையும் தந்து ; மற்றிருவர்க்கும் சூரபதுமனோடு நூற்றெட்டுகங்கள் வரையிலும் யாவரையும் வெற்றிகொள்ளும் வன்மையுந்தந்து மறைந்தனர்.

வரம்பெற்ற சூரபதுமனாதியோர் மகேந்திரபுரியைத் தலைநகராகக் கொண்டு முறையிலாவரசாட்சிபுரிந்து இந்திரன் முதலிய தேவரும் யாவரும் உள்ளம் நடுங்கச் சயந்தனையும் மற்றுள்ள தேவர்களையும்வென்று சிறைகொண்டு நிறைசெல்வமுற்று வாழ்ந்திருந்தனர். தப்பியதேவர்கள் மேருமலையிலும் வேறுவேறிடங்களிலும் திக்குவேறின்றிப்புக்கொளித்தர். இவ்வசுரரால் கலக்கமுற்ற இந்திரன் பிறைமதியணிந்த இறைவனைநோக்கி மேருமலையில் ஓரிடத்தில் தவம்புரிய இறைவன் எதிர்தோன்றி விண்ணோர்தலைவ ! நினக்குற்ற மனக்குறையாது சொல்லென்ன அசுரரால் தாங்கள்படுங் கொடுமையெல்லாங்கூறி முறையிட்டனன். அதைக்கேட்ட பாமபதி நீங்கள் எல்லீரும் தக்கன் வேள்வியிலொக்கவிருந்து அவியுண்ண விரும்பியதால் நேர்ந்ததாகும் இத்துன்பம்; இதுநீங்க நாம் மலையரசன் மகளைமணந்து ஓர் சேயைத்தருதும் கவலற்க, என்றருளி மறைந்தனன்.

பிறகு இந்திரன தேவர்களுடன் நான்முகன்பாற்போய்ப் போற்றிப் பணிந்து இறைவனால் தான்பெற்ற வார்த்தைச்சொல்லி அவ்விறைவன் இப்போது கல்லாலநீழலில் யோகியைப்போலிருப்பதால் மலைமகளை மணந்து

சூரரையொழிக்கும் சேயைத்தருவதெவ்வாறு ? எனவினவ ; பிரமனும் அத் தேவர்களுடன் வைகுந்தஞ்சேர்ந்து திருமகள் கொழுநனைப்பன் முறை பணிந்து, மறைமொழிகளாற்றுதித்து தங்கள்கருத்தை வெளியிட அப் பெருமான் மேல்நிகழ்வதைச் சிந்தித்தவனாய் விண்ணவர்காள் ! அங்கண்ணு தலோன்பால் காமனை அனுப்பின் நும்மெண்ணம் முற்றுறுமென்றுமொழிந்து விடைதந்தனன்.

விடைபெற்ற பின்னர் பிரமன் தேவர்களுடன் தன்னுலகமடைந்து மாரனை நினைக்க உடனே வந்தனன். வந்த அம்மாரனைநோக்கி எமக்காக நீ கைலை நண்ணி யோகியாய் எழுந்தருளியிருக்கும் சிவபிரான்மேல் நின் மலர்க்கணைகளைத் தொடுக்கவேண்டுமென்று கட்டளையிட, அங்கட்டளைக் கஞ்சிய மன்மதன் இசைந்து தன் தேவியுடன் கைலாயமணுகி நந்திதேவர் விடைகொண்டு உட்புகுந்து சிவன்மேல் மலர்க்கணை தொடுத்தான் தொடுத்த தனால் விழித்த கடவுளது நுதற்கண் கனலால்வெந்து சாம்பராயினான். அரு கிருந்த அவன்தேவி ஆற்றொண்ணுத் துயருற்று அழுதுநிற்ப நினக்குமட்டும் உருவமாகியும், மற்றையோர்க்கு அருவமாகவும் நின்கணவன் இருப்பன் என்றருளிப்பண்டுபோல் அமர்ந்திருந்தனன்.

மன்மதனைப்பொடியாக எரித்தும் முன்போலிருக்கும் செய்தியைக் கேள்வியுற்ற தேவர்கள் யாவரும் வெள்ளியங்கிரியையடைந்து புறம்பேநின்று கடல்போற் பேரொலியோடு முறையிட்டுத் துதிக்கப் பரமன் நந்தியை விளித்து யாவரையும் அழைத்துவருகவென அந்நந்திதேவரால் உட்புகப்பெற்ற தேவர்கள் பரமனைக்கண்ணுற்றுப் பணிந்துபோற்றி பெருமானே பல்லுகங் களாகச் சூரனுற்படுந்துயரொழிய பார்வதியை மணந்துகொள்ளல்வேண்டு மென்று கைகூப்பித்தொழுதனர். இதைச்செவியுற்ற ஐயனும் பிரமன் முதலிய தேவரைக் கடைக்கணித்து துன்பம் ஒழிமின் ; நாம் பார்வதியை மணந்து முருகனைத்தந்து சூரரைவாட்டி உங்கள் துயரை ஓட்டுவோம் என்றருளினர். இவ்வரத்தைப் பெற்றுமகிழ்ந்த தேவரனைவரும் விடை கொண்டு தத்தம் இருப்பிடஞ்சென்று சேர்ந்தனர்.

இடையருது செந்நெற்பயிர்கள் ஓங்கி வளர்வதற்குக் காரணமாகிய காவிரிநதி பாயும் நாட்டின் செல்வமெனப் போற்றும் வளவனே ! தம்மை அடைக்கலமென்றடைந்த தேவர்களுக்குச்சிவபெருமான்வரந்தந்தருளியதைச் சொல்லினேம். இப்பால் நஞ்சை அமுதாக உண்டருளிய அப்பரமனே அஞ்சியடைந்த அடியவர்பொருட்டு ஆறுமுகப்பெருமானுன பெருமையையுஞ் சொல்லுவாம்.

பெருமான் அறுமுகங்கொண்டபடலம்.

செஞ்சாலி விளைபழனப் பொன்னி நாட்டுச் செல்வமென வளர்வளவ செப்பக் கேண் [மோ
தஞ்சமென வமரர்கிருக் கைலை நண்ணிச் சங்கரன்பால் பெற்றவருஞ் சாற்றி னோமால்
நஞ்சமுத மாக்கியவப் பரமன் றானே நந்தலிலாத் தன்கருணை நாட கத்தா
லஞ்சமுகங் கொடுநின்ற வமரர்க் காக வாறுமுகங் கொடுநின்ற வதனைச் சொல்வாம்.

வேறு.

உம்பர்தா மகன்றா ரைய னுயர்பனி வரையை நண்ணி
யெம்பிரா ட்டியைக்கண் டின்சொ லேற்றெழு முனிவர் தம்மை
யிம்மென மலைமன் பாற்போய் மகட்கொடை யிசைந்த நன்சொற்
றம்மென வவர்க ளேகித் தடவரை யரையற் கண்டார். (2)

மேனையுந் தானு மேழு முனிவரர் வந்த தோர்ந்து
வானுற நிவந்து மஞ்சார் மலையிறை மகளைத் தந்தே
னரற் கடிமை யானே னென்றலு நனைபூங் கோதை
மோனமா முனிவர்ப் போற்றிப் புகலுவ ளுரிய மாற்றம். (3)

சடையிடை பெண்ணாண் டென்பார் தானவ ளமைச்சார்ந் தன்றி
நடைபெற வொண்ணா தத்தா லையமு நமக்கின் றென்றாள்
விடைகொடு சென்றா ரீசற் குரைத்தன ருற்ற தீண்டை
யடையவும் வரைபு னைந்தா ரம்மையைக் கலன்பு னைந்தார். (4)

வேறு.

இமவரை மன்மக ளீசன் றன்னிடத்
தமர்வுறு மணமக ளாத னோக்கியே
கமையுல குக்கெலாங் கலன ளிப்பவட்
கிமிழ்தா வணிகல னேற்ற முற்றதே. (5)

குல்லையந் தொடையுடைக் குரிசி லுத்தரத்—தெல்லையா ளரசனு மிரணி யத்தினும்
வில்லுமிழ் மணியினும் வீக்கு நல்லன—பல்லணி பாப்பணி பரமற் சூட்டவே. (6)

அடிமுடி காணுமா மழக கக்கணால்—முடிதலா மன்றியிம் முகக்க னோக்கமென்
படுமென நந்தியும் பரன்மு னின்றனன்—கடிமண நிகழ்வழி கடத்த லுன்னியே. (7)

மூரிவெள் ளேற்றினி லிவர்ந்து முக்கணன்—சாரிசெல் காற்சிவ கணத்தர் தத்தமி
லாரவ வரவொலி யகன்றெ ரேழெனும்—வாரியி னார்த்தெழு மழைசொ ரிந்தனர். (8)

சந்திரன் கவிகைகை தாங்கத் தக்கவா—றிந்திர னுதிதிக் கிறைவ ரெல்லுமிழ்
சுந்தரச் சீகர மாதி தூக்கமா—லுந்தியந் தனன்குசை யுறுவ தேந்தினன். (9)

அம்பரர் யோகிய ரணைந்து வாழ்த்திடத்—தும்புரு நாரதர் துதிப்ப யாழ்கொடு
கும்பசம் பவன்முதற் கோதி லாதவர்—நம்பன தருட்பெற நாட வேவரும். (10)

ஓதுகூர் மாண்டம்பிர்ம் மாண்ட முற்றுமாய்ப்-பாதுகா வுருத்திரர் பவன ரெண்ணிலர்
பூதர்கோ ணாள்களும் புவியி டங்கொளா-வே துவி னரற்குக்கே ளென்னப் போந்தனர்.

எண்ணறு புவனத்த ரியாரு மோர்வழி—யெண்ணிட விடமிலை யென்னக் குழுமலால்
மண்ணது தாழத்தென் மலைய வெற்பணைந்—தெண்ணறு தவக்குறு முனியி ருந்தனன்.

மேனையு மற்றுள வேள்வி காணிய—வானர மங்கையர் வந்து ளோரொடு [னள்.
மானமங் கலப்பொரு ளணியக் கொண்டெதிர்—மானிட மேந்தியை வருகை யேற்ற

மன்னுயிர் யாவையும் வயிறு வாய்த்தபொற்-கன்னியைக் கங்கைநீ ராட்டிக் காசிலாப்
பொன்னுடை மணியணி புனைந்து பொற்புற-வின்னிய வதுவைமண் டபத்தி லேற்றி
[னார். (14)

சங்கர யாஞ்செயுந் தவக்கொ ழுந்தினை—யிங்குனக் களிக்குது மேற்றுக் கொள்கென
செங்கையா னீரொடுந் தீயின் முன்பெறு—மங்கையை நல்கினான் மலைக்கு மன்னவன்.

செங்கம லத்தணல் செப்பி மாமறை—யங்கியிற் செய்வன வாற்ற மங்கலந்
தங்கரத் தாலுமை கழுத்திற் சார்த்தின—னிங்கித வின்பம்வீ டளிக்கு மீசனே. (16)

ஆலமுண் டவர்க்கமு தளித்துப் பின்மணக்—கோலநோக் குற்றபல் குழுவி னர்க்கெ
வேலையி னமுதென விருந்துண் பித்தபி-னேலவார் குழலியோ டீசற் போக்கினான்.[லாம்

துள்ளுமால் விடையிவர்ந் தரன்று லங்கினான்—வெள்ளிமால் வரையக மேவி வாழ்ந்த
தெள்ளிய விடைகொடு செலவின் முன்னினா—ருள்ளியே மன்றல்வந் துற்று [னன்
[ளோரெலாம். (18)

வேறு.

அம்மை யப்பனா மகமகிழ் சிறந்தன ரிருப்ப
வெம்மை யாங்கொடுஞ் சூரனா லவன்சுதர் விறலாற்
றம்ம கந்தணந் தமரரோ டிந்திரன் முதலோர்
பொம்ம லற்றம ரமரரோ டியாவரும் பொதுளி. (19)

கால மூன்றையுங் கடந்தவ னுறைதரு கைலை
சால வேகினர் நந்தியெம் மான்விடை தரலால்
நீல கண்டனைக் கண்டன ருமையொடு நேரா
ரேல வேசெயு மிடர்க்கடற் கரையினின் றிவரார். (20)

ஐய வாற்றுகி லேமசு ரேசனா லாந்தை
யுய்ய வோர்கதி காண்கில முன்பத மல்லாற்

றுய்ய வோர்மக வுதவுவ லென்றவத் தொழிலைச்
செய்ய கிற்றிலை யென்றுகை தொழுதனர் திகைத்தே. (21)

அஞ்ச லென்றவர்க் காரருள் புரிந்துபின் றாதி
பிஞ்ஞ கன்பசு பதியுரு விலியுருப் பிறங்கா
வஞ்ச னக்கள னதோமுகத் தோடறு முகத்துள்
விஞ்ச நீக்கணிற் புலிங்கமொன் றொன்றெழ விடுத்தான். (22)

ஆதெ ழுந்தன வண்டகோ ளகைப்புறத் தப்பாற்
சோதி யாயின வளக்கரும் வருந்தன சுரர்கள்
மாதி ரத்தவர் முனிவரர் வெருவினர் மறைந்தார்
பாத நூபுர மொன்றொடொன் றுறவுமை படர்ந்தாள். (23)

திங்க ளஞ்சடை யரனரு ளாடலிற் றிரிந்த
வங்கி வந்துகை யமர்ந்தன வஃதறிந் தமரர்
சங்க ரன்றிரு முன்வர வகிலனை யஃலை
நங்கை யிற்கொடே கங்கையிற் றரவென நுவன்றான். (24)

நாம வப்புலிங் கங்கணிற் காணவு நடுங்கித்
தூம கேதுகைத் தாங்கினன் காற்றவன் றுணையாய்ப்
பாம சானவி விடுத்தன ரன்னவள் பதைத்தாள்
சோம சேகரன் சடையெனத் தனைத்தனுள் சுருக்க. (25)

தெய்வ கங்கையத் தீப்பொறி தமையிமா சலத்திற்
றுய்ய வம்பிகை தவத்தகச் சரவணத் துறையிற்
பெய்ய மற்றவை யோராறு குழவியாய்ப் பிறங்குஞ்
செய்ய தாமரைத் தொட்டிலிற் கிடந்தன சிறந்தே. (26)

அண்ட மெங்கணும் பூரண னாகிய வமலன்
கொண்ட கோலமே மூவிரு வதனமாங் குமரன்
விண்ட சாரசக் கண்கர மீராறு விதமாய்
கண்ட மேலவர் பூமழை பொழிந்தகங் களித்தார். (27)

ஆயி ரத்தித ழம்புயம் பாயலா யுடுக்கண்
மேய காயம்வி தானமாய்க் கதிர்மதி விளக்காய்
வாயு சீகர மாயனஞ் செவிலியாய் மடுக்கண்
சேயி ருந்தன னமரர்கள் சூழ்ந்துசே விப்ப. (28)

நுணங்கு நுண்ணிடை கார்த்திகை மகளிர்பா னுகர்ந்து
மணங்கொ டாமரைக் காடகத் தறுமுக மதலை

வணங்கு லாய்ப்பல விந்தைசெய் தவண்வளர்த் திருந்தா
னணங்கு தீர்த்தன மெனச்சுர ரகங்களித் தண்ம. (29)

பொன்னெழிற் குன்றைப் பொருநெடு நிலக்கீழ்ப் போரறு வாயில்சூ ழெயில்
மின்னுமா மாட மலிமறு குறந்தை வேந்தவெம் பானறு முகனைப் [சூழ்
மன்னிய காதை யுரைத்தனந் துணையா மலைமக ளூபுரத் தெழுந்த
கன்னியர் பாலொன் பானெனும் வீர ருதித்தமை கட்டுரைத் திடுவாம். (30)

பெருமான் அறுமுகங்கொண்ட படலம் முற்றிற்று.

ஆகபடலம் 6-க்குச்செய்யுள் 172.

சிவபெருமானால் அஞ்சலென்று ஆதரிக்கப்பெற்ற தேவர்கள் தத்தம் இருப்பிடங்கட்குச் சென்றார்கள். ஆலடியமர்ந்த நீலகண்டப் பெருமான் பின் இமாசலத்தில் தன்னை மணக்கத் தவஞ்செய்த உமாதேவியார்க்கு தரிசனந்தந்து அம்மையாரை மணக்கவேண்டி அகத்தியர் முதலிய முனிவரெழுவரை பர்வத மன்னன்பால் மணம்பேச விடுத்தார். முனிவர்கள் மொழிந்த இனிய மணமொழியை கனிவுடன்கேட்டு பனிமலை வேந்தனும் அன்னோன் மனைக்கிழத்தியாகிய மேனையும் அடங்காத மகிழ்வெய்தி விடங்காலரவணியும் சங்கரற்கு எங்கள் நங்கையைத் தந்தோமென்றார்கள். முனிவர்கள் திருமணத்திற்கு நல்லோரை குறித்து விடைபெற்றுச் சென்றார்கள். உடனே மலையரையன் நகரை அலங்கரித்து மணத்துக்காவனகணத்திற் புரிந்தான். பாம்பணியும் பரமன் மின்னொளிவீசும் பொன்னணியணிந்து மருமலராரம் வேய்ந்து திருமணக்கோலம்பூண்டு இடபமூர்ந்து சிவகணங்களும் தேவகணங்களும் முனிவர்கணங்களும் புடைசூழ இமாசலமடைந்தார். அங்கு எள்ளிட இடமில்லை என்னும்படி யாவரும் குழுமினார்கள். மணவிழாக்காணவந்த முனிபன்னியர்களோடும் தேவமாதர்களோடும் மங்கலப் பொருள்களோடும் அம்பிகையின் அன்னையாகிய மேனை, மானிடமேந்திய பரமனை எதிர்சென்று வரவேற்றாள். பல்லியங்கண்முழங்க பர்வதராசன், உலகுயிரியாவையும்பெற்ற கன்னியாகிய பார்வதியம்மையாரை மணிகளிழைத்த அணிகளணிந்து மணத்தவிசேற்றி, அண்ணலே எந்து அருந்தவப் பயனாகிய நங்கையை எற்றருளவேண்டுமெனச் சங்கரன்றிருக்கரத்தில் தாரைவார்த்துக்கொடுத்தான். விதிப்படி பிரமன் வேள்விமுதலியன செய்ய மதிப்படியுஞ்சடையான் பார்வதிதேவியின் திருக்கழுத்தில் திருமங்கலம் புனைந்தார். மணவினை சிறப்பாய் நடைபெற்றது. மணங்காணவந்த யாவரும் தத்தமது பதிக்கேகினார்கள். சிவபெருமானும் மலையரசனிடம் விடைபெற்றுத் திருக்கைலாயமேவி உமையோடும் எழுந்தருளியிருந்தனர்.

அக்காலத்தில் சூரபத்மனுதிய கோரவசுரர்களால் நெடுங்காலமாகக் கொடுந்துன்புற்ற தேவர்களும் தேவேந்திரனும் கைலைக்குச்சென்று, நந்தி தேவரிடம் முந்திவிடைபெற்றுச் சத்திநாதனை பத்தியொடுபணிந்து, மாயை மைந்தர்செய் நோயையாற்றலம், ஐயனே, சூலமேந்துங்கையனே, நின்பதத் துணையன்றி கதிவேறில்லோம், முன்னம் மொழிந்தவண்ணம் குமரனை இன்னும் தந்திலையே, என்செய்வோம் என்னப் பன்னித்துதித்தார்கள். அப்போது பிஞ்சகன் அஞ்சலென்று அருண்மொழி புகன்று அதோமுகத் தோடு ஆறுமுகங்களிலுமுள்ள நெற்றிக்கண்களினின்று ஆறு தீப்பொறிகளை வெளியிட்டார். அத்தீப்பொறிகள் அண்டகோளங்களுக்கப்பாலும் ஒளியை வீசின. அவைகளின் வெப்பத்தால் கடல்களும் வரண்டன. அண்டர்களும் எண்டிசைபதிபர்களும் முனிவர்களும் அஞ்சி மறைந்தார்கள், உமாதேவி யாரும் காற்சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்கும்படி வெருவி விரைந்தோடி னார்கள். பரமசிவன் நினைப்பின்வண்ணம் வெளிவந்துலவிய அத்தீப்பொறிகள் பரமன்றிருக்கரத்தில் வந்தமர்ந்தன. அதுகண்டு தேவர்கள் பரமன் திருமுன் அணுகினார்கள். சங்கரன் வாயுதேவனையும் அக்கினிதேவனையும் நோக்கி இப்பொறிகளை கங்கையிற்சேர்க்கவெனக் கட்டளையிட்டார். அக்கினிதேவன் வெம்மைக்காற்றாது நடுங்கினவனாய் அவைகளைக் கரத்திற்றாங்கி வாயுவின் உதவியால் கங்கையிற்சேர்த்தான். கங்கையும் அவைகளின் வெப்பத்தைத் தாங்கமுடியாமல் இமாசலத்தில் உமாதேவி தவச்சாலையின் கண்ணுள்ள சரவணப்பொய்கையிற் சேர்த்தாள். சரவணப்பொய்கையில் அத்தீப்பொறிகள் ஆறுகுழந்தைகளாகிச் செந்தாமரை மலர்களாகிய தொட்டில்களிற்கிடந்தன. ஆறுமுகம் ஈராறுகரம் ஒழிவிலருள்சேர் விழிபன்னிரண்டொடும் திருவவதாரஞ் செய்த முருகப்பெருமான், தேவர்கள் மலர்மாரிபெய்து வணங்கி வாழ்ந்தோ மெனக்களித்து சூழ்ந்திருக்கக் கார்த்திகைமாதர் ஆர்த்தியொடூட்டும் அலையமு தன்ன முலையமுதுண்டு அற்புதம் பற்பல பொற்புறப் புரிந்து வளர்ந்து கொண்டிருந்தான்.

துணைவர்வருபடலம்

மின்னவிர் வேணிப் பரசிவ னாறு நுதற்கணின் மிளிர்ந்ததீப் பொறிகண்
முன்னெழு மூழிக் கனலெனப் பொங்கி மூதண்ட கூடமு முட்டக்
கன்னலை யமுதைப் புரையுரை யுமையாள் கண்டனள் வெருண்டலை ளிரிய
மன்னர விந்தக் காற்சிலம் பணியிற் சிந்தின தொன்பது மணிகள். (1)

மூலத்தழும் பளித்த வறப்பெருஞ் செல்வ முன்னவண் மீண்டுமம் முன்னோன்
நிலத்தெழு மிடத்தி லமர்தரப் போர்த்தாள் நீழலம் மணிகளி னிலவ
வலத்தழ லேந்தி நோக்கியின் னருளான் மணிகளி னிலவுரு வெளியி
லலத்தக மலர்த்தாட் சத்திக ளாக வனைவிரும் வருகவென் றறைந்தான். (2)

நவமணி யொளியி னவசிவ சத்தி நங்கைய ராயின ரவர்க
ளுவமையி லுமையே பாதகே சாதி யுறுப்பினாற் சாயலா லணியாற்
றவலறத் தோன்று மாதர்க ணோக்கஞ் சார்ந்தன சிவனிட மவனு
மிவரெழி னோக்கி யிருந்தன னதனா லேவருங் கருப்பமுற் றனரால். (3)

பருப்பத வேந்தன் பெறுமொரு மகளும் பன்னிற நவமணி மகளிர்
இருப்பதை யுணர்ந்தா ணம்பெருந் தலைவ னிவர்வயிற் சேர்த்தின னென்றே
மருப்பயி லளகச் சத்திமா ராகு மாற்றவ ரன்றனா லடைந்த
கருப்பமும் பலநா ளுயிர்த்தில ராக வென்றொரு சூளுரை கணித்தாள். (4)

அரவணிந் தவனா லம்பிகோற் பவனென் னுமலவ் வரும்பெறற் குமரன்
சரவணோற் பவனென் றுரைபெறச் செய்த தாரணி வானவர் மகளிர்
கருவணா ராக வென்றுமென் றொருசூ ளியம்பினள் கனவெனும் பிறப்பாம்
ஒருபெருங் கடற்குப் புணையதா யடிய ருறுதுய ரொழித்துவீ டளிப்பாள். (5)

ஊடலைப் பரமன் றவிர்த்திடத் தணிந்திட் டுமையிடத் தமர்ந்தன ளுமையால்
வீடவிற் சாபம் பெற்றதா லொன்பான் மெல்லியர் நல்லியல் பிலராய்
வாடலின் வெயர்த்தார் வெயர்வையி னிலக்க வயங்கன வீரரா யுதித்தா
ராடலிற் சலியா வாளொடு பலகை யங்கையி லேந்தின ராக. (6)

தோன்றிய வீர ருச்சியிற் கூப்பு கையினர் சூழொளி விளக்கை
யான்றபே ரன்பாற் றொழுதன ரிருப்ப வையனு மனையரை நோக்கி
வான்றரு கங்கை வருசர வணத்தில் வளர்ந்திடு நம்முனோன் றுணையாய்
தோன்றல்கா ணீவிர் பணிபுரிந் திருத்திர் சொல்வண மென்றுசொல் லினனே.

இனியன வாகத் தந்தையா மந்தி வண்ணனா லியம்புநன் மொழியைக்
கனிவினாற் றலையா லேற்றுமேற் செயலைக் கருதின ரிருந்தனர் திருமுன்
புனிதன திடப்பா லமர்ந்திரு ளன்னை பொங்கிய சினத்திலக் காய
வனிதைய ரெவரு மவன்பணி புரிந்து மருவினர் திருவரு ணோக்கி. (8)

இத்தகு சத்தி மாரக டுறுதற் கேற்புடை நந்தியங் கணத்து
வித்தகர் குழவி யாய்ச்சிவ யோகின் விளங்கின ரிருப்பமற் றவரைத்
தத்தைமென் மொழியார் தாங்கல ராகித் தாணுவை யம்மையோ டிரந்தார்
அத்தகு பொழுதி லமலையை நோக்கி யையனீ திசைத்தன னன்றே. (9)

மற்றுயி ரண்ட கோடிக ளனைத்தும் வயிற்றகத் திருத்திய நீயே
பெற்றவ ளாதி நின்னது கூறும் பேரெழி னங்கைய ரெவரு
முற்றவக் கருவின் பொறையினை யாற்று துளமருண் டெய்த்தன ரின்னே
பெற்றிட வருளாய் மைந்தரை யமரர் பேரஞ ரகன்றிட வென்றான். (10)

பரனரு ளியசுன் மொழிசெவி வழியே பாய்தரக் கருணையங் கடலாய்
தருமதே வதையா யுலசெலாம் வளர்க்குந் தாயகங் கனிந்தன ளாக
வருமையாய்த் தன்காற் சிலம்பணி யணியி லாமரி வையர்கரு வுயிர்க்க
கருவினை யுயிர்க்க கருவினையுயிர்க்க வென்றனள் கனிந்து மும் முறையே(11)

தராதலத் தழுத்தும் பற்றறப் பற்றில் சங்கரற் பற்றுளந் தரிப்ப
பிராணனை யபான னோடுற மூல வனன்மதி மண்டலம் பிறங்க
விராமமுற் றனையார் கருப்பையு ளியோகு செய்தமர் வியன்சிவ கணங்கள்
பராபரை மாற்ற மறிந்தனை வயிற்று ணின்றெழப் பார்த்தனர் முயன்றார்(12)

பிறப்பினை யகற்றப் பிறப்பிலான் றிருமு னிருந்தன மவன்பணி பெற்றுச்
சிறப்புற வவனென் செய்வது செய்க வெனக்கருத் தரித்துட னிரம்ப
வுறப்பெறுங் குமரப் பருவமாய் மீசை முகத்தெழ வுடையணி முதல
நிறப்பிய தூய வுடம்பினர் பிறப்பா னினைந்தனர் நினைந்திடு மேல்லை. (13)

பார்ப்பதி திருத்தாள் பரிபுர முன்னம் பவங்கொடு படர்ந்த மங்கையர்கள்
கார்ப்பொதிந் தும்ப ரெழக்களி தூங்கு களிமயி லெனப்பெருங் கருணை
வார்த்தையைச் செவிவாய் மடுத்தவள் பாதம் வணங்கியன் னவள்விடை கொ
வேர்ப்பில ராகி யொன்றிலாப் பதின்மர் பெற்றனர் தேவரும் வியப்ப. [ண்டே

கவனவெள் விடையே றுகைத்தவ னருளாற் கடவுளர் வறுமையுற் றவர்செய்
தவநலப் பேறு லொளி வெளியுலவத் தண்ணிய கட்செவிப் பாய
லுவணவூர் தியினு னுந்திமா மலரி னுதித்தவப் பிரமனை யொப்பச்
சிவநவ வீர நந்தியங் கணத்தர் செனித்தன ருந்தியிற் சேயாய். (15)

வேறு.

ஆணிக் கனக மணிமன்று ளாடிய வம்பலவர்
வேணிக்கண் வைத்த கங்கையர் வாம விமலைதனின்
காணிக் கிசைந்த சதியிவ ளொன்றுளங் கண்டிணங்கு
மாணிக்க வல்லி வயின்வீர வாகணல் வந்தனனே. (16)

சாளமுத் தாலி தூவருவிக் குனறந் தந்தவளை
யுறழமணந்தசு ரன்றரு தானைக ளோடி களம்
புாள சுவர்க்கத் தவர் குடியேறப் புராரிதனல்
தாள வல்லிக்கண் சனித்தனன் வீரமா கேசரியே. (17)

கட்பதுமத்திணை யாஞ்சிவை யேயென்னக் கண்டிணங்கத்
தட்ப நெருங்கி லொதுங்கிற் சுடுங்கனற் றையலவள்
நட்பகலாது மணந்த சதோதய நடன ருளாற்
புட்பாா கத்தவள் வீரமா கேந்திரற் பூத்தனளே. (18)

தாமோ தரன்முதற் றேவர்க ளாருந் தலையன்பினு
லாமோத மாக வசுர ரொடுங்கி யலமரத்தீ
மாமேத மாற்ற முனிவரர் பெற்றனள் வருனருளாற்
கோமேதக வல்லி வீரமா கேசக் குமரனையே. (19)

சூரர்புரம் பொடி யாகச் சுரர்சிறை விட்டகல
தீர புரந்தரன் சேனு பதிக்குச் சேர் துணையா
நேர புரந்தர லென்றுமில் லென்றுயர் நேர்மையுற
வீர புரந்தரற் றந்தனள் வைடூ ரியவல்லியே. (20)

நச்சர வப்பணி பூண்பர னெற்றியி னுட்டமெழு
மச்சிறு கந்த னுடனசு ரேச னகங் கெடவே
பச்சிரத் தங்கொண்ட செங்குந்த மேந்து பலம்பெறுவான்
வச்சிர வல்லிப் புடைவீர ராக்கதன் வந்தனனே. (21)

உரக தரன்பரை நூபுரத் தாம்பரை யூடணவும்
விரக தாத்தினிற் சூல்கொடிந் நாடவ மேவிமறை
துரகத மேறி நடாத்திய சேவடி தோத்தரியா
மரகத வல்லியில் வீரமார்த் தாண்டனும் வந்தனனே. (22)

கவள வல்லியானை முகன்சிங்க மாமுகன் காதலகந்
துவள வல்லிந்திர னாதிய தேவர்கள் சோகமறச்
சவள வல்லிங்கு விகம்பெறச் சங்கரன் றன்னருளாற்
பவள வல்லிப்புடை வீராந் தகன்பவ மாயினனே. (23)

நீலக் கொடிபடர்ந் தேறி விளங்கவுந் தீயவன்சார்த்
தாலக் கொடிபறித் தேந்தவும் போர்க்களந் தோறுநரி
கோலக் கொடிக ளுலாவவுங் குந்தங் கொடுப்பவனுல்
நீலக் கொடி யிடை வீரதீரன்பவ நேர்ந்தனனே. (24)

வேறு.

ஒன்பதைப் பெருக்கவு மொன்ப தெண்வரை
யொன்பதே பெருக்குமெ னுற்று நோக்கினு
லொன்பது சத்திக ளகட்டி னுற்றெழு
மொன்பது வீரரு மொருவர் போல்வரோ. (25)

இத்துணைப் பருவமுற் றெய்தித் தாயர்க—டத்தம் நிறங்கொடு சாய்விலா வலி
சுத்த வெண்ணீறொடு துலங்கி யம்மையை—யத்தனைச் சூழவந் தடியிற் றாழ்ந்தனர்.
பிறந்தவொன் பதின்மரைப் பித்தன் கண்ணுறீஇ-யறந்தவா மங்கைக ளரிய மைந்தரிங்
குறைந்தெழு நந்தியங் கணத்த ரொப்பிலார்—சிறந்த வரென்றுபல் லாசி செப்பவே.27
தேவியங் கவரையெஞ் செல்வர் காளுமை—தாவிலாப் பெருவிறற் சார்வ தாகுக
நீவிர்நங் குமரவேட் கினிய நீர்மையா—லோவிலாத் துணை வரா யுறைதி ரென்றனள்28

அன்னவ ரேவரு மையன் பாற்பணி
சொன்னவை யாற்றியே தொழு திருந்தனர்
பின்னரோ ரிலக்கரப் பெற்றித் தாகிய
முன்னவ னேவலின் முயன் றிருந்தனர். (29)

கந்தவேட் கிளையராங் காளை வீரர்தாம்
வந்தவா றுரைத்தனு மற்றவ் வீரரில்
மைந்துறு முன்னவன் மறியை யூர்தியா
வந்தமில் முருகனுக் களித்த தோதுவாம். (30)

துணைவர்வருபடலம் முற்றிற்று.

ஆகபடலம் 7-க்குச்செய்யுள் 202.

பாதநூ புரத்திற் றேவி சாயைகண் டமலன் கொண்ட
காதலாற் கருப்ப மாகுங் கதிர்நவ மணிமா தர்க்கண்
மேதகு வீரத் தோடு மென்மீசை யோடும் வந்த
மாதவ வீர வாகுத் தலைவரித் தலைவர் மாதொ—ஈட்டியெழுபது.

மின்னவிர் செஞ்சடைக் கடவுளது நெற்றிக்கண்ணினின்றெழுந்த தீப்பொறிகள் ஊழித்தீப்போற் பொங்கி அண்டகூடத்தைத் தாவித் தாங்கொணுத வெப்பத்தோடு மேலெழுந்து பரவியதைக்கண்டு அஞ்சியோடிய போது உமையின் பாதச்சிலம்பினின்றும் ஒன்பது மணிகள் சிந்தின. மீண்டும், அம்மையார் பரமசிவன் பக்கலில் எழுந்தருளவருங்கால் அம்மையாரின் நிழல் அம்மணிகளிற்றோன்றின. எம்பிரான் சத்திகளாக ஒளிரும் அந்நிழல்களை நோக்கி நீவிர்வெளிவருகவென்றனர். உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் உருவத்தாலும் பருவத்தாலும் உமையையொத்த ஒன்பது சிவசத்திகள் வெளி வந்து பரமனைக் காதலால் நோக்கினர். பரமனும் அவர்களது ஒத்த அழகை விரும்பி நோக்கவே அவர்கள் அனைவரும் கருவுற்றனர். சகக்களத்திகளாய் நவசத்திகள் பரமனல் கருவுற்றதனைப்பொருது, உற்றகருக்களை உயிர்க்காமல்

இருக்கவென்றும், குமாரனை அம்பிகோற்பவன் என்னப்பெறாமல் சரவணோற்பவன் என்றுரைப்பச்செய்த தேவர்களின் தேவிமார்களும் கருவடையாராகுகவென்றும் உமாதேவியார் சாபமிட்டனர். உமாதேவியின் சாபத்தால் கருவீன்று வருந்திய சத்திகளின் வெயர்வையினின்றும் வாளேந்திய கையினராய் நூறாயிரம் வீரர்கள் தோன்றினர். அவர்கள் பரமனைத்தொழுது சரவணப்பொய்கையில் வளரும் அறுமுகற்கு உறுதுணையாதிரென வாழ்த்துப்பெற்று பரமன் திருப்பணி செய்திருந்தனர். நவசத்திகளும் சிவகாமியின் அருள் நோக்கிப்பணி புரிந்திருந்தனர்.

நந்திதேவராதிய சிவகணங்கள் சத்திகள் வயிற்றில் பன்னெடுநாள் சிவயோகத்திருக்கவே பொறையாற்றாது சத்திகள் ஐயனையும் அம்மையையும் அடிபணிந்து குறையிரந்து வேண்டிக்கொள்ள, தற்பரன் சிற்பரையை நோக்கித் தந்தையினும் மைந்தர்கள்மேல் தாய்க்கன்றோ கருணைமல்கும்; அண்டகோடிகளை பண்டியிற்கொண்ட நீயே முருகனாகிய நஞ்சேயைப்பெற்ற தாயாகின்றாய், உன்னுடையகூறாகிய ஒன்பது சத்திகளும் குழவிகளைப்பெற அருள்புரிகவென்றார். சங்கரி அங்ஙனம் கருவீன அருள்புரியவே, நவசத்திகள் உமாதேவியாரின் திருவடிகளை வணங்கி வாழ்த்துரைபெற்று மீண்டு, ஆடை அணியுடனும் மென்மீசையோடும் குமாரப் பருவம்வாய்ந்த ஒன்பது குழந்தைகளை உந்தியின் வழியே பெற்றார்கள்.

அச்சத்திமார் ஒன்பதின்மரில் மாணிக்கவல்லி வீரவாகுதேவரையும், தரளவல்லி வீரமாகேசரியையும், புட்பராகவல்லி வீரமாகேந்திரரையும், கோமேதகவல்லி வீரமாகேசரையும், வைடூரியவல்லி வீரபுரந்தரரையும், வச்சிரவல்லி வீரராக்கதரையும், மரகதவல்லி வீரமார்த்தாண்டரையும், பவளவல்லி வீராந்தகரையும், நீலவல்லி வீரதீரரையும் பெற்றார்கள். ஒன்பது என்னும் எண்ணை ஒன்றுமுதல் தனித்தனி ஒன்பதுஎண்களில் பெருக்கினும் ஒன்பதென்னும் எண்ணேயாமதுபோல உமையின் கூறாகிய சத்திகளிடம் தோன்றிய ஒன்பது வீரர்களும் ஒருவரே போன்றிருந்தார்கள். நீறுபொலியும் நெற்றியையுடைய அவ்வீரர்கள் தந்தையும் தாயுமாகிய ஈமத்தாடியையும் காமக்கோட்டியையும் வலம்வந்து வணங்கிப்போற்ற, அந்திவண்ணன் மைந்தர்களை மகிழ்ந்து நோக்கி வாழ்த்துதல் செய்தார். உமையம்மையும், நுங்கட்குப் பொருவிலாப்பெருந்திறல் எய்துக உங்கள் அண்ணனும் நம குமரற்கு நீவிர் துணைவராகுகவென மகிழ்ந்துரைத்தனர். திண்ணிய வீரர்கள் அண்ணல் திருப்பணியும் சத்திகள் அம்மையார் திருப்பணியும் செய்து கொண்டிருந்தனர்.

தகருதவியபடலம்

தந்திமுகன் றம்பியெழிற் றம்பியர்கள் சூழ
வந்தமிகு கந்தகிரி யாவயினி ருக்க
வந்திவணை னைக்கருதி யாய்மகமி யற்ற
சந்தமுனி நாரதனித் தாரணியில் வந்தான். (1)

அத்திரிப ரத்துவச னுங்கிரசன் வேதன்
புத்திரன்வ சிட்டன்முதல் புண்ணியர்தி ரண்டார்
சித்திதரு வேள்விபுரி தீயினிலெ ழுந்த
தெத்தவரு முள்ளுடைய வீடிலொரு மேடம். (2)

இட்டியிலெ ழுந்ததக ரேர்திருகு கோட்டான்
முட்டலும கம்புரிமு னிக்கணமி லேகர்
கிட்டிலர்க ளாகிகதி கெட்டிரிய வின்னல்
மட்டிலவி யற்றியது மாமகமு ளார்க்கே. (3)

அசமகமெ னுஞ்சொலறி யாமலிவ ரெல்லாம்
பசுவெனப்பி டித்தெமைப தைக்கவதை செய்வார்
கசிதலின்ம னத்திவரை காதுமென வொன்ருய்
நிசவுருவு கொண்டதெனு நீர்மையதம் மேடம். (4)

எச்சயில முந்துகளெ ழுத்திரியு மண்ட
ரச்சமுறப் பொன்னுலக கத்துலவுங் கண்டோர்
விச்சையிது வென்னெனவி யக்கவெழு மோடுஞ்
செச்சைசெயு மற்புதச்செ யற்சொலவொ ணுதால். (5)

மாகமுல வும்முடுவின் மண்டலமு லாவு
மேகமுல வும்மழைவி ழுத்திரியு மெண்ணில்
நாகமுல வும்முலக நாடியிக மீளுந்
தாகமுறு மாறெனத்த டங்கடல்கு டிக்கும். (6)

சோலையிலு லாவிவருஞ் சூழெரியை யோம்புஞ்
சாலையிலு லாவிவருந் தாபதரை வாட்டுங்
காலையிலெ முந்தவரை காதுவதின் மூலை
மூலையிட மோடவிடு மூரிவெறி யாடே. (7)

காவிலழி வுண்டனரக் ககனாது வீசும்
வாவிலறை வுண்டனரிம் மண்ணவர்கள் கோட்டின்

மேவிலடி யுண்டனவி லங்கலுமு யிர்க்குங்
சாவிலறை யுண்டவைக ணக்கிலவி ரிந்த. (8)

இருதுபுரி தீத்தருகி ருத்திமம தாகிப்
பொருதுசம ராடுதுயர் போதரவெ லோமு
மொருதுயரு மற்றதவ ருறைகயிலை யுற்றே
பரிபவமு ரைத்துமென முனிவரர்ப டர்ந்தார். (9)

அந்தவம யத்தறுமு கப்பரம னாசில்
கந்தகிரி நின்றுநவ வீரரொடு கைலை
வந்துவிளை யாடவளர் மாத்தவர்கள் தேவர்
சிந்தைகளி கூரவெதிர் கண்டனர்கள் சேவை. (10)

கும்பிடவ ரும்பொருள்கு றுக்கெழுதன் மான
சம்புவினி ளங்குமரன் றன்னையெதிர் கண்டே
வெம்பியம கத்திறையும் விண்ணவரும் யாரு
நம்பதம ளித்தருளு நாதனிவ னாமால். (11)

என்றுசர ணாம்புயமி டைப்படிய வீழா
நின்றுமுரு கேசநம நீபமல ராரக்
குன்றுறழ் புயப்பரைகு மாரநம நீயே
யின்றுவரு மித்துயர மேகவரு ளென்றார். (12)

வேறு.

தார ணிக்குளோ ரணுவினு மகத்தினுந் தானும்
பூர ணப்பொரு ளாகிய பரஞ்சுடர்ப் புதல்வன்
கார ணங்கருதறவரைத் தேவரைக் காணு
நீர ணங்குற லென்னென நிகழ்த்துவார் நெகிழ்ந்தே. (13)

காம முன்னுபா னவிசொரிந் தாரணக் கதியா
லோம மாற்றினோ மஃதிலோ ருறுத்தசெங் கண்ணி
னாம நாங்கொள மேடமொன் றெழுந்தது நாகம்
பூமி பாதலந் திரிந்தது புகலுவ தெவனோ. (14)

ஐய நின்றிரு வடியலாற் புகலிட மறியேம்
வெய்ய தாம்வெறி யெனும்பெயர்க் கேற்பவெவ் வெறியே
செய்ய லுற்றது மற்றது பற்றிய தீமை
நைய வாற்றிலோ நண்ணினோ நின்னரு ணாத. (15)

என்னு மாற்றநங் குகன்செவி யுறவெறுழ் வீர
ரூன்ன வன்றனை விளித்துநீ மொய்புறு மேடந்
தன்னைப் பற்றியே கொணர்கவென் றறைதலுந் தக்கோன்
சொன்ன வாசகஞ் சிரங்கொடு படர்ந்தனன் றுறக்கம். (16)

அங்குக் காண்கலன் மண்ணகத் திடமெலா மாய்ந்து
புங்க மாமெழு பாதலம் போந்தனன் காணான்
செங்க ணேற்றயங் காண்பலென் றுப்பதந் துருவிப்
பங்க யன்பதஞ் செருக்கொடு செல்வுழிப் பார்த்தான். (17)

தீத்தொ ழிற்செயப் பிந்தியே முன்வரத் திருகு
கூர்த்த வெம்புரி கோட்டினைப் பற்றினன் குருகி
வார்த்தை யொப்புற வீரவா கெனுங்கர வாகா
லீர்த்து வந்தெம தறுமுகப் பரன்முன மிறுத்தான். (18)

நாகு வண்டினம் பண்ணிசை நறுந்தொடை வீர
வாகு கைத்தல முற்றது மறித்தலை யிரங்கி
மாக மோங்குசெம் மலையென நிற்பவும் வானோர்
பாக சாதனன் முனிவரர் குகனடி பணிந்து. (19)

அகர மேமுத லாமெழுத் தெவைக்குமங் கதுபோற்
பகரு யிர்க்கெலா மாதர மாம்பரம் பரனே
தகர தேறிநீ நடந்திடத் தருமருங் காட்சி
நுகரு மாவலேங் கண்களா லருளென நுவன்றார். (20)

நேம நீங்கலா வன்பினீர் நினைந்தது புரிவே
மோம மந்திரங் கிரியைக ளூலோபமுற் றதனாற்
றீமை யுற்றது தேற்றகி லீரினித் தெளிவான்
மாம கம்புரிந் துன்னிய வடைந்துவாழ் கென்றான். (21)

இருக ரங்குவித் திருடிக ளிமையவ ரன்பான்
முருகன் பால்விடை கொண்டுசென் றடைந்தெழு முளரி
தரும கச்செய லாற்றியப் பெற்றியிற் றவறி
விருமை யின்பமு மெண்ணியாங் கடைந்தன ரிருந்தார். (22)

அறிவு றுந்தவர் காண்குறு மறுமுகப் பெருமான்
மறியெ றுத்தமீ திவர்ந்தன னூர்ந்தனன் மகியும்
வெறிந றுந்துணர் கற்பகா டவிபிலம் விந்தங்
குறியி ருந்தனன் கந்தவெற் புறுங்கொலுக் கூடம். (23)

யாழின் மாமுனி யாற்றிய யாகமே லெழுந்த
வூழித் தீங்கர் வன்மைசால் தகருத வியசீர்
வாழி யோதிரு மலருறை யந்தணன் காலில்
சூழும் வன்றனை மற்றவ னிடுவலஞ் சொல்வாம். (24)

தகருதவிய படலம் முற்றிற்று.

ஆகபடலம் 8-க்குச்செய்யுள் 226.

ஓதிய வேள்வியி னுவப்ப நாரதன்
போதவே தகர்தனைப் பொங்கு தீத்தா
வேதனைப் படுப்பதை விரைந்து கட்டியே
சேய்தனக் குதவிய திருச்செங் குந்தமே—ஈட்டியெழுபது.

தும்பிமுகற்கிளைய தம்பிரான் தம்பிமார்களோடு அந்தமிகுந்த கந்தமாதன மலையில் எழுந்தருளியிருக்கையில், அத்திரி, பரத்துவாசர், ஆங்கீரசர், வசிட்டர் முதலிய முனிவர்களோடிருந்து பார்வதி கொழுநனைக் கருதி நாரத முனிவர் செய்த அரியபெரிய யாகத்தீயினின்றும் எவரும் அஞ்சத்தக்க ஒரு ஆடு வெளிவந்து தேவர்களும் முனிவர்களும் திசையறியாது திகைத்துச் சிதைந்தோடும்படி திருகிய இருபெருங் கொம்புகளால் தாக்கித் துன்பிழைத்தது.

யாகத்தீயினின்றெழுந்த அசம், மகம் என்னும் சொல்லுக்கு “ மூவருட நெற்பொரியை அவிசொரிந்து செய்யும் யாகம் ” என்னும் பொருளையறியாமல் அசம் என்னும் சொல்லுக்கு ஆடு எனப்பொருள்கொண்டு “ ஆட்டைக்கொண்டு அவி சொரிந்து செய்யும் யாகம் ” என இரக்கமற்ற தன்மையில் பொருள்செய்து யாகப்பசுவெனப் பெயரிட்டு பதைபதைக்க எங்களை வதைசெய்வோரைக் கொல்லுதும் எனப், பலயாகங்களில் கொல்லப் பட்ட ஆடுகளெல்லாம் ஒருருக்கொண்டெழுந்தது என்னும் தன்மையுடைய தாய் கண்டோர்கள் இது என்ன அற்புதமான வித்தையென்றதிசயிக்குமாறு மேகங்கள் சிதைந்து துளிக்க நாகம் நெருங்கிப் பொடிபட விரைபொழி லொடித்து திரைகடல் குடித்து பல்லுயிர்மாளக் காலாலும், வாலாலும், கொம்பாலுந்தாக்கி முனிவரைவாட்டி சினமிகக்காட்டி மண்ணினைமேவி விண்ணினைத்தாவி உக்கிரத்தோடு சக்கரம்போல மிக்குறச்சுழன்று திக்கெலாமோடி யுலாவியது.

அதனால் துன்புற்ற முனிவர்களும் தேவர்களும் பரமசிவனுக்குரைத்து இப்பெருங்கவலையைத் தீர்ப்போமென்றெண்ணி கைலையை நாடிச்செல்லுகையில் கந்தமாதனத்தினின்று நவவீரர்களோடு ஆங்குவந்து விளையாடிக்கொண்டிருந்த முருகனைப்பார்த்து இருகாஞ்சேர்த்து அறைகழல் வணங்கி முறையிட்டுக் குறையிரந்தார்கள். ஆறுமுகப்பெருமான் தஞ்சமென்றார்க்கு அஞ்சலென்றருளி, வீரவாகுதேவரை யழைத்து நீ சென்று நாட்டிலெவர்க்குங் கேட்டினைப்புரியும் ஆட்டினைப்பற்றிக் கொணர்கவெனக் கட்டளையிட்டார். கட்டளையைச்சிரமேற்கொண்ட வீரவாகுதேவர் மூவுலகத்துந்தேடிக்காணாமல் சத்தியலோகத்திற்கருகில் சென்றுகொண்டிருந்த அவ்வாட்டினைக்கண்டு அது தன்னைத் தாக்கவெண்ணிப்பின்சென்று முன்வந்தபோது, அதன்கொம்பைப் பற்றி இழுத்துக்கொண்டுவந்து முருகன் திருமுன் விடுத்தார். குமரன் திருமுன்னர் கிடுகிடென நடுநடுங்கித் தலைகுனிந்து மலைபோல ஆடு நிற்கக்கண்ட தேவர்களும் முனிவர்களும், இத்தகரேறிக் காட்சிதந்தருளவேண்டுமென்று விண்ணப்பிக்க, அவர் வேண்டியவண்ணம் முருகப்பெருமான் அகமகிழ்ந்து காட்சிதரக்கண்டு வாழ்த்துரைகொண்டு தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றனர். சரவணபவன் மறியை வாகனமாகவூர்ந்து மண்டலம் விண்டலம் பாதலம் முதலிய எல்லாத்தலங்களிலும் சென்று விளையாடிக்கந்தமாதனத்தில் அமர்ந்திருந்தனர்.

விதியைவிலங்கிடுபடலம்

மாகந்த லத்தர் மண்ணின் றலத்தர் வாழன்ப ரின்ப முறுமா
மோகந்த ணந்த பேரின்ப மான முத்திக்கு வித்தெ னமல
யோகந் தரும்பொன் மரையன்ன பாத யுகளம்ப ராவ வீரர்
மாகந்த வெற்பி னின்றெங்க ளாறு முகவே ளெழுந்து வந்தே. (1)

எண்டோள நாதி பரமற்கி ருக்கை யெங்கெங்கு மெனினு மறிவிற்
கண்டோது மன்பி னுய்வானி ருந்த கைலாய மென்னு மெயிலார்
வெண்டாது சைய மெழுகோபு ரத்தில் விளையாடு காலை நறவத்
தண்டாம ரைக்க ணுறுவேத ஞதி தவர்வான தேவ ரெவரும். (2)

அங்கோபு ரத்தின் முன்வாயி லெய்தி யருணந்தி தேவ ரருளக்
கங்காத ரன்ற னமர்கோயி னண்ணி கண்பெற்ற பேறு பெறுவார்
பொங்காத ரத்தின் மீள்வோரி னங்கு புரையுற்ற பணிவி னிலையிற்
பங்கேரு கத்த னிவனென்று ணர்ந்து பகர்வானெ மாறு முகவேள். (3)

நீயேவ னாற்று வினையாவ தேது நெடிதோர்து கலைக ளெவையுஞ்
சாயாது ரைத்தி யெனவங்கு நான்கு தலைகொண்ட பிரம னென்பே
ரோயாது னாற்று வினையாவ துலகு முலகத்து ளுயிர்ப டைத்தல்
வாயாலு ரைத்தல் மறையாகு மென்ன மறையோது கென்ன மறையோன் (4)

முதுமா மறைக்கண் முதலாகி நின்ற மொழியோது பொழுதி னிறுவி
யிதிலுண்மை யான பொருணாடி யொப்ப விசையென்ன வேத னுணரான்
பதியான வத்த னுரையான வேதம் பனுகிற்ப தன்றி குடிலைக்
கிதுவத்த மென்ன வறியேனெ னாம னென்கண்ண னேங்கி நின்றான். (5)

ஒருநாலு வேத மாதாவி னத்த முணராத வேத னிவனை
மருணாடி யுட்கு தலையிட்டு நந்த மலையுட்கி டக்கு முழையு
ளிருணாடு சாலை யடிமைப்ப டுத்தி யெனவெங்க ளாறு முகவன்
தெருணாடு வீரவாகுக்கு ரைக்கத் தெற்றென்று பற்றி மொழிவான். (6)

கிளையாமி லக்க நவமென்ற பாலர் கெழுமுஞ்சி றாரி னுடனே
விளையாடு கின்ற மகரால யத்த வைப்பண்ட கோள முலவா
விளைவோர்கி லாத விமை யோரை வென்றி கொண்டாடி யவர்கள் பணிய
விளையாடு பால னெனவே நினைத்தி விதியே யிதென்ன கதியே. (7)

முகமைந்து கொண்ட சிவனேயொ ராறு முகனாகி வந்து சூர
ரகனைந்த டங்க சுரர்நாடு வாழ வறமெங்கு மன்னி நிலவ
சுகமுந்தி ருந்த வணமாக வன்பர் தொழவீற்றி ருந்தி யார்க்கு
மிகமும்ப ராவு பரமுந்த ளிக்கு மிறையாவ துணர்தி யன்றே. (8)

என்னப்பு கன்று கரகக்க ரத்த னிருகாலில் வல்லி யிறுகப்
பன்னிச்சி றைக்க ணிட்டங்க னுற்ற பலர்காவன் மேவ வைத்து
முன்னைப்ப ணிந்தெ மடிகாளு ரைத்த பணியாய தென்று மொழியுங்
கன்னற்றொ டுத்திவ் வண்டப்ப டைப்பு கண்டானெ மாறு முகவேள். (9)

கரகம்ப ரித்த தொருகைசெ பஞ்செய் கனமாலை கொண்ட தொருகை
வரதம்ப ரித்த தொருகைய தொருகை யபயம்ப ரித்த வணமாய்
முருகன்றொ ராறு முகனேய நாலு முகனாயி ருந்து மவனாற்
புரியும்ப டைப்பு செயநின்ற தென்ன புதிதோவி தென்ன வரிதோ. (10)

சராறு தோள னெழிறங்கு தண்டை யிசைபொங்கு தாள னெம்மான்
றோராரு னாட்கு வயவீரர் சூழச் சிங்கஞ்சு மந்த வணைமே
லோரார்த னாது வெற்பிற்ப சும்பொ னிழையால யத்து மன்னி
தாராத தண்ணெ னருளாவி வாக்கற் றொழிலின்மேவு கின்ற காலை. (11)

கண்ணுதற் பெருமான் றந்த கந்தவே ளயனைக் காவற்
பண்ணினா னனந்த காலம் பாரகச் சிருட்டி பூண்டா
னெண்ணிவெய் துயிர்க்கு நெஞ்ச மலமர மகவா னேனோர்
புண்ணிய முனிவ ராருங் குழுமியென் புரிவ தென்று. (12)

வெள்ளிவே தண்ட மேவி விடையினால் விடைகொண் டேகி
வள்ளியோ னாகு நந்த மறைமுத லியோகி பாதங்
கள்ளவா மலர்க டூவிப் போற்றிநஞ் சயின்று காத்த
தெள்ளிய தலைவ முக்கட் சிவவெனப் பணிந்து நின்றார். (13)

கருணையங் கடலங் நின்ற கடவுளர் தம்மை நோக்கி
யுருமுகம் வாடி யுள்ளீ ருளநலி வேதென் றோத
மருநனை துளபத் தண்டார் மாயவன் முன்னி றைஞ்சி
நெருநலா யின்றாய் நாளாய் நிற்றிநீ யுணரா தென்னே. (14)

ஆயினு மெங்கட் குற்ற தறைகுவ மலரோ னும்பான்
மேயினன் பணிந்து மீள மீயுயர் சிகரி யாடுஞ்
சேயறு முகவே ளாக்குஞ் செய்தொழி லயனைப் பற்றி
நீயுரை குடிலைக் குள்ள பொருடனை யென்னத் தேறான். (15)

முட்டின னருத்தங் காண முயன்றன னறியே னென்னக்
குட்டின னலரோ னான்கு தலைகளுங் குலுங்கத் தன்கண்
கிட்டிய தம்பியாலே கிடக்குமா றிட்டான் காவல்
சிட்டிசெய் கின்றா னைய சேந்தனங் கந்த னென்றான். (16)

தம்பிரா னதனைக் கேளாத் தன்னுறை கோயிற் காவ
னம்பியா நந்தி தன்னை விளித்துசேய் நாக நண்ணி
வெம்பிய வயனைக் காவல் விடுவியென் றுரைத்தா னன்னான்
செம்பொனின் கந்த வெற்பிற் சேர்ந்துசேய் திருமுன் செப்ப. (17)

எந்தைதன் கைலை காவற் பூண்டவற் கேவ லாற்று
நந்தியென் றன்னை விட்டே னான்முகன் சிறையை மீட்கப்
புந்தியி னினையே லென்னப் போற்றினன் மீண்டோ னாகி
வந்தியா வரனை யுற்ற வாறெலா முரைத்தான் பின்னர். (18)

பொன்றிகழ் மேனி யான்றன் பொருப்பினின் றூர்தி யூர்ந்து
தன்னிளங் குமரற் சார்ந்து சதுமுகன் சிறைவி டென்ன
சென்னியா றுடையான் வேதத் தெரிபொருண் முதலே தேறா
னன்னவன் றனைவி டேனென் றறைந்தனன் பணியா நிற்ப. (19)

கண்ணிரா றுடைய செல்வ கைலையங் காவ னந்தி
தண்ணிய வுரையா லுற்று சாற்றுநம் பணியுங் கொள்ளா
யெண்ணுநம் முறையுங் கொள்ளா யிகந்தனை யென்றா னன்றே
தண்ணருட் கடலாய் நின்றான் றான்முனி வுற்றான் போன்றே. (20)

முத்தொழின் மூவ ராற்ற முதல்வனுக் கரியாய் நின்ற
வத்தனிப் பெற்றி யோத வாறுமா முகத்தெ மண்ணல்
வைத்திலன் விடுத்தே னென்னு மொய்ம்பனை மலர்க்கண் சாத்த
வத்தன்முன் கொடுவெந் துய்த்தா னயனைமற் றக்க ணத்தில். (21)

போற்றிநின் றிறைஞ்சி வாழ்த்தும் பூந்தவி சோனைத் தேற்றி
யாற்றலு மளித்துப் பண்டு போலென வாக்கி வாழ்தி
யேற்றநின் னிடத்தி லென்றே யின்னுரை தந்தா னீசன்
சாற்றிய சுரர்க ளிப்பத் தன்பதி விடைகொண் டேற்றான். (22)

தேங்கமழ் கடப்ப மாலைச் சேய்தனைக் குறங்கி லேற்றி
யோங்கிய குடிலை யத்த முணர்தியே லுரைத்தி யென்று
தாங்கினன் செவியைச் சாய்ப்பத் தாரகத் தருமஞ் சொற்றான்
காங்கயன் பரமற் கஃதின் கருத்தெலாங் கேட்ட வையன். (23)

குழந்தைவே லவநீ பெற்றாய் குருபர னென்னு நாமந்
தழைந்திவண் வாழ்தி யென்று தருமநல் விடைமேற் சோதி
வழங்கிய கைலைக் கேகி மலைமகண் மகிழ வென்றுங்
குழந்தையா முருக னுடல் குறித்துறைத் திருந்தான் மாதோ. (24)

வேறு

கோடா மறையின் முதற்கணுள் குடிலைப் பொருளை யுணராத
தோடார் மலரோற் றளையிட்ட வதனைச் சொற்றாந் தொடையலணி
பீடா ரோன்பான் வீரர்தமைப் பெற்ற வுமையாள் பரிந்தளித்த
கூடா ருதிரங் குளித்தொளிர்செங் குந்தம் பெற்ற துரைத்துமரோ. (25)

விதியை விலங்கிடு படலம் முற்றிற்று.

ஆக படலம் 9-க்குச் செய்யுள் 251.

பொதிய மால்வரைக் குறுமுனி தேறவும் பொருள் சொன்ன
மதியை யாறென வுடையவோர் மூவிரு வதனத்தான்
சதியை யாற்றியுங் குணத்தொடு பழகி யுங்காறு
விதியை மேவலர் நடுங்கிடத் தளையிடு மிளிர்குந்தம் — ஈட்டியெழுபது

சீரியர் கோரும் பேரின்ப முத்திக்கு வித்தான கார்த்திகேயன், ஓர் நாள் ஒன்பது வீரருந் தன்பதம் பரவ நந்தனவன நிறை கந்தமாதனமெனுஞ் சைலத்தினின்று கைலைக்குமேவி பொற்கோபுரத்தி லற்போடிருந்து இளையோடுகூடி விளையாடுபோழ்தில், வானத்தமரரும் ஞானமுனிவரும் புடை சூழக் கடைவாயிலில் நந்தியருள்கொண்டு தந்தியுரியோற்கண்டு மீண்ட பிரமதேவன், குமாரக்கடவுளை அஞ்சலில் முறையில் அஞ்சலி செய்தனன். பணிவிற் பிழைத்த பதுமாசனனை அணியிற் சிறந்த நஞ்செவ்வேளழைத்து, நீயார்? நின்றொழில் யாது? நீ மலைவறக்கற்ற கலைகளெவை சொல்லுவாயென என் பெயர் பிரமன்; என்றொழில் உலகுயிர் படைத்தல்; யான் கற்றது வேதம்; யான் வேதத்தில் வல்லவனென்பது பற்றியே என்னை வேதன் என்று சொல்லுவார்கள் என்றான்.

அறுமுகன் சதுமுகனை நோக்கி அரிய மறையைத் தெரிய விரும்பினேன் ஓதுகவென்ன, பிரமன் ஓதத்தொடங்கி வேதத்தின் முதன்மொழியாகிய 'ஓம்' என்னும் ஒரு மொழியை ஓதுகையில், முருகன் காமமர்த்தி நீயோதிய வேதமாதாவாகிய பிரணவத்தின் போதிய பொருளுரைத்தியென்றனன். அதன் பொருளையுணராதமலரயன், யாவர்க்கும்பதியான பரமன் திருவாய்மொழியாகிய வேதத்தைப் பன்னுவதன்றி சொன்ன மொழிக்கு இன்னுரை ஓர்கிலன் என்றான். உடனே குகப்பெருமான் நகைசெய்து வீரவாகுதேவனை விளித்து நான்முகப் பொருளறியா நான்முகனுமிவனைத்தலையிட்டு இம்மலையின்கண் இருட்குகையில் சிறைசெய்யெனக் கட்டளையிட, மாணிக்கவல்லி மைந்தன் வாணிகேள்வனைத் தெற்றெனக் கைபற்றி விதியே! இதென்னமதி சூராதியர்தாழவும், சுராதியர் வாழவும் மறம்நீங்கவும், அறம்ஓங்கவும், துன்பந்தளரவும், இன்பம் வளரவும் வேண்டுமென வேண்டலின், ஐந்து முகப்பரமனே ஆறுமுகனுனென்பதை மறந்தனையோ? அறுமுகனைச் சிறுவனெனமதித்தாயோ? எனப்புகன்று கட்டளையின்வண்ணம் சிறைபடுத்தினன். அந்தக்கணமுதல் கந்தக்கடவுள் செம்பொற்கோயிலிற் றம்பியர்கள்சூழப் பொன்னரியணை மேவி முன்னினுமினிதாய் படைப்புத்தொழில் புரிந்திருந்தனன்.

ஆக்குந்தொழிலோனுன பிரமனுக்கு அடுத்ததுநீக்கக் காக்குங்கடவுள் கருதியவண்ணம் வந்துகுழுமிய மந்திரமுனிவரும், இந்திரன்முதலாம் இமையவர்யாவரும் புடைசூழ விடையூரும் புண்ணியனை நண்ணிப் புகழ்ந்தேத்தி நிகழ்ந்தவை யனைத்துங்கூறினர். கூறவே நீறணிநிமலன் பிரமனை சிறை விடுவிக்க நந்தியை ஏவ, ஏவிய நந்திசொல் ஏற்கிலாமையால் தாமே குமரனையணுகி, ஆங்கவன் வணங்கிடப்பெற்று வாழ்த்துரை சொற்று பிரமனைச் சிறை விடுத்திடுகவென்றனன். அது கேட்ட நம் அறுமுகப் பெருமான், சதுமறையின் தலையாய ஒருமொழியின் பொருளையறியாதிருந்தும் மறையுணர்ந்தேனென்னும் செருக்குடையானை சிறைவிடுக்கிலேன் என்ன, இறைவன் முன்னம் நந்தியின் மொழி ஏற்கிலை என்மொழியும் பேணுகிற்றிலை என்னத், தகரேறுங்குகப்பெருமான் தந்தை கருத்தினை சிந்தையிற் கருதித் தம்பியரிற்றலைவனை நோக்கினுன். அன்னோன் விரைவில் விதியை விடுக்க விடுபட்ட அப்பங்கசன் பண்டுபோல் படைப்புத் தொழிலாற்றுக வெனச்சங்கரனுல் வாழ்த்தப்பெற்று தனதுறையிடஞ் சேர்ந்தனன்.

பின்னர் சிவபெருமான் குமரனை நோக்கி குடிவலைக்குப்பொருளுரைக்க வல்லையேல் உரைத்தியென்னக், குமரன் முறையிற் கேட்பில் உரைத்தும் என்னப் பரமன் அங்ஙனமே சரவணபவன்பால் முறையிற் கேட்டு மகிழ்ந்து கைலைக்கெழுந்தருளி உமையவள் மகிழக் குமரன்பிறங்குறித்திருந்தனன். முருகப்பெருமான், சாமியாகிய பரமனுக்கு குருநாதனுய் உபதேசித்தமையால் "சாமிநாதன்" என்றும், "குமரகுருபரன்" என்றும் பெயர் வழங்கப் பெற்று தம்பியரோடு வளர்ந்திருந்தனன்.

குந்தம்பெறுபடலம்.

இந்திரை கொழுநன் பெற்ற வினையறு குமுதச் செவ்வாய்
சுந்தரி யமுத வல்லி யென்றிரு தோகை நல்லார்
கந்தனை மணக்க வுள்ளங் கருதினர் நோற்க வன்னோன்
வந்தன னவர்முன் வேட்ட வரமருள் புரிந்து நோக்கி. (1)

மங்கைமீர் மணப்ப னும்மை வானவர் பகையை வீட்டித்
தங்குமின் சின்னாள் காலந் தனித்தனி யமுத வல்லி
மங்குலூர் மகப திக்கு மாதுசுந் தரிவே டற்கும்
பொங்குறு மகிழ்ச்சி தோன்றப் புதல்விய ராகி யென்றான். (2)

என்றலு மமுத வல்லி யிந்திரன் மனையில் வெள்ளிக்
குன்றென வொளிரு நால்வாய்க் குஞ்சரத் தால்வ ளர்ந்தா
ளின்றவண் மான்கட் றோன்றி நீடினள் வேட ரோம்பச்
சென்றனன் கைலை வெற்பிற் செய்யவே ளிளைஞ ரோடே. (3)

முத்திரும் பச்சை நாப்பண் மொய்த்தொளி ரரத னம்போற்
சத்தியுஞ் சிவனு மந்தச் சரவண பவனைத் தங்கண்
மத்தியி லிருத்தி யுள்ள மகிழ்ந்தன ரிருந்தார் வெள்ளை
யத்தியி லிவர்வோ னாங்க ணமரரோ டணுகிக் கண்டான். (4)

வேறு.

மும்மை யாமல மார்ந்தகக் கண்களை மூடச்
செம்மை தீமையென் றோர்கலாச் சீவர்யாஞ் செய்யு
மம்ம வின்பதுன் பங்கொடுத் திகபரத் தாட்டு
நம்மை நொந்திலேம் புகலிட மற்றிலே நுவல. (5)

ஆர லங்குயத் தமுதனு மறுமுகப் பெருமான்
சூர னார்வலந் தொலைத்திட லென்றெமர் துயரம்
வேர கன்றெழ லெத்தினங் காண்கிலம் விமல
பார ருட்கணா லென்றடி மும்முறை பணிந்தான். (6)

அஞ்சு மிந்திரற் கஞ்சனீ யென்றுகை யமர்த்திக்
கொஞ்சு தண்டையஞ் சீரடிக் குமரனைக் குறித்து
விஞ்சு தோள்வலித் தம்பிய ரோடவண் மேவி
நஞ்சு போல்பவ ரைச்செகுத் தடைகென நவின்று. (7)

ஓவி லாதன வுன்னிய செய்வன வொன்றாத்
றாவி லாதன தரியல ருயிர்கொடு சார்வ
மேவு ருத்திர கணத்தவர் வியனுருத் திரிந்த
வேவி னப்படை வானவ ரின்படை யெவையும். (8)

பூத மைந்தினும் வலியது புந்தியிற் செல்வ
தலைத யாம்வல வன்றனு லய்ப்பதோர் வன்றே
றோது பூதரொ ராயிர வெள்ளத்த ருதவி
நாதன் வாழ்த்தினன் நற்றவத் தேவருண் மகிழ. (9)

பன்ன ரும்பல வண்டமும் பல்லுயிர்த் திரளு
முன்னின் முற்றவு மிமைப்பினின் முடிப்பது முதலா
மன்னை தன்னருட் கூறுற வாறுமா முகற்குத்
தன்னை நீங்கலாச் சத்திவேல் வலமுறத் தந்தாள். (10)

மந்த ரப்புயத் தொன்பது மைந்தரை வாழ்த்திக்
குந்த வேற்படை தந்துவாள் கதைசிலை குறிப்பின்
வந்த தெய்வதப் படைக்கலம் யாவையும் வழங்கி
யந்த வாரெூர் லக்கரும் பெறமகிழ்ந் தளித்தாள். (11)

இகப ரத்தற மோங்குமா றெழுந்தரு ளாறு
முகமு டைப்பரன் றம்பிய ரோடுமம் முறையிற்
றகவ லம்புரிந் தத்தனை யம்மையைத் தாழ்ந்தே
நகும யிற்கொடு வீரரோ டெழுந்தன னடந்தான். (12)

சார தப்படை படர்தர வீரர்விற் பூட்டு
நீர வத்திரத் தொடுசெல நிருதர்கண் கலங்கத்
தேரி வர்ந்துபாய் சிங்கவெங் குருளையிற் சேர்ந்து
வீர வாகுவோ டிளவலர் தும்பைதோள் வேய்ந்தார். (13)

வல்ல சூர்முத லசுரரால் வான்பத மிழந்து
பல்ல ருந்துயர் படுமம ரருமவர் பதியுஞ்
சொல்ல ருங்களி துங்கின ராயடி தொழுது
செல்ல நின்றனர் சரவண பவப்பரன் றிருமுன். (14)

மையு லாவரு வான்றொடு சிகரியி மயமாற்
சைய மாமகண் மகனொளிர் தபனனிற் றடமா
வைய மேறின னறுதிரு முகங்களும் வடிவேற்
கையு மன்றலர் கடப்பமா லையும்பரன் காண. (15)

வேழ மாமுகற் றொழுதுபற் பாரிடர் விரைவா
ராழி யிற்புரி சங்கநின் றூதின ரமரர்
வாழி மாமறை யாற்றுதி செய்தனர் மற்றோ
ரேழி சைக்கரு விகளெலா மார்த்தன ரெழுந்தார். (16)

அன்னை யாம்பரை யடல்வலி வீரருக் கழல்கான்
மின்னு நாஞுசெங் குந்தம ளித்தமை விரித்தாம்
பின்னை யாறுமாமுகன் றரப் பெரும்படைத் தலைமை
முன்னைக் குந்தரின் முன்னவன் பெற்றமை மொழிவாம். (17)

ஆக படலம் 10-க்குச் செய்யுள் 268.

சலம்பிரி யாத சூட்டிச் சாவற்கே தனமெஞ் ஞான்றும்
வலம்பிரி யாத செவ்வேட் குறுதுணை யாக மனனுட்
குலம்பெற வந்தா ரென்றங் கொடியுமை தந்த வீட்டி
நலம்பெறு மிந்தக் குந்தர் பரிசுபோ னாட்டி லுண்டோ.

ஆதிநா ளுமையவ ளளித்த குந்தமே
சாதிநா லுவப்புடன் றலைக்கொள் குந்தமே
சாதிமே வலரையுங கல்லுங குந்தமே
கோதினம் பாடவே கொள்ளுங் குந்தமே—ஈட்டியெழுபது

திருமாலின் திருக்குமார்த்திகளாகிய அமுதவல்லி, சுந்தரவல்லி என்னும் கட்டகியழர் இருவரும், முருகனைமணக்க வேண்டித்தவஞ்செய்து, வரம்பெற்று அன்னவன் சொன்னவண்ணம், அமுதவல்லி இந்திரன்மகளாய் ஐராவதமென்னும் யானையினிடத்தும், சுந்தரவல்லி மான் மகளாய் வேடர் தலைவனாகிய நம்பிமன்னனிடத்தும் தனித்தனி வளர்ந்துகொண்டிருந்தார்கள்.

கைலையில் பரமசிவனும் பார்வதியும் குமரனைத் தம்மிருவர் நடுவில் அமர்த்திக் கொஞ்சி மகிழ்ந்திருக்கையில், தேவர்களோடு இந்திரன் சென்று வணங்கி, சூரனாதியருடைய கொடுமை வரவர மிஞ்சுகின்றதன்றிக் குறைந்தபாடில்லை, எங்களால் இனித் தாங்கமுடியாது காத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். இறைவன் அஞ்சலென இந்திரனைத்தேற்றிக் குமாரனைப்பார்த்து தோள்வலியின்மிக்க வீரவாகாதிய தம்பியரோடுசென்று அவ்வசுரனை ஒழித்துவிட்டுவருவாயென வாழ்த்தித், தெய்வப்படைக்கலங்களையும், மற்றும்பற்பல ஆயுதங்களையும், வலியதேரையும், ஆயிரவெள்ளம் பூதப்படைகளையும் கொடுத்தருளினன். உமாதேவியாரும் குமாரதேவர்க்கு கணப்பெழுதில் சகலபுவனங்களையும் அழிக்கும் தனது கூருன சத்திவேலையும், அன்னோன் பின்னோராகிய இலக்கத் தொன்பதின்மருக்கும் தனித்தனி வலியபகைவரை நலியுந்தகையதாய்ச் செந்தழற்சிந்தும் குந்தவேற்படைகளும், மற்றும் பற்பல ஆயுதங்களும் வழங்கி வாழ்த்தினார்கள்.

அறுமுகப்பெருமான் தாயையும் தந்தையையும் தமையனையும் வணங்கித் தம்பியரும் பூதப்படைகளும் ஆர்த்துப்புடைசூழச் சத்திவேற்றாங்கிப்போர்க்கோலங்கொண்டு, தேவர்கள் வேதமோதித் துதிக்க, வலம்புரிச்சங்க முதலிய பற்பல வாத்தியங்களும் முழங்கப், பரிதியோல் இரதமேறிப் புறப்பட்டான்.

வீரவாகு தேவர்
படைத்தலைமை பெறுபடலம்

வெள்ளி மால்வரை நின்றெழும் வேலவன் படைக
ளெள்ளு சூர்செயும் பாவவெந் தீயினை யவிக்கத்
தெள்ளு லாந்திரை வடபுலச் சாகரந் திரண்ட
வெள்ள மென்னவுற் றண்மின குருகுபேர் வெற்பை.

வேறு

ஏராத ரார்ப்பநஞ் சாமி சார்தலு
நாரத முனிவர னோடி யப்பொறை
நீரதி லவுணன்றீ நெறிலைய யோதினன்
போரது செயக்குகப் புலவ னெண்ணினான். (2)

குந்தம தேந்திய குமரர்க் கெண்ணிலா
மந்திர வாளிகை கொடுத்து வானெழு
மெந்திரங் கார்முக மெஃக மீந்தெறுழ்
முந்திய வீரனை மொழிவ தாயினான். (3)

நற்படைத் தலைமையை யுனக்கு நல்கினே
மிம்பரி லவுணனோ டிகலிப் போர்புரி
தும்பிமா முகன்வலி துனைவிற் காண்டுந
மெம்பிநீ பெறுகென மகிழ்வி னேற்றனன். (4)

சரவண பவன்றிருச் சரண மும்முறை
தரவலம் வந்தனன் றாழ்ந்து போற்றினன்
சுரரொடு வீரருந் தூய பூதரும்
பரவின ரார்த்தவன் குணங்கள் பாடியே. (5)

தேர்முகத் திவர்ந்துநம் வீர தேவனீள்
கார்முக மேந்தின காலை மாப்படை
யோர்முக மாகியுட் களிப்பி னோங்கியே
பார்முக நிறைவுறப் பரவி யீண்டின. (6)

சங்கமு மார்த்தன தடாரி காகள
மெங்கணு முழங்கின விரவித்தாரகன்
றங்கிய மாயமா புரியைத் தாக்கின
ரங்கதை யொற்றரா லவுண னோர்ந்தனன். (7)

விண்ணவர் சிறைதனை மீட்கப் பன்னிரு
கண்ணனோ வந்தனன் காண்பல் யானெனாத்
தண்ணுமை சாற்றிநந் தானை சேர்கெனாப்
பண்ணமை தேரினிற் படைகொ டேறினான். (8)

கோளரி முகத்தினர் கொடுங்கை வேலினர்
காளைய ராயிரங் கரத்த ரெண்குபுல்
கூளித னுருவினர் கோடி கோடியாய்
வாளிவில் லேந்திமுன் வந்து கூடினார். (9)

வந்திடு தகுவர்கைம் மலைமு கத்தினன்
றந்திடு விடைகொடு சார தப்படை
சிந்திட வெங்கணை சிதறித் தாக்கினார்
முந்திசை யார்கலி முழக்கி னார்த்தரோ. (10)

வேறு

பாரிடப் படைகண் மீது பற்பல பகழி தூவிப்
போரிடத் தகுவ ரன்னோர் புயங்கரஞ் சிரந்தாள் முண்டஞ்
சோரிநீ ரூற்றி னோடத் துணிந்தவ ரநீக வெள்ளம்
பேரிட முணரா தோடப் பெரிதமர் பொருதார் பூதர். (11)

தன்படை மெலிவு காணாத் தகுவர்கோ னனலிற் சீறி
வன்சர மாரி தூர்த்து மற்றவர் முன்வந் தேற்றான்
முன்படை நின்ற வீர கேசரி முகிலி னூர்த்துத்
துன்புற முடியைத் தள்ளித் தூர்த்தன னப்பு மாரி. (12)

சினங்கொடு மான மீர்ப்பத் தீயவன் வெம்போ ராற்றி
முனம்பொரு வீர ரெண்மர் முரண்கெடச் செருக்கி நின்றான்
மனம்பொரு வீர வாகு வன்னெடு வரிவில் வாங்கி
முனம்பொழி யப்பு நீரான் மூர்க்கனை மூழ்குவித்தான். (13)

முட்டின் னவுணன் சீற்ற மூண்டெழ மொய்ம்ப னேரே
மட்டறு வரத்தாற் பெற்ற வன்சர முற்றும் விட்டான்
விட்டன படைகள் யாவும் வீந்திடச் செய்தான் வீரன்
கெட்டன னிரிந்தா னாற்றான் கேடுசூழ் வஞ்சக் கள்வன். (14)

இரிதரத் தொடர்ந்து சென்ற விளைஞரும் பூத ராருந்
தரியலன் மலைக்கு கைக்குட் சார்ந்தன ரன்னோன் மாயந்
தெரிதரு கற்பால் வீரர் சென்றவவ் வழியை மூடி
யிருளுற மயங்க வைத்தா னெரியுடை பொதிந்தான் போன்றே. (15)

முனிவனா ரதனி கழ்ந்த முருகனைப் பணிந்து ரைப்ப
நனிநகைத் தமர்க்க ளத்து நண்ணின யன்னை வீரர்
துனியுறக் குகையி விட்ட சூரிள வலவன் றோன்றிக்
குனிசிலை குனித்து வாளி குமரன்மேற் கோடி யுய்த்தான். (16)

தீயவன் றொடுத்து விட்ட தெய்வதப் படைகள் யாவு
நாயகன் றிருமு னூற்று நண்ணின வலம்வந் தோர்சார்
தூயவ னங்கை யுற்ற சுடர்வடி வேலை நோக்கி
மேயினை கொடியோன் மார்பும் வெற்புநீ பிளந்தி டென்றான். (17)

என்றலு மெழுந்து கால வெரியெனக் கிரவுஞ் சப்பேர்
குன்றறப் பிளந்து தீயோன் கோளுரம் புகுந்து நாடி
யொன்றிய வுயிரை மாந்தி யுடையவன் றிருக்க ரத்தி
னின்றது வைவேல் வீரர் நெருங்கினர் தம்முன் பாங்கர். (18)

சூரன திடக்கை யற்றுத் துடித்தென வருவி சோருங்
காரரி யென்னச் சோரி கான்றிடக் களத்த விந்தான்
றருக னன்னா னில்லா டணிகலாத் துயராற் சோர்ந்தா
னுரவன் மகனாற் சூரன் றெரிந்துள மாழ்கிச் சோர்ந்தான். (19)

தனிநெடு வைவே லேவித் தாருகற் செற்ற மேலோன்
பனிவரைத் தோடம் பிக்குப் பகர்படைத் தலைமை மேவக்
கனியருட் பெருக்காற் றந்த காதையீ தவ்வீ ரன்று
னனிவல சூர்ப்பு ரத்தை நண்ணுதா துரைத்து மன்றே. (20)

வீரவாகுதேவர் படைத்தலைமை பெறுபடலம் முற்றிற்று.

ஆக படலம் 11-க்குச் செய்யுள் 288.

வனமுறு வாசமா வைகல் விட்டியா
சனமுற விண்ணிடங் தனிவை குந்தமும்
இனனுறு பங்கய மூவர்க் கெய்தவே
சினமுறு தாரகற் செறிசெங் குந்தமே—ஈட்டியெழுபது

வெள்ளிமலையினின்றெழுந்த வேலவன் படைகள், மதியிலாத்திதி மக்கள் செய்யும் பாவமாகிய தீயினையவிக்க வடகடல் திரண்டெழு வெள்ள மென்னக் கிரவுஞ்ச மலைக்கருகினுற்றன. ஆங்கு, நாரத முனிவனால் தாருக னாற்றும் வெவ்வினையத்தையும் செவ்விதினுணர்ந்து முருகப்பெருமான் பொருதற்கெண்ணித் தம்பியர்க்கெந்திரம், தும்பி, துரகதம், மந்திரப்படை களும், வாளி, வில் முதலிய யாவுங்கொடுத்து நாவுறவாழ்த்தி, படையின் தலைமையை விடையென நிமிர்ந்த வீரவாகு தேவற்கு நல்கினான். சங்க முதலிய வாத்தியங்கள் முழங்கக் குந்த வீரரும், பூதகணங்களும் ஆர்த்துப்புடை சூழ, வீரவாகு தேவன் தேரிலிவர்ந்து சென்று மாயபுரியைத்தாக்கினான். ஒற்றரால் அஃதுணர்ந்த தாருகன், தெற்றெனப்படைகளொடு தேரிலேறி, அமரரைச் சிறைவிடேன் குமரன்றிறத்தினைப்பார்க்கின்றேனெனப் போர்க் கெழுந்தனன். யானைமுகத்தையுடைய அத்தாருகன் ஏவியபடி சிங்கமுகம், கரடிமுகம், புலி முகங்களையுடையவர்களும், ஆயிரங்கைகளையுடையவர் களும், பலவேறு உருவங்கொண்டவர்களுமாகிய அசுரர்கள் ஓதமென வார்த்துப் பூதகணங்கண்மீது பகழிகள் தூவி யிகல் புரிந்து பூதகணங்களால் மோதப்பட்டு இரத்த வெள்ளம் பெருகச் சிரம், தாள், கரம், தோள், முண்டம் முதலியன துண்ட துண்டமாகப் பலஅசுரர்கள் மாண்டனர். சிலர், திசையறியாது சிதறியோடினார்கள். தன் சேனைகள் பின்னிடக்கண்ட தாருகன், கடுஞ்சினங்கொண்டு கொடுஞ்சர மாரிபெய்து பூதப்படைகளொடு பொருதான். வீரகேசரிதேவன், தாருகன் விடுத்த சரங்களைக் கரங்களாற் றடுத்து, அன்னவன் முடியினைப் படியினிற் றள்ளினான். மகுடமிழந்த தாருகன், மானத்தால் மிகுசினங்கொண்டு, வீரகேசரி யாதிய எண்மரும் உண்மறுகிப் பின்னிடப் பன்னெடுங்கொடுங்கணைகளை விடுத்தனன். அது கண்ட வீரவாகுதேவன், கதுமெனவில்லை வளைத்து வெம்புமனத்தசுரனை அம்புமழையில் மூழ்குவித்தான். வஞ்சகனும் அஞ்சாது வரத்தினாற்பெற்ற சரங்கள் யாவையும் அடுத்தடுத்து வில்லிற்றொடுத்து விடுத்து, விடுத்த

படைகளை யெல்லாம் வீரவாகுதேவன் தடுத்துப் பொடிசெய்ய வலியிழந்து நலிகொண்டு புறங்காட்டி யோடி மலைக்குகையிற்புகுந்தான். வீரரும்பூதரும் விடாது பின்றொடர்ந்து குகைக்குட் சென்றனர். தாருகன், நெருப்பைத் துணியிற் கட்டிவைத்ததுபோல் மாயத்தால் வழியை மூடி, மயங்கும்படி வீரர்களை மலையிற் சிறை செய்தான்.

அஃதுணர்ந்த அறுமுகப்பெருமான் முறுவல் செய்து அமர்க்களம் நண்ணவே, நஞ்சினுங் கொடிய வஞ்சகன் வெளிவந்து, குமரன் மீது கோடி கோடி தெய்வ வாளிகளைச் சிந்த அவைகள், குமரனைக் குறுகி வலம் வந்து வணங்கி நின்றன. அவ்வேளை நமது செவ்வேள், திருக்கரத்துற்ற சுடர் வடிவேலை விடுத்தனன். கந்ததேவன் இட்ட கட்டளையின்படி அவ்வேல், கிரவுஞ்ச மென்னும் மலையைப்பிளந்து, தாருகன் மார்பிற் புகுந்து உயிரைக் குடித்து ஐயன் திருக்கரத்துற்றது. குந்தவீரரும், பூதரும் குகையினின்று மீண்டு குமரன் பக்கலுற்றனர்.

சூரபதுமனது இடதுகை அற்றதுபோவ் தாருகன், போர்களத்தில் மாண்டதை அன்னவன் மகனால் சூரபதுமன் அறிந்து மயங்கி விழுந்தனன்.

தூது செல்படலம்.

விண்ணோர் வேண்டப் பின்றேவ கிரியின் மேவி மற்றவர்தாம்
பண்ணும் பூசை பரிந்தேற்றுப் பனிமா மலையின் றென்றிசைக்க
ணண்ணும் பலநற் பதியமர்ந்து நாடிப் பரங்குன் றதினின்று
மெண்ணுஞ் செந்தி னகர்வந்தா னெழிலா ராறு முகத்தெம்மான். (1)

மயனு லமைத்த பொற்கோயி ன் மன்னி யிருந்து வீரரொடும்
பெயல்வா னேக்கும் பயிரென்னப் போரா ருநோக் கமரரொடுங்
புயமே லுலக மேந்தாற்றற் பூதப் படையின் றலைவரோடுஞ்
செயன்மே லெண்ணி யறுமுகவன் றிருவாய் மலர்வான் றெரிந்தன்றே. (2)

நேர்மாற் றீத லொறுத்தலென நிகழ்த்து நான்கு நெறிமுறையிற்
றேர்முன் மூன்றுன் முடியாமை தெரிந்தே யொறுப்ப ராதலினாற்
சூர்வெம் பகைநா முடித்தற்குத் தூதாய்ச் சென்றங் கவனுளத்தை
யோர்ந்து மீளும் வன்மையுளா னொருவன் யாவ னுரைமினென்றான். (3)

அமரர் குழுவி னின்றெழுந்தங் கம்போ ருகத்தோன் றொழுதறைவான்
குமர வேணின் பாங்கருறுங் குலத்தம் பியருண் மூத்தோனே
சமர்செ யசுரர் முன்சென்று தனிமை யாற்றுந் தகைய னெனத்
தமரா மன்பர்க் கருட்டருவான் றன்னுட் கருத்து மொத்தலினால். (4)

தம்பி தன்மேற் கடைக்கணித்து தகுவன் வெஞ்சூர்ப் புரம்போய்நே
ரும்பர் சிறைவிட் டுய்தியென வுரைநின் னுரையை யிகந்தானேல்
வெம்பு வேலா னின்னகந்தை வீழ்த்தி யமரர் சிறைமீட்பா
னம்பொற் செந்தி னகரானென் றறைந்து மீள்வா யெனநவின்றான். (5)

என்ற மொழியைச் சிரந்தாங்கி யிறைஞ்சி யெழுந்தான் மொய்ம்பனெண்ம
ரொன்று மிலக்கர் பூதருளா ருள்ளங் களிப்பக் களிகூர்ந்து
நின்ற கந்த மாதனத்தி னெடிய சிகரி மேனின்றா
னன்றங் குலக மீரடியா லளந்த செங்கண் மால்போன்றே. (6)

விரையுஞ் செலவா னெழும்வளியை வீசுங் கடைக்கா லெனமருளக்
குரையார் கலிசூழ் தென்னிலங்கை குருகு மளவில் வீரசிங்க
னிரையா ரசுர வநிகமோடு நேர்ந்தா னவனைத் தொலைத்தாவி
கரையு மவன்றன் மகனுயிருங் காதி மாகேந் திரமுற்றான். (7)

கடிசே ரரண வாயிரெறாறுங் கண்டங் கேகு மளவைகய
வடிவ முகத்தோ னிடையெதிர்ந்து மாப்போ ராற்ற வாகுப்பேர்
நெடியோ னவனை யிடியுண்ட நெடுமா மரம்போ னிலத்துருட்டிக்
கடிது வந்த வினைமுடிப்பான் காணா நுண்மை யுருவுற்றான். (8)

நுண்மை யுருவங் கொண்டயலார் நுழைய வொண்ணா நகர்நுழைந்து
பெண்மை பாதிப் பிரானருளாற் பெருகு வளங்கண் டுளம்வியந்தம்
கண்மை யுளது துயர்தீர்வென் றணுகிச் சயந்த னுளந்தேற்றி
யுண்மை யுருவங் கொடுசூர னவையிற் செல்வா னுளத்துன்னி. (9)

இரவு பகலா வொளிகான்றவ் வெழின்மா நகருக் கணிசெய்து
நிரையத் தாணி மண்டபத்து நேரா ரின்றி யரியணையிற்
பரவு மமைச்சர் படைவீரர் பரிதிப் பகைவன் முதன்மக்கள்
விரவு மசுரர் கட்கடையை நோக்கச் சூரன் வீற்றிருப்ப. (10)

வேறு

கோளரி யொன்றி யானை குழுவினிற் புகுந்தவாபோ
னீளுறு மவையிற் சூர னிமிரரி யணையின் முன்செவ்
வேளவ னருளாற் றோன்றும் வியன்றவி சிருந்தான் வீரன்
மூளுறு சினத்தன் சூரன் முன்னுறு மெவனீ யென்றான். (11)

தேன்முரல் கொன்றை வேணிச் சிவபிரா னளித்த சத்தி
வேன்முரு கையன் றூதன் வீரவா கென்ப ரென்பேர்
வான்சுரர் சிறைவி டின்றே மறுத்தியே லுன்னை வேலா
லூன்பொதி மாளச் சுற்றத் தோடொழித் திடுவ லென்றான். (12)

ஈதறு முகத்தெம் மைய னிசைத்ததுன் னிசைவே தென்றான்
றீதுசெய் சூர னந்த சிறுவனோ சிறையை மீட்ப
னோதிய சுரரை யன்னா னுறுவது புரிக வென்றான்
நாதன தயிற்கூற் றுன்னை நணுகிய தென்றான் றூதன் (13)

ஆண்மையு நெஞ்ச மஞ்சா வாற்றலு மமுதர் தம்பாற்
கேண்மையுஞ் சூரன் கண்டு கிளைஞரிற் பத்து நூறு
வாண்மிகுந் தகுவர்க் கூவி வலித்திவற் பற்று கென்ன
நாண்முடிந் தவரும் பற்றி நடுவனூர் புக்கா ரன்றே (14)

ஞாலவை கவந்த மாடச் சோணித வேணியோட
வீரனுங் குந்த வேலால் வீட்டிமீண் டெழுந்தா னும்ப
ராரண வருளாற் றோன்று மணைமினின் மறைந்த தன்றே
காரண மிற்றென் றோரான் கலங்கினன் றகுவர் கோமான். (15)

நீயவைக் குறையு ளாயின் செல்வ வெஞ் செருக்கு முன்றன்
மாயையு மொடியிற் றானே மாற்றுவ னுணர்விற் கெட்டாச்
சேயவன் வேலா னீயுந் தீர்ந்தனை யென்னப் பேசித்
தூயவ னெடும்பொற் குன்றிற் றோன்றின னண்டமுட்ட. (16)

சதுமென வெழுந்த சூர்தன் காற்பணிந் தெழுந்து போந்த
சதமுகன் காவலாளர் தாக்கினர் மொய்ம்பன் காலா
லுதைபடக் குலாவன் காலா னசுங்குணு மண்ணை யெய்ப்பப்
பதைபதைத் தாவிசோர்ந்து பாரகம் புதைய வீழ்ந்தார் (17)

இன்னினித் தகுவர் கோமா னிருக்கையுட் டருக்கு போகம்
புன்னுனி நீரென் றோராப் புன்கணன் செல்வ மீதோர்
கன்னலி னழித்துப் பேர்த்துக் கடலினைத் தூர்ப்ப னென்ன
தன்னியல் வன்மை கொண்டு தாக்கின னகரை மொய்ம்பன். (18)

கடியுடை யரணம் வாய்தல் காப்புடைச் சிகரி பேர்த்துப்
பொடிபட வரைத்துக் காலாற் றேய்த்தபற் பூழி பொங்கி
நெடியவான் புதைப்ப மற்றை நெடுங்கையால் வாரி வாரித்
தொடுகட லெறிய வங்நீ ரூழியிற் றுள்ளிற் றன்றே. (19)

பன்மலை யூழிக் காலாற் பந்தெனப் பறக்கு மாபோல்
மன்மணி யிழையத் தாணி மண்டப மரங்கு மெங்கும்
பொன்மலி மாட கூடங் கோபுரம் பொருவி லாத
வின்மலி யகங்க ளெல்லாம் வீந்தன தகர்ந்து தூளாய். (20)

இத்திறங் கண்ட சூர னென்னுடை யரசு நன்றாற்
சைத்திறற் றூதன் காட்டிக் கடந்திடக் கண்டிங் குற்ற
புத்திரர் வம்மி னீவிர் போந்திக லொற்றற் பற்றி
யுய்த்திடர் சிறைக்கணென்று னெருங்கவர் வீரற் சூழ்ந்தார். (21)

தூக்கினன் றூதன் வாளைச் சுவறின வசுர வேலை
மாக்களூர் தேரு மாவு மதகரித் திரளுஞ் சேர
தாக்கின படைக ளோடுஞ் சகத்திர வாகு னாவி
போக்கினை னயன் றன்பாற் பொருபவ ரொருவ ரின்றி. (22)

மாயிருந் திறற்சூர் மைந்தன் வச்சிர வாகு வென்போ
னுயிரஞ் சிரங்க ளுள்ளா னார்த்துவின் னாணி யேற்றி
தூயின னப்பு மாரி துணிவினில் வீரன் மெய்ம்மே
லேயின வன்கல் வின்மே லிட்டமட் கலமே போன்று (23)

மீளவு மெண்ணில் வாளி வீசின னவற்றை யெல்லாங்
காளையும் வாளா லெற்றிக் காற்றெனக் கடிது சென்று
கோளரி கரிமேற் பாய்ந்த கொள்கைபோற் பிடித்தன் னோனை
நீளுறு கரத்தா னெற்று ளடித்தென நிலத்த றைந்தான். (24)

அடித்துடற் றசையைப் போக்கி யாயிரந் தலையைத் தள்ளிப்
பொடித்துமற் றுறுப்பை யெல்லாம் புறத்தினிற் போகட் டாவி
குடித்தவன் முதுகி னென்பைக் கோபுரத் துயர நாட்டி
மடித்துள நரம்பை நான்கு திசைதொறும் வரிந்து கட்டி. (25)

ஆடலந் தொழிலால் வீரா வேசமா யதன்மே னின்று
பாடலெங் குருகு கேசன் பதங்களைப்பரிந்து பாடி
கேடகம் வாள்வி திர்த்து கிளர்கர ணங்க ளாற்றி
நாடகக் கலைக்கூத் தென்ன நடாமலே நடித்திட் டானல். (26)

வேறு

வச்சிர வாகு வெரிந்புற வென்பை மகேந்திரக் கோபுர நாட்டி
பச்சிவ குமார னுடலா லந்த வருஞ்சமர் வென்றியைக் குறிக்க
விச்சக முற்ற வன்னவன் மரபி னின்றுமவ் வாடலை யயர்வோர்
நச்சியி னட்டுக் கட்டிடா ரென்னக் கவின்பெற நிலவுகின் றுரே. (27)

அசுரமா நகரைத் தகர்த்தழித் தலைசே ரார்கலி யகட்டினில் வீசி
விசயமுற் றெழுந்த வீரனே டியாளி முகமுளா னமர்புரிந் தானந்
திசான் றனையுஞ் சூழ்படை யோடு நெடுமரங் கொடுபுடைத் தொழித்து
விசைகொடு வருசெங் கதிரென வந்தான் வேலவ னமர்திசை நோக்கி. (28)

தூண்டலில் சுடரா மறுமுகப் பெருமான் றுணையடி யுண்ணினைந் தன்னோன்
மாண்டகு மருளை வாழ்த்திவா யாற மகேந்திர மிலங்கையுங் கடந்து
காண்டகு சீராற் பல்வள நிறைந்த கந்தமா தனகிரி யண்மி
மீண்டனன் வீர வாகுமா தேவன் விழுமிய செந்தின்மா நகரம். (29)

ஒற்றசு ரேசன் முன்புபோய் மீண்ட வொருவனை யெண்மரோ டிலக்கர்
பற்றினர் துதித்தா ருழுவலன் போங்கப் பரவினர் குழுமினர் வியந்தா
ரற்றவீ ரனுமவ் விளைஞரைத் தழுவி யுகந்தனன் மகபதி வானோர்
மற்றுள பூத கணங்களு மெதிர்போய் வாழ்த்தினின் றனர்புடை சூழ்ந்து (30)

சினகரத் தணையில் வீற்றிருந் தருளுஞ் சேந்தனைக் கந்தனைக் குகனை
பனகனை வணங்கிக் கண்கணீர் ததும்பி யஞ்சலி யத்தனாய் நிற்ப
முனைவனைச் செற்ற வகைநவி லென்ன மொழிந்தனன் முற்றுணர் முதல்வ
சொனமதி கேளான் சூரென வீரன் றுணைவரோ டிருந்தன னன்றே. (31)

வேறு

ஓது சீரொருங் குற்ற வளவகே
ணீதி மொய்ம்பின னேரலன் முன்னுறுந்
தூது மற்றிது சூழெற் பகைவனைக்
காது காதையைக் கட்டுரைப் பாமரோ. (32)

தூதுசெல்படல முற்றிற்று.

ஆகு படலம் 12-க்குச் செய்யுள் 320.

பிறகு அறுமுகப் பெருமான் தேவர்கள் வேண்டுகோளால் வடதிசையில் தேவகிரி முதலிய திருப்பதிகளிலும், தென்றிசையில் காசி முதலிய திருப்பதிகளிலும், அமர்ந்து திருப்பரங் குன்றத்தை யடைந்தனன். அங்கு மயனால் அமைத்த பொன்மயமான கோவிலில் குமரன் எழுந்தருளியிருந்து, இனிநடக்கவிருக்கும் செயலைக்குறித்து ஆலோசிக்கக் கருதி, வீரர்காள்! தேவர்காள்! பூதர்காள்! பகைவரைவெல்ல எண்ணுவோர் சாம பேத தான தண்டம் என்னும் நான்கு உபாயத்துள் முதலில் மூன்றுவிதமான உபாயத்தைச் செலுத்தி, அவற்றால் அப்பகைவன் வசப்படாதகாலத்தன்றோ தண்டோபாயத்தைச் செலுத்த வேண்டும்? ஆகையால், சூரபதுமனது உள்ளக்கருத்தை உள்ளவாறுஉணர்ந்துவரத் தகுதியான தூதுவனை அவனிடம் அனுப்ப வெண்ணுகின்றேன். தூதுக்கு வேண்டிய எல்லாவன்மைகளும் அமைந்த ஒருவன்வேண்டும். அத்தகையன் யாவனென உங்களுக்குள் ஆராய்ந்து கூறுமின் என்றனன்.

அப்போது அச்சபையில் தேவர்கள்குழுவில் அமர்ந்திருந்த பிரம்ம தேவன் எழுந்துபணிந்து, ஐயனே! பலவாறு ஆராய்வானேன் உமது தம்பியருக்குள் மூத்தவனுன வீரவாகுதேவனே அத்தூதிற்கேற்றவன் என்று சொல்ல அறுமுகனும் தன்கருத்தும் அவ்வாறே ஒத்திருத்தலால் வீரவாகு தேவனை நோக்கி, நீ சூரபதுமனது நகரையடைந்து அவனை நேரேகண்டு, தேவர்கள் சிறையை விட்டுப்பிழைப்பாய் விடாதிருப்பையேல்நின்செருக்கை பொறுத்து, அத்தேவர் சிறைமீட்பான் கருதி, ஐம்முகன் திருமகனுன அறுமுகன் திருச்செந்தில்நகரில் எழுந்தருளியிருக்கின்றனன். என்று கூறி அவன் கருத்தை அறிந்து வருக என்றனன்.

முருகன் கட்டளையைத் தலைமேற் கொண்டு பணிந்தெழுந்த வீரவாகுதேவன் தன்னைவாழ்த்திய இலக்கத்தெண்மர் பூதர்யாவரும் உள்ளங் களிப்பச் சென்று சந்தமாதனகிரியின் உச்சியிலேறி, உலகளந்த நெடுமால் போல் வளர்ந்து, காற்றின் செலவும் தோற்றோடவிரைந்து பாய்ந்துசெல்லுமளவில், இடையிலுள்ள இலங்கையை யாளும் வீரசிங்கனென்போன் தன் படைகளோடு எதிர்த்துப் போர்புரிய அவனைக்கொன்று தொலைத்து, தன் தந்தையைக் கொன்றதைக் கேள்வியுற்று வந்தெதிர்த்த அவன் மகனையும் வதைத்து, மகேந்திரபுரியை யடைந்து, அந்நகரின் ஒவ்வொரு கோட்டை வாயிலையும் சோதித்துக்கொண்டு செல்லுங்கால், கயமுகன் எதிர்த்துக் கடும் போராற்ற அவனோடு சண்டையிட்டுமாய்த்து, தான்வந்த காரியத்தை விரைவில் முடிக்க எண்ணி, பிறர்கண்ணுக்குப் புலப்படாதநுட்பமானவுருக் கொண்டு, அந்நகரின் வளமுற்றுங்கண்டு வியந்து, சிறையிலிருந்த இந்திரன் மகனுன சயந்தனைக்கண்டு தேற்றி, முன்னைய உருவங்கொண்டு, அமைச்சர் படைத்தலைவர் தண்டத்தலைவர் தன்மக்கள் முதலாய அசுரர்கள் இடையில்

அரியணையிலிருக்கும் சூரபதுமனது இரத்தின கசிதமான அத்தாணி மண்டபத்தில் யானைக்குழுவில் சிங்கக்குருளை பாய்வது போற்சென்று அவன்முன் அறுமுகன் அருளாற்றோன்றிய அரியணையொன்றில் அமர்ந்தான்.

திடீரென்று தன்முனதிரில் தனக்குச்சரியாக அரியணையிலிருக்கும்வீரனைக் கண்ட சூரன் சினமூண்டு நீயார்? இங்கு வந்த காரியம் யாது? என்று வீரனை நோக்கிக்கேட்க, வீரன் சிவபிரான் அளித்த சத்திவேல்முருகன் தூதன்யான் என்னைவீரவாகுவென்பர்! இப்போதேதேவர்கள் சிறையை விட்டுவிடுக! விடாது மறுத்தாயாயின் உன்னுடன் பொருது சத்திவேலால் வென்றுதேவர்கள் சிறையைமீட்பது உண்மை! ஆதலால் இதைஉனக்கறிவித்து வரும்பொருட்டு எம்மையன் என்னை ஏவினன் நின்கருத்துயாது? சொல்லுக என்றான். இதைக் கேட்டபொழுது சினமூண்டசூரன் அந்த அறுமுகச்சிறுவனே தேவர்கள் சிறையைமீட்பான் அவனால் ஆவதைச் செய்யச் சொல்லுக என்றான் அதற்கு வீரனும் சூரனை நோக்கி உன்னுயிரைமாற்றும் கூற்றுவனும் நின்னை அணுகுங்காலம் நெருங்கியது என்னச், சூரன்; தன்னருகிருந்த ஏவலாளர் ஆயிரவரை விளித்து இவனைப்பற்றுங்கள் என்ன, அன்னோர் நெருங்கிப்பற்றவந்த அளவில் வீரன்தன் கைக்குந்தத்தால் குத்திக்கொன்று தென்றிசைக்கனுப்பி மேலெழுந்தனன். அங்கிருந்து மேலெழுந்த வீரன் அண்டமுட்ட வளர்ந்து, ஓ சூரனே! நின் இருமாப்பொழிந்து ஐயன்வேலால் நீயும் மாய்வது திண்ணம் என்று கூறினன். இவ்வாறு தன்னை மதியாது கூறிய அவன் வீரவார்த்தையைக் கேட்டசூரன் வெகுண்டு அவனுடன்போர் எழுந்ததைக்கண்டு, சதமுகன்முதலிய அசுரர்கள் சூரனைப்பணிந்து விடைபெற்று வீரனுடன் எதிர்த்துப் போராடினர். அன்னோரை வீரன், குயவன் காலால் மண்ணை மிதிப்பதுபோல் மிதித்துத் துவைத்துக்கொன்றுகுவித்தான்.

பின்னர் வீரன் வீராவேசங் கொண்டு இந்நகரை அழித்துத்திரும்புவேனென்றெண்ணி, அந்நகரில் ஊழிக்காற்றைப் போற்றிரிந்து மாடமாளிகை கூடகோபுரம் கோட்டை கொத்தளங்களெல்லாம் பொடிபடும்படிதகர்த்துத் தகளாக்கினன். இதைக்கண்ணுற்ற சூரன் தன்மக்களில் பலரைவிளித்து அத்தூதனைப்பற்றி சிறையிலிட்டு வம்மின் என்று ஏவ அன்னோர் கடல் புரண்டு வருவதைப்போல் சேனைகளோடு வந்து வீரனைச்சூழ்ந்து போராடினர் அவ்வசுரக்கடலை தன் கைவாளென்னும் வடவைக்கனலால் வற்றச் செய்து எதிர்ப்பார் ஒருவரும் இன்றி நின்றான்.

அப்போது சூரபதுமன் மக்களில் ஒருவனான் ஆயிரஞ் சிரங்கள்பெற்ற வச்சிரவாகு வென்போன் தேரேறிப்படைகள் புடைசூழ வீரனை நெருங்கி

வில்லை வளைத்து நாணியேற்றிச் சாமாரி பொழிந்தனன். அவ்வம்புகளெல்லாம் கல்லின்மேலிட்ட மட்கலம்போல் வீரன் மெய்யிற்றாக்கி பயன்படாது போனதைக்கண்ட அவ்வச்சிரவாகு மீண்டும் மீண்டும் பல தெய்வதப்படைகளை யேவிப் பொருதபோது அவற்றையெல்லாம் வீரன் தன் கைவாளால் வெட்டித்தள்ளி காற்றைப்போல் அவன் மேற்பாய்ந்து பற்றி ஆயிரந்தலைகளையும் திருகியெறிந்து நெற்றாளை நிலத்தறைவதுபோல் அறைந்து உடம்பிலுள்ள தசை முற்றும் உதிர்த்து உயிரைமாய்த்து அவன் முதுகெலும்பை அம்மகேந்திரபுரியின் கோபுரத்துச்சியில் நாட்டி அவ்வெலும்பிலுள்ள நரம்பு நார்களை நாற்புறத்திலும் வரிந்து கட்டி, வீராவேசத்தினல் அதன்மேலேறி நின்று கேடகம் வாளை விதிர்த்து கழைக்கூத்தரைப்போல் பலவரிசைப்பட நடித்தனன்.

வச்சிரவாகுவின் முதுகெலும்பை மகேந்திரபுரியின் கோபுரத்துச்சியில் நாட்டி அதன்மேல் நின்று வீரவாகுதேவன் ஆடிய அவ்வெற்றிதோன்ற இவ்வுலகில் அவன் கால்வழி வந்த செங்குந்தரில் கோபுரத்துச்சியில் கம்பம் நடாது கட்டியாடும் நட்டுக்கட்டார் என்போர் இன்னும் காஞ்சி முதலிய நகரில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு அம்மகேந்திரபுரியை அழித்துப் பேர்த்துக் கடலிலெறிந்து புறப்பட்ட வீரனோடு யாளிமுகன் என்போன் வந்தெதிர்க்க அவனையும் அவன் சேனைகளோடு ஒழித்து, வேலவனைவாழ்த்தி, விசைகொண்டு பாய்ந்து, அவ்வேலவன் வீற்றிருக்கும் திசையைநோக்கிச் செங்கதிர்போல் எழுந்து, மகேந்திரபுரியையும் இலங்கையையும் கடந்து, கந்தமாதன மலையையடைந்து அங்கிருந்து செந்தின்மாநகரை அணுகினன்.

வெற்றியுடன் மீண்டவீரன், தன்னைக்கண்டு வாழ்த்திப்பணிந்த வீரர் பூதர் புடை சூழத் தன்முன்னேனை முருகனைக் கண்டு பணிந்து கை கூப்பி நின்றான். நின்றவனைச்சென்ற செய்தியாதென அறுமுகன் வினவ, முற்றுணர் முதல்வ! சூரபதுமன் யாம்சொல்லிய நன்மதியை ஏற்றுக்கொண்டிலன் என்றான். அறுமுகன் சூரனது உள்ளக் கருத்தைத் தெரிந்து தூது சென்று மீண்ட துணைவன் முதலாயினேரோடும் திருச்செந்தில் நகரில் எழுந்தருளியிருந்தனன்,

பானுகோபவனை வீட்டிய படலம்

மூதனை கொண்டு விண்ணவர் குழுவை மொய்சிறை விடுதியென் றறைந்த
தூதனை மறுத்தா னுரைசா லின்னே சூழ்ந்தவன் செருக்கினை யோட்டிக்
காதுதல் கடனு னீவிரங் கெழுமின் கடிதென வோதலுங் குமரன்
மீதுறுங் களியா ரிவர்ந்தன ரூர்தி விண்ணவர் கோன்முத லமரர். (1)

வல்லியம் புரையும் பூதவெள் ளங்கள் வயம்பெறப் பொருதிடத் தும்பை
தல்லிய வலங்கல் சூடினர் தடாரி துடிசய சங்கமா தியபல்
பல்லிய முரலக் கடலலை புரண்ட பண்பினிற் செலவிலாந் துகளைச்
சில்லியங் கொடிஞ்சித் தேரணி பதாகை சேண்படர்ந் தகற்றுதல் செய்ய (2

பாரிட ருள்ளார் பதாதியர் தூசிப் படைவகுப் பாயின ரமரர்
போரிடப் படையி னல்வகை யானூர் பொருவிலக் கத்தினொன் பதின்மர்
தேரிட மிவர்ந்தார் தெய்வதத் திண்டேர் மீமிசை யனிலனூற் றாண்டச்
சூரிட வகந்தை போக்குவான் கடைக்கூழைப்படை யாயினன் றூயோன்(3)

சுப்பிர மணிய னென்னுமோர் பால சூரியன் செந்தின்மா நகர
வைப்பினின் றெழுந்தான் பாரிடர் குந்தர் வானவர் யாவரு மெழுந்தார்
துப்புடை விசும்பி னெறிபடர்ந் திடையே தோன்றிய விலங்கையுங் கடந்தே
யப்பிடைத் தோன்று மகேந்திர புரியை யண்மின ரிருந்தன ரன்றே. (4)

அக்கணத் தமுதர் தச்சனூற் கமல னறு முகத் தெந்தைதன் படைக்குத்
தக்கதோர் படைவீ டமைத்தனன் விரைவிற் றருவளர் வானினுங் கவினின்
மிக்கதா யமலன் வீரர்கள் பூதர் மேவுமா நிரைநிரை மிளிர்ந்து
நக்கபா சறையி லமர்ந்தன ரிருந்தார் நவிறரு மேமகூ டத்தே. (5)

மகதியாழ் முனிவன் பற்பல வண்ட மறநெறி செயுங்கொடுஞ் சூரன்
மிகுதியாம் வலியார் மக்கண்மற் றவுணர் மேவரா வமர்தருங் கொலுமுன்
றகுதியா லணுகி வானவர் வணங்குந் தானவர்க் கரசமுப் புரத்தை
நகுசிவ னிளஞ்சேய் நிற்பொர வந்தா னென்றன னக்கண னவுணன். (6)

சீற்றமிக் குளனாய்க் கட்கனல் கதுவச் செங்கதிர்க் கோபனை விளித்தெம்
மாற்றனன் குணரா வறுமுகச் சேய்ந மணிநகர் முற்றின னவனைப்
போற்றியெற் பொருவான் றுணைகொடு வந்த புரந்தர னும்பெருங் கள்வ
னாற்றலைத் துமித்தன் னவற்பிணித் தரன்றன் சிறுவனை யகற்றுதி
யென்றான். (7)

என்னுமுன் பானு கோபனன் றூழி யெழுங்கடு வினுமிகக் கொதித்து
முன்னமோ ரொற்றன் வந்துழி யிதுபோன் மொழிந்திலை யினிமனங்
கவலேல்
பொன்னுல கரசை யேனைய சுரரைப் போர்முகம் பொருதவர்ப் பற்றி
சென்னியா றுடைய பிள்ளையைக் கணத்திற் சிதைப்பனின் றேயெனச்
சிரித்தான் (8)

பாழியந் தடந்தோ ளசலமிக் கோங்கிப் பணிந்துரைத் தலுமகன் சூரன்
வாழிசே யமரில் வயம்பெறப் போதி மைந்தனீ யெனமொழி விளம்ப
வேழியற் பரியோன் பகைவனு மமர்செய் கோலமோ டெழுந்துவில் லேந்திக்
காழிருந் தூணி யிருக்கிவெம் படைகள் கைகொடு பாய்ந்தனன்
றேர்மேல். (9)

சூர்தலை மகன்வெங் கோளரி யென்னத் துடித்தெழப் போர்த்தெரி யியங்க
ளார்கலி யொலியி னதிர்தர வறிந்த வடல்கெழு மெண்ணில வசுரர்
போர்வர வில்லா திருந்தன மின்றே பொறைப்புய மூறிய தினவு
தீர்தர நேர்ந்த தென்னநாற் படையுஞ் செறிந்தன களித்துடன் சென்ற. (10)

வேறு

தொடுகடன் மணலை யெண்ணிச் சொல்லலாந் தரத்தர் கானி
லடுவிலங் குருவர் சீற்றத் தங்கியாற் புகையுங் கண்ணர்
கடுவமர் வாள்வில் லெஃகங் கழுமுளா தியக ரத்தர்
நடுவனு ளாட்பி னஞ்ச நலிவுசெய் நஞ்ச மன்னர் (11)

குருகுகாற் பூத வெள்ளங் குடிப்பமின் றெங்கென் றேசி
யுருமினிற் றெழிக்குஞ் சொல்ல ருடற்றிட விரைந்த காலை
மருவியாழ் முனிவன் செவ்வேண் மலரடி யிறைஞ்சி யெல்லைக்
கருவுகொள் பகைவன் வந்தான் கடற்படை யோடு மென்றான். (12)

முற்றுணர் முதல்வன் வீரர் முன்னவன் றன்னை நோக்கி
பற்றலன் மகன்ப கற்குப் பகைவன்பே ரனிகத் தோடு
முற்றனன் போர்க்கு முன்போ யும்பியர் பூத ரோடும்
வெற்றியுற் றடைதி யென்ன விளம்பினன் வாழ்த்தி மாதோ. (13)

விளம்பலு மிறைஞ்சி வீர னெழுந்தன னிலக்கத் தெண்மர்
தளர்வறு தேரர் சூழச் சாரதக் கணங்கள் சூழப்
புளகெழு புயம்பூ ரிக்கப் போர்க்கெழு மூழித் தீயி
லுளைபரித் தேரி தேறி யுற்றனன் முரச மார்ப்ப. (14)

வேறு

முந்துவரு தானவர னேகவித மாகிய முரண்படை யெடுத்து மென்மேல்
வந்தன ரெறிந்தனர் பறந்தலை புகுந்தனர் வளைந்தனர்க ளாக வவர்மேற்
கந்தனெதி ரனந்தரிய வாகைபெறு சாரதர்க ரங்கொடு மரங்கள் பறியா
விந்தமுமே லெத்தெரித ரத்தகுவர் தண்டமுச லஞ்சுரிகை வேல்கொ
டெறிய. (15)

பாபமொடு புண்ணியமு நன்மையொடு தீமையும்ப கைத்தெதி ரெதிர்த்த வகையோற்
கோபமிக லாவிருதி றத்தவரி லும்பல குறைந்தனர் கவந்த முதிரத்
தீபவதி யோடிவிளை யாடினபி ணக்குவைசி லம்பினி லிவர்ந்து பேய்கள்
சோபன முரைத்துதிரி தந்தனப ருந்துகள்பெ ருந்தசைக டுன்னி யுணவே. (16)

முந்துகணை நாதர்தமி லாற்றன்மிகு சிங்கனொரு டுக்கலை முகந்து தகுவர்
நொந்திரிய மோதவது கண்டனல னெண்கதையி னோங்கின னடிக்க வருமுன்
பந்தெனவி ரைந்தவனு ரம்பிளவ தாகவுயிர் பாறவிழு காலை கடுகி
வந்துமுனை சண்டனரி மாமுகவ னைப்பொருது வாள்கொடு துமிக்க வதனால். (17

சிங்கனதி சோகமுற சாதகரி னில்லொரு தீக்கணை தொடுத்து விடலா
லங்கதுக ளத்துருவ சண்டனுயிர் சண்டனக ரேகவள வற்ற கணையால்
வெங்கணமு னுந்தகுவ ராற்றுகில ராய் வெருவ ரப்புரிச மர்த்தி றலினாற்
பங்கமுள ராயிரிதல் கண்டிகல னுமெலின்ப கைத்தகுவ னீது புகலும். (18)

வேறு

கோளரிக் குழுவிற் கூடிக் குஞ்சரக் குழுத்தான் வெம்போ
ராளுமோ நம்மு னிந்த வடல்செயுங் குறட்காற் பூதர்
தாளொடு தலையுங் கையுந் தறிக்குவ லதன்பின் வீரர்
தோள்வலி காண்பெ னென்னச் சொல்லினன் வையந் தாண்டி. (19)

குனிசிலை வணக்கி யார்த்துக் குணத்தொனி செய்ய வண்டர்
பனித்துட னடுங்கக் கோத்துப் பத்துநூ றயுத மெண்ணி
னனிசர மாரி பெய்து ஞாட்பினிற் புரிந்த போரிற்
றனித்தனி வகுத்த பூதர் தலைதடு மாற்ற முற்றார். (20)

அற்றனர் சிரங்கால் கைக ளஞ்சின ரிரியக் கண்டு
கொற்றவர் தம்மிற் கோளாந் தகன்மிகு வீர தீரன்
செற்றமிக் குடைய வீர தேவன்மா கேந்திரன் முன்
னற்றவத் தலைவர் போந்து நணுகின ரமர்வி ளைத்தார். (21)

தீயினுங் கொடிய வாளி செலுத்திமற் றவன்றொ டுத்த
வீயவங் கிடையிற் கொய்து மேல்வரு மவுணர் சேனை
கூயினர் நடுங்கு மாறு கொலுஞ்செய லறிந்த வெய்யோன்
ருயினன் கடும்போ ராற்றித் தனித்தவர்த் தளரச் செய்தான். (22)

ஆதறி வீர தீர னணுகியா சுகத்தா லன்றோன்
கேதனந் துணித்து வீழ்த்திக் கிடுகினைப் பொடிக்க வந்த
பாதக னயன்பேர் பெற்ற பகழியைத் தொடுப்ப வீரர்
வேதைமிக் கடைந்தா ரோர்ந்த வீரமார்த் தாண்ட னார்த்து. (23)

வந்தவன் வில்வ ளைக்கி வாங்கிமற் றரிந்த மன்கோ
லுந்தின னதுவு மங்கி யுமிழ்ந்துமே லெழுந்து செல்ல
வந்தவெங் கணைகைக் கொண்டே யறுத்துப்பி னவுணன் மைந்தன்
சிந்தின னெண்ணி றேவ சிலீமுக மதனால் வீரர். (24)

ஆற்றல ராகி நிற்ப தறிந்தன னமல னந்தி
கூற்றினால் வந்த வீர வாகுதிண் கொடித்தே ரூர்ந்து
தோற்றின னொளி யேற்றின் சூர்மகன் றன்னைக் கண்டு
சாற்றுவன் றீய வஞ்சத் தகுவகே ளெனவி ளித்தே. (25)

ஆலமர்க் கடவு டந்த வண்டமா யிரத்தெட் டுள்ள
கோலமார் போகந் துய்த்தல் குறைபடா நல்ல றத்தின்
பாலதோ வளற்றி லுய்க்கும் பட்டிமை நிறைம றத்தின்
பாலதோ வுணர்ச்சி யற்றுப் பண்ணவர் சிறைகைக் கொண்டாய். (26)

நன்னெறி நாடா மூட நலமிலார்க் கறிவு றுத்திப்
பன்னெறி யாய நீதி பகர்ந்திட னெறியி னாலே
முன்னமெந் தமைய னாய முருகவேள் விடுத்த தூதாய்ச்
சொன்னவென் மொழியைக் கொள்ளான் றுறந்தனன் செருக்கா னுந்தை (27)

ஊற்றமுஞ் செருக்கும் வாட்டி யொருநொடிப் போதி லுன்னை
கூற்றுண விருந்த ளிக்குங் கோதிலென் கைவே லென்ன
மாற்றலன் சொல்வான் மாலோன் மலருளோன் மற்று ளோருந்
தோற்றன ரெற்கென் றோராய் சூரிய கோப னென்பேர் (28)

கேட்டறி கில்லா யென்பேர் கிட்டினை யெனக்கா னாம
லோட்டெடுத் தனையின் றுற்று யுயிர்கொடு செல்லா யென்னப்
பூட்டினன் வின்னா ணேற்றிப் புட்டினின் றெடுத்துக் கூர்த்த
வாட்டொடை மஞ்சு பெய்யு மழையெனச் சொரிந்தா னன்றே. (29)

அங்கது போழ்தெம் மைய னறுமுகப் பெருமான் பாத
பங்கய நினைந்து வில்லிற் பாணமெண் ணிகந்த தூவிச்
சிங்கவே றென்ன வார்த்திட் டன்னவன் செகுத்து விட்ட
புங்கவ மறுத்து நூறப் புல்லனும் வெகுளி பொங்கி. (30)

காற்றன விடியே றின்ன கடும்படை வீசி யார்த்தான்
மாற்றினன் வீர னந்த வயப்படை தன்னைக் கொண்டே
கூற்றெனக் கொதித்தா னெஞ்சங் கொடியவ னெடும்போ திவ்வா
றாற்றினன் றேலா னாகி யடுகணை தன்னாலன்றே. (31)

வவெறு தேவர் தந்த வான்படை யொவ்வொன் றாக
விடவிட வதனான் மாற்றி விஞ்சிமே லமரி லைய
னடவது கண்டு பொங்கி யாண்டுளோர் மதலை வெல்ல
விடமிலை பகழியாலே யென்புரி குதுமென் றேங்கி. (32)

எத்திறம் வயமென் றுள்ளே யெணியெணி யீறி லான்றன்
முத்தலை வடிவே லேந்தி மொழிந்தரன் மறுவிற் பூசித்
துய்த்தன னஃதோ ருழித் தீயினு மொளிகான் றேகச்
சித்திரக் குந்த வீரன் றிருக்கரங் கூப்பி நின்றான். (33)

பாண்டரங் கன்றன் சூலப் படைகடி தனல்கான் றுற்றுக்
காண்டலுந் தண்ணென் றாகிக் கந்தவே ளிளவ லென்னத்
தீண்டுதற் கஞ்சி வந்து சேர்ந்தது வீரன் செங்கை
சேண்டல மெறிந்து வீழச் செய்தவன் றிகைத்தான் மன்னோ. (34)

சேய்தனக் கிளையோன் செய்யுஞ் செருவினை வியந்து வில்விற்
றூயவெம் படையால் வென்றி தோன்றிடா தென்ன வுன்னித்
தீயன்மா மோக வாளி தீண்டிமந் திரித்துத் தூவப்
போயதோ ரந்த காரப் புகைப்பட லத்த தாகி. (35)

வந்தவிச் சரத்தா லங்கண் வானவர் பூதர் மஞ்சார்
விந்தமா மகட்சி லம்பின் மேல்வரு வீரர் மற்றோர்
தந்தம துணர்வு நீங்கிச் சாய்ந்தனர் துயிலுற் றார்போற்
சிந்தனை மயங்கிச் செய்யுஞ் செயலொழிந் திருந்தா ரன்றே. (36)

உயிர்க்குயி ராகி யண்டத் தொகைதொறும் புறம்பு முள்ளுஞ்
செயற்கருந் தொழிலிற் கெல்லாந் தெரிகரி யாய செவ்வேள்
வியக்குமா மோகவாளி வெங்கதிர்ப் பகைவ னேவ
வயிர்த்தன ராருமென்ப தறிந்ததை யெறிகோ லொட்டான். (37)

தொட்டகோல் பகலுண் டாக்கிச் சோதிகான் றமரிற் போந்து
விட்டுணர் விறந்த வீர வாகுவே முதலோ ராரு
நிட்டைநின் றெழுந்தா ரென்ன நினைவுரீஇ நிலைக்க நேர்ந்து
துட்டனைத் தாக்கி யன்னோன் றனையைத் துகளிற் செய்து. (38)

களம்வெறுங் களம தாக்கிக் கார்முகந் துணித்துத் தூணி
வளம்பெறுஞ் சரங்க ளெல்லாம் வாரியுண் டிரத்த மட்டிப்
பிளந்திவர் சேமத்தேரைப் பேதையா யுதமிலாம
அளவலி வெய்த வார்த்தே யுற்றதெம் மையன் செங்கை. (39)

வேறு

ஆங்க ணின்றெழும் வீரவா குப்பெய ரமலன்
பாங்கி ருந்தவர் சூழ்வரப் பன்னிரு புயத்தோன்
றேங்கு சீரடி நினைந்தன னிருந்தனன் றேறான்
றீங்கி ழைத்தவவ் வஞ்சகன் செயலினிற் சினந்தே. (40)

சென்று நின்றவரை யொற்றராற் செருக்களத் தூற்ற
வென்றி யின்மைதன் மைந்தனை யுற்றதான் மெலிந்து
கன்று ளுருளங் கரிந்தனன் மற்றைநா ளறைகூய்
நின்று கந்தனை நேர்ந்தனன் றேரினி லிவர்ந்தே. (41)

ஆறு மாமுகத் தையனு மவனெதி ரகன்றே
ரேறி நின்றன னிருஞ்சமர் விளைத்தனன் சூர
னூறு பான்மண மருச்சிறு குழவியென் றுள்ளி
மாறி நின்றன னுள்வெயர்ப் புற்றனன் மறித்தும். (42)

வாயு விந்திரன் பிரமன்மா லிருடிகள் வாளி
தேயுருத்திரன் மற்றுள தெய்வதப் படைக
ளுயு மிழ்ந்தெழத் தொடுத்தன னவையெலாந் திரண்டு
போயி ருந்தன கந்தவேள் திருக்கரப் போதில். (43)

படையே லாமிழந் தொருவனுந் தகுவனைப் பார்த்தென்
னடைய நின்றனை யாதுநீ யுன்னினை யறைதி
விடைய ளிக்குது மின்றுபோய் வருதியோ விண்ணோ
ருடைய காப்பினை விடுதியோ வென்றனன் ஞெருவன். (44)

மோன மாயினன் போர்செயான் புரந்தரான் முற்று
மான மீக்கொளத் தானவன் பறந்தலை மறைந்தா
னுன வச்சம ராடலாப் புரிந்துபா சறைக்கண்
ஞான நாயகன் றமரொடு நடந்தன னிருந்தான். (45)

மாயை யால்வரு வென்றியின் வகையினைக் குறிக்கு
மேய கற்பினுல் வீரவா காதியர் மெலிந்து
வீய வாட்டுதே மென்றுமூன் முந்தினம் வெய்ய
னுய சூர்மகன் முனைகட் கின்னண மறைவான். (46)

வேக வாசுகம் விடுங்கர தலத்தொரு வீர
வாகு போர்த்திறம் போக்குமா படையணி வகுமி
னேகு மின்கள மெனவணி யாயின ரெவரு
நாக நாடரு மச்சுறத் தேர்மிசை நடந்தான். (47)

வேறு

இத்திறம திந்தகும ரேசனிளை யோரிற்
கைத்திறமி குத்தவிறல் வாகுவைக்க ணித்து
குத்திர னடுத்தனிக மோடுகுறு குற்று
னத்தகுவ னெஞ்சவம ராடிவரு கென்றான். (48)

என்றவரு ணெஞ்சமுனி யீராறு புயத்தோன்
றன்றிருவ டிக்கமல மேத்திநனி தாழா
குன்றெனு மியந்திர மிவர்ந்திளையர் கூட
வன்றிரல்கி ருத்திமவ கைத்தலைவர் சூழ. (49)

செம்புலன டுத்தனரொள் வாள்சுரிகை செல்லு
மம்புவில டுக்கன்மர மாதிய வெடுத்தார்
வம்பனணி தானையர்ம தித்திலர் கலந்தார்
வெம்புபகை மேல்கொடுவி ளைத்தனர்க டும்போர். (50)

சண்டனிக லன்பலச ரங்கொடுசு மர்க்கண்
மண்டுகண நாதரை வதைத்தளவில் வாளி
கொண்டுவரு மெண்மரொடு கூடியம ராடி
விண்டிரிய வெய்யகணை விட்டுறுமி னான்றல். (51)

அக்கணம திந்தசய வாகுவண லண்மி
முக்கணனெ னச்சமர் முனிந்தசுர னாகம்
புக்குபுதை யப்பொருத போர்தவன னேக
வுக்கிர நெடுங்கணை விடுத்தனனு றுத்தான். (52)

பொன்னகர ழித்தவன்வி டுத்தபல புங்கம்
முன்னவன்வி டுத்திடுமு ரண்கணை யறுக்க
வின்னவகை பன்முறையி ளைத்தலை யெதிர்ந்தோன்.
பன்னகிக ரறுபசுப திக்கணை விடுத்தான். (53)

மற்றதுக னன்றுவர வானவனு முன்னர்
பெற்றதொரு பாசுபத மால்கணையைப் பேணி
யெற்றிவர வென்னவிட விருகணையு மூடி
முற்றுல கழிப்பதென மூண்டமர்பு ரிந்த. (54)

வேறு

உருவம் பலகொண் டிமை யோரு முள்ளம் வெருவ வல்விரண்டு
மிருளு மொளியும் பரப்பியவ ணிருந்தா ரிரியப் போ ராற்றிக்
கருவு மசுரன் விட்டதவன் கரத்தை யடைய மற்றையது
பொருத வசுரன் படைசுவற்றிப் புக்க துரவோன் றிருக்கரத்தே. (55)

மானம் வன்மை வரமெல்லா மாய்ந்த திவர்முன் னினுமிருக்கி
லியானும் படுவ னெனவுள்ளத் தெண்ணிப் பானு கோபன்கார்
வானின் மறைந்தா னவனியற்று மாயை யென்ன விருள்படரத்
தானு மறைந்தான் கதிரோனுந் தரியான் போன்று கடல்புக்கே (56)

கொற்றங் கொண்டார் பாசறைக்கண் குறுகு மளவில் வானின்மறைந்
திற்றைப் போருந் தோல்வியெனி லிருந்தென் னுலகி லெனவஞ்சன்
கற்ற மாயைப் படைவிடலுங் கலங்கா வீரர் பூதருயி
ரற்றார் போல மயக்கியெடுத் தப்பாற் கடலி னுய்த்ததுவே. (57)

கலங்கு மமரர் முறையிடு கண்டான் முற்று முணர்செவ்வே
டிலங்கு சத்தி வேலேவச் சோதி கான்று கடனண்ணி
மலங்க மாயை யொழித்தயில் மயலிற் றீர்ந்தார் வீரருளா
ரிலங்கு மயிலைத் தொழுதேத்தி யெழுந்து வானிற் களமுற்றார். (58)

வெல்லாக் கொடிய வெற்பகைவன் மீண்டான் மாயம் புரிந்தவனைக்
கொல்லா தையன் றிருவடியைக் குருகேன் மெய்ம்மை யிதுவென்று
னல்லான் வீர வாகற்றே நாமு மென்றார் தம்பியரு
மெல்லா ருஞ்சென் றிகலோன்ற னகரை யழிப்ப மெழுகென்றான் (59)

நன்றென் றாருஞ் சினமூள நடந்தா ரந்த நகரணுகிக்
கொன்று றெதிர்ந்த தானவரைக் குவித்தார் குறைந்த பிணமலையைப்
பின்று வீர வாகுமுனம் பெம்மா னெரித்த புரமென்னக்
குன்று தெரித்தா னந்நகரைக் கொடிய தீக்காற் கணையாலே. (60)

உய்ந்தோர் தீயா னகர்வெந்த துரைப்பச் சூரன் வேறண்டந்
தந்த மயனாற் புதுப்பித்துத் தன்கா தலனு மிரணியனை
முந்தச் சமர முகமுய்ப்ப மொய்ம்பற் குடைந்து கடல்புக்கான்
வெந்த வுளத்தான் போர்க்கெழுவான் வெகுண்டான் றகுவர் கோமானே.(61,

உற்று னரனே போர்க்கெனினு முடற்றி யெம்மு னிரிவனுயிர்
பெற்றார் யாவ ரெமையெதிர்ந்தார் பெயர்வோ மியாங்க ளெனத்தொழுது
முற்றாப் படையோ டங்கிமுகன் மூவா யிரவ ரறக்கோப
னெற்று வெதிர்ந்தார் மொய்ம்பனுட னியமன் சுவைபூ ணனுரே. (62)

வேறு

ஊன்றி யவ்வீர வூரை யழித்தபி
ளூன்ற மொய்ம்ப னகன்றனன் கட்கனல்
கான்று வெஞ்சமர் காண்டுமென் றக்களந்
தோன்றினன் றுணை வீரர்கள் சூழவே. (63)

தீண்டு கோளெனுந் தீயவன் வீரனன்
மாண்டு போவது வாய்மையின் றதலாற்
காண்டு மென்னக் களித்தன னுயுளந்
தூண்டு மேழ்பரிச் சூரியன் றோன்றினன். (64)

திருவெ லாமுறு செம்பொனின் கோயிலின்
மருவித் தாழ்ந்துதன் றந்தையை மன்னமி
னருமை மக்களு மாருயிர் நீத்தனர்
பெருமை யுற்றவர் பேர்ந்தன ரெண்ணிலார் (65)

சேந்தன் றன்னைச் சிறுவனென் றெண்ணலை
வாய்ந்த வீரரில் வாகுவி னாலமர்
போந்த நாளுறு பாடும் புகலொணா
தோய்ந்த மாயையு மங்குகன் வேலினால் (66)

அசைவி லாவிறல் கொள்ளுமெ னாற்றலுந்
திசையின் முற்றும்ப ரந்துள சீர்த்தியும்
வசையி லாழ்ந்தது மாவயி லோற்பகை
யிசைத வன்றல வென்றன னெற்பகை. (67)

மாப்ப தத்திமை யோரை வருத்திய
காப்பு விட்டறங் கைக்கொள லேகட
னோர்ப்பு ரைத்தன னெல்குவ தன்றிது
நீப்ப தென்மொழி நேரல வென்றனன். (68)

தனைய னின்னனஞ் சாற்றலுந் தந்தையாம்
வினையி னான்வெகுண் டேயம ராடநீ
முனையி லாரின்மொ ழிந்தனை யாலினி
புனைவ னால்வயம் போர்க்கெழுந் தென்றனன். (69)

என்ற காலையி றைஞ்சினன் சென்றியான்
வென்றி கொண்டிவண் மீள்வனெ னாவுரைத்
தோன்று தானையு டன்வரப் போர்க்களந்
துன்று மாறுபு குந்தனன் றோன்றினான் (70)

தானை யுற்றவர் தானவர் தாழுற
தான வாசுக மாதிய தூர்த்தனர்
மான வெல்லிப கைவனும் வல்விலிற்
சோனை மாரியிற் றூற்றினன் வெங்கணை (71)

தூற்று மாசுகந் துன்னிய பூதரைப்
பாற்றி யல்லற்ப டுத்திய காலையிற்
கூற்ற மென்னக்கொ தித்தரி யேற்றினிற்
சீற்ற மாயினன் சிங்கனென் பூதனே. (72)

மரமெ டுத்து மறித்தனன் மாமலை
கரமெ டுத்துக் கவண்கலில் விட்டனன்
சிரமு ருட்டிச் செகுத்தனன் றீயரைத்
தரும மற்றவன் றான்வெகுண் டானரோ. (73)

துன்னு பூதரைத் துன்புற வாட்டலு
முன்னந் தேர்கடாய் மொய்ந்தவி லக்கரும்
பன்னு மெண்மரும் பஞ்செனா வாசுர
ரின்ன லெய்தியி ரிந்திடத் தாக்கினர். (74)

பேர குஞ்சம ராற்றியி னைத்தனர்
வீரர் முன்னவன் கண்டலி லைந்துதன்
றேரு கைத்துச்செ ருக்கொடு நின்றவச்
சூரன் மாமகற் கின்னனஞ் சொல்லுவான், (75)

வேறு

மாயா வாளிகள் விட்டுமெ யக்கி மறைந்திட்ட
பேயா நீயே சூர்மக னாகிற் பெயர்கில்லாய்
வாயா றின்றுன் வஞ்சக மெல்லாம் வலியோடுந்
தேயா நிற்குங் கண்முன நின்று செருச்செய்யாய். (76)

வல்லா யாகின் மாற்றல னின்முன் வந்துற்றேன்
வில்லா லொல்லா தாகினி லத்தின் மிதித்தேகு
மல்லா லன்றி வாளம ரர்ட வருவாய்நிற்
சொல்லா தேகே னின்னையெ மண்ணற் குமரன்பால். (77)

என்ன விகழ்ந்தான் மாற்றம றிந்தா னிதுபோலுஞ்
சொன்ன வணஞ்செய் வீரரில் வீரன் றுணிபென்னே
மன்னவ னென்சொல் லோர்கில னன்பின் வாங்காமற்
கொன்னம ராடிச் சூர்மக னாவேன் கோதில்லேன். (78)

இவ்வண மெண்ணின னேந்தலை நோக்கின னினிநீசொல்
லவ்வண மாற்றுகி லாயெனி லாண்டகை நீயல்லாய்
கைவண மின்றே காண்குவ லென்னக் கனல்காலுஞ்
செவ்வண வம்பேழ் விட்டனன் வில்லிற் சினந்தன்றே. (79)

மற்று மனந்தம் வெம்கணை கார்முக வாயாகக்
கொற்றங் கொண்டெழு மற்றிவை யென்னக் குறித்துய்த்த
வற்ற மறிந்தா னண்ணலு நன்றென வங்கையில்விற்
பற்றின னொன்றலி செய்தனன் விண்டது பகிரண்டம். (80)

புட்டிலி ருந்தச ரம்பில நின்றெழு போகிப்போற்
றட்டற வின்றிதொ டுத்தன தீயவர் சார்சென்று
பட்டன வாகக் கைதலை யாக முகம்பாத
மட்டு மரிந்துபி ணக்குவை யெங்கு மலிந்தன்றால். (81)

செம்புன லாற்றிலெ ழுந்துக வந்தவி னந்துள்ள
வம்பனை றிந்தவ டிக்கணை யாற்கண நாதருளார்
கும்ப லினும்பலர் மாண்டன ராகக் குறிக்குங்கால்
வெம்பி மடிந்து வெறுங்கள மாயினர் வெந்தீயோர். (82)

ஈதறி போதி லினன்பகை யானவ னீதில்லான்
சோதரன் மீதினி லங்கி நெடும்புனல் சோர்வில்லா
மாதவ னயன் முதற்பல தெய்வத மாக்கணைகள்
போதர விட்டு செருக்குமு ளத்தினன் பொங்குற்றான். (83)

மற்றவை முந்தினை வந்தன்! வந்தன் வாவென்பான்
செற்றமி லாது குகன்பத மாமலர் சிந்தித்தான்
சுற்றிவ லம்புரி யாயினை வீரனை சூழ்ந்தனவா
னற்றவ தெய்வத மாப்படை யென்செயு நல்லோனை. (84)

வேறு.

சூர்மகன் வீர வாகென் றிருவருந் தொடர்ந்து செய்யும்
போர்தனின் மண்ணும் விண்ணும் புயல்களுங் கரிந்த நாக
ராரிவ ரென்ப தோரா ரலமர வளக்க ருள்ள
நீர்கொதித் தாற்ற லாது நிலையினிற் பெயர்ந்த தன்றே. (85)

இற்றிவ ரமரு டற்றுங் காலையி லீசன் மைந்தன்
மற்றவன் விற்றேர் யாவும் வடிக்கணை கொண்டி றுப்ப
வுற்றன னிலத்திற் றாவி யுறுமினன் புலியே தென்னப்
பற்றினன் வடிவா ளேந்திப் பாய்ந்தனன் வந்தான் மாதோ. (86)

வருதலு மிரத நீத்து வாகுநாந் தகங்கை யேந்திப்
பொருதன னிருவர் சுற்றுஞ் சாரியின் புதுமை கண்டோர்
கருதல னெனவுங் கந்த னிளையவ னெனவுங் காணார்
செருதனிற் சுழல்கா லேய்ப்பத் திரிந்துவாட் போர்செய் தாரால். (87)

சூடிலா னிளையோன் விஞ்சி யேயிலன் முடித கர்த்து
நீடுவாள் பற்றி யுற்ற நெடுங்கையுந் துணித்து வீழ்த்த
வீடில னுசி யென்றாழ் வெகுண்டவ னிடக்கை யவ்வா
ளோடக லாது வெம்பி யுறுத்தெழுந் துடற்றுங் காலை (88)

ஆண்டகை மற்றைக் கையு மறுத்தபின் குந்த வேலான்
மீண்டவன் றலையைத் தாக்கி வீழ்த்தினன் றமர்வி யப்ப
மூண்டெழு சினமு மாறி முழக்கினன் வெற்றிச் சங்க
மாண்டன னெனக்க ளிக்கும் வானவர் மலர்பெய் தார்த்தார். (89)

திருத்திம காத ரெண்மரி லக்கருங் கெழுமி யார்த்தா
ரருத்தியின் வீர வாகி னடிமல ரண்மிச் சூழ்ந்து
நிருத்தம தாடிச் சூளு நிறைந்தது நெடுநீர் வைப்பை
வருத்தின வசுரர் தீமை யற்றதிங் காலோ வென்றார். (90)

நம்பிகள் நடந்தோர் கந்த நாதனைப் பணிந்து போற்ற
வம்மினீர் பூத ரெண்ம ரிலக்கரொன் றழைத்து வாகுச்
செம்மலம் மணியிற் காந்து செய்யபா சறைக்க ணேகி
யெம்மையாள் முருகவேளை யேத்தினன் வணங்கி நின்றான் (91)

நின்றவன் றன்னைப் புல்லி நீளருட் கண்ணு னோக்கி
வென்றனை பகையை வேண்டும் வரமிவ ணுரைத்தி யென்னக்
குன்றெறிந் தெம்மைக் காத்த குமரநின் னடிக்கணன் பொன்
றென்றனக் கருளு கென்ன விறைவனுந் தந்தோமென்றான் (92)

ஈங்கிவ ணிருக்கப் போரி லிரவிதன் பகைவ னான
வீங்குதோண் மகன்றான் பட்ட விளைவறிந் துலக மெல்லாம்
வாங்கிவாய் பெய்தென் சீற்ற மாற்றுவ னெனவெ குண்டா
னோங்குமா யிரத்தெட் டண்ட மொருங்கர சாண்ட சூரன் (93)

வெம்பினன் வெயர்த்தான் சிங்க மீளிமா முகம் படைத்த
தம்பியை யழைத்தா னன்னோன் சார்ந்தனன் சமர்க்க ளத்தே
யெம்பிரான் முருக வேளோ டெதிர்ந்தனன் போர்வி ளைத்தான்
பம்பிய படையோ டாங்கண் பன்முடிக் குவட்டை யொத்தே, (94)

சித்தியல் பரம ஞானச் சேதன மலருள் வாசச்
சத்திவே லங்கை வாங்கித் தகுவனா ருயிரை யுண்டு
புத்தியைப் புறத்து லாவப் போக்குமற் றவன்றன் றானை
முற்றவும் வாரி வாரி முடித்திடென் றெடுத்து விட்டான் (95)

கஞ்சநான் முகனைக் குட்டுங் கையினின் றெழுந்த வைவேற்
செஞ்சுடர்ப் பொறிக ளண்டத் திகந்தமும் வெதும்ப வேகி
வஞ்சர்நெஞ் சழுங்கச் சென்னி யறுத்துமாண் புரள மாய்த்துத்
தஞ்சமென் சுரர்கள் வாழ்த்தத் தகுவனைக் கொன்ற தன்றே. (96)

மற்றவன் படையி னின்ற மள்ளரை மாதங் கத்தை
யுற்றபாய் மாவைத் தேரை யொன்றற முடித்துத் தாவிச்
சொற்றதி மறத்தார் வாழ்க்கை தோமுறு மாறு காணாக்
கற்றவ ரேத்து தேவன் கையில்வந் தமர்ந்த தன்றே. (97)

வேறு.

சொற்ற தூதரா வீதுணர் சூரபன் மாநன்
றிற்றைக் கென்றமர் முடித்தவவ் விளையவன் றன்னை
வெற்றி காண்குவ லென்றுபற் றூதரை விளித்தங்
குற்ற தானைக டம்மினென் றேவின னுறுத்தே. (98)

உத்த ரந்தரும் கன்னலே யோடின ருரைப்ப
வத்த மாயுத மேந்தின ராய பல்லண்டச்
சுத்த வீரர்கள் கணிதநூ லோதிய தொகையின்
வித்தை தேரொணார் மேவினர் சூரனும் விரைந்தே. (99)

எள்ளி டற்கரி தாகிவந் திருந்தவ ரெவருந்
துள்ளி நிற்றலுஞ் சூரனா யிரம்பரி தூண்டிக்
கொள்ளை யாம்படை கொண்டெழுந் தேரின னிரதம்
வள்ளன் மேவிய களத்தகஞ் சேர்ந்தனன் வந்தே. (100)

கற்ற மாயையாற் கணக்கிலா வுருக்கொடு பொருதான்
பிற்றை மாவுரு வாயினன் பிளந்தனன் வேலான்
மற்று மன்னவன் மஞ்ஞையுஞ் சேவலு மானான்
வெற்றி யங்கொடி யூர்தியாக் கொண்டனன் வேளோன். (101)

கொடியு மூர்தியு மாந்தவம் புரிந்தவன் புலிசேர்
கொடியைத் தம்பியாம் வேனம்பிக் களித்தனன் குமரன்
வடிகொள் வேலவ ரெண்மரு மிலக்கரு மற்று
மடியில் பூதரும் பெறப்பல வரிசைகள் வழங்கி (102)

வேறு.

நம்பினோர் கதிக்கேக நவெங்குபவக் கடலுக்கோ
ரம்பிபோன் றவன்வீர வாகுவலர் முக நோக்கி
யெம்பிநீ சிறைச்சாலை யிருந்தயரும் வானோரை
நம்முன்னர் கொணர்தியென நடந்தனனு னகுந்தாரான் (103)
பொன்னுலக வெறுக்கையறப் போக்குமசு ரேசன்மற
மன்றுமகேந் திரமிருக்கும் வானவர்தம் வதனமெலா
மின்னவினு னெடுங்கால மிமங்காணுங் கமலமெனத்
துன்னுமவர் தமைநோக்கிச் சொல்வனறு முகற்கிளையோன். (104)
தகுவரெனு மிருட்படலஞ் சாமியலர்க் கையேந்து
நகுவேலாங் கதிரவனு னசுக்குண்டு மாய்ந்தன்றுன்
மிகுதுன்புற் றிருந்தழுங்கு விண்ணவர்காள் சேய்திருமுன்
புகுமினெனத் தளையவிழ்த்தான் போந்தனராற் பாசறைக்கே. (105)
வந்தவரி லிமையவர்கோன் மகன்முதல தேவரெலாஞ்
செந்தில்வரு மையனடிச் செம்மலரை வணங்கியெழக்
கந்தனவர்க் கருளீந்து கடற்கிறையை விளித்தசுரன்
மூந்தகத்தை விழுங்கவென முடித்தனனவ் வணம்வருணன் (106)
பாசறையை யகன்றுதிருச் செந்திலெனும் பதியணுக
வீசவெழுந் தருளவென வெம்பெருமான் மயிலூர்ந்தான்
மாசுரரும் வீரர்களு மவ்வவர்வா கனமேறிப்
பேசுமகேந் திரபுரியைப் பிரிந்துதிருச் செந்திலுற்றார். (107)
அரியணையி லறுமுகவேள் வீற்றிருப்ப வாகமமாந்
துரியநிலை யருள்குமர தந்திரத்தாற் சுரரெவரும்
புரியவரும் பூசனையைப் போதவுப கரணமெலாந்
தெரியவது கொடுபூசை செய்துதொழு தேத்தினரால். (108)

வேறு.

மின்பயி னெடிய சத்தி வேலவன் செந்திறன்னின்
மன்னிய காலை வானோர் கோமகன் வணங்கி யைய
நின்னுடைப் பரங்குன் றத்தி னியெழுந் தருளல் வேண்டு
மென்னலு மயிலூர்ந் தைய னெழுந்தனன் றுணைவ ரோடும். (109)

மற்றும்விண் ணவர் கோனுற்ற மயன்றனால் வானந் தாவு
முற்றிய கோயின் மாட முழுமணி யிருக்கை யாகி
தெற்றெனக் குயிற்ற வாங்கண் சேர்ந்தரி யணையின் மேவி
வெற்றிவேல் வேள மர்ந்தான் வீரர்விண் ணவர்கள் சூழ. (110)

துன்றுமவ் வவையில் வேள்விக் கிறையவன் றெழுந்து நின்று
நின்றசீர் வெற்றி வேலோய் நேர்ந்தவென் மகளை யேற்று
மன்றல்செய் தருடி யென்ன மற்றவ னேற்ற வாற்று
னன்றதே யாக வென்று னுதனுண் மகிழ்ந்தா ராரும். (111)

பேற்றினு ளான்ற பேறு பெற்றன மென்னப் பொங்கி
கோற்றொடி வேய்த்தோ டெய்வ குஞ்சரி மணத்தி னோலை
நாற்றிசை நாட்டின் யாண்டு நல்கென மகவா னேவக்
காற்றினுங் கடிய தூதர் சென்றறைந் தளித்திட் டாரால். (112)

பாருள மன்னர் தம்மிற் பாற்றினஞ் சுழலும் வைவேற்
சீருள வணிகத் தோடுந் திரன் முசு முகத்தோ னாதி
யேருள மன்ன ரீசன் மகன்றிரு மன்றல் காணு
நீருள ராகி வந்து நிறைந்தனர் கண்கள் பெற்றார் (113)

பன்னுகாய்க் கதலி தெங்கு பந்தரிற் கமுக நாட்டி
துன்னிய முத்த மாலை தூக்கிமற் றதனி னுப்பண்
பொன்னியல் மணிகு யிற்றும் பொருவிலா விருக்கை யிட்டு
மன்னிய பொருள்க ளாய்ந்து மணவரை யணிந்திட் டாரால். (114)

நெய்த்திருண் டணிந்தொ ளிர்ந்து நீண்டதைம் பால தாகக்
கைத்தலம் புனைந்தி லாத கவின்பெறு மளக முண்கண்
பைத்தபாம் பல்குற் குன்றப் பணைமுலை யரம்பை மாதர்
சத்தமா மாதர் தெய்வத் தையல ரெவருஞ் சூழ்ந்தார். (115)

மணிநறுங் குடத்து நீரான் மஞ்சன மாட்டி வெண்பட்
டணியுடை யுடுத்து நற்பா லாந்தலைக் கோலஞ் செய்து
திணிசுடர் மணிப்பூ ணெல்லாந் திகழமற் றுறுப்பிற் சேர்த்தி
பணியழ குறுமா தெய்வ யானையைப் பரவி னாரே. (116)

வனப்புளோர்க் குவமை கூறு மணாளனா முருக வேளு
மினன்றனக் கொளிசெய் தாப்போ லெரிமணிக் கலன ணிந்து
மனனுற வானோர் வாழ்த்த மண்ணுளோர் போற்றி சைப்பப்
புனைமண வரையில் வீர வாகுகை கொடுப்பப் புக்கான். (117)

அன்னமோ மயிலோ வென்ன வையுற வனிச்சப் போதுந்
தன்னமு மிதிக்கத் தாங்காத் தாண்மலர் பெயர்ப்ப மாதர்
பன்னகந்துயிலு மாற்கும் பாகசா தனன்யா னைக்கு
மன்னரு மகளைச் செவ்வேண் மருங்கினி லமரச் செய்தார். (118)

மாசறு பனிமால் வெற்பின் மங்கைத னிடப்பான் மேவ
வீசனற் கணங்கள் சூழ வெருதின்மே லுற்றான் மன்றல்
வீசுவண் டுளவி னானும் வேதனு மருங்கே போத
வாசவன் முதலோ ரங்கை கூப்பினர் வணங்கி நின்றார். (119)

மூவிரு முகத்து வள்ளன் முருகனு மிருக்கை நின்றுந்
தாவிலாத் தந்தை தாயர் தம்மடி யெழுந்தி றைஞ்ச
வாவியொன் றென்ன வாரி யங்கையா லெடுத்துப் புல்லி
மாவிய லுச்சி மோந்து வாழ்த்தினர் மகிழ்ந்தா ரன்றே. (120)

அங்கணோர் பொற்பீ டத்தி லம்மையு மப்பன் றானுந்
தங்கின ரிருந்தார் தெய்வ யானையைச் சரவ ணற்கு
மங்குலூர் தியுமுன் பெற்ற மரபினாற் செங்கண் மாலுந்
தங்கணா யகிய ரோடுந் தந்தனர் நீரோ டன்றே. (121)

மதுவழி மலரோ னாங்கே வாழ்கென வாழ்த்தி நூலின்
விதிமுறை பரம னேவன் மேற்கொடு தீமுன் னாகப்
புதுமலர் மாலை மாற்றிப் பொறிமயி லோன்றன் கையாற்
சதிகளந் தரிப்பித் தான்பொன் னாண்டனைச் சங்க மார்ப்ப. (122)

அம்மியை மிதிப்பித் தாசி லருந்ததி காட்டித் தீயாங்
கைம்மலை யுரியோற் சுற்றிக் கடிமண முடிப்பத் தேவர்
செம்மலர் மாரி தூர்த்துத் திருவமு தருந்திச் சென்றா
ரம்மையோ டப்பன் றானு மடைந்தனர் கைலைக் குன்றம். (123)

சிற்றினங் கழியச் செவ்வே டிருப்பரங் குன்ற நீத்து
முற்றிழையோடு தெய்வ முதுநக ரடைந்து சீரிற்
பெற்றியை நோக்கித் தேவ தச்சனாற் பிறங்க வாற்றி
நற்றினங் கண்டு தேவ நாதனை மகுடஞ் சூட்டி. (124)

அந்தரத் தியங்க ளார்ப்ப வானமே னகர்சூழ் வித்துச்
செந்திரு வோங்க வாழ்த்திச சேவலங் கொடிக்கை யேந்திச்
சுந்தரத் தோகை யேறித் துணைவர்பா ரிடருஞ் சூழக்
கந்தவெற் பணுகி யாங்க ணிருந்தனன் கார்த்தி கேயன். (125)

பானுகோபனை வீட்டிய படலம் முற்றிற்று.

ஆக படலம் 13-க்குச் செய்யுள் 445

தேவகாண்டம் முற்றிற்று.

பூட்டிய தேரொடும் பொலிந்த பானுவை
வீட்டிய தொட்டிலி னிறுக்கு மைந்தனை
மூட்டிய சமரிடை முடித்து மாசறத்
தீட்டிய வீரர்கைச் சிறந்த குந்தமே. ஈட்டியெழுபது

வீரவாகு தேவர் பானுகோபனை வீட்டியபடலம்.

இளவலாகிய வீரவாகு இனிதுகூறிய உறுதிமொழிகளைக் கொள்ளாது, குறையிலாத் தேவரைச் சிறைவிடேனென மறுத்த சூரபதுமனைச் செருக்கறப் பொருதழிப்பான் திருவுளங்கருதிய முருகவேள் இட்ட கட்டளையின் வண்ணம், இந்திரன் முதலிய தேவர்களும் வீரவாகாதிய வீரர்களும் தங்கள் தங்கள் வாகனத்தூர்ந்து, நால்வகை பூதப்படைகள் புடைசூழ, பேரிகை சங்கமாதிய பதினெண் வாத்திய முழங்கப் புறப்பட்டார்கள் வீரவாகுதேவர் முன்னணியிலும் இலக்கத்தெண்மர் நடுவணியிலும் வாயுவாற் செலுத்தும் தெய்வத்தேரில் முருகப்பெருமான் பின்னணியிலுமாக ஆகாயவழியிற் சென்று மகேந்திரபுரியை அடைந்து, ஆங்கு அக்கணமே தெய்வதச்சனு லமைத்த பொன்னுலாகிய பாடி வீட்டினில் அமர்ந்தனர்.

குகப்பெருமான், நகரை முற்றுகையிட்ட செய்தியை நாரதமுனிவனுல் உணர்ந்த சூரபதுமன் பெருஞ்சினங்கொண்டு அருகிலிருந்த பானுகோபனுஞ் சூனுவை நோக்கி, அறுமுகச்சிறுவனைப் பொருதொழித்தோட்டி அவனைத் துணைபற்றி வந்த இந்திரனைப்பற்றிக் கொணர்க வெனப் பணித்தான். உடனே பானுகோபன், போர்க்கோலங்கொண்டு தேரிலேறிச் சண்டனுஞ் சண்டஞ்சுமாறு பூதர்கள் எங்கே? எங்கே? என்று நால்வகை அசுர சேனைகள் புடைசூழப் போர்ப்பறைமுழங்க ஆரவாரித்து அமர்க்களத்துற் ருன். அஃதுணர்ந்த நஞ்செவ்வேள், தம்பியரிற்றலைவனும் வீரவாகுவை விளித்து, சோதரரோடும் பூதர்களோடும் சென்று படைகளடங்க பானுகோ பனைப் பொருதழித்து மீள்கவென வாழ்த்தினுன். வீரவாகுதேவன், பொரு வடிவேலன் திருவடி வணங்கி அங்ஙனம் போர்முகத்தணுகினுன்.

பாவமும் புண்ணியமும் பொருவதுபோல் இருபடைகளும் கலந்து போர் செய்தன. அசுரர்கள் பூதர்கள்மீது பல்வகைப்படைகளை வீசி ஆரவாரித்தார்கள். பூதர்களும் மலைகளையும் மரங்களையும் பறித்தெறிந்து உரப்பினர். இருதிறச்சேனைகளிலும் பலர் மாண்டனர். பிணமலைகளின் மீதிருந்து பேய்கள் பாடின. கவந்தங்கள் கூத்தாடின சிங்கனென்னும் பூதத்தலைவன், அசுரர்கள் கெட்டிரிய ஓர் மலையைப் பறித்தெறிந்து அநல லென்னும் அசுரனை மாய்த்து சண்டனென்னும் அசுரனேடு வாட்போர் புரிந்து மூர்ச்சித்தான். நீலனென்னும் பூதன் ஓர்கணையால் அச்சண்டனை சண்டனூர்க்கனுப்பி அசுரரிரியப் பொருதனன். அவற்றைக் கண்ட பானு கோபன், கதுமெனத் தேர்தூண்டி வில்வளைத்து பல்வகை அம்பு மாரி பெய்தான். அதனுல் பூதர்கள் துஞ்சினுர்கள். எஞ்சின பூதர்கள் அஞ்சி யோடினுர்கள், அப்போழ்து வீரகோளாந்தகன், வீரதீரன், வீரதேவன், வீரமாகேந்திரனென்னும் வீரர்கள் நால்வரும் பானுகோபன் முன்சென்று அவன் விடுத்தபடைகளை நடுவதுபாதியில் அற்று விழுமாறு பொருதி

அவனது சேனைகளை மிக மிக வாட்டி அன்னோன் செய்த பேரமராற் சோர் வடைந்தனர். வீராந்தகன், வீரமார்த்தாண்டனாதிய நால்வரும் அவனை அணுகிப்போர் செய்து சேனைகளை மாய்த்து அக்கொடியோனுடைய கொடி, வில், தேர் முதலியவற்றையும் அழித்து ஈற்றில் அவனுக்காற்றாது வாட்ட முற்றனர். அவ்வமயம் வீரவாகுதேவன், தேரூர்ந்து சூரன்மகன் முன் சார்ந்து பற்பல அறநீதிகளைப் புகட்டியும் பானுகோபன், அடாத மறு மொழிகள் புகன்று பருவகால மழையென உருவக்கணை பல சொரிந்தான். வீரனும் தன் வில்லினின்றும் பற்பல கணைகளை விடுத்து அவைகளை நொடிப்போதில் பொடியாக்கிப் பின்னும் பானுகோபன் விடுத்த பல தெய்வப்படைகளை அவ்வப்படைகளால் மாற்றினான். கண்ட கைதவன் அஞ்சி காலகாலன் தந்த சூலப்படையை யேவினான். யாவராலுந்தடுக் கொணாத சூலப்படை வருவதைக்கண்ட வீரன் இருகரங்குவித்துப்பணிந்து நிற்கவே சூலப்படை வேகந்தணிந்து குளிர்ந்து வீரவாகுதேவன் கையில் வந்தமர்ந்தது.

பின்னர் வஞ்சகன் விடுத்த மோகக்கணையால் வீரவாகு தேவராதியர் மயங்கிச்செயலொழிந்தமை கண்ட முற்றுணர் வினனாகிய முருகன் ஞானக் கணையை விடுத்தான். அஃதாதித்தனிற்றுலங்கி மோகனக்கணையாலாய இருளையும் மருளையும் ஒழித்து வீரவாகாதியர்க்குத் தெருளையுண்டாக்கி அசுரகணங்களை மாய்த்து நாயகன் கண்ணுற்றது. பானுகோபன் அஞ்சி மறைந்தனன்.

மகன் தோல்வி கண்ட சூரபதுமன் மறுநாள் தானே அறுமுகனோடு பொருது பல்லாயிரவெள்ளப்படைகளுமொழிந்து நலிந்து வெறுங்கையோடு தலை கவிழ்ந்து நின்று விண்ணோர் சிறையை விடுத்தியோ? நாளை வந்து போர்தொடுத்தியோவென் விசாகன் கேட்ட கேள்விக்கு விடையிறுக்காது வெட்கியொளித்தான்.

மூன்றுநாள் வஞ்சகனாகிய பானுகோபன் பலதிறப் பெரும்படைகளோடு சமர்க்களம் புகுந்தான். வீரவாகாதியர் எதிர்த்து கொடுஞ்சமர் புரிந்து அசுர கணங்களை வாட்டி பானுகோபனோடுபொருது வீரர் எண்மர் வருந்துந்தருவாயில் வீரவாகுதேவன் வெய்ய அம்புகளைத்தூவி அக்கைதவ னுடலை சல்லடைக்கண்கள் போற்றுளைத்திட்டான். கடுவினைய கொடும்பாவி யாகிய பானுகோபன் பாசுபதக்கணையை வீசினன். வீரனும் ஈசன்மகன் முருகேசன் கொடுத்த பாசுபதக்கணையை முறையிற் றெழுது தொடுத் தனன். அவ்வொருதிறத்த இருபடைகளும் அகிலம் அழியுமெனக்கருதியமரர் அஞ்ச தம்மிற் பொருது கைதவன் விட்டகணை மீண்டு அவன் கையிலுற்றது. வீரன் விட்டகணை அசுரரை அற ஒழித்து அனகன்றிருத்தம்பியினங்கை யுற்றது. கண்ட வஞ்சகன் அஞ்சி மஞ்சில் மறைந்தனன். அன்னோன் இனிச்

செய்யப் போகும் மாயத்தைக் காண மனந்தாளாதவன் போல் கதிரவன் கடலில் மறைந்தான்.

வென்றிகொடு திரும்பிய வீராதியர் மேல் மறம்புணர்ந்த நெஞ்சினன் மறைந்து மாயப்படையை யேவினன். அது வீராதியரை மயங்கச் செய்து; ஒரு சேரப் பெரும் புறக் கடலிலிட்டுக் காத்தது. அஃதுணர்ந்த அறுமுகன், அமரர்க்கு அஞ்சன் மினென்றருளி சத்திவேலை ஏவினன். சத்திவேல் எத்திசையிலும் ஒளிபரப்பிச் சென்று மாயப்படை மாயப் பொடிபடுத்தி வீரரை மீட்டது. வீராதியர் விண் வழியே களநண்ணினர். அவ்வமயம் வீரவாகு தேவர், இளைஞரைநோக்கி முறையால் வெல்ல முடியாது மறைந்தமர் புரியும் வஞ்சகனைக் கொல்லாது அறுமுகன் திருமுன் குருகேன் என்றான். அவரும் அன்னதே தகவென்றனர். உடனே அவ்விராவில் யாவரும் மகேந்திரபுரியை அண்மித் தீமூட்டி எதிர்த்தோரை மாட்டினர். சூரபதுமன், அழிந்த நகரை மயனால் புதுப்பித்து தன் மகன் இரணிய னென்பவனைப் போருக் குய்த்தான். அவன் வீரவாகோடு பொருது தோற்றுக் கடல் புகுந் தொளித்தான். அது கேட்டு யானே போர்க்குப் புகுவலென் றெழுந்த சூரபதுமனை விலக்கி அங்கிமுகன், மூவாயிரவர், தருமகோபன் முதலியோர் வீராவேசத்தோடு தனித்தனியுற்று வீரவாகுவோ டெதிர்த்து விண்ணுலகைக் கைக்கொண்டனர். பின்னர் வீரர்கள் பானுகோபன் வரவை எதிர்பார்த்திருக்கையில் தன் பகைவன் இன்று மாள்வதைக் காணிய வந்தவன் போல் சூரியன் உதயமானன்.

அந்நாள் பானுகோபன், தந்தையைப்பணிந்து எந்தையே! அறுமுகனைச் சிறுவனென்றும், அன்னேன் தம்பியரை எளிய ரென்றும் எண்ணல் வீரவா கென்பவனால் ஆரமரில் யான் பட்டபாடு யார் பட்டார். வேறுய் வண்ணமின்று; விண்ணவர் சிறைவிடுத்து உறவாய் வாழ்தலே தகவென மிகவெடுத்தோத, நீவீரனல்லையோ? போருக்கிளைத்தனை போலுமெனச் சூரபதுமன் சினந்திகழ்ந்தமைக்காற்றாது உயிரினுமுயரிய மானமீர்ப்பத் தாதை தாள் வணங்கித் தடங் கடலேழனைய தானையொடு தேரேறிப் போர்க்களமுற்றுப் பெரிது பொருது பூதப்படைகளைத் தாழியிற் றயிரெனக் கலக்கிச் சிங்கனென்னும் பூதனையும் வாட்டிப்பின் வந்த இலக்கத் தெண்மரொடும் நெடும்போராற்றி அன்னோர் வலியையும் மாற்றி வீரவாகு தேவரை அன்மினன். அன்னேன் தேர்கடாவி முன் நிறுத்தி வஞ்சக! இன் றுன்னுயிரைக் கவர்வல்; நீவீரனயிற் போரிலொளித்தோடாய் என நவின்று பற்பலவாளி போக்கினன். கதிர்ப் பகைவனும் கனன்று மழையெனப்பகழி தூவினன். இருவோரும் பொருத அமரின் திறம் அளவிடற் பாலதன்று. அசுரப்படைகள் அறமாண்டன. பிணமலையினின்று இரத்த வெள்ளம் தேங்கின. கைதவன் திகைத்து பல்பெருந்தெய்வ வாளிகளை ஏவினன். அவைகள் வீரவாகுதேவனை வலம் வந்து போந்தன. வீரவாகு

விடுத்த கணைகளால் அவன் தேர் பொடிபட்டது. இருவரும் குலாலன் சக்கரமெனச் சுழன்று சமர்பொருதார். வஞ்சகன் வலக்கையற்றபின் இடக்கையில் வாள் கொடு பொருதான். வீரவாகுதேவன், அன்னோன் இடக்கையையும் வீழ்த்திக் குந்தத்தால் அவன் தலையைத் தரையிற் றள்ளிச் சினந்தணிந்து வெற்றிச் சங்க முழக்கினான். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். ஒன்னலர் தீமை ஒழிந்ததென யாவரும் ஆரவாரித்தார்கள். கதிர்ப்பகைக்காலனும் வீரவாகுதேவன் தம்பியரோடும், பூதரோடும் அறுமுகன் திருமுன் குறுகி அடிபணிந்தார். திருமுகம் நோக்கிப் பணிவுடன் நின்ற இளவலை முருகன் கடைக்கணித்து வேண்டும் வரம் யாதென இளவல் அண்ணலே! நின் திருவடியின்கண் என்று மாறாத அன்பொன்றே வேண்டுமென அன்னதே யாகுகென முருகன் திருவருள் செய்தனன்.

மகன் மாண்டதறிந்து வெம்பி வெயர்த்த சூரபதுமன் தம்பியாகிய சிங்கமுகாசுரனை ஏவினான். அன்னோன் தன் அனிகத்தோடு முருகவேள் விடுத்த பொருவறு சத்திவேற்கிரையாய்க் களத்தவிந்தனன். சூரபதுமன் என் தமர் மாள நின்றமர் செய்த குமரனை யின்னே சமர் பொருதழிப்பேன் என்று கனன்று கடல் மணல் சிறிதெனுங்கணக்குடை அடல்கெழுமசுரர் ஒருங்கு திரண்டு சூழத்தேரேறி அமர்க்களம்புக்குச் சாமியோடெதிர்த்து பல இடங்களிற்றிரிந்தும் பற்பல மாயங்களைச் செய்தும் கருதற்கரிய பெருஞ்சமர் புரிந்து சேனைமுற்றொழிந்து மானமுற்றொழிந்து வானையளாவிய மாமரமாகினான். சண்முகன் ஏவிய சத்திவேலால் அம்மரம் இருகூறாய்ப் பிளந்தது. அவைகளில் ஒரு கூறு மயிலும் மறுகூறு சேவலுமாகிப் போரமுயன்றன. முருகப்பெருமான் மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டனன் கண்டுவியந்த வானவர் மலர்மழை பொழிந்து வாழ்த்தினார்கள்.

முருகவேள், அச்சூரபதுமனது புலிக்கொடியை வீரவாகு தேவனுக்களித்து ஏனையோர்க்கு வரிசைபல வழங்கி வீரவாகு தேவரால் சிறைபுக்க தேவர்களை மீட்டு, வணங்கிய தேவரையும் யாவரையும் வாழ்த்தி மகேந்திர புரியைக் கடல்கொள்ளக் கொடுத்து தேவர்களின் வேண்டுகோட்கிணங்கித் தம்பியரோடும் பூதப்படைகளோடும் திருச்செந்தூர் மேவி தேவர்கள் பூசிக்க அரியணையிலமர்ந்திருந்தனன்.

அங்குச்சின்னாளமர்ந்து அமரர் மன்னவன் வேண்டலின் அறுமுகச் செவ்வேள்; பாங்குறக்குழுமிய வீரரோடும் பூதரோடும் பரங்குன்றமேவி அன்னோன் வழிபட வண்ணப்பொற் கோவில் மன்னியமர்ந்துழி, அவ்வமரர்கோமகன் குமரதேவனைப்போற்றி அண்ணலே அடியனேன் அருந்தவப் பேற்றாலெய்திய மருந்தன்ன தெய்வகுஞ்சரியை ஏற்று மணந்தருள்கென அங்ஙனம் இசைந்து மின்னியன் மணியொளிர் பொன்னியன் மணப்பந்தரில் விண்ணவர் மண்ணவர் பண்ணவர் யாவரும் வாழ்க்கைத்துணைவி

யரொடு வந்த குழும, மலைமகளும் ஈசனும் மகிழ்ந்து மேவ நிறை பொற் குடமாகிய மங்கலம் பொலிய மணிவிளக்காகிய அணிசிறக்கச் சங்கமாகிய பல்லிய முழங்க எத்துமோதையும் வாழ்த்துமோதையும் இருங்கடலின் மலிய வானவர் மலர்பொழிய வளர்த்த முறையினால் சசியொடு வானேச னும் முன்னர் பெற்ற முறையால் மலர்மடந்தை மண்மடந்தையரோடு திருமாலும் மகிழ்ந்தனராய் நீரொடுவழங்க தெய்வகுஞ்சரி நாயகியை அன்பி னேற்று வாணிகாதலன் மன்றலுக்காவன விதிமுறையியற்ற மாலை மாற்றி மங்கலஞ்சூட்டி தீவலம் போந்து அம்மி மிதிப்பித் தருந்ததிகாட்டி தெய்வ யானையை மணந்து நனிமகிழ் சிறந்தனன். பின்னர் கந்தவேள் காதலி யோடு பொன்னகரடைந்து அந்நகரைப் பழைய பெற்றியிற் றழைவுறப் புதுக்கி வானநாதனை மணிமுடிசூட்டி வாழ்த்தி துணைவரோடுகெந்தமாதன மேவி இருந்தனன்.

பங்கமி லரிமுகப் பஃற லைக்கிளை
மங்கவே நூறியோர் வாகை மாலையை
யெங்கள்வேற் படைதனக் கென்று சூட்டியொண்
செங்கடம் பணியுமால் செய்ய குந்தமே.

வனப்புறு மிளவலும் வரச்செவ் வேற்குகன்
கனப்பக லாறினிற் கலாப மேறியே
யினப்புகழ் சேவலங் கொடிதற் கேற்றுவெஞ்
சினப்புலிக் கொடிதரச் செறிசெங் குந்தமே. ஈட்டியெழுபது

மானவ காண்டம்

நவவீரர் முசுமுகன் தவப் பேறுய படலம்.

தொண்டர் செய்பிழை யாயினும் பொறுத்தருளுவோன்
கண்ட மெய்ப்புல வோரகத் தாமரைக் கதிரோன்
பண்டைத் தண்டமிழ் மாமறைப் பழம்பொருண் முருகன்
றண்டைத் தாளிணை சார்ந்தவர்க் குலகிதே தரிதே. (1)

வேறு

தேவர் சேனை பதியாகி தீமாப் பிளந்து மயிலூர்ந்து
சேவற் கொடிக்கை யேந்தியும்பர் சிறைமீட் டிருப்பப் பரங்குன்றிற்
கோவிந் திரனுற் கைம்மாறாய்க் கொடுத்த தேவ குஞ்சரியாம்
பூவை யோடு மினிதுகந்தப் பொருப்புற் றமர்ந்த போழ்தன்றே. (2)

பாலி நீரந் தரச்சிறந்த பண்டைத் தொண்டை நன்னாட்டிற்
சாலி யேனல் வளர்புனமந் தண்ணெண் சோலை நிழலாரும்
வேலி சூழ்ற் சிற்றூரான் வேடர் குலத்து நம்பியென்பா
னுலிக் குவட்டிற் சிவமுனிவ னமையுந் தவஞ்செய் தமர்ந்தனனால். (3)

மானின் பிணையி னெழி னோக்கி மயல்கூர்ந் திடலுஞ் சிவமுனிவன்
கானந் திரியம் மானாங்கு கருவுற் றெயின ரகழ்ந்தெடுத்த
கூனல் வள்ளிக் குழியிற் பெண் குழந்தை தனைப்பெற் றதுகண்டு
மேனி மனித்த ராமென்றே வெருவி விட்டோ டியதம்மா. (4)

துள்ளி யோடி மானகலத் துப்பார் பவள வாய்திறந்து
தெள்ளிப் பாடுந் தீங்குழலி னழுகை கேட்ட திசைதெரிந்து
பள்ளத் ததனை மறவரிறை பார்த்தா னரிய பெண்மணியாம்
பிள்ளை யில்லை மெனவெடுத்தான் பெம்மா னருளிங் குற்றதென. (5)

வாரி யெடுத்து முத்தாடி மனைக்கை யீந்து வளர்த்துமகப்
பேரும் வள்ளி யென்றிட்டு பெற்றோ மிதனாற் பெரும்பேறு
சீரு மடைந்தோ மெனமங்கைப் பருவம் வருங்காற் றினைப்புனத்தை
நேரி தாகக் காத்தியென நின்றாள் வள்ளி பரண் மீதே (6)

கந்த வெற்பி னின்றுநந்தங் காங்கே யின்மீண் டம்பரமாய்
முந்துங் சூரன் கொடும்பாடு முடிப்ப முனிந்த முனிவாறு
மந்தத் தணிகை மலைமேவி யங்கா னோற்றா ளெணமுடிப்பச்
சிந்தை செய்து கொண்டானோர் விளையாட் டயர்வான் றிருமேனி (7)

தோலு நரம்பு நனிதூங்கித் தொண்ணூற் றெட்டின் மேலாண்டுஞ்
சாலக் கடந்த விருத்தனெனத் தளர்ந்து மெலிந்து பண்டாண்டி
போல நீற்றின் மேனியெழிற் பொலிய வெழுந்து தண்டூன்றி
நீல வுண்கண் வள்ளிபணி நெறியிற் செய்ய நடித்திட்டான். (9)

பரண்மீ திருந்து கிளிகடியும் பனிமென் மொழியின் பானண்ணி
தருண வேடர் காளையெனச் சரச மாடிச் சின மூட்டி
முரண்வே டவர்கோன் வரவேங்கை மரமாய் முனியாய் முன்னிற்க
வருணீண் முனியென் றேவல்செயப் பணித்தான் மகளை யவ்வே
டன். (8)

பின்னைப் பசியா னொந்தனன்போ லிருப்பத் தினையின் பிண்டியைத்
தேன்
றன்னைக் கலந்து மானளிக்கத் தண்ணீர் வேட்டுச் சுனைநண்ணி
முன்னைக் கரியாய் வரப்பண்ணி முடுகும் பயத்தாற் றனைத்தழுவு
மின்னை மணந்தா னுருக்காட்டி வியனார் தணிகை மேயினனால் (10)

கோயிலாகக் குறிச்சியெலாங் கொண்டா னேனுங் குணக்கா னுந்
தாயி னினியான் கந்தகிரி சார்ந்தோ வில்லாத் தம்பியர்கள்
பாயின் றேனார் பூம்பாதம் பணிந்து பணியின் றலைநிற்ப
வேயுந் தேவி மாரிருவ ரோடங் கிருந்த செவ்வியரோ. (11)

வேறு

பூவுல களையர் தம்மிற் புனிதனா முசுகுந் தத்துக்
காவலன் சுடாரி னான்ற கதிரவன் குலத்திற் கென்றுந்
தாவில்சீர் குரவன் சான்ற தாபதர் தம்மின் மேலான்
மாவல ரவன்சே யாகும் வசிட்டனை மனத்துட்கொண்டான். (12)

காலமோர் மூன்றுந் தேர்வான் கற்பருந் ததிக்குக் கேள்வன்
சாலிகள் கன்னல் கன்னல் கமுகவை தாழை தாழை
நீலவா னோங்கும் வெய்யோன் பரியின்கா லிடறு நெற்றுத்
தாலமே லுதிர்க்குஞ் சோலைத் தமிழ்க்கரு வூரைச் சார்ந்தான் (13)

அந்தரத் துடுக்க ணொப்ப ணவிரொளி மதிய மேய்ப்ப
மந்திரக் கிழவர் சூழ வரியணை யமர்ந்த மன்னன்
முந்துற வெதிர்கொண் டேத்தி முறைமையின் வழிபா டாற்றித்
தந்தன னிருக்கை வாழ்த்தி யந்தணன் சாற்று வானால். (14)

குன்றிறை செல்வி தன்னை யீசனைக் கூவிளத்தா
லன்றருச் சனைசெய் பேற்றா லரசனா யவனி யாளும்
வென்றிகொ ளரச நீதி விழுமிதோ தேவ பூசை
யொன்றினுங் குறைவு றாம லுள்ளதோ வென்ன மன்னன். (15)

குருவரு ளோக்குண் டாயிற் குறைவறும் வினவிற் றெல்லாந்
திருமலிந் துளவென் றாலுஞ் சிந்தையிற் குறையொன் றுண்டான்
மருவலர் வணங்க விந்த வாரிதி சூழ்ந்த வைப்பை
பொருவுவ ரின்றி யானே பொதுவறப் புரத்தல் வேண்டும். (16)

முனிவரற் கரச வெற்கிம் மோகமுற் றுறயான் செய்யு
மினியநல் வினையா தஃதை யியற்றுமா றருடி யென்னப்
புனிதமா தவன்பட் டாங்கின் போதிய பனுவ லாய்ந்து
கனியுநீர் மையினாற் சொல்வன் கந்தவே ணோன்பு தன்னை. (17)

எண்ணிய வெண்ணி யாங்கே யெய்துதற் கெளிய தாகும்
புண்ணிய மொன்ற னந்த கோடியாய்ப் பொலியு நெஞ்சத்
திண்ணிய ஞான நிற்கே செப்புவன் சுங்க னாளுந்
தண்ணிய வார னாளுஞ் சட்டியு மென வோர் மூன்றும். (18)

குகனது விரத மென்னக் கூறுவ ருலக மாளும்
பகிரதன் கோர னென்னும் பகைவனுக் கிரிந்து போந்து
மகவொடு மனைவி யோடும் வனந்தனி லிருந்து நொந்து
புகரடி கண்டு போற்றிப் புகன்றனன் குறைக ளெல்லாம். (19)

தெள்ளிய வாசான் சொல்வான் சேந்தனுக் குரிய தான
வெள்ளிநாள் விரதஞ் செய்யின் வெற்றி நிற் காகு நெஞ்சி
னுள்ளியே முந்தை நாளி னுச்சியி னடிசின் மாந்திப்
பள்ளியி னுறக்க நீத்துப் பரகுரு பூசை யாற்றி. (20)

ஆண்டுமூன் றியற்று மென்ன வவ்வணம் புரிந்தான் வைவேன்
மூண்டமா ராற்றிக் கோரன் முடிதகர்த் திடலும் வேந்தன்,
பூண்டனன் முடியும் பன்னாள் புவிபுரந் தறமு கந்தோன்
மாண்டவின் னருட்கி லக்காய் வாழ்ந்தன னின்ப முற்றான். (21)

சூரன தகத்தைச் செற்றான் விரதமற் றொன்று சொல்வே
னாரதன் முனிவர் தம்பி னாதனா யிருக்க வேண்டித்
தாரக வடிவ மாய கணபதி தன்னைப் போற்ற
வாரனாள் விரதப் பேற்றை யருட்செய வதனைச் செய்வான். (22)

செந்நிறச் சூட்டு முட்டாட் சேவல்கூ விளிமுன் னாக
மன்னிய துயினீத் தையன் மலரடி நினைந்து நீறிட்
டந்நிலை தடத்துண் மூழ்கி யரையிரண் டுடைக டாங்கிப்
பன்னிய கரும மாற்றிப் பகர்தரு பரணி நாளில். (23)

நண்பக லசன மாந்திக் கார்த்திகை நாளிற் கந்தன்
பண்பியல் வழிபா டாற்றிப் பன்னுமற் றவன்சீ ரோதி
கண்பட லின்றிப் பின்னா ளுரோகணி காலை தன்னிற்
றண்புன லாடி யுள்ளத் தருக்கறு தக்கோர் சூழ (24)

இன்னமு தருந்திக் கார்த்தி கேயனை யுள்ளத் தெண்ணிப்
பன்னிரு வருட நோற்றான் பகரெழு முனிவர் தம்மி
னுன்னத முற்றா னிந்த வுத்தம விரதம் பின்னோர்
மன்னவன் வேட னேற்று சந்திமா னந்தி மானாய். (25)

மேதினி யாண்டார் கந்த வேளருள் விரதப் பேற்றால்
வேதியர் திரிசங் கென்ன மனுவென வேந்த ரானா
ராதலி னார னாளி லவனிய ரடைந்த சீரை
யோதுதற் கரிய தின்னு முள்ளதோர் நோன்பு ரைப்பாம். (26

துலைமதி வளரும் பக்கந் தொடங்கிமுற் றினத்தின் காலை
யலைபுனற் படிந்து தூய்தா மாடையை யுடுத்துக் கன்மங்
கலைவிதி வழியி லாற்றிக் கந்தவே டன்னைக் கும்பத்
தலைநிறீஇ யருச்சித் தேத்தித் தமமுறுங் கங்குற் போதில். (27)

நெய்யொடுங் கட்டி கூட்டி நேர்ந்தசோ றப்பம் வைவே
லையனுக் கருத்தி வைக லாறினுந் தத்த முள்ளங்
கைபுனன் மாந்திக் கந்த வேள்புகழ்க் காதை யோதிச்
செய்துயி லின்றி யாறு தினமருந் தவத்தைச் செய்தார். (28)

பாரணஞ் சட்டி யப்பாற் பண்ணினர் மாதோ வெள்ளை
வாரண வூர்தி யாதி வானவர் முனிவர் ஞான
காரணற் கருதி நோற்றுக் கடந்தன ரசுரர் தீமை
தாரண ராகி வாழ்ந்தா ரென்பமற் றிதனைச் செய்தால். (29)

குறை நிறை வாகு மென்னக் கூறினன் வசிட்ட மேலோ
னறைகழ லரச ஞசா னடிமல ரிறைஞ்சி யற்றே
முறையருஞ் சட்டி நோன்பு முட்டுத லின்றி யாற்றச்
சிறையமர் சுரரை மீட்ட சேந்தன்மற் றிதனை யோர்ந்தான். (30)

வேறு

ஓராறு திருமுகமுந் திருத்தோள்கள் பனிரண்டு மொளிகால் வேலும்
போராருந் திருத்தாளு மிருபாலென் னன்னையரும் பிறங்கப் பச்சை
நீராரு மயிலேறித் தம்பியரும் விண்ணவரு நெருங்கிப் போதத்
தாரார்தோள் முசுமுகன் செய் தவச்சாலை முன்வந்தான் தண்ணென் சோதி. (31)

சற்றூர்க்கு மறிவரிய தவநிலைசேர் முசுமுகமன் கண்கள் பூப்ப, வுற்றெ
திரிற் காட்சிதர வுள்ளன்பி னெழுந்தொன்றுந் தோன்றுமற்கை,
யற்றூர்கள் கருவூலங் கண்டாங்கு மகிழ்ந்துதொழு தங்கை கூப்பி, முற்
றினன்பன் முறைவலமாய்ப் பேரானந் தக்கடலின் மூழ்கிறைல். (32)

தந்தையிற்று யினுஞ்சான்ற தண்ணளியா லாறுமுகன் றடங்கண்சாத்தி
முந்தைமுறை யருநோன்பிற் ககமகிழ்ந்தேம் வேண்டுவன மொழி
கென் றோதச், சிந்தைமகிழ்ந் தடிவணங்கி நிலமுழுதும் பொதுநீக்கித்
திகிரி யோச்ச, நிந்தையறு குந்தவொள்வே னவவீரரைத் துணையா
நேர்க வென்றான். (33)

கோலெத்தனமான் முசுமுகனே குலக்குந்தர்ப் பெற்றமையாற் குந்த
மென்ப, தடுத்து முசு குந்தனெனும் பேரெய்தி யாளுகவிவ் வவனி
யென்று, வெடுத்தவயி லீட்டியுடை யிளையவரை நோக்கலுமற் றவரி
றைஞ்சித், தடுக்கவலே மலமெனினுந் திருமுன்னந் தணந்திருக்கை
தரியேமைய. (34)

ஆயிரத்தெட் டண்டமர சாளசுர னொடுசமர மாடு மியாமு, மாயிருஞா
லத்தரசன் மானுடன்மற் றவன்பணித்த வண்ணஞ் செய்வான், போயி
ருப்ப தெத்துணைநாட் பொன்னடியைக் காணுது புவியை நண்ணிச்,
சேய்மையுற லெத்துணைநா ளாற்றுகிலே மருளாழிச் செந்தி
லானே. (35)

என்னவவ ருரைத்தலுமங் கிறையவனு மற்றவரை யிசைப்பான்
மன்றே, பொன்னகரத் தரம்பையரை நம்மணத்திற் கண்டுநகை
பூண்டீர் நீவி, ரன்னவரு மிம்மன்னன் குலத்துதித்தார் நுமைவேட்ட
வதனுன் மன்னு, முன்னைவினை யாற்றேவ தனுமாறி மக்களுரு
முயங்கு வீரால். (36)

அந்தநகை யொழிதாரீ ராயிரவாண் டிருந்தவனி வாழ்க்கை யாற்றி
நுந்தமது பேராலு நுங்கைவேற் பேராலு நுவலுங் கைக்கோள்
விந்தைநடம் புரியுஞ்செங் குந்தமெனும் காரணப்பே ருலகின் மேவ
வெந்தமர பினுஞ்சிறக்கு மரபுலவ வியற்றிமனு மரபோ டொன்றி (37)

குவலயமெ லாந்திகிரி யொன்றுருட்டி யிவனுளக் கொடுத்து வென்றி
நவலருமா மதிகதிர்க ளுளநாளும் பெருஞ்சீர்த்தி தந்து நந்தாத்
தவமுடையீர் நம்மருளாற் றணவாத நம்பதத்தைச் சார்வீ ரென்று
சிவகுருநா தன்வாழ்த்தி மறைந்தனன்வீ ரருமரசைச் சேர்ந்தா
ரன்றே. (38)

சேதாம்ப றடத்தகரு ஆராளி செய்தவத்தாற் சேர்ந்த வீரர்
பாதார விந்தமலர் தொழுதேத்தி யன்னவர்கள் பாங்கர் சூழத்
தாதாரும் கற்பகப்பூ மலர்மாரி தேவர்குழாந் தரணி தூர்ப்பக்
கீதார வாரமனின் னியங்கெழுமத் தம்பதியைக் கிட்டி னுனல். (39)

கருவூற வில்லாம லடியவர்க்கே சிவபெருமான் காட்சி நல்குங்
கருவூரில் வீரரைமாப் பெருங்கோயிற் புகுவித்துக் கடிநீ ராட்டி
மருவூறு மறுசுவைய குய்யடிசி னுகர்வித்து வாச நல்கி
திருவூறு மங்கையர்சா மரையிரட்ட வகங்குளிரச் சிறப்புச் செய்வான்()

இந்துவளர் முடிச்சோலை மணிமாடந் தனித்தனியே வியைய வையந்
தந்திதுர கங்காலா ளாதியதா னைகட்கெல்லாந் தலைமை யோடு
மந்திரமா மவையிலமைச் சுரிமைபெறு மற்றுள்ள வரிசை யாவுங்
கொந்தவிழ்தார் வரைத்தோளாற் கேற்பவா சுரிமையெலாங்
கொடுத்தா னன்றே. (41)

தங்குலத்தின் முன்னூழாற் செங்கமலை மாரென்னச் சனித்தி ருந்த
மங்கையரி லெழில்வாய்ந்த புட்பகந்தி யைவீர வாகுக் கீந்தான்
பொங்குவீர ரெண்மருக்கு மெண்மகளி ரீந்துவந்தான் பொருந்தி
வாழ்ந்தா, ரங்கவரில் முதல்வீரன் மனைசித்திர வல்லியெனு மமுதை
யீன்றுள். (42)

தண்ணொளிகா லிளம்பிறையிற் பெண்மகவு தான்வளரத் தந்தை
நேரும், பண்மகிழு மொழிவேய்த்தோட் பசுந்தோகை கருவாய்ந்து
பண்பி னீடித், தண்மைமிகு மனகனொடு சனகனெனு மிருமகவைத
தந்தா ளிந்த, மண்மகிமை யால்விளங்க வானுலகி னுஞ்சீர்த்தி வயங்க
மாதோ. (43)

இப்பாலே னையவீரர் நீமுன்னம் வேட்டவரோ டின்பந் துய்த்து
குப்பாயுங் கோளரியின் குருளையெனக் குனிகருப்பு வில்லோ னென்ன
வப்போத வடுக்கிதழ்த்தா மரையுறையு மம்மையென வாண்பெண் ணுக
வொப்போதுங் குடிவிளக்கும் பன்மக்க ளீன்றிம்ப ருயர்ந்தா ரம்மா(44)

வேறு

தெருண்டோ ருள்ளக் குருமணியாய்த் திகழுங் குமரன் வரத்தாலு
மரண்டான் கொண்டின் குளமொருக்கி யறுமா முகத்தோ னேன்பாற்று
முரண்டா னில்லா முசுகுந்தன் குலப்பெண் கொண்ட முறையாலு
மிரண்டாம் வருணத் தவராகி யிருந்தா ருலக ரியற்கையினே (45)

அனசோர் சித்திர வல்லியெனு மமுதை முசுகுந் தர்க்குதவப்
பினையம் மடமா னரையனுடன் பிரியா திரதி மதனனென
மனையின் வாழ்க்கை வழாதியற்ற வாகு வாதி வீரரெலாங்
கனையங் கடல்சூழ் திசைவிசையங் காணக் கருதி யிதுபுரிவார். (46)

நவவீரர் முசுமுகன் தவப்பேறுய படலம் முற்றிற்று.

ஆக படலம் 14-க்குச் செய்யுள் 491.

முந்தை நோன்பினுன் முருக வேண்முசு
குந்த னுக்கொன்பான் குமர ரைத்தர
வந்த வீரரிவ் வகிலம் வென்றிசை
தந்த குந்தரித் தகுசெங் குந்தமே. ஈட்டியெழுபது.

பால்யாறு கால் கொண்டு பெருகிப்பாய்வதால் செந்நெல் கன்னல் கமுகு முதலியன செழித்தோங்கப்பெற்று பல்வளனும் மல்கிய தொண்டை நாட்டின்கண், கொண்டல்தவழுந் தண்டலையாற்சூழ்ந்த சிற்றூரையாளும் வேட்டுவர்குலச் செம்மலாகிய நம்பிமன்னனது மலைக்குவட்டில் சிவமுனி வன்தவஞ்செய்திருந்தனன். அங்கு ஒரு பெண்மான் வந்தது. அதன் அழகைக் கண்டுஅம்முனிவன் மையல் கொண்டு நோக்கினுன்: நோக்கவே அம்மான் அக்கணமே கருக்கொண்டு, வள்ளிக்குழியில் ஓர் பெண்மகவைப் பெற்று, அது மானிடமேனியாவதுகண்டு விட்டகன்றது. குழலினிய அப்பெண்மகவின் அழுகுரலைக்கேட்ட நம்பிமன்னன் அணுகிக்கண்ணுற்றுப் பெண்மகவில்லேற்கு சண்முக னளித்ததெனப் பெண்மணியை வாரியெடுத்து, மனைவிகையீந்து. வள்ளியெனப் பெயரிட்டு மகிழ்வொடு வளர்த்து மங்கைப்பருவத்தில் கதிர்பெறு தினைப்புனங்காக்கவைத்தனன். அங்ஙனம் வள்ளியம்மை தினைப்புனங் காக்குநாள் தன்னைவேண்டி முன்னர் தவஞ்செய்த அவ்வள்ளியை மணப்பான் கருதிய முருகப்பெருமான்; கந்தமாதனகிரியினின்றும் தெய்வயானையைத் துணைந்து தணிகை வெற்பின் மேவி வேட்டுவக்காளைபோல் வேடந்தாங்கி அன்னவன் மாட்டணுகித் தூர்த்தன்போல் வார்த்தைகள்பேசி வேடர்கள்காண வேங்கைமரமாய், விருத்த முனிவனுய், வள்ளிபணிகொண்டு, பசித்தவன்போலத் தினைமாவுண்டு, விக்கினனெனத் தண்ணீர்வேட்டுத், தாழ்குழலோடும் சூழ்சுனை நண்ணி தன் முன்னவனுன யானையை முன்வரப்பண்ணி, அஞ்சித்தழுவிய வஞ்சி வள்ளியைத் தன்னுருக்காட்டி மன்னிய களவியலான் மணம்புணர்ந்து அணிபெறச்சின்னுள் தணிகையிலமர்ந்து, கந்தமாதனத்தில் குந்தவேற்குமரர் பணிசெய்ய தேவிமாரோடு மேவியிருந்தனன்.

அக்கால் முசுமுகச்சோழமன்னன் தன்குலகுருவும் அருந்ததிகேள் வனுமாகிய வசிட்டமுனிவனை எண்ணினன். முக்கால.முணர்ந்த அம்முனி வன் மன்னன் மாட்டணுகி வழிபாடேற்று வாழ்த்துவழங்கி, இருக்கையி லிருந்து செங்கோலும் தேவபூசையும் செவ்விதின் நிகழ்கின்றனவோ என் றனன். மன்னவன் முனிவன் பொன்னடி வணங்கி ஐயனே! நின்னருளால் யாதுங் குறைவிலேன் எனினும் பூதலமுழுதும் பொதுவறப்புரக்க ஆதரங் கொண்டுள்ளேன்; அதற்குயான் செய்யவேண்டுவது யாது என்றனன். முனிவன் முசுமுக! முன்னைநாள் உச்சிப்போதில் ஓர் வேளையருந்தி அற்றைநாள் இரவில்உணவும் உறக்கமும் ஒழிந்து, மறுநாட்காலை அறுமுக னைப்பூசித்து உணவருந்துதல் வெள்ளிக்கிழமை விரதம்;

அவ்வணம் வைகறையிற்றுயிலுணர்ந்து நீராடி யீராடை புனைந்து கந்த னைச் சிந்தித்து அன்னவன் கிரோதி பரணிநாள்தொடங்கி உரோகணியின் முடித்தல் கார்த்திகை விரதம்; ஐப்பசிமாதம் பிறைமுதனாள் தொடங்கி வைகலும் ஐயனை அருச்சித்து நெய்யொடு பால்கலந்த அப்பமும் அக்கார அடிசிலும்படைத்து ஆறுநாளும் வேறு உணவின்றி உள்ளங்கை அளவு தெள்ளிய புனலுண்டு ஏழாம் நாள் பாரணம்பண்ணுதல் சட்டிவிரதம். கந்தனுக்குகந்த இந்தவிரதங்களை; தேவர்களும் முனிவர்களும் அரசர்களும் மற்றும் பலருஞ்செய்து, நண்ணறும் நன்மைகள் எய்தியுள்ளார்கள். இத் தகைய நோன்பில் ஒன்றினை நோற்கில் எண்ணிய யாவும் நண்ணுவாயென் றான். மன்னவன் அவ்வாறே சட்டிநோன்பினை முட்டறநோற்று திரு முகமோராறும் திருத்தோள்கள் ஈராறும் வடிவேலும் தோன்றத்தம்பிய ரும் உம்பர்களுஞ்சூழ மயிலேறி எதிர்வந்த முருகனை இருநிதியங் கண் டாங்கு கண்ணாரக்கண்டு வாயார வாழ்த்தி வலம்வந்து வணங்கிப்பேரின்பக் கடலில் மூழ்கினன்.

நஞ்செவ்வேள் அஞ்சலித்து நின்ற அரசனைநோக்கி நின்தவத்திற்கு அகமகிழ்ந்தனம் நின் வேட்கை யாதென; மன்னவன் ஐயனே! புவனமுழுதும் பொது நீக்கித்திகிரி யோச்சவேண்டுமென்னும் ஆவலுற்றனன்; அக் கருத்து நிறைவேற நின்னருகிருக்கும் குந்தவேற்குமரர் ஒன்பதின்மரை அளித்தருள்க என்றிரந்தனன். அவ்வாறே அறுமுகன் நீவேட்டவாறே வேற்குமரர் ஒன்பதின்மரைத் தந்தனம்; குந்தரைப்பெற்றமையால் இது முதல் நின்பெயர் முசுகுந்தனெனப் பொலிக என்றருள் செய்தனன். இது கேட்ட தம்பியர் ஒன்பதின்மரும் பெருமானே, நின் திருமுன்னம் இடை விடாதிருந்தயாங்கள் எவ்வாறு தணந்திருப்போமென்றுவணங்கப், பெருமான் அத்தம்பியர் ஒன்பதின்மரை நோக்கி நந்தெய்வயானை திருமணத்தில் நும்மைக்கண்டு காதலித்த அரம்பையர் இம்மன்னன் குலத்துதித்துளார். அன்னோரைக்கண்டு காதலித்த நீவிரும் தேவயாக்கைமாறி மானுடராய் அம்மங்கையரைமணந்து, நும்மைவேற்பெயராலும், தோள்வலியாலும்,

செங்குந்தர், கைக்கோளர் என்னும் காரணப்பெயர் வாய்ந்த மரபுபொலிய மனுமாபோடொன்றி இருநிலமுழுதுந் திகிரியொன்றுருட்டியாள, வேந்தர்க்கு வெற்றிபுனைந்து, மதியுள்ளளவும் கதிருள்ளளவும் நும்கீர்த்திவைய நிலை காட்டி, ஆயிரம்யாண்டு அவனியில் வாழ்க்கையாற்றி நம்பதமடைக வெனத் திருவாய்மலர்ந்தருளி மறைந்தனன்.

பின்னர் முசுகுந்த மன்னன் ஒன்பதின்மரை வரல் வேண்டுமென வணங்கி அழைத்துக்கொண்டு அன்னவர்கள் சூழப்பல்லிய மொலிப்பத் தேவர்கள் மலர்மாரி தூர்ப்பத் தன்பதியடைந்து பொன்னொளிர் மாடத்துத் தனித்தனிபுகுவித்து உபசரித்து வரிசைபல வழங்கி மந்திரத்தலைமை தந்திரத்தலைமை தானைத்தலைமை முதலிய அரசுரிமை யாவையுமளித்து, தங்குலமாதரில் புட்பகந்தியை வீரவாகு தேவற்கும் மற்றும் எண்மகளிரை எண்மர்க்கும் மணஞ்செய்தளித்தனன். வீரவாகுதேவன் தன்மனைவி புட்பகந்தியினிடத்து சித்திரவல்லி என்னும் ஒரு மகளையும் அனகன் சனகன் என்னும் இருமைந்தரையும் மற்றும் எண்மரும் தத்தம்மனைவியரோடு வாழ்ந்து பற்பலமக்களையும்பெற்று, மதனனும் இரதியும் போல்வாழ்க வெனச் சித்திரவல்லியை முசுகுந்த மன்னற்களித்து முருகன்வரத்தாலும் முசுகுந்தன் குலப்பெண்களைக் கொண்டமுறையாலும் இரண்டாம் வருணத்தாராய் மன்னிவாழ்ந்து புகழுற்றிருந்தனர்.

முசுகுந்தற்கு முடிசூட்டு படலம்.

திங்கள வெண்குடை முசுமுகச் செம்மலோர் வைகல்
தங்கு மெல்லரி யணையிருந் தமைச்சராய்த் தனது
பொங்கு வெம்படைத் தலைவராய்ப் பொருந்திய வொன்பான்
செங்கை வேற்படை வீரருக் கின்னன செப்பும். (1)
செய்ய நோன்பினற் பயனெனச் சேயருள் வரத்தா
லுய்ய வந்தெனக் குறுதுணைக் கேளிரா யுள்ளீர்
வைய முற்றினு மென்குடை நீழலில் வைக
வெய்ய வேந்தரைப் பொருதிட மேவுதி ரென்றான் (2)
என்ற போழ்தினி னன்றென விறையொடு மொன்பான்
வென்றி வீரரு மந்திரத்தலத்தினின் மேவி
யொன்ற மேற்செய லாய்வுழி யுரைபகர் வுற்றா
னின்ற வீரருண் முன்னோனன் னெறியுணர் முதல்வன் (3)

வேறு

முன்பகைமை யிலையிந்த மூதுலகி னந்தமக்குப்
பின்பகைமை பாராட்டற் பேதமையா மாதலினுன்
மன்பகைமை யாயிடினு மாற்றலரொன் றெண்ணாதே
யன்புமையக் கிடக்கவம ராடுதலே வமைந்ததரோ. (4)

தன்வலியும் பகைவலியுஞ் சார்துணையுங் காணாது
முன்பொருதச் செல்லுதனன் முறைமையல மண்ணுலகிற்
பொன்பெரிய ரானாலும் பொறுமையொடு மினிதாராய்ந்
தின்பமுறச் செய்வதுதா னியல்பாகு நன்னெறியே. (5)

அண்டமொரா யிரத்தெட்டு மரசாண்ட வன்கணனைத்
திண்டிறலால் வானோரைச் செய்தசிறை விடுதியெனப்
பண்டொருநாட் டூதாகிப் பகர்நெறியை மறுத்ததனால்
சண்டையினால் வென்றனனஞ் சாமியது வேமுறையாம். (6)

வேறு.

ஞால மன்னவர் சிந்தனை யாதென நவையிற்
சீல மன்னிய தூதராற் றேர்ந்துபின் றேரா
வால மன்னவ ரைப்பொரு தும்மென வாங்கு
கோல மன்னிறை யுய்த்தனன் றூதரைக் குறித்து. (7)

கன்னித் தீந்தமிழ் நாடுடைக் காவலன் சோழ
மன்னன் மாமுசு குந்தனு மன்னவர் மன்னன்
பன்ன ருந்தவத் துற்றனர் குந்தவேற் படைஞ
ரின்ன மைச்சராய்ச் சேனையின் றலைவரா யிசைந் தார். (8)

வருவ ராலவர் வணக்கொடு மன்னர்கா ணீவிர்
தருவி ரேற்றிறை யுய்குதிர் தராதெதிர் நின்று
பொருவி ரேல்வலி பொன்றுவீர் மெய்ம்மையீ தென்று
மருவு நாற்றிசை சென்றனர் மன்னுரை வழுத்தி. (9)

கேட்ட வேந்தரி லாய்வுடைப் பற்பலர் கேளாய்
வேட்ட வாறிறை யுய்க்குது மென்றனர் வேறு
நாட்ட மாயினர் சிற்சில ரென்பது நாடி
தோட்ட லர்ப்பதந் தொழுதனர் சொல்லினர் தூதர். (10)

வேறு.

கணியுரைத்த வோரைதனிற் காவலர் பாற் புறப்படுகை
துணிபென்றான் றோள்வலியன் றுணைவர்களுந் தோளுயர்ந்தா
ரணிமுரசு வானொலியி னார்த்திடநாற் படைசூழப்
பணிலமுத லியமியம்ப வெழுந்தனராற் பகையில்லார். (11)

வேறு.

வாங்கு தெண்டிரை யார்கலி வளைத்தென மண்ணிற்
றேங்கு தீந்தமிழ் சூழ்பதி னேழ்புவி திசைப்பப்
பாங்கு சென்றனர் பணிந்தனர் பற்பல மன்ன
ரோங்கி மேற்பொர லுற்றன ரொழிந்தன ருறுத்தே. (12)

கண்ட திண்டிறல் வீரருங் கலங்கனர் வெம்போர்
மண்டு சூழ்வளிப் பூளைவீ யாயினர் மடங்கி
கொண்டு கந்தனர் மணிக்கல ஞறிய குவித்தார்
தொண்ட ராயினர் நட்பினை வேண்டியே தொழுதார். (13)

மற்றும் பற்பல கடலகத் துள்ளன மண்ணி
லுற்ற நாட்டகத் தரசர்பா லுற்றன ருவரும்
வெற்றி யுற்றிடு வீரர்பால் விழுப்பொருள் வழங்கிப்
பற்று கேண்மையை விழைந்தனர் பகை கெடப் பணிந்தார். (14)

அம்பு ராசிசூ ழவனியைத் தம்மகத் தடக்கி
வெம்பு லிக்கொடி யுயர்த்திமண் வேந்தர்க டந்த
செம்பொ ருட்பொதி யொட்டக மீமிசைச் சேர்த்துத்
தம்பெ ரும்பதிக் குய்த்தனர் திரிந்தனர் தக்கோர். (15)

செந்த மிழ்க்குரித் தாகிய செம்பிய ஞடுஞ்
சிந்து மாமணி யருவிக ளிழிதரு சீர்சால்
விந்த மல்கிய சேரல ஞட்டையும் வென்று
வந்து சேர்ந்தனர் படையொடும் வயங்கொளும் வீரர். (16)

வேறு.

தாரார் புரவித் தேரேறித் தயங்காப் படைகள் புடைசூழக்
காரா ரொலியின் முழவதிரக் கண்டோ ருள்ளங் களிதூங்க
வேரார் வாகை புனைதோளா ரெங்கட் குற்ற ரென்றுகரு
ஆரா ரெதிர வந்துற்ற ருள்ளங் குளிர முசுமுகனே. (17)

கண்டார் வேந்தை யன்னவனுங் காணுக் கதியைக் கண்டான்போற்
றண்டா வீரர் தமைமுறையே தழுவி மகிழ்ந்தா னிகழ்வென்றி
விண்டான் வீர வாகுவெனு மேலோன் விரவு படையுள்ளார்
கொண்டா ரேற்ற நன்கொடையைக் குறையா ருள்ள நிறைவுறவே. (18)

மலையிற் கொணர்ந்து குவிபொருளை மாரு வன்மை மறக்குடியி
னிலவு படைஞர் இளையோடு நீட வெறுப்ப வழங்கியபி
னலகிட் டளவில் பண்டார மார நிரப்பி யமர்ந்திருந்தா
ருலவு சீர்த்தி முசுகுந்தர்க் குதவு மொன்பா னூரவோரே. (19)

பின்னை யொருநா ளரசவையிற் பெருகு மைம்பான் குழுக்குழக்
கன்னல் வேலிச் சூழ்கழனிக் கருவூ ராளு முசுகுந்த
மன்ன னிருப்ப மண்முழுதும் வளையாச் செங்கோ லாட்சியினை
யுன்னி யுரைப்பான் வீரர்தமி லுயர்ந்த வீர வாகன்றே. (20)

வேறு

மாசபை தன்னி லுள்ளீர் கேண்மினம் மரசன் மண்ட
லேசனாய் முடிதரித்த லித்தினத் தேழாநாளே
யாசறு நாளென் றோதி யவனியா ளரசர்க் கெல்லா
நேசமா முடங்க றீட்டி விடுதலே நேர்மை யென்றான். (21)

மின்னவிர் குந்த மேந்தி மேதினி முழுதுங் கந்த
னின்னரு ளதனால் வென்றீ ரேதுமக் கரிய தாகு
மன்னனை மகுடஞ் சூட்டி மாநிலக் கிழவர் போற்ற
வுன்றுத றகுமா லென்ன வுரைத்தன ரவையி லுள்ளார். (22)

சாற்றிய காலை வீரர் தம்மின்மார்த் தாண்ட னென்பா
னாற்றிசை தன்னி லுள்ள நராதிபர்க் கோலை போக்கக்
காற்றினுங் கடிய தூதர் சென்றனர் காட்டி னாராற்
பாற்றினஞ் சூழலும் வைவேற் பார்த்திப ரெவரும் போந்தார். (23)

கண்ணுடைக் கன்னன் மேதி மென்றுபேழ்க் கடைவாய் முத்த
மண்ணுறச் சிதறுஞ் சீர்த்த வயற்கரு ஆருண் மாடம்
வெண்ணியற் சுண்ணந் தீற்றி வெயில்விடு மணியாற் பொன்னாற்
றண்ணிய விதானந் தூக்கித் தடமறு கறல்ப ரப்பி. (24)

வாழையுங் கமுகு நாட்டி மகரதோ ரணங்க ணீட்டித்
தாழையி னிளங்காய் தூக்கித் தண்பனி நீரைத் தூவி
யேழையர் நடன மாட வினியபுத் தாடை தாங்கி
மாழையொண் மணிய வட்ட மங்கல மேந்தி நிற்ப. (25)

குன்றுபர் தோட்கோக் கின்று கோமுடி கவிக்கு நாளென்
றொன்றுமா டங்க ளெல்லா முளங்களி கொளவ ணிந்து
தென்றமிழ் மலயச் சாந்தத் தெளிவுதோ யலங்கல் வேய்ந்து
மன்றனு ளோரை நோக்கி வருந்தமர் நோக்கி நின்றார். (26)

ஐந்தவித் தரிய நோன்பை யாற்றுமா தவர்கு ழாமு
நந்தலில் பன்னா டாளு நராதிபர் பெருங்கு ழாமும்
பைந்துணர் பொன்பூத் தன்ன பைந்தொடி மகளி ரோடு
முந்தினர் நிறைந்தி ருந்தார் மூசளி மலருற் றென்ன. (27)

காண்டகு மணிபால் முத்தாற் கவின்கொலு மண்ட பத்தின்
மாண்டசித் திரங்க டீட்டி மதிகதி ருதய மென்னத்
தூண்டவில் விளக்க மேற்றித் தோரணத் தும்பர் வெம்பு
நீண்டவெம் புலிப்ப தாகை நிமிர்த்தனர் நேரா ருட்க. (28)

மண்டபத் திடையுத் தாணி மணியரி யணையி ருத்தி
யொண்டொடிப் பன்னி யோடு முயர்முசு குந்த வேந்தைத்
தெண்டிரைக் கங்கை யாதி தெய்வத யாற்று நன்னீர்
கொண்டனர் பொற்கு டத்து வோமகற் காட்டி னாரே. (29)

சசித்தலை தரித்த வீரற் கன்பரா மனுமாந் தாதா
வசித்தனா டொடங்கித் தாங்கு மணிமகு டத்தை யேந்தி
விசிட்டனும் வீர வாகு தேவனே கொடுக்க வாங்கி
வசிட்டனே தரித்தான் றேவர் மலர்மழை தூர்ப்ப மாதோ. (30)

அந்தரத்தவரு நாண வாலிய முரச மார்ப்ப
விந்திரத் திருவி தென்ன விருந்தமங் கலத்தை நோக்கி
மந்திரக் கிழவ ராய வெண்மரும் வாழ்த்தி நின்று
ரந்தணர் மறையை யோதி யார்த்தனர் வாழ்த்தி னாரால். (31)

கச்சணி முலைமின் னார்கள் கவரிகை கொண்டு வீசப்
பச்சிளம் பொற்கொம் பன்ன பாவையர் நடன மாட
நச்சுமா கதர்க ளேந்தல் சீரெலா நயந்து கூற
வுச்சிதங் கொடுபா வாண ருவந்துபா மாலை சூட்ட. (32)

வேறு

மண்ணாளு மன்னவர்த மணிமுடிக ளிலம்படிய வணங்கி யேத்தி
யெண்ணாளும் பொன்னணியுந் தத்தநிலத் திரும்பொருளு மிறையா
வீந்து, விண்ணாடு மகிழ்கிரித் தனியுருட்டு முசுகுந்த வேந்தே
நின்றன், றண்ணாருங் கண்ணோக்க மெந்நாளு மெந்தம்பாற் றருக
வென்றார். (33)

மருந்தனைய வின்னடிசில் வந்திருந்த மன்னவர்க்கு மற்றோ ரோடு
மொருங்குற்ற யாவர்க்கு முண்மைமறை நெறியோம்பி யொழிவி லாத
வருந்தவத்து முனிவார்க்கு மந்நகரத் தியாவர்க்கு மன்போ டார்ந்த
விருந்தளித்துப் பரிசிலர்க்கு விருப்பளவு பொன்னீந்து விடைதந்
தானே. (34)

மண்முழுதும் பொதுநீக்கித் தனித்திகிரி யுருட்டிமுடி மன்னர் யாருந்
தண்குடையி னிழலொதுங்கக் குடியுரிமை முறையோம்பித் தக்கோர்
சூழத், திண்புயத்து முசுகுந்தன் றிருவோங்கப் பருவமழை திறம்பா
தாக, வீண்முழுது மகிழ்தூங்க வினிதரசு புரிந்திருந்தான் மேவா
ரின்றி. (35)

முன்னுசுடர் மூன்றினுயர் செங்கதிரின் குலத்தோன்றல் முசுகுந் தற்கு
நன்னிலமுற் றும்வெற்றி நாட்டிமணி முடிசூட்டு நலத்தைச் சொற்றும்
பின்னைமிகர் கோத் தேவி கிளியைநமன் புரமணுகிப் பெரும்போ
ராற்றி, மன்னியவொன் பான்வீரர் மீட்டுவரு காதையினை வகுத்து
மாதோ. (36)

முசுகுந்தற்கு முடிசூட்டு படலம் முற்றிற்று
ஆகு படலம் 15க்குச் செய்யுள் 527

முசுகுந்தமன்னன் ஓர்நாள் திங்கள் வெண் குடைக்கீழ்ச் சிங்க மெல்லணை மேவியிருந்துழி, தனது அமைச்சரும், படைத்தலைவரும், உற்றதுணைவரும், உறவினருமாகிய வீரவாகாதிய வீரரைப்புகழ்ந்தேத்தி புவனமுழுதும் பொது நீக்கி யான் ஆளும் வண்ணம் அதற் கிடையூறுயுள்ளகொடிய வேந்தரைப் பொருவான் வேண்டிக் குழுமி ஆய்மின்என்றனன். என்னலும் மன்னவனோடு ஒன்பது வீரரும் மந்திரத்தலத்துமேவி யாராய்வுழி வீரவாகுதேவன் விளம்புவான் ; கதிர்குலாதிப! இவ்வுலகின்கண் நமக்கு யாரும்பகைமையில்லை அரசர்களில் யாரேனும் பகைமை பாராட்டினும் அதைநாம்கருதாது அறவழியில் போர் செய்தல் பொருந்தும். எல்லா வகையினும் எவ்வளவு மேம்பாடுடைய ராயினும் தன்வலியும் பகைவலியுந் துணைவலியும் நன்கு ஆராய்ந்து செய்தல் இனிது, விண்ணவர் சிறையை விடுதியெனத் தூதியம்பிய நீதியை யிகழ்ந்ததால் நமது குமரகுருபரன் சூரனாதியரைப் போர்புரிந்து வென்றனன். அதுமுறையாகும் ஆதலின்; தூதுவர் வாயிலாக நமது கருத்தினை அரசர்க்குத் தெரிவித்து இணங்காதவரைப் பொருகுதும் என்றனன். முசுகுந்தமன்னன் அவ்வண்ணம் செவ்வியதூதரை வேந்தர்பால் விடுத்தனன். தூதுவர்; தமிழ்மணங்கமழும் சோழநாடுடையவனும், அரசர்க்கரசனுமாகிய முசுகுந்தமன்னற்கு அன்னவன் செய்த தவப்பேற்றால் தங்கும் புகழ் பரந் தோங்கிய செங்குந்தர்களாகிய வீரவாகாதியவொன்பதின்மர் அமைச்சராயும், சேனைத்தலைவராயும் அமைந்துள்ளார்கள் அன்னவர் நும்பாலடைவர் அரசர்காள்! நீவிர் அவர்களை வணங்கித் திறை தருவீராயின் நுமக்கும் நும்செல்வத்திற்கும் துணையுங் காவலுமாவர், மறுத்திரேல் மாள்வது திண்ணம்; என்ன நாற்றிசை மன்னர்க்கும் நவின்று இசைந்தார் இன்னார், இசையார் இன்னார் என்பதைநாடி இசைத்தனர். கணிதநூலுரைத்த நல்லோரையில் பணில முதலிய பல்லிய முழங்க நாற்படைகளும் சூழ ஒன்பது வீரரும் தமிழ்நாட்டின் நாற்றிசையிலும் உள்ள சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளு, குடகம் கொங்கணம் கன்னடம், கொல்லம் தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம்: கடாரம், கவுடம், குசலம் என்னும் பதினேழு பாஷைகள் வழங்கும் எல்லாநாடுகளுக்கும், கடலுக் இடையில் உள்ள பல தீவுகளுக்கும், சேர பாண்டிய நாட்டிற்கும சென்றனர். பல மன்னர்கள் எதிர்கொண்டு வணங்கித் திறை வழங்கினார்கள். சிலர் போரிற்பட்டு தமது நாடு முழுதும் நல்கினர். சிலர் பொருது வெற்றியும் பகுதியும் வேண்டியளித்தனர். வீரர்கள் திரைகடல் சூழ்ந்த தரைமுழுதும் தம்மதாக்கி எங்கும் புகழ்க்கொடியை நாட்டி, காவலர் அளித்த கையுறைகொண்டு, கருவூர்க்குடிகள் களிகொண்டு எதிரேற்க, முசுகுந்தமன்னன் முகமலர வந்து சேர்ந்தனர். மன்னவன் அவரை முறையே தழுவிமகிழ்

தான். வீரர்கள் மலையெனக் கொணர்ந்த மாண்பொருளை, படைஞர் உள்ளம் நிரம்ப வழங்கி எஞ்சிய பொருளை எண்செய்து எண்ணில் நிதிவளர் களஞ்சியங்களில் நிரப்பிவைத்தனர்.

அமைச்சர் புரோகிதர் படைத்தலைவர் தூதர் சாரணராதியர் புடைசூழ முசுகுந்த மன்னன் கொலுவமர்ந்திருக்கையில் அவையிலுள்ளோர் அவாவியாங்கு வீரவாகு தேவன், மன்னர் மன்னற்கு பொன்முடி கவிக்க நன்னாள் குறித்தனன். வீரமார்த்தாண்டன் வரைந்தீந்த திருமுடிபுனை திருத்தாள்களைத் தூதுவர், மன்னர்க்கும் மற்றவர்க்கும் வழங்கினார்கள். நகரமெங்கும் மங்கலநிகழ நன்கு அலங்கரித்தார்கள். வீரரும் அக்கருவூராரும் வரும் தமரை வரவேற்று திருமுடிபுனைநாளை எதிர்பார்த்திருந்தனர். முனிவரும் மன்னவரும், மற்றும் யாவரும் தம்தம் வாழ்க்கைத் துணைவியரோடு வந்து குழுமினார்கள். பொன்னாலும், ஒன்பது வகை மணிகளாலும், குயிற்றிய கொலுமண்டபத்தின் நாப்பண் அரியணைமீது முசுகுந்த மன்னனைக் காதலியோடமர்த்தி, கங்கை முதலிய தெய்வ நீராட்டித் தேவர்கள் மலர்மாரி பொழிய, முரசமும் பல்லியங்களும் முழங்க, அந்தணர் வேதமந்திரம் சொல்ல மந்திரக் கிழவராதிய எண்மரும் முனிவரும் வாழ்த்த, நிறைகுடம் விளக்கம் சாமர மாதிய மங்கலப்பொருள்களை மங்கையர் தாங்க, மாகதர் சீர்த்தி விளம்ப, பாவலர்கள் பாமாலைபுனைய, மன்னவர்கள் வணங்கியேத்த சிவநேயராகிய மனுமாந்தாதா முதலியோர் தாங்கிய மணிமகுடத்தை மேன்மைதங்கிய வீரவாகு தேவன் எடுத்துக்கொடுக்க, வசிட்ட மகாமுனிவன் மன்னர் மன்னனாகிய முசுகுந்தச் சக்கிரவர்த்தியின் திருமுடியிற் சூட்டினன்.

மன்னர் மன்னன் யாவர்க்கும் மருந்தனைய விருந்தளித்துப்பரிசிலர்க்கு வேணடிய வேண்டியாங்கு வெறுக்கையாதியவழங்கி விடைதந்து மாதமும்மாரிபெய்ய, நிலமுழுதுங்களிதூங்கக் குடியுரிமை முறையோம்பி ஒருகுடைக்கீழ் அரசாண்டிருந்தனன்.

கூற்றுவனுக்குத்திருமுகஞ் செலுத்து படலம்.

வடபுலத் தரசர் தம்மை வயங்கொடு மீண்டகாலை
நடமயில் களிப்ப மஞ்சு தூங்குகா வைமி சத்தி
லடைவுற மறைவ லானோ ரருந்தவ னரிய இன்னே
கொடைதரப் பெற்றார் வீரர் கொடுத்தனர் மகட்குத் தானே. (1)

பெற்றகோத் தேவி யில்லான் பேணுசெய் யென்ன வோம்பி
மற்றதைப் பிரியாள் செவ்வேள் வான்பெயர் முதற்ப யிற்றி
யுற்றதோ ழியருந் தானு முயிரென மதித்துக் காத்துக்
கற்றவை வினவிக் கேட்டுக் களிப்பெறுங் கடலு வாழ்ந்தான் (2)

முத்துற ழெயிறு வேய்த்தோண் முகிழ்முலை யிவ்வா றிந்த
தத்தையை வளர்க்கு ஞான்று தானதைத் தருமன் றேவி
யெத்தியே பஞ்சரத்தோ டெடுத்தன டமரால் வெளவி
வைத்தன ளிருப்பச் சித்திர வல்லிதன் கிளியைக் காணாள். (3)

உயங்கின ளவலை மாறி யுற்றதெங் கென் றுசாவி
மயங்கின ளாயத் தாரான் மற்றதை யெங்குந் தேடிக்
கயங்கிள ரடுக்கி தழ்ப்பூங் கமலவாண் முகம்வெ யர்த்து
குயந்தலை கண்ணீர் சோரக் கோமகற் குரைத்தா ளன்றே. (4)

மன்னனீ தறிந்தான் பின்னர் வயம்பெறு வீர ராரு
மின்னதை யுணர்ந்தா ரென்னே யெம்முடைக் காவ னன்று
லென்னவுற் றறியு மொற்று லெங்கணு முலகி லாய்ந்தா
ருன்னவு மரிய கள்ள முனூற்றின ரெவரே யென்றார். (5)

கட்புலன் கதுவல் செல்லாக் கடற்படை சூழ்ந்தி ருப்ப
விட்புல னளவிட் டென்ன வியனெயி லரணஞ் சூழ
மட்பொது வறப்புரக்கு மன்னனை மதித்தி லாரா
யுட்புகுந் தென்னே வெளவி யோடிய திரும்பூ தென்றார். (6)

ஐந்தவித் தாற்றல் சான்ற வருந்தவர் மன கிழ்ந்து
தந்தபொற் கிளிக வர்ந்தார் தாமெதைக் கவரா ரென்று
வந்தவெஞ் சினமடக்கி மனக்குகை வீற்றி ருக்குங்
கந்தனின் னருளை யுன்னி யிருந்தனர் கலக்க மில்லார். (7)

உற்றுழி யுதவும் வேல னொண்மலர்ப் பாத முன்னி
நிற்றலும் வானி னின்று நீங்கலா வன்பி னீர்தெற்
குற்றகூற் றில்லகத்த துறைபசுங் கிளியை நீவிர்
வெற்றியுற் றடைதி ரென்று விளம்புரை கேட்டா ரன்றே. (8)

கேட்டலு முவகை பொங்குங் கேழ்கிளர் குந்தர் தம்மின்
வாட்டமின் முன்னோன் காலன் வஞ்சக மோர்ந்து மூன்று
நாட்டனு மைய னுன்மு னடுங்கிய தோரான் போலுந்
தீட்டியோர் முடங்கல் போக்கித் தெரிவதே நேர்மை யென்றான். (9)

நடுவனூர் காண்க நின்னி னமதுபைங் கிளியுண் டின்னே
கொடுதரற் றகுதி யின்றேற் குமரன திளையோர் போந்தா
லடுசம ராற்றி மீட்ப ரான்முசு குந்த மன்னன்
விடுசரு ளோலை யென்ன மேற்பொறித் தீந்தான் மன்னன். (10)

வேறு

வரைந்த திருபத் தனைவீர வாகு தெய்வப் படையொன்றில், விரைந்தங்
கேச வில்வணக்கி விட்டா னடுவ னவைநடுவே யிரைந்து விழலு மியா
திதுவென் றெடுத்தா னேடு படித்திடுவோன், கரைந்தா னறிந்தான்
மனித்தர்களைக் கருதார் விடுத்த தென்னென்றான். (11)

விடுத்த வோலை தனைக்கூற்றன் மென்சொற் செவ்வாய்க் கிளிகவர்ந்த
வடுத்த மனையா டனக்கோத வவளு மதனஞ் சீர்நோக்கிக்
கொடுத்த விசையா னென்செய்வான் கொண்ட மனைவி மேலன்பான்
மடித்துக் கணையில் விடேனென்ன விட்டான் வஞ்சி மாட்டன்றே. (12)

ஆளி தாங்கு மெல்லணையி லமர்ந்தா னிருப்ப முசுகுந்த
னீளுங் குந்தர் மற்றுமுள வமைச்சர் கவிஞர் நிலமாளுங்
கேளி ராய மன்னர்குழு கெழுமி யிருப்பக் கூற்றன்விடு
வாளி வீழ்ந்த தவையிடையே மன்ன னறிந்தா னதன்வரவே. (13)

தத்தை தராமன் மறுமொழியைத் தந்தான் சண்ட னென்முன்னஞ்
சத்து கடல்சூழ் மகேந்திரத்தோன் கணக்கி றுனைக் கவினுணவை
நித்தம் விருந்தீ வீரருளார் நேர்வ ரென்னு நினைவற்றான்
மத்தன் போன்றான் மானிடரென் றெம்மை மதியா னுயென்றான். (14)

என்று மொய்ம்பன் முகநோக்க வெழுந்தா னிளையோ ரெண்மருநக்
கொன்று சினத்தா ருடனெழுந்தா ருலையா வங்கி மெய்க்கிட்டார்
துன்றுஞ் சரமார் தூணிவலி தோலா வில்வாள் குந்தமொடு
நின்றார் தேரி விவர்ந்தனரா ணிமிருந் தோளார் விரைந்தன்றே. (15)

சமனூர்புரியின் றிசைநோக்கிச் சமரிற் றோலாச் சேனைமுனம்
நமனு மென்னத் தூசியுளார் நடப்பக் கூழை யணியொன்பான்
றமரார் புறப்பா டுறநோக்கித் தயங்கி மண்ணோ ருயிர்கவரு
மவனோ டானூர் குமரரிவ ரமருக் கெழுத லமைவென்றார். (16)

விண்ணோ டெல்லாந் தானையினுன் மேவுந் துகளம் பரஞ்சென்று
மண்ணோ டாக்க வதைவான்சேர் வயமாக் கொடிகண் மாற்றிடலும்
பண்ணூர் மணிவி மானத்துப் பாவை மாரோ லெவிலமையாக்
கண்ணூ ராரு முயிரீருங் காலன் கதியென் றுமென்றார். (17)

இரண பேரி தக்கைதுடி யியங்க ளொலிபோ யியமபுர
வரணந் தாக்க வதுகாவ லாற்றுந் தூத ரோடிநமன்
சரணந் தாழ்ந்து நின்றுநெடுஞ் சலதி பொங்கு மூழியென
வருணம் பாக்கந் தானைவெள்ளம் வந்த காண்டி' யெனவுரைத்தார். (18)

கொல்லு நமனென் றறியாராய்க் குந்த வீரர் வந்துளாரற்
செல்லு நம்மு னவர்செய்யுஞ் சேவ கந்தா னெனாக்கான்
வெல்லுங் கோலப் பேருருவம் வீசும் பாசஞ் சூலந்தாங்
கல்லும் வெளிய வென்றகரு மேனி யுடைய வந்தகனே. (19)

கருணை யொன்று மில்லாக்கிங் கரர்கள் கால தூதுவர்க்குப்
பெருநாள் வந்த திதுகாறென் பேரைப் புகன்றாற் பூமியுளா
ருருநா சஞ்செய் நமனென்ன வுள்ளங் கலங்கி யுலைந்திடுவர்
தெருளா திவரு மேல்வந்தார் சிறுமா னிடர்செய் செயல்செய்வார். (20)

மால்கொண் டென்னே முசுகுந்த மண்ட லேச னேவலினென்
பால்கொண் டேகும் படைவீரர் பாறப் பொருவிர் வம்மினெனக்
கால்கொண் டேகு மலையென்னக் கடுங்கட் சீறு கோடியெரு
நீல்கண் டன்ன மோட்டெருமை முதுகிற் பாய்ந்து நின்றனனால். (21)

முன்னங் கால தூதுவர்கண் முரண்மாய்ப் படைக்கை யேந்தினராய்ப்
பின்னுங் கொடிய கிங்கரர்கள் கதைவாள் பிண்டி சூலமுளார்
துன்னும் வீரர் படையுளரைச் சூழ்ந்து புகுந்து காவாளாற்
சின்ன பின்ன மாயுருளச் செய்தார் கைவன் மையினானே. (22)

எமைமா னவர்கள் பொருவதுமிங் கேற்குங் கொல்லோ வென்னவொரு
சிமைய மேந்தி விட்டெறிந்து சீறியார்த்துச் சினந் துறுத்துத், தமை
விஞ் சினரா யடுபோர்செய் தருவாய் மான வப்படைக ளெமைகா
வென்ன வெந்நிடலுங் கண்டா ரிமையோர்க் கிடர் தீர்த்தார். (23)

அவருள் வீர தீரன்கை யமர்த்தித் தூண்டிச் சயந்தனத்தை
யெவரு முட்கப் போர்க்களத்தி னிடையிற் போக்கிக் கார்முகத்திற்
றவறிற் பகழி யெண்ணிறந்த விட்டா னதுவுந் தழல்கான்று
சுவறக் கடலும் வருங்கால தூதர் மார்பிற் றுக்கினவால் (24)

தாக்கக் கங்க பத்திரமத் தடையிற் காலதூதுவர்க
ளார்க்கு மூறு செய்திலதா யழிந்த வந்த வமையத்தே
சாக்குஞ் சமர்க்கு மஞ்சாத தருவர் குலத்தை வேரறுத்த
சேக்குந்தக்கை வீரர்முனோன் சீறி வெகுண்டான் செருச்செய்வான் (25)

விந்தம் போலும் வில்வணக்கி வீசுங் கணையா னமன் படைஞர்
இந்திச் சிதறி யோட்டெடுப்பச் செய்து வீரன் போர்முகத்தின்
முந்தக் கண்டந் நடுவனெடு மூரிக் கூர்ங்கோட் டொருமகிட
முந்தி யுருமி னுரப்பி யெதிர் மாற்ற முரைக்கு மானிடனீ. (26)

கூற்றென் றென்னை யறியாயோ கொதித்துப் போர்க்கிங் கெழுந்
தனையான், மாற்ற வல்லா ரென்வலனை மற்றார் மாளா தேகுதலே
யேற்ற செயலென் றறிதியென வெண்மர் தலைவன் வாயுணக்கே
ளூற்ற லுண்டே லமர்புரிக வன்றேற் கிளியைத் தருகென்றான் (27)

மிக்கச் சினந்தான் கட்பொறிகள் வீச விருதோள் வீங்கவக
முட்கக் கால பாசத்தை யெடுத்தா னுறுத்தான் முத்தலைவே
னக்குத் தொட்டான் கையேந்தி நடுவனின்று னதுகண்டான்
செக்கச் செவந்த வீட்டிவல தேவன் வீர வாகென்பான். (28)

வேறு

ஆலமும் வாரி யனலுஞ் சிறுக வகன்றசினக்
கோலமு நீலப் பகட்டிற் பகட்டுக் கொடுமையுநின்
சூலமும் பாசமு மென்செயு மிக்கெழு சோதியசெவ்
வேலவன் றண்ணரு ளெற்குள துன்றனை வீட்டுமரோ. (29)

நடுவனென் றேன்பெயர் பெற்றனை சற்றுள நாணமிலி
தொடுதனன் றேபிறர் கைப்பொரு ளின்மனை துன்றுகிளி
யிடுகிலை மேற்கொடு போர்பொர வந்தனை வெய்யசாக்
கொடுபிணிப் பேனினிக் கூற்ற நினைவயங் கொள்குவனே. (30)

வெற்றியுற் றாரெவர் காலனை வீயா முழுமுதலோன்
பற்றுமுற் றுந்துறந் தன்னவன் றன்னருட் பற்றிவினை
முற்றுமற் றான்றி முன்னும் பகையுற வோடுவினை
யுற்றவர் பாசப் பிணிப்பினின் றெவ்வகை யுய்குவரே. (31)

என்றுரைத் தானிவன் றன்னொடு போரெதற் கென்றுமனங்
கன்றித்தன் பாசத்தை வீசினன் காலனுங் காக்கவரு
ணின்றென வாறெழுத் தோதின னீட்டிலை யேறெறிந்தா
னொன்றிய வுள்ளத் துமையவ டந்திடு முத்தமனே. (32)

மேல்வருங் காலன் கயிற்றைக் கொடுசென்று விட்டவவ
னீல்கொண் டிருண்ட வுடலம் பிணித்தது நீடுகைவேல்
மேல்கொண்ட விண்ணவ ரேனும் பிறர்பொருள் வெஃகியதின்
மால்கொண் டவர்க்கிடர் வாராது நிற்பவு மற்றுளவோ. (33)

விண்மதித் தேத்திடு வித்தக வீரர் பெருந்தகையே
கண்மதி யாதுகட் டுண்டன னென்னிற் கவர்ந்திடுகின்
பெண்மதி கிள்ளையைத் தந்திடு வேனெனப் பேசினனு
னுண்மதி யுய்த்துணர் வில்லவர்க் கின்ன லுறுமலவோ. (34)

இன்னணங் கூற்றுவன் கூறலு நன்றென் றிருகுபிணிப்
பின்னலி னீக்கின னேந்தலுந் தன்னரி விடத்திருந்த
மன்னிய பைங்கிளி தந்தன னந்தகன் வஞ்சியை நேர்
துன்னினர் யாவருந் தொன்முடிக் கோமகிழ் தூங்கினனே. (35)

அந்தகன் றன்னிட மீட்ட பசுங்கிளி யாரமுதாய்
வந்த மகட்கணிற் காட்டினர் தந்தனர் வாங்கினளாற்
சிந்தை மகிழ்ந்தன டைங்களி யூட்டிச சிறப்புறுவாள்
முந்தைந ணுளென வாங்குவ கைக்கடன் மூழ்கினளே. (36)

ஈட்டும் புகழோ ரரசமா தேவி யிழந்தகிளி
மீட்டுக் கொணர்ந்ததை யோகினன் வில்லவன் மாட்டிருந்த
வாட்டமி லாமகப் பேறுறு மாங்கனி வாங்கி மகண்
மாட்டகந் தந்த சரித மெடுத்து வகுத்துமரோ. (37)

கூற்றுவனுக்குத் திருமுகம் செலுத்து படலம் முற்றிற்று.

ஆக படலம் 16-க்குச் செய்யுள். 564

பிள்ளை யாருயிர்க் குறுந்துணை யாத்தனிப் பேறெய்துங்
கிள்ளை யாரிவண கொடுவரு கென்றுட லங்கீறிக்
கொள்ளை யாருயி ரெறிநர குறவடுங் கூற்றுயிர் நனிசோர
வள்ளி யாவரு நடுங்கத்தந் திருமுக மேசெலுத்தொண்குந்தம். ஈட்டி
யெழுபது

வீரவாகாதியர் திக்குவிஜயம் செய்யச் சென்று வடநாட்டு மன்னர்களை வெற்றியுற்றுத் திரும்பு காலையில் நைமிச வனத்தில் ஒரு முனிவர் கொடுத்த அரியகிளிப்பிள்ளையை அவர்கள் தம் அரிய மகளும் மன்னர் மன்னன் தேவியுமான சித்திரவல்லிக்குக் கொடுத்தனர். அவ்வம்மையும் அவ்வரிய கிள்ளையைத் தன் ஆவியென மதித்து, தீங்கனி முதலியன பாங்குறத் தந்து, அறுமுகன் திருநாமங்களையும் மற்றும் இனியமொழிகளையும் பயிற்றி, அதனுடன் கொஞ்சிக்குலாவி வறிஞன் ஓம்பும் செய்மயென ஓம்பி வளர்த்து வந்தனள். கிட்டுதற்கரிய அக்கிள்ளையின் அருமையைக் கேள்வியுற்று கூற்றுவன் மனையாள் அதனைத் தான் பெறவேண்டித் தன் தூதுவரால் ஒருவருமறியாத வாறு பஞ்சரத்தோடு கவர்ந்து கொண்டனள்.

தான் அரிதில் வளர்த்துவந்த அஞ்சுகத்தைக் காணாத சித்திரவல்லியம்மையார் தேடிக்கிடைக்காததால் உடல்வாடி உள்ளங்கலங்கி முகம் வெயர்த்துக் கண்ணீர் சோரத் தன் காதலுள் குமைந்தனள். அந்த

யிந்த அரையன் வீரர்க்குரைத்தனன். அவரும் ஒற்றால் உலக முற்றுந் தேடியும் உள்ளவிடந் தெரியாது திகைத்து. கண்ணிமை கொட்டாமல் காக்கும் காவலையும், கடல்போலும் படைகளையும், காவலனாணையையும், எம மாற்றலையும் பொருட்படுத்தாது கிள்ளையைக்கவர்ந்து சென்றவர் எத்தகையர் என்று கவன்று உற்றவிடத்துதவும் வெற்றிவேற்குமரன் திருவடிகளை உன்னினர்.

அப்போது அறுமுகப்பரன் திருவருளால் வீரர்காள்! கவலன்மின் அக்கிளிப்பிள்ளையைக் காலன் மனைவி கவர்ந்தனள்; நீவிர் அக்காலனை வெற்றிகொண்டு அடைவீராக என்று யாவருங் கேட்குமாறு வானுரை யொன்று வழங்கியது. அவ்வுரையைக் கேட்டலும் உவகை பொங்கி வீரர்முன்னோன் மன்னவனோடு ஆராய்ந்து, கூற்றுவனார்காண்க, எனதரண்மனையில் வளர்ந்த கிள்ளை நின்மனையினகத்த தென்று கேள்வியுற்றேம் அதனை இன்னே கொண்டுவந்து தருக; இல்லையேல் நம்பக்கல் உள்ள வீரர்கள் நின்னைச் சமரில் பொருது புறங்கண்டு மீட்பது உறுதி எனவரைந்த திருமுகத்தை தெய்வக் கணையொன்றில் வைத்துவிடுத்தனன். அக்கணை காலன்முன் சென்று விழுந்தது, விழுந்தகணையை எடுத்து அதன்கண் வைத்தனுப்பிய திருமுகத்தைக் கண்டகாலன் தன்மனையாளிடஞ் சென்று, திருமுகம்வந்த செய்தியைத் தெரிவித்துத் தருமாறுவேண்டினன். அவள் அதற்கிசையாளாக தன்மனைவியின்கண்ணுள்ள அன்பால் தானும் ஓர் நிருபமெழுதி கிளியைத்தரமுடியா தென்று அவ்வண்ணமே செலுத்தினன்.

காலன்விடுத்த கணையோலையைக் கண்ணுற்றவீரர், அன்னோன் செருக்கைக் காண்போமென்று படைகள் புடைசூழச் சென்று, காலனூரை முற்றுகையிட்டு எதிர்த்துவந்த கால கிங்கரரை வாட்டலும் கூற்றுவன் கொதித்துப் போருக்கெழுந்து வீரர் முன்னவன் விளம்பிய நன்மொழியைக் கேளாது பொருது தோற்றுக் கிளியைத் தந்து குறையிரந்து வேண்டினன் நமனிடம் வெற்றியையும் கிள்ளையையும் பெற்று வீரர்கள் முன்போல் கொஞ்சிக் குலாவிமகிழ்ந்திருக்குமாறு அஞ்சுகத்தைத் தாம் பெற்ற வஞ்சிக் களித்தனர்.

மகப்பேற்று மாங்கனி தந்த படலம்.

மாந்தரில் வரையா தீவோன் மலர்பொதிந் திலகும் வாசக்
கூந்தனல் லாரிற் கொண்கன் குறிப்பறிந் தொழுகுங் கற்பா
ளாந்தனி யுளத்தைச் செற்றோ ராற்றல்சேர் வீரர்தம்மில்
வேந்தரில் முகருந் தப்பேர் வேந்தனே றெந்தோ ளம்மா. (1)

கல்விபொன் புகழோ டாற்றற் காமுறு மக்கள் வெற்றி
நெல்லுறு நுகற்சி நல்லூழ் நிறையறி வழகு வாழ் நாள்
புல்லுநோ யிலாமை யோடு பொருந்துணி விளமை நன்மை
மல்கிய பெருமை யென்ன வழுத்துவ ரீரெண் பேறே. (2)

கண்ணிரண் டென்ன வொக்குங் கருத்தொடு கலந்த காதற்
பண்ணுறு மொழியாள் வேய்த்தோட் பன்னியோ டுறையு நாளிற்
புண்ணுறு நெடுவே லேந்தும் புரவல னெல்லா முற்று
மெண்ணிரண் டெய்து பேற்றி னேந்துநன் மகப்பே றில்லான். (3)

குழலினிற் றேனிற் பாலிற் கொஞ்சுகிஞ் சுகத்திற் கூறு
மழலையந் தீஞ்சொ லின்ப மண்ணலை புழுதி யாடி
மழவிளங் கன்றின் வந்து மார்புறத் தழுவு மின்பங்
குழவியிங் கிலர்க்கெச் செல்வங் கூடினுங் கூடு மோதான். (4)

நடவுமைம் படைமார் போடு தவழ்ந்திரு கைய ளாவு
மடகலை யடிசி லேனு மமுதமா மடகு வேய்ந்த
குடிலுறை வாழ்வென் றாலுங் கோவரண் மனையின் மேலாக்
கடிகமழ் குதலைச் செவ்வாய்க் கான்முளை யுளார்த மக்கே. (5)

என்றுளே யெண்ணி வேந்த னேந்துசீர் வீர ராயோர்
துன்றிய வவ்வையி லெற்பின் றொல்புவி காக்கு மைந்த
னின்றிய குறையொன் றுண்டா லெனவுள நைந்து ரைத்தாற்
கன்றறிந் தவையொன் றுண்டென் றறைகுவன் மொய்ம்ப னன்றே. (6)

வடபுலஞ் சென்று வாகை புனைந்தவ னின்று வந்து
குட்புல மடைய வாங்குக் கண்டனங் குழவிப் பேற்று
நெடுஞ்சுவை கனிசெறிந்த நீள்சினை மாவொன் றண்ணு
லுடையவன் கேர ளக்கோ வுறிலவண் பெறலா மென்றான். (7)

பண்ணுள மொழியை யீந்த பாக்கியன் புகலக் கோமான்
மண்ணுள வரையுஞ் சீர்த்தி வயங்குற வெனக்குத் தந்தீ
ரெண்ணள வில்லாச் செல்வ மீந்துளீர் கனியை நீவிர்
நண்ணுதலரிய தேயோ நாடினு லென்றா னன்றே. (8)

அர்க்கவ னியம்ப வியானே யருங்கனி கொணர்வ லென்னப்
பொங்கிய மள்ளர் சூழப் பொருகுணில் முரசம் விம்ம
மங்கல வியங்க லிப்ப வான்றொடு கொடிஞ்சித் திண்டேர்ச்
சிங்கவே றென்ன வேறிச் சென்றனன் மொய்ம்பன் மாதோ (9)

வேறு

தாவும் பரிமா வுகைத்திரதந் தன்னைத் தாண்டி வண்டுகிண்டத்
தூவு மகரந் தப்பொடியைத் தூய்ப்ப வரும்பு கட்டுடைந்து
மேவு நறவ மூற்றெடுக்கு மென்று மரையிற் பெடையுலவச்
சேவ லன்னஞ் சிறகாணைத் துலவிச் சிலம்புந் தடங்கடந்தான். (10)

கதிர்கான் றொளிசெய் முத்தமணி மாலை மலைமென் முலையலைக்கும்
பொதுவர் மகளிர் கற்றுப்பின் போந்து செலற்கு முழுமானி
னதிக வயர்வு நீங்கற்கு மாயர் வேயின் குழலூது
முதிரைக் கதிரின் விளைவகலா முல்லை யென்னு நிலங்கடந்தான். (11)

வசந்த நாறும் பூங்கொம்பர் வளைய நாறு மீயீட்டும்
பசுந்தே னிறாலம் பான்மதியின் பிறைவெண் கோடு தாக்கத்தேன்
கசிந்த விரத மீரறிவு ளிப்பி யுண்ணுங் கல்லகத்தின்
வசிந்த குறவர்க் கின்பருட்பெண் மணிகள் வளையி னொலிகண்டான் 12

இன்ன வளங்கூர் கேரளத்தி லிமையா நாட்ட வரம்பையரிற்
பொன்னி னல்லா ருலவுமெழி னகரின் புறம்புக் கறிவிப்ப
மன்னன் மலையன் வரிசைகொடு வரவேற் றெதிர்கொண் டகமலரத்
தன்ன தவைக்கண் கொண்டேகித் தகவி னிருக்கை வழங்கியபின் (13)

ஆழி சூழு முலகமெலா மடங்க வொற்றைக் குடைநிழற்ற
வாழி முசுகுந் தர்க்குதவு வள்ளா லெவனோ வந்திவண்
சூழு மென்னா லாவனவிங் குளவோ சொல்லி னுன்னியன
ஆழி னுனாற்று வேனென்ன வுரைத்தா னுரையினாலன்றே. (14)

சீலத் துயர்ந்தா னதுகேளாச் சிறிய நன்றி யேனுஞ்செய்
காலத் துனாற்றி னதுவொப்ப தில்லென் றுன்னிக் கற்றுணர்ந்தோர்
ஞாலத்தின்மா ணப்பெரிதா நவின்றார் பிறர்க்கா நன்றிக்கே
கோலவுடலைக் கொடுத்துள்ளா னிறைவ னென்னிற் கூறுவதென் (15)

மலைய மாணின் சந்தான மாவின் கனியென் மகளுண்டா
னிலையாம் புவியி னந்தமது நிருபன் றனக்கோர் மகவுண்டாந்
தொலையாச் சீர்த்தி யுனக்குண்டாந் தோன்று லதனைத் தரினென்று
முலையா நண்பு முண்டாமே லுறுதி யுண்டா முரைத்திடினே. (16)

செனித்த காலை யனதென்னுஞ் செல்வப் பொருளைச் செகதலத்தி
லனித்த மாகி யிறக்குங்கா லார்தான் கொண்டு சென்றார்கள்
தனித்த சிவனே வினைக்கீடாய்த் தந்தா னென்னு மறமுணரு
மனித்த வினத்து ளீவாரே மறவி தனக்கு மேவாரே. (17)

ஆய முறையாற் செய்ந்நன்றி யமையுஞ் சால யார்க்குமெனத்
தூய னுரையை மதியாது யிளையா வுளத்தன் றனுக்குறவா
னேய பொருளி னருமையினை யெண்ணா திசைப்போர்க் கெளிதுகனி
யீயவொண்ணா தெனச் சொற்றா னீயா றுணர்ந்த திதுவன்றோ. (18)

வையெற் கதிர்வேற் கரவீர வாகு குடக்கோன் மறுமொழி கேட்
டைய னுலகாள் முசுகுந்தர்க் கமைச்ச னென்ப தரியாய்கொல்
நொய்யிற் பிளவுங் கொடா நோன்புன் னோன்பு போலுங் கைப்பொரு,
டான், வெய்யிற் கொதுங்க வுதவாத வுடம்பி னிழலாய்வீயாதோ 19

மற்றோர் முறைநீ கொடேனென்னு மாற்றங் கூறி லுனைப்பிணித்து
முற்றா மூலமான் மகடுணைவன் றவத்தாற் பெரிய முசுகுந்த
னற்றா மரைத்தாட் பணியவுனைச் செய்வே னென்ன நக்குறுத்துச்
சற்றாய் வின்றி யாங்கிருந்த தானைத் தலைவர்க் கீதுரைப்பான். (20)

தனியனாகி யீங்குற்றான் றானையுளவும் புறம்பிலுள
கனியை வினவுகின்றானில் லென்னிற் கனிந்து பேசுமொரு
பனிநன் மொழியு மில்லையெனைப் பற்ற நினைந்தா னெனதுபெரு
முவினுக்கே யெதிரானான் முடித்தி ரிவனை யென்றனனால். (21)

வேறு

கூறிய வளவி லன்றோர் குறுகலு மரியா னேற்றிற்
காறிய தன்கா டல்லா தயலதென் றஞ்ச லுண்டோ
சீறின னெழுந்தா னார்க்குஞ் சிங்கவே றொலியைக் கேட்டுப்
பாறின விலங்கு மான வெருவின படைக ளெல்லாம். (22)

பாய்ந்தன னெழுந்தான் மத்திற் படுதயி ரெனக் கரத்தா
லேய்ந்தெனக் கலக்கி னானா விரிந்தனர்சிதறி வீழ்ந்து
சாய்ந்தன ரனந்த மன்னர் தலைகரந் தோள்க ளற்று
மாய்ந்தன ராகக் கண்ட மலையமான் சினந்தெழுந்தான். (23)

கூசுத வின்றி யிங்கண் கொடுஞ்சமர் விளைத்தா யுன்னைப்
பேசுமுன் மாய்ப்ப னென்னப் பெயர்ந்தனன் புறத்தி லுற்று
வீசினன்! வில்வணக்கி வில்லவ னெண்ணில் வாளி
தூசென! நினைந்தன் னோன்வில் துணித்தனன் மொய்ம்ப னன்றே (24)

வில்விற வெகுண்டு வாளை விரைந்தெடுத் தார்த்துப் போந்தான்
மல்லுயர் தோளா னந்த வாளையுந் துணித்து வீழ்த்திக்
கல்லுயர் மலைய மானைக் கலங்கிடப் பிணித்துத் தேரிற்
புல்லினன் விரையிற் பற்று பொருளொடும் வஞ்சிக்கன்றே. (25)

அரக்கெரி குமுதச் செவ்வா யரிவையர் கவரி வீசச்
சரக்கனக் குந்தவீரர் வருகரு மங்க ளோதப்
பரற்கரு மைந்த னாகும் பன்னிரு கரத்தெ மண்ணல்
வரம்பெறு செங்கோ லேந்து மன்னவைக் களங்கொண் டிற்றான் (26)

தேரினின் றிழிந்து போந்து சேரனைப் பிணிப்பு நீக்கிப்
பேரவைக் கண்ணிறுத்தப் பிழைபொறுத் தருடி யென்ன
வீரதி லன்னோன் வேண்ட நெடுந்தகை மன்னர் மன்னன்
கூரருட் கண்ணா னோக்கிக் கூறுவ னினிது னன்றே. (27)

பெற்றதிங் கெனதென் றுன்னார் பிறிதுகைம் மாறென் றெண்ணா
ருற்றவர்க் குதவுந் தக்கோ ருறுதியை யிகழ்ந்தா யாதி
நற்றவந் தரவடைந்த நறுங்கனி யீகலாத
கொற்றவ நின்கருத்தைக் கூறுதி யென்றா னன்றே. (28)

என்றலுங் கொணர்ந்தி யானே யிசைவுடன் கொடுப்ப னென்னச்
சென்றுமாங் கனியைத் தந்தான் சேரலன் செருநர்க் காய்ந்து
மன்றலார் வாகை வேய்ந்த மன்னவன் மகிழ்வு கூர்ந்து
தன்றிரு மனைவி யுண்ணத் தந்தனன் முருகற் போற்றி. (29)

திருவனாள் கனியை யுண்டு கருக்கொடு திங்க ளார
மருவறு கனிகாய் வேண்ட மகளுளம் வேட்ட வாறே
யருமருந் தனைய வாய வன்னவை வீரரீயக்
கருவுயிர்த் தனளா விம்பர் காலைச்சேர் கதிரி னன்றே. (30)

நாளொடு கோளுங் கூடு நற்றின முற்ற காலை
வேளொடு பிறந்தார் பெற்ற விளங்கிளை பொன்னு ருக்கி
நீளிரும் புவியில் வீழ்த்த நேர்மைபோ லுலக டங்க
வாளுமா றீன்றா ளார்க்கு மருமருந் தனைய சேயை. (31)

மங்கல மகப்பே றுற்ற மகிழ்வினா லிறையைப் பூவி
லெங்குமே ழாண்டொ ழித்தா னிருஞ்சிறை யவரை நீத்தான்
சங்கரன் முதல தேவ தளிக்கியன் றனசெய் வித்தான்
புங்கவர் வரியோர் யார்க்கும் பொன்பொருள் வெறுப்ப வீந்தான். (32)

சாதகன் மங்க ளாதி தகைபெறு கருமை மாற்றி
பேதமி லங்கி வன்ம னென்றெழிற் பேரு மிட்டுச்
சீதவான் பிறைக்கொ ழுந்திற் சேய்நனி வளரச் செந்தி
ஞாதனைத் துதித்தி ருந்தா னராதிப னினிதின் மாதோ. (33)

ஆவினங் கன்று மாய்ந்த வரும்பழி யகலத் தன்னோர்
கோவிள மகனைத் தேர்க்காற் கொடுத்தவன் குலத்து மேலோய்
தேவர்கோன் வழிபா டாற்று தியாகரைக் கொடுக்க வாங்கிப்
பூவுல கதனில் வீரர் வைத்தமை புகல லுற்றாம். (34)

மகப்பேற்று மாங்கனி தந்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம். 17-க்குச் செய்யுள். 598.

வடிவே லெடுத்த மனுதுங்க வளவன் றேவி வெதுப்பாற
முடிவேன் வியிற்செந்தீத் தருகான் முளைமாங் கனிக்காக் குடநாட்டை
செடிவே ரறுத்துச் சிறையிட்டுச் சென்னி வியப்பத் திறை போலக்
கொடிவாள் முரசு களிறுபரி யிரதங் கொடுக்குஞ் செங்குந்தம்:—
எட்டியெழுபது.

மக்களிற்சிறந்தோன், வரையாது கொடுப்போன்; மங்கையரிற்சிறந்தவள், கொழுநன் குறிப்பறிந்தொழுகுங் கற்புடையாள்; வீரரிற்சிறந்தோன், விரைந்தோடித்தாவும் மனதை வென்றவன். அதுபோல் மன்னரிற் செங்கோன்மையாற்சிறந்த முசுகுந்தமன்னன் சிறந்தோனவன். பொன், புகழ், ஆற்றல் நன்மக்கள், வெற்றி, கல்வி, அறிவு, அழகு, நல்லூழ், நெல், இளமை, நுகர்ச்சி, துணிவு, நோயின்மை, பொறுமை, வாழ்நாள் என்னும் பதினாறுபேற்றில் மக்கட்பே றென்றில்லாக் குறையை, ஐம்பெருங் குழுவினரும் அண்மிய அவையின்கண் அவ்வரசன் வெளியிட்டான்.

அது போழ்து வீரவாகுதேவன், அண்ணலே! வருந்தல் யாம் மண்ணரசர்யாரையும் வயங்கொள்வான் வேண்டி திசைதோறுஞ் சென்றகாலையில், மேற்றிசையில் மகப்பேறுதரும் இனியகனிகள் நிறைந்த மாமரமொன்றிருப்பதைக் கண்டறிந்தனம், அது சேரனாட்டையாளும் மலையமான் என்னும் அரசற்குரியது ஆங்குறின் அதனைப் பெறலாமென்றனன்.

முசுகுந்தமன்னன் வீரர் முன்னவனை நோக்கி ஐயனே! உலகுள்ளவரையில் இலகுபெருங்கீர்த்தியை எனக்களித்த நிற்கரியதியாது நீவிரே சென்று மாவின்கனி கொணர்ந்து தருகுதி ரென்னவேண்டினன். அவ்

வண்ணமிசைந்த செங்குந்தத்தலைவன் மருமகனிடத்து விடை பெற்று நால்வகைச் சேனைகள் சூழ இரதமேறிச் சோள நாட்டையடைந்து, மலையமானால் வரவேற்கப்பெற்று, இருக்கையில் இருந்துழி அவ்வரசன் நின்வருகையாதெனவினவ, வந்தவாறு விளம்பினன்.

கேட்ட சோளன் ஈதலின் நன்மையை ஓதி உணர்ந்திலன் ஆதலின், அல்லாத மாந்தர்க்கறங்கூற்றம் என்னும் நல்லார் மொழிக்கிலக்காய், இடுக்கிட்டுக்கொடுக்க மனமில்லாவனாய், அருமையாய்ப்பெற்ற பொருளை தருகெனக் கேட்பது எவர்க்கும் எளிது; பெற்ற அருமையை மற்றவர் அறிவரோ! தவப்பேற்றாற்பெற்ற மகப்பேற்றுமாங்கனி தரவொண்ணாதென மறுத்தனன். வீரவாகுதேவன் அன்னவனை விளித்து அரசனே! பிறர்க்கொரு சிறுநன்றி பயக்குமெனினும் தமது உடலையும் உதவுவர் அறிஞர் மன்னர்க்கு மன்னனான முசுகுந்தமன்னன் மகவிலேனெனப்படும் இன்னல் நீங்குதற்கான ஒரு மாங்கனியைத் தரமறுக்கின்றாயோ! பொன் பொருள் நிலையென மதித்தாயோ! என்னை யறியாயோ! இனியொருமுறை மறுத்துரைக்கில் நின்னைத் தேரிற் பிணித்துக்கொடுபோய் முருகன் அன்பிற் பெரியனான மன்னர் மன்னன் தாட்பணியச் செய்குவல் என்றனன், என்னவே சோளன் தன்னந்தனி வந்தோர்க்குச் செருக்கென்னை அதனைக்காண்பேனெனக் கோபித்துத்தன் சேனைத்தலைவரையுஞ் சேனைகளையும் வீரனைக் கொல்லுமாறேவினன் வீரன் அவரனைவரையும் தென்றிசை சேர்த்தபின் தானும் எதிர்த்து வலி தொலைந்து நலிந்துதேரிற் பிணிப்புண்டு, முசுகுந்த மன்னவன் பாலுற்று, அன்னவன் கடைக்கணிப்பால் கட்டவிழ்க்கப் பெற்று காலிற்பணிந்து, செய்தபிழை பொறுத்தியென வேண்டி விடைபெற்றுச் சென்று தானே கொண்டுவந்து மகிழ்வோடு மாங்கனி நல்கினன்.

முசுகுந்த மன்னன் அம்மாங்கனியை முருகன்றிருவருளை யுன்னி திருவனைய மனைவிக்களித்தனன். அன்னவள் அதனையுண்டு கருக்கொண்டு நாளுங் கோளும் நலமுற நின்ற நல்லோரையில், இளங்கதிரென்ன அழகிய ஓர் மகனை யீன்றனள். மகப்பேறு பெற்று மகிழ்ந்த மன்னன் தன்னுள முழுதுங் களிதூங்கத் தன்மகற்குச் செய்கடன் யாவும் சிறப்புறச்செய்து, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாய் வளர்க்க, அங்கிவன் மன் என்னும் பெயர் புனைந்த அவ்விளவரசு பிறைக்கொழுந்தென வளர்ந்து வந்தனன்.

மன்ன னின்னண மகிழ்வுட னிருப்புழி மகவான்
பொன்னி னாட்டினில் வலாசுர னென்பவன் பொருது
பன்னெ டும்பகற் கொடுஞ்செய லாற்றிடப் பாருண்
மன்னர் மன்னனு முசுகுந்த வேந்தனை மதித்தான் (1)

தூயதா யுட னேயிலா யாழ்வலீர் தாதாப்
போய ழைத்திவண் வருகிறேன் புறவிடப் பொர்க்கும்
பாய சீருடை வஞ்சியி லெஞ்சலி லிறைவன்
கோயி லிற்புகுந் தின்னணம் வாழ்த்தினர் குறிப்பால் (2)

ஆழக டற்றுறை யாம்பா வடிவுடை யசுரன்
போழ்ப டச்செயு மறுமுக னருளெனும் புணரி
மூழ்கு மாதவ முசுகுந்த வேந்தனீ யென்றும்
வாழ்க வாழ்கவென் றேத்தினர் வாழ்த்தினர் வகுப்பார் (3)

கற்ப கத்தரு நீழலி லரசுசெய் ககனன்
வெற்ப டக்குதற் காணுமா றெண்ணியோ வெற்றி
முற்ப டச்செயும் வீரரை முன்னியோ வறியே
னிற்கொ ணர்ந்திடப் பணித்தன னிருபனே யென்றார் (4)

திவவி யாழ்வல ரிவ்வணங் கூறலுஞ் செய்ய
குவல யம்பொது வறப்புரப் போன்மகிழ் கூர்ந்து
நவவ மைச்சரோ டெண்ணிமற் றவரொடு நாக
புவன முற்றனன் புரந்தரற் கண்டனன் புகுந்தே (5)

உழுவலன்பொடு வணங்கினான் முசுகுந்த னவனுந்
தழுவி னானனி வாழ்த்தினான் வீரரைத் தாழாச்
செழும லர்ப்பதம் வணங்கினான் சேவலங் கொடியோன்
கெழுமு தம்பிய ரென்றக மகிழ்ந்தனன் கிளப்பான் (6)

மாவ லானெனு மசுரர்கோ னின்னகர் வந்து
தேவ ரெவருந் திகைப்புற வெஞ்செருச் செய்வான்
மேவ லானைவெல் லாற்றலெற் கில்லையிவ் வேளை
நீவி ரேகினால் வென்றியா மெனச் சொலி னின்றான் (7)

சூரர் யாரினும் பெரியனோ வவன்வலந் துணிப்பாம்
போரி னங்குக னருளினாற் றேவர்முன் போந்து
நேரி னின்றமர் புரிகயா னோர்குறு மென்னச்
சீறி தென்றுமற் றவ்வணஞ் செய்தனன் றோர்ந்தே (8

அற்றை ஞான்றமர் புரிகுவான் வெங்களத் தவுணன்
முற்றி னன்பெரு முரசொலி விண்ணினின் றதிர
மற்றை வல்விறல் வஞ்சகத் தானவ ரோடும்
வெற்றி வேடனை வாழ்த்தியே வீரர்பின் சென்றார் (9)

முந்தத் தேர்கடாய் முனைக்கணை யளவில முடுக்கச்
சிந்து வாரமு நிறுத்தியந் நாரியைத் தெரித்து
வந்த விண்ணவ ரச்சுற மாமுகி லுறுமி
னந்த ரத்துடுச் சிந்தவ லாசுர னதிர்த்தான் (10)

மருத்து வன்றனைக் காண்டிலம் வந்திவ னுற்று
ரொருத்த ரோவல ரான்பது பேருள ரென்று
வுருத்த மாமத வாரண மத்தகத் தும்பர்
பருத்த கோளரி யாமென நின்றனன் பகர்வான். (11)

முன்ன மெங்கிளைச் சூர்முத லொழித்துளா ரெமக்கு
மொன்ன லாரிவ ராயினர் முசுமுக முற்ற
சென்னி நோன்பினிற் சேர்ந்தனர் வஞ்சியி லென்னச்
சொன்ன செய்தியைக் கேட்டனன் சீறினன் சொல்வான். (12)

நெருந லென்னுடன் போர்செய நிலைத்திடா தோடி
வெருவி னனிவர் துணைசெய வேண்டினன் போலும்
கருவு கொண்மக வானவன் கருத்தையின் றறிவல்
பொருமி னென்றனன் புறங்கொடாத் தகுவரைப் போற்றி. (13)

பொங்கு சங்கமின் றிசைத்தனர் தானவர் புகுந்து
கங்கபத்திரந் தண்டுவா ளகில்கர மேந்தி
புங்கவப் படை யஞ்சுமா பொருதன ரிவரும்
வெங்கொ டுங்கதத் தாற்றினர் புதியதோர் வெம்போர். (14)

வேறு

முட்டினர் பதாதி யாளர் முடுக்கினர் பரிமா வீரர்
கிட்டின மதமா வேழங்கிம்புரிக் கோட்டாற் குத்தி
தொட்டன ரெஃகம் பாய்மாத் தூண்டினர் முடுகித் தம்மி
லெட்டின ருருள வீசி யெறிந்தன ராக வாங்கே. (15)

தெய்வதப் படையுந் தோரார் படைகளுந் தாக்கக் காலு
மெய்களுந் தலையுந் தோ ளுவீற்று வீற் றுக வீழ்ந்து
னைவதா விரத்த வெள்ள மோடின நடனைப் பேய்கள்
கைகொடு குரவைக் கூத்தங் காடின கவந்தந் துள்ள. (16)

பூசலி லமரர் விஞ்சிப் பொருகணை யெண்ணி லாத
வீசலாற் றகுவர் சேனை விழுந்தன புரண்டு மாண்டு
நீசனு மியல வானா நெட்டுயிர்த் துறுமி னார்த்துக்
காய்சினச் செங்கண் வெய்ய கரியுகைத் துற்றா னன்றே. (17)

ஆனைமேற் கொண்டு நின்றா னசுரரைப் பொருத விண்ணோர்
தானையி னாக்கங் குன்றத் தன்வல முற்றுங் காட்டி
மானின நடுவுட் புக்க வயப்புலிப் போத்தில் வாட்டி
மானவே நம்பி மாரை யடைந்திது வகுப்ப னன்றே. (18)

தேவர்க்குந் தகுவருக்கு மென்றுமே தீரா வெம்போர்
யாவர்க்குந் தெரியு மன்றோ வாதலா னடுவு நின்றீர்
மூவர்க்கு முதல்வ னானோன் குமரர்காண் மொழிமி னென்ன
சேவற்கே தனற்குத் தம்பி தெளிவுற விதனைச் சொல்வான் (19)

தன்பெருங் குற்ற மாய்வார் தரணியிற் சிலரே வீணிற்
பொன்பெறு முலகர்க் கின்னல் புரிவது தக்க தேயோ
வன்னதை நீக்க வந்தே மாய்ந்துனக் காவ செய்தி
யென்னவல் வில்லிற் கோத்தங் கெய்தனன் கோடி கோலே. (20)

எண்மரை நிறுத்தி வீரர்க் கிளையவன் வலன்றொ டுத்த
புண்ணுறு கோலை மாற்றிப் பொருசிலை துணித்து வீழ்த்திப்
பண்ணுறு களிறு மாய்த்துப் படிறனை தனிப்பச் செய்தா
னுண்மகிழ் சசிம ணாள னுற்றன னவன்மு னன்றே. (21)

மற்றவன் வாட்கை பற்றி மலையென வரலும் விண்ணோர்
கொற்றவன் குலிசம் வீசிக் குறைத்தனன் வலான்சிரத்தை
செற்றனம் பகையை யென்னாத் தேவருட் களிகொண்டார்த்தா
ருற்றவன் வெற்றிச் சங்க மொலித்தனன் மகிழ்கொண்டன்றே (22)

வேறு

மருமலர்த்தொடை வாகுமு தலியோர்
மருவ மிந்திர னாற்பகை மாளுவித்
திருபெ ருஞ்சிறப் பேந்து வலாரியென்
றொருபெ யர்ப்புனைந் தாரவை யுற்றனரோ. (23)

குந்தரை முசு குந்தனைக் கொண்டுதன்
மந்திரத் தகஞ் சென்று மகிழ்வொடு
மந்தி வண்ணனற் கரும்பெறற் பூசனை
சிந்தை யுன்னினன் செய்ம்முறை யாலரோ. (24)

அம்மை யப்பனை யாறு முகனொடுஞ்
செம்மை யாற்றிருக் கோலந் திருத்தியே
யெம்மை யாளுடை யீசற் கணிவன
தம்மை நல்கித் தருமலர் சூட்டினான். (25)

ஆய காலமு னன்பு தழைத்தெழ
பாய்தி ரைப்புவி முற்றும் பரித்திடுந்
தூய னாமுசு குந்தன் றுளும்புகண்
பாய நீரொடு நின்றுப ரசுவான். (26)

வேறு

தனிநின்ற முழுமுதலே தணியாத சுடர்ப்பிழம்பே
கனிநின்ற வின்னருளே கலந்தெங்கு முயிர்தோறு
நனிநின்ற நல்லமுதே நடுகின்ற நன்மணியே
யினிநின்ற னருட்கடலிற் குளித்திடுமா றெய்துவனே. (27)

குரக்குருவ மருளிப்பின் குவலயத்து மன்னவரைப்
புரக்கவினி துரந்தந்தாய் புகழ்தந்தா யடியேற்கு
சரக்கொன்றை மலர்ந்தொளிருஞ் சடையுடையாய் நின்னடிக்க
ணுருக்குமுளத் தோவாத வழிபாடிங் குளுற்றருளே. (28)

புகழ்நோக்கி வறிதேயிப் பிறவியினைப் புறம்போக்கி
யிகநோக்கி யைவாய விந்திரிய வயமாகித்
தகவல்ல நெறிபற்றித் தளராதுன் னடிமலரிற்
புகவல்ல நெறிபற்றப் புரிவாய்நின் றண்ணருளே. (29)

அப்போது மண்டீகா லனல்வெளியென் றிவற்றாய
விப்பூத வுடறந்தா யிவ்வுடல முளவரையு
மெப்போது மியானெனதென் றெண்ணுநினை வற்றடிக்கே
முப்போது மலர்தூவி யாட்செய்ய முயல்வேனே. (30)

வேறு

இந்தவண நின்றுபர சேந்தலை மகிழ்ந்தே
யிந்திரனி டத்தெமை யியம்பினைகொ டேகிப்
புந்திமகி ழப்புவியிற் பூசனைசெ யென்ன
வந்திவணன் மற்றவன கிந்திடவ [illegible]றந்தான். (31)

பின்னர்வழி பாட்டினைமு டித்தமரர் பெம்மான்
மன்னன்முசு குந்தனை மகிழ்ந்தினிது நோக்கி
நின்னரிய கேண்மைகொடு நீள்பகை முடித்தே
னுன்னினைவெ னலடைவ தோதுகவீண் டென்றான். (32)

மல்குநிறை செல்வமுள வானவர் பிரானின்
னொல்குதவி லாதபெரு நட்புமுள தோருஞ்
செல்கதிய ளித்தருள்செய் தியாகரையின்றெற்கு
நல்குதியே நானிலமு ளார்பரவ வென்றான். (33)

என்றபொழு தத்திமைய வர்க்குளுய ரேந்தல்
முன்றுளவி னானிவரை முறையின்வழிபட்டான்
பின்றைநனி யன்னவனிடத்தரிதிற் பெற்றே
னின்றதனை யீவனெனு மெண்ணமுளத் தின்றி (34)

மயற்கொடு புரிந்ததனை மன்னனிட நல்க
செயற்கையிது வென்னமனுச் செம்மலும றிந்தா
னியற்கையென வாறுமுறை யிவ்வணமளித்தா
னயற்கரிய னாருளி னரசனும றுத்தான். (35)

வேறுசெய வின்றிதொல் விடங்கரை யளித்தான்
மாறுசொல வின்றியதை மன்னவனு மேற்றான்
கூறுபடு மற்றையவை யாறு மகிழ்கூர
வேறுமுகி லூர்திதர வின்பமுட னேற்றான். (36)

வேறு

பொய்யறு பொருளை, யீந்த புரந்தரன் காம தேனுற்
செய்யமு தூட்டி வாழ்த்தித் தெய்வதப் படைக ளீந்து
வையகமேக வென்ன வான்றொடு பொழிலான் முற்றுந்
துய்யநற் றிருவா ரூராந் தொன்னக ரடைந்தான் மன்னன்; (37)

கான்வழிந் தொழுகப் பூத்த கவின்பெறு துளவத்தாரோன்
றன்றிரு மார்பமேந்தத் தடந்திரைக் கண்ட லாட்ட
மான்றம ருகத்தெம் பெம்மான் மலைமகள் குமர வேளுந்
தோன்றிய விமான மாரூ ரமைத்தனன் றுகளிலாதான். (38)

தோற்றிய மற்றையாறு விடங்கரை வீரர் தோன்றக்
கோற்றிரு வான்மி யூருங் கோளரி யூர்நள் ளாறு
தோற்றெழின் மறைக்கா னாகை நாயகாருய வென்னும்
போற்றிய தலமோ ராறி லமைத்தனர் பூசித் தாரால். (39)

தேவர்கோ வான்ம பூசைத் தியாகரைத் தணந்த பின்னர்
காமரு பொன்னி நாடு கமலையைத் தணந்த வாற்றாற்
பூவுல"கானை யேறும் புலையனா யாரூர் வந்து
கோமறு குறு விழாவைக் கூறினன் பறைய றைந்தான். (40)

வீரரு முசுகுந் தப்பேர் வேந்தனுந் திருவி ழாவைப்
பாருளோ ரெவருங் காணப் பாங்குடனியற்றக் கண்ட
சிறிறற் புலமை நீங்கித் தேவர்கோன் பொன்னு டெய்தி
பேரியல் போக மூழ்கிப் பிறங்கின னின்பந் துய்த்தே. (41)

விண்ணவர்க் கரசனேக விமலருக் குரிய வாற்றி
மண்ணுலகாண்டு பண்ணுண் மாண்புடை மகன்றனக்கு
வண்ணமா மகுடஞ் சூட்டிவைத்தனன் மறுமைக் காவ
தெண்ணின னரசன் கான்சேர்ந் திருந்தவ மாற்றி நின்றான். (42)

ஆயிரம் யாண்டிப் பூவிலமர்ந்தனர் வீரர் தோன்றுஞ்
சேயொரா யிரத்துத் தொள்ளா யிரவராய்த்திகழ்ந்து வாழுங்
காய்கதி ரனைய குந்தக் காளையர் தம்மிற் சான்ற
பாய்புக ழனக னென்னும் பாலனுக்கீது செய்வார். (43)

காவக மரிகள் பாடுங் கச்சிமா நாட்டின் மேய
மாவடி நீழன் மாட்டோர் மணியணி மகுடஞ் சூட்டி
நாவடி யகலா தான நாடெழு பத்தி ரண்டாம்
பூவடி யுள்ள மன்னர் புகழ்ந்தனர் சூழ வைத்தார். (44)

பனகமா முடியி லேந்தும் பாருள குந்தர்க் கெல்லா
மினகுரு வாகிச் சைவ சமயமோ டெழில்வி சேட
மனகநிர் வாண தீக்கை யோடபி டேக மாற்றிச்
சனகதே சிகனை வைத்தார் சற்குரு வென்ன மாதோ (45)

அங்கிவன் மக்கோன் வீர ரருமருந் தனைய பாலர்
தங்களு ளளவளாவிச் சகதலம் புரக்க நீதி
துங்கவா கமங்கணுன்கு சுருதியா சாரமாய்ந்து
மங்களமாகப் பூவின் வாழ்கென விருத்திப் பின்னர். (46)

அந்தரத் தியங்க ளேங்க வாயிர வாண்டி னீற்றிற்
குந்தவே லேந்து வீரர் குமரனைக் கருதி நோற்றுக்
கந்தவேற் படைந்து பண்டைக் காலைசெய் தொண்டு பூண்டு
சுந்தரக் கார்த்தி கேயன் றுணையடி நீழ னின்றார். (47)

மாமறைப் பொருளாய்ப் பூவின் மன்னுயிர்க் குயிராய் நின்றோன்
காமருகைலை யென்னுங் கதிவள ரமலன் பொற்றாட்
டாமரை நீழ லெய்தித் தனிப்பெரும் பேறு பெற்றான்
கோமுசுகுந்த வேந்தாய்க் குவலய முழுது மாண்டோன். (48)

விடங்கரைக் கோவேந்த படலம் முற்றிற்று.

ஆக படலம் 18-க்குச் செய்யுள் 646.

விண்டு மார்பத் திடையிருத்தி வேலைக் கௌரி பணிமாறப்
பண்டு பூசித் திடுங்காலை யாகண் டலன்போய்ப் பாற் கடலின்
வண்டு ழாய்மா யனைவணங்கி வ.ணிற் பழிச்சுந் தியாகரைமேற்
கொண்டு போந்து பாரின்முசு குந்தர்க் குதவுஞ் செங்குந்தம்—ஈட்டி
[யெழுபது.

வலாசுரன் என்னும் கொடிய அசுரன், தேவர்களோடு நெடுங்காலம் போர்விளைத்து வந்தனன். அன்னவன் ஆற்றலுக்காற்றாத பொன்னகர் மன்னவன் முசுகுந்த மன்னனை அழைத்து வருகிரெனக் கந்தருவரை யேவினன். அன்னோர் கருவூரிற் காவலனைக் கண்டு புகழ்ந்து வாழ்த்திப் பொன்னகர்க் கெய்துகென வேண்டினர். மன்னர் மன்னவன் தன்னமைச்சர்களாகிய ஒன்பதின்மரோடாராய்ந்து அன்னவரோடு பொன்னகரடைந்து, இந்திரனைக் கண்டு வணங்கினன். இந்திரன் முசுகுந்த வேந்தனைத் தழுவி வாழ்த்தி ஒன்பது வீரர்களைப்பணிந்து அறுமுகத் தம்பிரான் தம்பியராகிய இன்னவரால் நம்துன்பம் தொலையுமென மகிழ்ந்து நோக்கி, வீரர்காள்; வலனென்னு மசுரன் இங்கெய்தி தேவர்கள் யாவருந் திகைத்துப் பின்னடையுமாறு நாடோறும் போர் புரிகின்றனன். அக்கொடியோனை வெல்லுந் திறனற்று நலிகின்றேன். நீவிர் அவனை வெற்றிகொண்டு எங்களைக் காத்தல் வேண்டுமென வேண்டினன். வீரர்கள் மகவானை நோக்கி வலனென்பான் சூரிலும் வல்லவனோ அறுமுகப்பெருமான் அருளால் கணப்போதில் அவன் வலத்தைத் தொலைப்போம், வழக்கப்படி நாளை சென்று அவனோடு சமர்புரிக வென்றனர்.

அவ்வாறே இந்திரனேவலால் தேவர்கள் போருக்குச் சென்றனர். அன்னவர் பின்னால் ஆறுமுகனை யுன்னி ஒன்பதின்மரும் அமர்க்களத் துற்றனர். அசுரரைத் தாக்கிய தேவர்கள் அஞ்சும் வண்ணம் வலாசுரன் எதிர்த்து ஆரவாரம் செய்து, வீரரின் வரலாறு தெரிந்து, சூர்தடிந்த இன்னவர் நந்தம் ஒன்னலரெனக் கடிந்து, அஞ்சாது, போர் புரிமினென அசுரரை யேவினன். பொருத அசுரப்படைகள் தேவராற் புடைப்புண்டு மாண்டமை கண்ட வலாசுரன் ஆனைமீதூர்ந்து, சேனையின் பின் நின்ற வீரரை அண்மி, நீவிர் நடுவு நிலைமை வகிக்காது பொரவருதல் நீதியோ என்றான். வீரர்கள், நல்லோர்க்குப் புல்லோர் செய்யும் அல்லலைப்போக்கல் எங்கடனென்னவே, வெகுண்டு, அரும் பெரும்போர் செய்து எண்மருக்கிளைய வீரனும் தாக்கப்பட்டு வில்லம்பும் ஒழிந்து ஏறிவந்த யானையும் இழந்துவெறு நிலத்தில் வாள் கொண்டு பொர வெழுந்தனன். அவ்வமயம் வீரர் ஏவலின் இந்திரன் வச்சிரப்படை கொண்டு பொருது வலாசுரன் தலையை வெட்டி வீழ்த்தி வெற்றிச் சங்க முழக்கினன். தேவர்கள் யாவரும் மகிழ்ந்து கூத்தாடினார்கள்.

இந்திரன் மீண்டு விண்ணவர் குழுவொடும் அவையில் அமர்ந்துழி, வீரர்கள், வலாசுரனை வென்றதனால் அவ்விந்திரற்கு வலாரி என்ற பெயரையும் புனைந்தார்கள். இந்திரன் முசுகுந்த மன்னனையும் வீரரையும் அழைத்துச் சென்று, விடங்கரை வழிபட்டு, யாவரையும் பணியச் செய்து, முசுகுந்தனை நோக்கி மன்னவ? தேவர்களுக்குற்ற இன்னலைப் போக்கி நன்றிபுரிந்த நினக்கு யான் செய்யும் கைம்மாறு யாதுளது? என்னிடத்துள்ள வொன்றைக் கொடுக்க விழைக்கின்றேன்; வேண்டியதைக் கேள் என்ன, மன்னவன் விண்ணவர் வேந்தே இறைவன் அருளால் குறைவிலாச் செல்வம் பெற்றுளேன் ஆயினும், மக்கள் யாவரும் பாவி உய்யும் வண்ணம் நீ வழிபடும் தியாகேசரை நல்கவேண்டுமென்றான். இயற்கைத் தியாகரைக் கொடுக்க மனமில்லாத இந்திரன் மயனாற் செய்வித்த செயற்கைத் தியாகரை ஆறு முறை அளிக்க அஃதுணர்ந்த மன்னன் மறுத்து ஏழா முறை அளித்த இயற்கைத் தியாகரையும் செயற்கைத் தியாகர் அறுவரையும் விமானத்தோடும் அவன் மகிழ்ந்தளிக்கப்பெற்று விருந்தருந்தி விடைகொண்டனன்.

விண்ணுலகி னின்றும் வீரரோடு மண்ணுலகுற்ற மன்னவர்கோன் இயற்கைத் தியாகரைத் திருவாரூரில் எழுந்தருளச் செய்தனன். ஒன்பது வீரரும் ஏனைய ஆறு தியாகரை திருவான்மியூர், கோளரியூர், திருநள்ளாறு, திருமறைக்காடு, திருநாகை, திருக்காறாயல் என்னும் தலங்களில் அமைத்துப் பூசித்து வழிபட்டனர். மன்னவன் பன்னெடுங்காலம் பாராண்டு தன் மகன் அக்கிவன் மனுக்கு புவியாளப் பொன்முடி புனைந்து கானகமெய்தி நோற்றுக் கைலையை நண்ணினன்.

வீரவாகு முதலிய ஒன்பது வீரரும் ஆயிரம் யாண்டு இவ்வுலகிற் றங்கி ஆயிரத்துத் தொளாயிரவராய்த் திகழ்ந்து வாழும் தம்மக்களுள் அனகன் முதலியோரை காஞ்சி முதலிய எழுபத்திரண்டு நாடுகளையாள முடிபுனைவித்து சனகன் என்பானைத் தம்மினத்தார்க்கு, மறுமைப் பயனளிக்கவல்ல சைவத்தின் பாற்படும் சமய விசேஷ நிர்வாண தீக்கையும் அபிஷேகமும் செய்து சனக தேசிகனென இனகுருவாக்கிக் கானகம் சென்று நோற்றுக் கந்தவெற்படைந்து பண்டுபோல் அறுமுகனடித் தொண்டாற்றி யருகிருந்தனர்.

வீரர் குழுப்படலம்.

சேயுறை யுலக முற்ற சீர்கெழு மொன்பான் வீரர்
மாயிரு ஞாலத் தாக்க வழிவழி மரபின் வந்தா
ரேயின தகைசால் வீர ரெண்ணில ரவருட்சில்லோ
ராயினர் பெருமை மற்றீண்டறிந்தவா வகுத்துமன்றே (1)

சுபன் சிறப்பு

தத்துவர் திரைக்கை நீட்டித் தடங்கரை நிலவு கால
முத்திலங் கொழிக்குநீல நெடுங்கடல் வளங்க ளீண்டி
யொத்துள மாட வீதி யோல்குமங் கலநி றைந்து
புத்தமு தேய்ச்சு வைச்செந் தமிழெனப் பொலிந்து நின்று (2)

முந்தைநாட் சூர்கோட் பட்டு முடங்கிய சுரரை மீட்பான்
இந்தெனச் சிந்து சூழச் சிரிய விளைஞர் சூழ
வந்துசே யமர்ந்தி ருந்த மாப்பதி முத்தி நல்குஞ்
செந்திின்மா நகர மென்னுந் திருநகர் திகழு மன்றே (3)

அன்னதொன் னகரைக் காப்போ ரரணி மன்னர் மன்னன்
சென்னிதன் சேரா ராகுஞ் சிங்கள மாதி தேயந்
துன்னியோர் புகாத வாறு சூழர ணென்னத் தானை
மன்னனு மாகியாங்கே வைகினன் சுபனென் பானே (4)

தன்னலங் கருதா னீயுந் தன்மையாற் றருவை யொப்பான்
மன்னுயிர்க் குறுதி சூழ்வான் மறைநெறி யொழுகு நீரான்
றுன்னல ருள்ளாரி யாருந் துளக்கலா மலையை யொப்பான்
சென்னியி னேயம் பூண்டான் றிருவொடங் குறையு நாளில். (5)

தங்கமு மணியு மின்னுந் தரளமும் விளைவு காட்டுஞ்
சிங்கள நாட்டை யாள்வோன் செம்பியற் கிறைகொ டாது
பொங்கிய தானை யீட்டிப் பொரவெணி வன்மை யுண்டே
லிங்கெழு கென்ன வுய்த்த தூதர்பா லிசைத்து விட்டான். (6)

மற்றதை யுரைப்பத் தூதர் வளவர்கோன் சினமீக் கொண்டு
வெற்றிவேற் சுபனை யண்மி வீரரின் மிக்கோ யின்னே
சுற்றுந மரிகத் தோடுந் தொடர்ந்தனை யீழ நண்ணி
பற்றுமற் றவன்செ ருக்கைப் பறித்தனை வருதி யென்றான். (7)

ஆடுகோ டாகி யாங்கே யதரிடை நின்ற வொன்றைக்
கூடுறு காழ்கொ ளாமுற் குறைத்தலே நேரி தன்றோ
னூடுபோர் முற்றி யீண்டை யெய்துவ னற்றே யென்றான்
வாடுமோ சிங்கவேறு மதங்கொளுங் களிறு கண்டே. (8)

எண்ணிய கடலா றுக வெண்ணில கலங்க ளீண்டி
பண்ணிய களிறு பாய்மா கடற்படை பரித்துச் செல்ல
வுண்ணிய விரையைத் தாவு மொருபெரு மதூர மொப்ப
நண்ணின னீழ நாட்டை நவில்றண் முரச மாதேர். (9)

ஒற்றராற் சுபனங் குற்ற துணர்ந்தன னீழ வேந்தன்
செற்றமுற் றெழுந்தான் மன்னோ டிரண்டெழு தானையோடு
மற்றிரு படைஞர் மூண்டு வகுத்தணி யிகன்ற ஞாட்பிற்
கற்றன கற்ற நீட்டிக் கைவலங் காட்டி நின்றார். (10)

மிக்கெழு மீழ ரூர்ந்த வெங்கரி யுலக்கை தாங்கு
மக்கர மற்று வீழ வதன்மிசை யூர்ந்தோர் தங்க
ணக்கன தலைகள் சோரி நனைபடிப் புரள வீழ்த்திப்
புக்கனர் குறைத்தா ரஞ்சாச் சுபன்படைப் பொருவில் வீரர். (11)

பாய்ந்தன சோரி வெள்ளம் பரியிவர் மழவர் கூட்டஞ்
சாய்ந்தன சூரை யுற்ற பஞ்செனச் சலிப்பக் காலாள்
சாய்ந்தன னீழ மன்னன் கடஞ்சொரி களிறு கைத்துப்
பாய்ந்தனன் வளவன் றானை பதைத்திடப் பொருதா னம்மா. (12)

கண்டனன் சுபன்மேல் வந்த கருதலன் முன்னர் வைரங்
கொண்டனன் கரியின் மேலான் குருகின னவனை யென்னைப்
பண்டென நினைய லென்று பருத்ததோர் தண்டந் தாங்கிப்
புண்டரப் புடைப்பப் போந்தான் புகைந்தனன் சுபனு மன்றே. (13)

தானொரு தண்ட மோச்சித் தரியலன் கைத்தண்டத்தை
வானுறு துகள தாக்கி மதகரி வீழத் தாக்கி
யூனுட னையப் பற்றிப் பிணித்தன னுடன்றோன் பின்னர்
தானுடை பிழைபொ றுத்தி யென்றனன் கழலிற் றாழ்ந்தான். (14)

தாழ்ந்தவன் மணியும் பொன்னுந் தாழ்மதக் களிறு மாவுஞ்
சூழ்ந்தன விறையி ரட்டி தொழுதனன் றரவி டுத்தே
வீழ்ந்தவப் பொருள்க ளோடு மீண்டனன் றந்தான் செந்தில்
வாழ்ந்தனன் வரிசையாவும் வளவனால் வழங்கப் பெற்றே. (15)

கௌதன் சிறப்பு

மால்வேறு சிவன்வே றென்று வழுத்திடா வாய்மை யென்ன
வேல்வேறு குந்தம் வேறென் றிருபொருள் விரவா வென்னக்
கால்வேறு பெற்றுங் குந்தர் கதிர்குல வளவர் தம்முட்
கோல்வேறு கொள்ளா ரேற்றுங் கொடிகுல மொன்றி யுற்றார். (16)

இத்திறத் தவருட் கௌத னென்பான்சோ ணாட்டு மன்னன்
முத்தரை வேந்தர்க் குள்ளு முதல்வனும் மச்ச நாட்டி
னத்தரை மேலுந் தன்ன தானையை யுய்ப்போன் போரில்
வைத்தகாற் பின்னிடா தோன் மதிப்பவர்க் குறவ யுள்ளோன். (17)

கற்றவன் கல்வி யாவுங் கடலெனுந் தானை யுள்ளான்
கொற்றவன் முரசு துஞ்சாக் கொடிநெடு வாயி லான்றூர்ச்
செற்றவர்க் கன்பு பூண்டான் றெளிவுறு புலவர்ப் பேணு
நற்றவன் றுலைபோல் யார்க்கு நடுநிலை நாட்ட றத்தான். (18)

இங்கிவன் குடையி னீழ லிமையினுற் காக்குங் கண்ணிற்
றங்குமன் மனைதக டுன்பந் தவிர்த்துல காளு நாளில்
வங்கநா டாளு மன்னன் மச்சநா டாளுங் கோமேற்
றங்குச் சரமன் னற்காச் சமரமேற் கொண்டு சென்று. (19)

சான்வளை தீயின் மச்சன் கவினிய னாட்டை முற்றி
யானிரை கவர்ந்து மூர்தோ றனலெரி கொளுவி யார்த்து
மேனனி பொருள்கண் முற்றும் வேண்டுவ சூறை கொண்டு
மூனிறை யெதிர்ந்த மக்க ளுடலற வெட்டி வீழ்த்தும். (20)

திரண்டதன் றானை யாலிவ் வணமவன் றீங்கி ழைக்க
மருண்டனன் மச்சர் கோமான் வந்தனன் கௌதன் பாங்கர்
சரண்புக வவனைக் காப்பான் றழங்கொலி முரச மார்ப்பப்
புரண்டெழு கடலிற் றானை யெழுதுகள் வானம் போர்ப்ப, (21)

மஞ்சிவர் வரையிற் றோன்று மாநெடுந் தேரிற் சென்று
நஞ்சென மச்ச னாட்டை நடுக்கினோர் சூறை யுற்ற
பஞ்செனப் பறக்க நூறி மாற்றவர் பணியச் செய்தங்
கெஞ்சிய வங்க நாட்டுக் கிறைவனைச் சிறைப்ப டுத்தி. (22)

மற்றுமவ் வங்க முற்று வளம்பல கவர்ந்தந் நாட்டிற்
கொற்றவெம் புலியை நாட்டிக் குச்சர னாட்டை நண்ணி
புற்றெழு மரவி னன்னோர் புகைந்தெழ விடியே றென்னத்
துற்றதன் றானைமத்திற் றயிரெனத் துளக்கி னானே. (23)

கனவிலுங் கௌத னென்னக் கலங்குறச் செருவில் வென்ற
தனையக்குச் சரக்கோ வந்து கழலணி தாளில் வீழ
பினையவ னிறையாத் தந்த பெரும்பொருள் வௌவி மேலும்
வனைபுக ழணியா னீடு மகதநா டுற்றான் மன்னே. (24)

ஓங்கிய வளஞ்சா லங்க னுச்சினி காறுஞ் சென்று
தேங்கிய புகழான் கௌதன் றிருவொடும் வாகை பூண்டு
மாங்குயிற் பொழில்சூழ் சோழ மண்டலம் வந்தா னென்ப
வாங்கவன் சூந்த வன்மை யளவிடங் கரிதே யம்மா, (25)

படைமருதன் சிறப்பு.

உடல்பொரு ளாவி மூன்று முடையவ னுடைமை யென்று
மிடல்செழு வேம்ப னல்க வேற்றருள் விடையோன் றங்கு
மிடைமரு தூரை யாள்வோ னினியவன் யார்க்குங் குந்தப்
படைமரு தன்பா ராளும் பார்த்திபற் கரியே றன்னான். (26)

சொல்லினிற் றிறம்பா வாய்மைத் தூயவன் சேய்மைத் தோற்றக்
கல்வினிற் றிணிதோ ளாற்றற் கவின்படை மருத னேற்று
வில்லினி லாசா னென்று மேதினி வியக்கக் காலை
யெல்லினிற் றிகழ்ந்தா னேனு மிருமையி னிழிவு நோக்கி. (27)

இணைபிறப் பிறப்ப தென்னு மாழ்கடர் கீசன் பாதப்
புணைவழி பாட்டி னின்றேன் பூசலி னசையை யெண்ணா
னிணைவறு நீறு பூத்த நெருப்பென வரசு மேவித்
துணைதிரு வருளே யென்னத் துகளிலா னிருந்த காலை. (28)

அறக்கெதி ராம ழுக்கா றவாவினால் வடக்கு வேந்தன்
சிறக்கையா னென்பான் மற்றைத் தேயமுள் ளனவும் வென்று
துறக்கநா டெனவ ளத்தாற் றுலங்கிடை மருதூ ரானை
திறக்கதத் தானை யோடு சேர்ந்தலை கூவி னானே. (29)

வின்மையிற் றானே யென்று மிண்டினா னூர்ந்து ழைந்து
வன்மையி னழைப்ப வந்த மருதனும் வரிவில் லேந்தித்
தொன்மையி னங்கி பூண்டு தூணியார்த் துடைவாள் வீக்கி
சின்மையிற் றடந்தே ரேறிச் சேர்ந்தனன் றனியன் றானே. (30)

சுடுகணை துரந்து நேரான் றுணைப்படை யுள்ளோ ரெல்லாங்
கடுவிசைக் காற்றிற் பூளை வீயெனக் கலங்கி யோட
வடுவது கண்டா னாற்றா னரவெனச் சீறி யார்த்து
முடுகிவஞ் சினமொ ழிந்து முந்தினன் றேரி லன்றே. (31)

விட்டனன் வில்லிற் கோத்து வெங்கணை மழையிற் சிந்த
மட்டவி ழலங்க லானும் வந்தவை விலக்கி மேலுந்
தொட்டவன் விடுத்த யாவுந் துணிபட விடையிற் கொய்து
மட்டறு கணைக ளேவ மாற்றவன் மறுத்தான் மன்னோ (32)

நெடும்பொழு திவ்வா றன்னோ ரிளைக்கலார் நேர்ந்தா ராற்றுங்
கடுஞ்சமர் காண்டார் நெஞ்சங் கலக்குற மருத னீற்றிற்
சுடுங்கணை தூவி நேரான் றேரினைத் துகள்கண் டன்னோன்
படுமரு தடியில் வீழப் படுத்தான் பதத்திற் சேர்த்தான், (33)

வேறு

வீரநாராயணராதியர் சிறப்பு.

பந்து பாவையுந் தூங்கு நெடுங்கொடி
முந்து வாயின் முழங்குமு ரசினேய்
கொந்து வேற்கைப் பராந்தகக் கொற்றவன்
முந்தைநின்மர பானின் முகத்தினன். (34)

உற்ற வர்க்கோரிடுக்க ணுற்றலான்
மற்ற வர்க்குயர் மாணரி யேறனு
னற்ற வர்புல வோர்க்கு மரியவாம்
பெற்ற நற்பொரு ளேய்ப்பப் பிறங்குவான், (35)

அன்ன மன்னனி வம்புவி யாளுநா
ளுன்னு தீவினை யொன்றி யுருவெடுத்
தென்ன விக்கல னென்னு மிரட்டனீர்
மன்னு மேரி யிடையரண் வைகுவான் (36)

மேதி மாமுக வெய்யவற் செற்றவள்
போது நோன்பு புரிவினில் வைரவாண்
மோது வெல்கதை மூடட லங்கிவிண்
மீது செல்லெயில் வேண்டி யடைந்தவன். (37)

கண்ட மக்க ணடுக்குறுங் கண்ணினன்
பண்டை முப்புரர் போன்றவன் பாரெலாங்
கொண்டு மேலொரு தன்னெயிற் குப்புறு
மண்டு மாவளம் வெளவிய மண்ணையான். (38)

கற்ற வஞ்சக மாயைக் கடுப்பினு
விற்றி வன்செய லென்ன வறிகலார்
கொற்ற வேந்தரு மாந்தருங் குன்றினு
ருற்ற வற்றத் தொடுங்கின ருட்கியே. (39)

கள்ள னென்னக் கடுகிசி யூர்புகுந்
துள்ள யாவையுஞ் சூறையிட் டோடிபோ
தெள்ளி மேவிகன் றுறை யிருந்தலை
தள்ளி வாளிற் பறப்பன் றருகணன். (40)

விண்ணி யக்கிடு மூர்தியில் வீங்குட
லொன்று மங்கியில் வாள்கதை யுற்றதி
லென்ன வானோர் பொருளென வாரையு
மண்ணின் மேலிரு மாந்தவன் வாழ்ந்தனன். (41)

நஞ்ச போல்பவ வின்னன னடலா
மஞ்ச வின்னலிழைத்திட லாவிறை
தஞ்ச மென்றவன் றுள்பணிந் திருவார்
வஞ்சன் றன்னைவல் லானென வாழ்த்தியே. (42)

வரையெ டுத்தவ ரக்கனூர் மானவே
திரையு டுத்தக லேரியிற் றுன்னிய
வரைய டுத்த தெனவே வகுத்தனன்
நிரைய டுத்துயர் மாளிகை நீண்மதில். (43)

ஈயு முண்ணுழை யாமை யியற்றிய
தீயுந் தீயன வாங்தெறு மாக்களும்
வாயி லேறும் வகுத்தனன் வைத்தன
னேயு மேவல ரெண்ணில ரீட்டினன், (44)

ஆழ வேரிப் புறம்பல வாயிரர்
சூழத்தற்புடை காப்புத் தொகுத்தனன்
றேழன் றீமையின் றுண்டின னெண்ணினான்
வாழப் பன்னெடுங் கால மனத்தினே. (45)

உன்னு போழ்தெழுந் தூர்புகுந் திவ்வண
மின்னல் செய்யுமன் னாற்செய லெண்ணெனச்
சென்னி யோர்ந்தனள் செப்பு மமைச்சராற்
றன்னு மற்றவர் சொல்லின ரிவ்வணம். (46)

ஐய கேணர னாரண னன்னவர்
செய்ய வீரனா ராயணர் செம்பியர்
மையில் கேண்மையர் வன்றிறல் வாய்ந்தவர்
வெய்ய வன்றனை வெல்வரி துண்மையே. (47)

வெண்ணை யுண்டெனி னெய்பெறல் வேண்டுமோ
கண்ணை யன்னவர் நம்முழைக் காதல
ரெண்ணி வேண்டின்மற் றியாதும் புரிகுவர்
திண்ண மென்றவர் மீளவுஞ் செப்புவார். (48)

வேறு

கோட்டமெண் ணிலவாய்ப் பொன்னிக் குளிர்கரை யிரண்டன் மாட்டு
மேட்டிமை யொடுங்கொண் டோங்கு மேதகு நாட்டில் யாவுங்
கேட்டலு முண்மை ஞானங் கிளைத்தெழப் பாடு மூவர்
பாட்டகத் திருந்து தோன்றும் பழுவைமா நகரொன் றுண்டால். (49)

அங்ககரிருந்தா ளீச னடியவர்க் கடியன் செங்கோன்
மன்னவன் குந்த மேன்மை மரபினு லுலக மெங்குஞ்
சொன்னகோ மதிப்பேர் கொண்டான் சுந்தரச் சுதினி னிலாமன்
முன்னவா சிவனே யென்ன முயன்றனன் விரதம் பன்னாள். (50)

எண்ணிய வெண்ண மெல்லா மீந்தரு ளிறைவ னேக்காற்
கண்ணிய வரசன்றேவி கருப்பமுண்டாகிப் பத்தாய்
நண்ணிய திங்களோரை நலமுற வமைந்தநாளிற்
புண்ணியம் பூத்ததென்னப் புதல்வனைப் பயந்தான் மன்னோ. (51)

கற்பினின் வடமீ னன்னாள் கரையுமவ் வோரை யூடே
யற்புதப் பொலிவா லன்னோற் கனுசனைப் பயத்த லோடுந்
தற்பரன் றிருத்தா ளுன்னித் தலைவன்றன் மகார்க்கு நாமம்
விற்பன வீர நாரா யணரென விளம்பி னானே. (52)

தினகர ரிரட்டைப் பேருய்ச் செனித்தன புதல்வர்க் கானு
மனதிரும் பூதி மிக்கு வாகுபூ ரித்தன் பாகத்
தனம்வறி யவர்க்கு நல்கித் தமரெலா மகிழ வாற்றிக்
கனவட மூல நாதன் கருணையை வியந்தான் மன்னோ. (53)

மதிக்கலை கடுப்ப நாளால் வளர்ந்தெழு மகார்க்கைந் தாண்டின்
முதுக்கலை யவரானன்னூன் முற்றுறச் செய்து முன்னூல்
விதிக்கலை யடுங்கூர்வாளி விற்றொடுத் தங்கை யேந்துந்
கதிக்கலை சுடர்வாட் குந்தங் கற்பித்துக் களித்தா னன்றே. (54)

குசைகசை கொண்டு தாவுங் குரகதத் திவர்ந்து காலின்
விசையினுங் கடுகத் தூண்டும் விதமுடன் மதமா தங்க
மிசைவருந் திறலுங் கற்று விளங்கனர் வயிதாருூர்ந்த
தசவரு டங்க ளாகித் தருணராய்த் திகழ்வ ரன்றே. (55)

வெற்றியுற் றிலங்கு வீர வாகெனும் வீரன் போரி
லுற்றெழி லுலக முற்று மொருகணத் தொழிப்பன் றானே
மற்றைநா ரணனு வன்மை வானரப் படையைக் கொண்ட
கொற்றவே லிராம னென்னிற் கூறுவ தென்னே வென்றான். (56)

என்றலும் வளவர் கோமா னெழுந்தன னவரைக் காண்பான்
றுன்னிய வமைச்ச ரோடுந் துகிலசை பழுவூ ரண்ம
வின்னதை யறிந்த வீர நராயண ரெதிர் கொண் டேகி
மன்னவ வருக வென்னக் கொண்டரண் மனைக்க ணுற்றார். (57)

சந்தவின் மொழியா லூட்டித் தனிமையி லளவ ளாவி
வந்ததென் னென்ன மற்றவ் வளவனும் வல்லான் றன்னு
னொந்தமை மக்கள் யாரு நுவன்றனன் வீரன் றானுங்
கந்தடு களிற்றாய் நின்போற் கழறுவர் மற்று ளோரும். (58)

வெள்ளநீ ரேரி நாப்ப ணிருப்பவன் வீர ரானோ
ரெள்ளநின் றெதிர்நிலாம விளைத்தவர் தம்மை யெற்றிக்
கள்ளநீர் மையினான் மக்கள் கலங்குற வாட்டி யெங்குங்
கொள்ளைகொண் டிடுதீ வஞ்சக் கொடியவ னாண்மை யென்னோ. (59)

நஞ்சினை நஞ்சி னாலே மாற்றுவர் நன்மை தேர்வார்
வஞ்சனை வஞ்சத் தாலே மாற்றுதல் மறமு மன்று
நஞ்சனை யானெம் மூரி னடுக்கமு நெருநற் கண்டா
னஞ்சினோர்க் கபய நல்கி யளித்தனங் கடமை யாமால். (60)

அரியம ராங்க னொய்ய வாற்றல்சே ரூளை காட்டு
நரிநுழைந் தடவ தேய்ப்ப நம்முடை நாடு புக்கான்
பெரிதுசெய் வஞ்சத் தால்வல் லானெனும் பேரும் பெற்றா
னெரிசெய்வெங் கதிரின் முன்ன மிருளும்வந் தடர்த்த தன்றே. (61)

என்றன னெழுந்த சீற்றத்த தானினி யேங்க லெம்மோ
டொன்றிய பதின்ம ருள்ளா ருன்னிய புரிய வல்லார்
முன்றனி யென்னரி வல்லை முடிக்குதும் பகையை யூரிற்
சென்றனை யிருத்தி நீயன் றலைகொடு சேர்து மென்றான் (62)

ஆங்கவன் புகன்ற சொல்லா மமுதினா லுவகைகூர
வோங்கிய வுறையூ ருற்றா னுயர்விடை கொண்டு சோழன்
றாங்கெயி லுறைவான் றன்னைத் தொலைப்பது கரும முன்னி
வீங்குதோள் வீர னுற்றார் பதின்மரை விளிப்பான் வேண்டி. (63)

பாயலைப் பௌவஞ் சூழ்ந்த பாருளோ ரி[illegible]க்க ணீக்கத்
தீயவை யொழிய நம்மிற் செய்வதோர் செயலுண் டன்றே
தாயநீர் கொள்வா னீண்டு தகவுளீர் வம்மி னென்று
மேயவர் வருகை நோக்கித் திருமுகம் விடுத்தார் மன்னோ. (64)

கச்சித்தனியன்

குலந்தரு படையை யாகி குலவிய லுள்ளான் மக்க
ணிலந்தரு செல்வமென்னத் தனிக்குடை நீழல் செய்வான்
வலந்தரு மாவினீழன் மணிமுடி சூடிவாழ்வோ
னுலந்தரு திரடோட் கச்சித் தனியனங் குவப்பின் வந்தான் (65)

ஒற்றியூரன்

கைதவ முளுற்று வஞ்சர் கரவினைக் கடித லாற்றிச்
செய்தவம் பயிலச் சேரார் செறிகுடர் பாறு சவ்வக்
கைதவி ராத குந்தக் காவலன் கலங்கா நெஞ்ச
னெய்தலங் கான லொற்றி யூரனு மிளைப்பின் வந்தான் (66)

களத்தூரரசன்.

பையர வல்கு லேந்து பணைமுலைப் பாவை யன்ன
கொய்தளிர் மேனி யார்க்குக் குனிசிலை மார னன்பன்
மெய்யடித் தொண்டர்தம்மி லொருவனே ராரை வெல்வான்
வையயிற் கரக்க ளந்தை யரசனும் வந்துற்றானே (67)

புற்றிடங்கொண்டான்

கற்றிடங் கொள்பா வாணர் கவிப்பொரு ளதனை யொப்பான்
பற்றிட மில்லார்க் கெய்ப்பில் வைப்பெனப் பரசு நீரான்
மற்றடந் தோளில் வாகை வனைபவ ஞரு ராளும்
புற்றிடங் கொண்டானென்னும் புரவலன் போந்தா னன்றே (68)

கோளாந்தகன்.

தறுகணுண் மையினு லுற்றுத் தரியல ரேற்ற போரிற்
றெறுதொழிற் செங்கண் மேதி செலுத்துவோ னெப்ப வீட்டி
நறுமலர் வாகை வேய்ந்து நடுங்கிடச் செய்த லாலே
பெறுபெயர் கொடுங்குன் றக்கோ ளாந்தகன் பெட்பின் வந்தான் (69)

புலியூர்ப் பள்ளிகொண்டான்.

வெள்ளெருக் கரவு சூடி விரிசடை யாட வாடி
யுள்ளுறை புலியூர் காப்பா னுற்றவ ரிடுக்கண் டீர்ப்பா
னெள்ளியுற் றிகலு வாரைத் தென்றிசைக் கேற்று மாற்றற்
பள்ளிகொண் டானும் பண்ணைச் சூழ்பழு வூரை யுற்றான் (70)

பிணவன்.

திங்கள்வெண் கவிகை நீழற் சேர்குடி மக்க டாமும்
வெங்கடுந் திறலால் வேண்டா ரும்புகழ் விரிக்குஞ் சீரான்
மங்குலூர் தியினோன் பற்று வச்சிரப் படைக்குந் தோலா
வங்கையிற் குந்தந் தாங்கும் பிணவனு மடைந்தா னங்கே. (71)

முதுகுன்றமணியன்.

பிணியென வின்னு செய்யும் பீழையான் முதுகுன் றக்கோ
வணிமணை வைப்பா ராள னலக்கணுற் றறையக் கேட்டு
துணிவொடு வருமந் நோரா் தொழுதிடப் பொருத வீரன்
மணியனென் றொருபேர் பெற்ற மகிபனும் வந்தான் மாதோ. (72)

தஞ்சை வேம்பன்.

வஞ்சகர் நெஞ்ச மாழ்க வழுத்தினோர் திருவை யெய்த
விஞ்சுழு விலவே லன்ன வேற்படை தரித்த கையான்
செஞ்சொலாற் புலவர் பாடுஞ் சீர்த்தியான் றிறம்பா வாய்மைத்
தஞ்சையாள் வேம்பன் றானுந் தருக்கொடங் கடைந்தான் றனே. (73)

கண்டியூரன்

மிண்டுசூர் மகனை யட்டு வெஞ்சினத் துடலி னென்னைக்
கொண்டுகோ புரத்தி னுட்டிக் குதித்ததின் மீதே யாடும்
வண்டுளே ரலங்கல் வீர வாகுதன் வழியில் வந்தோன்
கண்டியூ ராளுங் கோவுங் கடிநகர்ப் பழூஉ குற்றான் (74)

வந்தவர் தம்மை யெல்லாம் வாய்மைய ரின்சொற் கூறி
மந்திரத் திருந்து வல்லான் றனை வெலும் வழியை யாய்வார்
முந்தைநம் மரபின் வந்தார் மூரண்படு தீமை மாற்றி
யுந்திய திரைசூழ் வையங் காத்தன ரொப்பி கந்தார். (75)

ஆதலி னுமேற் செல்லும் பகைவலி யாய்ந்து சேறல்
தீதறு நெறிய தாகுந் தீயனு நீரி னுப்பண்
மீதுசெல் பொறியி னோடு மியனெயி லரணுள் வைகி
யேதிலர் புகாத சூழ்ச்சி யியற்றியு மிருப்ப னுங்கே (76)

பின்னுமந் நீர்ப்பு றத்தே பேதுறு மரங்க ளார்ந்து
துன்னுகாட் டரணு முண்டாற் றுருவினர் பிறர்பு காம
லுன்னிமற் றதனைக் காப் போ ருளரென வொற்று லாய்ந்தேம்
பன்னிய பிறவு மாய்பி னென்றனர் பழூஉ ரான் வோர் (77)

கச்சியிற் றனிய ரூதி காவலர் கேட்டு வெய்ய
நச்சர வன்னாற் றியாமுன் வருகையை நவின்ற சேர்த
மிச்செய லறத்தின் பால தாகலி னென்றார் வீரர்
மெச்சுவன் றூவனைக் கூவி வெளிப்பட விசைக்க வென்றார். (78)

என்றபி னவன்க டம்பூ ரேரியு மெல்லைச் சுற்றுஞ்
சென்றுமற் றுளவூர்க் கண்ணுந் தெரிந்திட மதநீர் வீழுங்
குன்றினி லேறி நின்று குணில் கொடுமுரச றைந்தா
னொன்றிய செயலார் வன்மை யுரைத்தவன் றூவனு மாதோ. (79)

மலையெனுந் தோளார் வீர நராயண மன்ன ராதி
யிலைசொலும் வேலா ரீரா றிலங்குபன் னிருவர் மாந்த
ரலைகொளக் கள்ள வஞ்ச மாற்றுதி யிரட்ட வல்லான்
தலைகொளத் துணிந்தா ரீது தவிர்ந்திடா தறிக வென்றே. (80)

செய்வினை யிரட்டர் கோனைச் செறவெணித் தேர்ந்த வன்மைக்
கைவினை யவன ராலே களிமயி லூர்தி யாக்கி
நைவினை யில்லார் வானி னடத்திடப் பயின்றி ருந்தார்
மையறு பொழுது நோக்கி வாடிய கொக்கை யொத்தார். (81)

கணியுரை வென்றி யெய்துங் காலையிற் பொறியின் மேலார்
துணிவுடைச் சூர்த டிந்தான் றிருவரு ளணையாச் சென்று
ரணிபெறுங் கடம்பூ ரேரி சூழ்ந்திடு மடவி புற்றார்
திணிவலி யாளி யூர்தி காவல்செய் நியமஞ் சேர்ந்தார். (82)

ஊர்தியி னிழிந்தார் யாகு முட்புகுந் தாளியூர்தி
சேர்சிலம் படியிற் றாழ்ந்து தியற்குத் துணைசெ யாது
தீர்கமற் றவற்குக் காவல் தேவியென் றிரந்து வேண்டி
யார்தரு மருளைப் பெற்றா ராண்டிருந் தெழுந்தா ரன்றே. (83)

விண்ணிவர் பொறியி வர்ந்தார் நள்ளிரா விக்கலன் வாழ்
கண்கவர் வனப்பு வாய்ந்த கடியர ணுற்றா ராண்டு
மண்கவர் செல்வ மெல்லாம் வெளவியோர் வழிவைத் தன்ன
திண்ணிவர் நிலைய மாடம் பலவெழி றிகழக் கண்டார். (84)

காண்மறை யெயிலெண் டிக்குங் காவலா விருப்பப் போக்கி
திண்மையர் வீர நாரா யணர்கச்சித் தனியன் றேயா
வண்மைய னொற்றி யூர னல்வரும் வானி லேகி
யுண்மகிழ்ந் துலவியுள்ள மற்றவுங் காண லுற்றார். (85)

செந்துவர் வாய்க்க ருங்கண் சிற்றிடை மடவா ரோடுங்
கந்துக மாடு மேடை காவகஞ் சூழ்த டங்கண்
மந்திரக் கூடம் வண்ண வரியொடு நாட கந்தேர்
சுந்தரச் சாலை யின்ன துலங்கிடக் கண்டா ரன்றே. (86)

சுலவியங் குள்ள வெல்லாந் துருவினர் வருவா ராங்கோர்
மலையென நிவந்த யாட மீமிசை வண்ணக் கொண்ட
னிலவிய தென்ன வொன்று கண்டனர் நெருங்கி நோக்கக்
குலவிய விண்ணியங்கு பொறியெனக் குறித்த றிந்தார். (87)

திப்பிய வெயில்போலீது திருந்திய தொழில மைந்த
விப்பொறி வலத்தா லன்றோ வெவ்வரையு மேய்ப்பன் வல்லான்
செப்பிய விதனை யின்று நீக்கிரை தருது மென்னிற்
றப்பிட வழியு மில்லை தருகணன் மீளா னென்ன. (88)

கனல்புக வெரித்த லோடுங் கதுவிய தீயாற் பாங்கர்
மனைவுறு மாட மாதி வார்புகை மண்டிப் பற்றத்
தினந்துயி லாது காக்குங் காவலர் செறிந்த வேனோர்
மனந்தடு மாறி யுற்றார் வந்தவர் தம்மைக் கண்டார். (89)

ஏதில ரிவர்தஞ் செய்கை யெனவெண்ணி யெதிர்ந்து வாள்வி
வாதிய கைய ராகி யமர்பொர நால்வர் தம்மி
லோதிய தனிய னன்னு ருரங்கெட வட்டா னெஞ்சிச்
சாதலின் மீண்டார் வஞ்ச விக்கலற் சாற்றச் சென்றார். (90)

அந்தநள் ளிரவில் வல்லா னருந்ததி யனைய கற்பிற்
பைந்தொடி யனங்க வல்லி பதம்பய வருடப் பாங்க
ரிந்திரன் மனையு நாணு மில்லிடைத் துயின்றி ருப்பச்
சிந்தியங் கிரிந்தார் கூவிச் செப்பினர் நிகழ்ந்த தன்றே. (91)

இவ்வுல கரசர்க் கஞ்சா விரட்டர்தங் கோவே நிற்குத்
தெவ்வர்வந் துற்றார் விண்ணிற் செல்லுமூர் தியுந்தீக் கிட்டா
ரெவ்வழி யிங்குற்றாரோ வெதிர்த்தவர் புலிவாய்ப் பட்ட
நவ்வியி லொழிந்தா ரோடிப் பிழைத்தனம் நாங்க ளென்றார். (92)

காக்குநங் காவ னன்று லென்றனற் பொறிகண் காவ
னோக்கினன் புறப்பே போந்தா னெய்தினின் வைர வாளை
வீக்கினன் கச்சிற் றண்ட மேந்தினன் விதிர்த்தெ ழுந்தா
னூக்கின னெங்குள் ளாரென் றுறுத்தனன் விரைய லுற்றான். (93)

பின்றொடர்ந் தனங்கவல்லி பெயர்ந்திடே லெனத்த கைத்தும்
என்றிறல் வல்லா னென்னை வென்றிகொள் மதுகை யாள
னின்றென வறிதி நீயென் றிகழ்ந்தவ ரிருந்த சூழற்
சென்றன னவரைக் கண்டு சிரித்தனன் சினந்து சொல்வான். (94)

மாற்றரும் வன்மை பெற்ற வரிப்புலி வாழ்ந்த வைப்பி
லேற்றெதி ரானே ரென்ன வென்னிடைப் புக்கீர் மின்வீர்
பாற்றினங் கொத்தி யுண்ணப் படுப்பனும் முடலை யென்னக்
காற்றென வைரவாளை யோச்சினன் கனன்று பாய்ந்தான். (95)

நின்பினென் றேனைமன்னர் தம்மையங் கிருத்தி வீரன்
மின்னொளிர் வாள்வி திர்த்து விக்கல வீரம் பேசா
தென்னொடும் பொருதி யென்ன வேற்றன னவனு மஞ்சான்
றென்னெறி பயின்ற வெல்லாந் தோற்றுவித் துடன்றான் மாதோ. 96

எற்றுவர் வாளை யோச்சி யெதிரெதிர் திகிரி யொப்பச்
சுற்றுவர் சாரி வந்து தோலினிற் றடுத்து நிற்ப
ரொற்றுவ ரிமைப்பிற் றாண்டி யோதுங்குவ ருரைப்பர் வீரங்
கற்றவர் வியப்ப வாளிற் கைவலங் காட்டி னாரால். (97)

உறுத்திவா றுடற்று போதி லொல்லையில் வீர னண்ணான்
செறித்தகை வாளைத் தன்கை வாளொடு சேர்த்துப் பற்றிப்
பறித்தன னிலத்து வீழ்த்திப் பாய்ந்தபோ தனங்க வல்லி
நிறுத்தமெய்க் கற்பா டாலி வேண்டியே முன்னர் நின்றாள். (98)

கற்பின ளனைமணந்த கைம்மலை கண்ட சிங்க
சொப்பனம் பலித்த தென்னத் துவண்டறக் கொழுகொம் பில்லாப்
பொற்பிளங் கொடியில் வாடிப் போற்றியொண் பதத்தில் வீழா
வற்படுங் கூந்தல் சோர வழுதிது பகரு கின்றாள். (99)

கண்ணகன் ஞால மேத்துங் கந்தவே ளன்ன வந்த
வண்ணனீ ரபய மென்ற னன்பனைக் கொலற்க யானோர்
பெண்ணென வளியா வீக மங்கலப் பிச்சை யென்றாள்
பண்ணமர் மொழியாள் சாலப் பங்கய விழிநீர் சோர. (100)

என்னுடன் பிறந்தார் நீரே யானும திளைய ளாவேன்
மன்னுமங் கலநாணற்றால் வசையுறு மதுவெற் கீயப்
பின்னுநுங் கடனு மென்றே பேதையா ளிரக்கக் கண்டான்
றன்னைவந் தடைந்தோர் தம்மைக் காத்திடுஞ் சமர வீரன். (101)

தன்னிய வியலார் தன்னைக் கொண்டவன் றனைப்பில் வீடும்
பன்னலை மொழியா ரின்பு தன்புழிற் பகிர்ந்து கொள்வ
ருண்ணெகிழ்ந் தவப்ப நாடி யுயிரெனக் கொண்கன் றன்னைக்
கண்ணெனப் போற்று மின்னார் கற்பினிற் சிறந்த துண்டோ. (102)

தங்கையென் றுரைத்திங் கெம்மைத் தமரெனக் கொண்ட நீரா
லிங்கிவ ளேற்ற வண்ண மீதலே புகழென் றெண்ணி
நங்கைநின் மங்கலத்தை நல்கினே மஞ்ச லென்று
செங்கா மமைத்து வீரன் செப்பின னவளுக் கம்மா. (103)

வெட்டவுந் தடைவந் துற்ற விக்கலன் றனைப் பிடித்துக்
கட்டுக வளவன் முன்பு காட்டுதுங் கொண்டு சென்று
கிட்டிவன் றலையை யந்தக் கிள்ளியுங் கண்ட பின்னர்
விட்டுமு னிகழ்ந்த சொல்லி மீளுது மென்றான் வீரன். (104)

நன்றெனத் துணைவந் தாரு நவின்றனர் நாரணன்றான்
புன்றொழிலாற்குக் கைகாற் றளையினைப் பூட்டி னூற்
பின்றையன் னவனு லாங்குப் பெருஞ் சிறைப்பட்ட வேந்தர்
மன்றன்மேல் லோதி மாத ராடவர் மற்று ளோரை (105)

இனியன கூறித் தேற்றி யிருநிதி வெறுப்பத் தந்து
மனமகிழ் கொள்ளத் தத்த நாட்டிடை வழிகொண் டேக
கனிகுறை விமானத் தேற்றி நடத்திநீர்ப் புறத்தே போக்கிக்
கனகநீ ளெயிலை வீரர் கனல் கொள வழங்கி னரால் (106)

வேறு

பற்று விக்கல னோடவன் பன்னியு
முற்ற தங்க ளுடன்கொடு மீண்டனர்
கொற்றப் பன்னிரு கொற்றவர் கொங்குகாத்
தற்ற வாலந் துறையடைந் தாரரோ (107)

அங்குமேவியவாறு முகப்பரன்—றுங்க மாமலர்ப்பாதந் தொழுதெழி இத், தங்கையென்னச் சரண்புகு கற்புடை—நங்கை பொற்சிவி கையினுட னண்ணவே. (108)

விக்க லன்றனை மேவுந் தளையொடுந்—தொக்க மாப்படை சூழ்வரக் கொண்டனர், நக்க வாம்பரி மேலவர் நண்ணினு—ரொக்க லாய வளவ னுறந்தையே. (109)

ஒற்ற ராலி துணர்ந்திடு செம்பியன்—பற்று மைக்குழுப் பாலினர் சூழ்வரப், பெற்ற வென்றி பிறங்கிய வீரரை—யெற்று பல்லிய மேங்க வெதிர்கொளா. (110)

சொண்டல் கண்படு பொன்முடிக் கோயிலிற்—கொண்டு சென்றவர் சொற்றம் வினவுவான், மண்டு மன்பின்வல் லான்றலை மற்றுநீர்—கொண்டு வந்த னிரோவெனக் கூறுமுன். (111)

அச்ச முற்றிட வாண்டிருந் தோரெலா-நச்சுப் பல்லறு நாகமொத் தானைமுன், வச்சுக் காண்டியெ மண்ணவி வன்றலை—பிச்சை தந்தன மென்றனர் பேசினார். (112)

மாண்ட கற்பின் மனையவள் வேண்டலி—னீண்டி வன்ற னுயிரையங் கீந்தன, நீண்ட நற்புக ழேனிலை நிற்றலான்—மீண்டு நின்னு ளொருப்படல் வேண்டுமே. (113)

என்ன லும்மன்ன தேதனைத் தென்றனன்—பொன்னி நாடனும் பூதல முய்யவும், நன்னர் நன்றினைகம் மாற்றி லவையதோ—தன்ன மேனுமின் றென்றுபின் சாற்றுவான். (114)

வேறு

நீரராச் செய்ப்பழு வூரையா ணெறியானீர்
வீரநா ராயணச் சோழராம்வீ றுபே
ராரவே பெறுமினிவ் வார்கலிச் சூழ்புவிக்
கோரராக் களைகணு யுறைதிரா லென்றனன் (115)

மாவலான் கச்சியிற் றனியன்முன் மன்னவர்க்
கோவிலா வுவகையுள் ளூர்சிறப் பாற்றினன்
றாவிலா வாற்றலார் தாம்விடை கொண்டனர்
நாவலார் வாழ்த்தவா லந்துறை நண்ணினார் (116)

வேறு

மாண்ட கற்பி னனங்கவலி யொடுவிக் குலனை மருங்கழைத்துப்
பூண்ட தளையின் விடுவித்துப் பொற்பூ ணிதியம் பலவளித்துத்
தீண்டற் கரிய கொடுவினை யைச்செய்யா தொழிதி யெனச்செப்பி
வேண்டு மிடத்துச் செல்கவென விடுத்தா ரடுத்தா ருறவோரே (117)

பின்னர்ப் பழுவூ ரசாள்வோர் பேரார் தனியன் முன்னுன
மன்னர் தம்மைத் தனித்தனியே தழுவி மாறு நன்றி புரிந்
தின்ன வுலக மொழிந்துய்வான் றுணையா முமக்கா ரெதிரென்றா
ரன்னார் பிரியா விடைகொடுசென் றடைந்தார் வாழ்ந்தார் தம்மூரே (118)

சீரார் பழனூ ரரசாளு நிருபர்தாமும் பல்லியமும்
வாரார் முழவு மணிவிம்ம வரவேற் றாரார் மகிழ் தூங்கக்
காரார் சிகரி யெனவோங்கு கோயில் புக்குக் கலிகடிந்து
பாராண் டிருந்தார் பற்பலவாம் பணிக ளாற்றிப் பரமற்கே (119)

வேறு.

இன்னணம் வீரரிரட்டர் கோக்காவி யீந்தவன் மனைக்குமாங் கலிய
மன்னுறச் செய்த மாண்பையம் மாபோர் மணவினைப் பந்தருளின்று
முன்னியீரா று கலயத்துட் பொங்கன் முறையினாற் பூசித்துத் தாலி
மின்னுறுகூறை வைத்தெடுத்தணியும் விதிவழாதியற்றன் மேவுவரால் (120)

கற்புடை யனங்க வலிக்குள மிரங்கிக் காமருங் கைப்படை யுழவர்
நற்பெய ருலகம் புகழ்செயக் களநாண் டந்தது நவின்றனம் புறவாற்
பொற்புறு தனுவா ரூன்கொடை கொடுத்த புனையிசை மனுகுலத் துதித்த
விற்பொலி சரத்தோ யென்றிசைத் தனனால் வீரமொய்ம் பினனெனப்
[பிறந்தோன். (121)

வீரர் குழுப்படலம் முற்றிற்று.

ஆக படலம் 19-க்குச் செய்யுள் 767.

ஆழநீள் கடற்கு மாங்கோ ரம்பிமேற் சென்றே யப்பாற்
சூழ்திருச் செந்தூருற்ற சூபனென்பான் றுணையாய்க் கொண்டு
வாழிரா சாதி ராச மன்னவன் மருவ லான்றன்
ஈழநா டொருநாடன் னிற்றிறை கொண்டீன் றுற்ற குந்தம்-ஈட்டியெழுபது.

நிலவுகாலு முத்துக்களை அலைகளாகிய கைகளால் கரையில் வீசியெறியும் கடல்வளம் பொலிந்ததும், அமுதம் போலு மினிய தமிழ் மொழியென நாடுவோர்க்கு வீடு பேறளிப்பதும், வேலவன் வீற்றிருப்பதுமான செந்தின்மா நகரத்தில்; ஈகையாற் றருவையும், பனகவராலசைக்க வொண்ணாத் தன்மையால் மலையையும் நிகர்த்த சூபன் என்னும் செங்குந்த மன்னன், மன்னர் மன்னனாகிய சோழனுக்குச் சேனைத் தலைவனென்னும் சிறப்போடு ஆட்சிபுரிந்து வந்தனன்.

அக்காலத்தில் அச்சோழமன்னனுக்குத் திறை தந்து வந்த ஈழநாட்டரசன் தன்னிடம் திரண்ட சேனாபலத்தாற் செருக்கித் திறைபெறச் சென்ற தண்டலாளர்பால் இனி நும்மரசனுக்குத் திறைதரேன் வலிமையுளனேல் அன்னோனே இவண் வருக எனச் செப்பி விடுத்தனன். அவ்வணமே அத்தண்டலாளர் சென்றிசைப்பக் கேட்ட சோழமன்னன் சினமூண்டு

வெற்றிவேற்காத்துச் சுபனையண்மி வீரரின் மிக்க விறலுடையோய்; நமது அனிகம் புடைசூழ ஈழநாடு புகுந்து அவ்வீழன் செருக்கறப் பொருது திறைபெற்று மீள்க எனப்பணிக்க சிங்கவேறுபோன்ற சுபன் தனது சேனைக்கடலை மரக்கலங்களின் உதவியால் கடலைக் கடப்பித்து ஈழநாட்டை யடைந்து ஆங்குற்றோர் கலக்கமுறுமாறு சமர்முரச முழக்கினன். இஃதுணர்ந்த அவன் சமர்க்குச் சமயம் வாய்த்தது; வெற்றி நமதேயெனச் செருக்கித் தன்னைச் சுற்றிய சேனைகளோடு சூழ்ந்து கொண்டனன். இருதிறச் சேனைகளும் அணிவகுத் தெதிர்த்துத் தத்தம் கைவன்மைகளைக் காட்டி நெடும்போது பொருதன. சுபன் சேனை வீரரால் தன் சேனைகள் தாக்குண்டொழிந்து புறந்தருவதைக் கண்ட ஈழன் மலைபோன்ற யானைமேற் கொண்டு வெற்றியுற்ற சுபன் சேனைகள் சிதருண்டோடுமாறு கைத்தண்டங் கொண்டு சாடி சுபனைக் குறுகி நெடிது நேரம் பொருது அத்தண்டத்தாற் றுக்க நெருங்கிய காலையில் சுபனும் தன்கைத் தண்டத்தால் அவன் தண்டத்தைப் பொடி படுத்தி எறிவந்த மதகரியையும் வீழ்த்தி விரைந்து பற்றி இறுகப் பிணித்தனன்.

பிணிப்புண்ட ஈழன் முன்னிருந்த செருக்கொழிந்து தாள்களிற் பணிந்து பொன்னும் மணியும் புழைக்கை யானை யீட்டமும் முன்னிலு மிரட்டி தருவலென இரந்து வேண்டினன். சுபனும் அவன் செருக்கொழிந்து பணிந்தமைக் கிரங்கி அவற்றைப் பெற்று விடுத்து மீண்டு வந்து பெற்றவற்றைச் சோழனுக்குத் தந்து அச்சோழனால் வழங்கிய வரிசையாவும் பெற்று தன்னகரமுற்று இனிது வாழ்ந்திருந்தனன்.

மச்சநா டுடைய கோமேல் வங்கநாடாளு மன்னன்
குச்சர வரசற் காகச் சமரமேற் கொண்டு கொற்றக்
கைச்சலி யாமற் கொல்லுங் காலையிற் கௌத னென்பான்
உச்சினி தொடங்கிப் போர்செய் குந்தம்போ லுலகி லுண்டோ—ஈட்டி
[யெழுபது.

இரண்டுருவு மொன்று யிசைந்து தோன்றுமாலென ஆன்றோ ரருளிய வண்ணம் மால்வேறு சிவன்வேறென்ன வழங்கிடா வாய்மை போலும், வேல், குந்தம் என்றுஞ் சொற்கள் ஓர் பொருளையே யுணர்த்துமாறு போலும், கதிர்களுக் காதியாகிய கண்ணுதற் கடவுள் கால்வழித் தோன்றிய செங்குந்தரும், கதிரவன் கால்வழித் தோன்றிய சோழமன்னரும், செங்கோன்மை யாலும், புலிக்கொடியாலும், குலத்தாலும் ஒன்று பட்டு வாழ்ந்திருந்தனர். இத்தகைய செங்குந்த மரபில் நிறைந்த கல்வியும், அடைந்தவர்க்கருளுந் தயையும், போரில் வயங்கொளும் நேரியவலியும், முரசந்துஞ்சா முன்றிலும், திரைகடலெனத் திரண்டசேனைகளுமுடைய கௌதனென்னும் சோழநாட்டு மன்னவன்; அறுமுகற் கன்பனாய், மூவேந்தற்கு முதல்வனாய், மச்சநாட்டிற்

கப்பாலுந் தன்னாணையைச் செலுத்தி துலைபோல் நடுநிலையாகக் கண்ணைக் காக்குமிமையென இவ்வுலகைஅறந்துணையாகக்கொண்டுகாத்தோம்பினன்.

அந்நாளில் வங்கநாட்டரசன் குச்சரமன்னனுக்காக நால்வகைச் சேனையோடு மச்சநாட்டை நெருங்கி பசுநிறை கவர்ந்து, ஊரைக்கொளுத்திக் கொள்ளையிட்டு எதிர்த்தோரைக் கொன்று எஞ்சினோரை அஞ்சியோட வருத்தினன். மச்சர் கோமான் மருண்டு கௌதன்பால் நண்ணி குறையிரந்து முறையிட்டனன். கௌதன் என்னும் மன்னர் மன்னன் அன்னவனைக் காத்தல் கடனெனக் கருதிப்போர்முரசொலிப்ப நான்குவகைப்படைகள் புடைசூழத் தேரிவர்ந்து, மச்சநாட்டை நச்சரவென்ன நலிந்த வஞ்சகன் சேனைகளைப் பஞ்செனப் பறக்க வாட்டி, வங்கமன்னனைச் சிறைப்படுத்தி, அவ்வங்கனது நாடுற்று வளம்பல கவர்ந்து, அங்குந்தனது புலிக்கொடியை நாட்டிக், குச்சரமுற்றுப் பகைவரைத் தானையாகிய மத்தால் தயிர்போல் கலங்கக் கலக்க அக்குச்சரமன்னன் அஞ்சிலந்து அடிவணங்கித் தந்த திறை கொண்டு, மகத நாட்டில் உச்சினிகாறுஞ் சென்று கீர்த்தியும், செல்வமும் வெற்றியுங் கைகொண்டு செழித்த தனது சோழநாடு வந்து சேர்ந்தனன். இத்தகைய கௌத மன்னவன் கையிற் கொண்ட குந்தத்தின் பெருமை அளவிடற் கரியதாகும்.

இடைமரு தூரிற் சாப மேந்திய சிறக்கை யானை
புடைமரு தடியில் வீழப் பொருதியே புறங்கொடாது
விடைமழு வுடையான் பாத மென்கம லத்திற் சேர்த்த
படைமரு தன்கைக் குந்தம் போலினிப் பாரிலுண்டோ—கட்டி
[யெழுபது.

செய்மையிற்றிகழும் மலையெனத் திரண்ட தோளாற்றலுடைய படைமருதன் என்னும் திருவிடைமருதூரை யாண்ட மன்னன் வில்லினுக்கிறைவனென உலகத்தார் அதிசயிக்கும்படி வாய்மையும் தூய்மையும் நிறைந்து இளங்கதிரெனச் சிறந்து விளங்கினன். ஆயினும் எத்தகைய பெருஞ்சிறப்பும் பெருவாழ்வும் பெற்றாலும், பிறப்பிறப்பென்னும் பெருங்கடலைக் கடந்து பேரின்ப வீட்டை யடைதற்கு ஈசன் திருவடிப்புணையன்றி வேறு துணையின்றென்னும் உண்மையுணர்வால், அரசர்க்குரிய போர்நசை பொருள் நசை யொழிந்து, இறைவன் திருவடி வழிபாட்டினின்று நீங்கானாய் நீறு பூத்த நெருப்பென அரசுமேவி, எல்லாந் திருவருளேயெனக் கருதி வாழ்ந்திருந்தனன்.

அப்போது பொறாமையும் பேராசையுமுடைய சிறக்கையானென்னும் வட நாட்டு மன்னன்; சேனைகளோடு சென்று பல தேயங்களை வென்று, வளத்தால் வானுலகை யொத்த திருவிடைமருதூரை யணுகி புடை

மருதனை வலிமையிற் போருக்கழைத்தனன். உயிர்க்குறுகண் செய்யாமை சால நன்றென நோற்கும் படைமருதன் போர்செய மறுத்து நன்மொழி புகன்றுங்கொள்ளாது சிறக்கையான் எள்ளி நகையாடி அடுதொழிற் படைஞரால் குடிகளுக்கிடுக்கண் விளைத்தனன்.

கண்டபடைமருதன் அண்டர் நாயகன் திருவடிதொழுது தனியனாய்ப்போர்க் கோலங்கொண்டு ஒற்றைத்தேரூர்ந்துசென்று அம்பெனுங்காற்றினால் வம்பன் சேனைகள் பூளையெனப்பறக்கத்தாக்கிச் சிறி முன்வந்து, சிறக்கையான் விட்டபடைகள்யாவையும் இடையிற்பொடிபடுத்தி, பற்பல வடிக்கணைகளை பகைத்தோன் மேலேவினன். அன்னவனும் அவ்வவற்றிற் கெதிர்க்கணைபல ஏவியழுத்தனன் இன்னணம் நெடும்பொழுது கொடுஞ்சமராற்றுழி படைமருதமன்னன் சுடுகணையொன்றேவி சிறைக்கையானை மருதமரத் தடியில் வீழ்த்தி இறைவன் திருவடியில் சேர்த்தனன்

பழுவூர் வீரன்

சூட்டும் வீர வாகுவெனச் சொல்லும் பழுவூர் வீரனமர்
மூட்டுங் கால மூழி வெள்ள மூடுங்கால மாகாதோ
வேட்டங் காவில் வீழாதார் மேலு முளரோ வீதியுலா
மீட்டுங் காலங் குந்தங்கண் டெழுமே கழுகு பருந்துகளும்

பழுவூர் நாராயணன்

காராமுருவ மொழிந்து பொன்னின் கவினார் பழுவை வளம்பதியில்
நாராயணனே விக்கிரம நாராயணனே யென்னுதார்
வாரா வழிவந் தேதாமென்றே வாயிற் புல்லைக் கவ்விவந்தச்
சேரார் சேரா நின்று தொழச் செய்யு மன்னன் செங்குந்தம்

கச்சித்தனியன்

இனிமா நிலத்திற் கண்டதில்லை கேட்டே யிருத்த லன்றிபெரும்
பனிமால் வரையு மைநாக முன்பின் படைதா னெடுத்தாலு
முனிமா றுண்டோ தனிநின்று முடிப்பான் கச்சித் தனியன்வட்டத்
தனிமா நிழற்கீழ்ச் செங்குந்தஞ் சாரு கதிக்கு வைகுந்தம்

ஒற்றியூரன்

உடல மண்மே லுயிர்விண்மே லொல்லா ரொடுங்க வுதிரமொடு
குடருங் கொழுவுங் கழுகோடுங் கொள்ளை கொள்ளப் பரிந்தூட்டு
மடல்வெண் டாழை முகமலர வாரி வாரித் திரைக்கரத்தால்
கடல்வெண் டரளமே யெறியு மொற்றியூரான் கைக்குந்தம்

களந்தையரசன்

தளர்ந்த வருக்குத் திருவுருவந் தன்னை யடையார்க் கொருசிங்கம்
இளந்தை யவர்க்குச் சிலைவேணல் விசையாற் பொற்பூ தரமேடாம்
வளர்ந்த சாலி வரம்பினில்வால் வளைகண் முத்தந் தரும்வளங்கூர்
களந்தை யாதி நகராசன் கைக்குந் தம்போற் காணேமே

புற்றிடங் கொண்டான்

கற்றிடங் கொண்டவர் கவின்சொற் கொள்ளுமே
புற்றிடங் கொண்டபேர்க் குவகை நல்குமே
வெற்றிடங் கொண்டமே வலரை வீட்டுமே
புற்றிடங் கொண்டவன் பொலிகைக் குந்தமே

கோளாந்தகன்

சூளா வடலைச் சிகரகிரி முடிகம் பிக்கு மாறு தஞ்செந்
தாளான் மடங்க வொருகூற்றந் தனிமும் மதில்காய்ச் சிறுமூரல்
வேளா ருயிரைப் பேர்க்கவனற் கண்ணும்விளங்கு முருத்திரனேர்
கோளாந் தகனென் றோளான்கைக் குந்தம் வாகைக் குந்தமே

புலியூர்ப் பள்ளி கொண்டான்

புண்ட ரீகமே குவளையே தளவமே பூமாவே
பிண்டி யேபெறுஞ் சித்தசன் றன்குணம் பிழையாவென்
கண்ட வீரகண் டன்புலி யூர்த்தனி காத்தேசீர்
கொண்ட பள்ளி கொண்டான்கர தலத்திடைக் கொளுங்குந்தம்

பிணவன்

குணமார் தருமத் தெவ்வேந்தர் குலக் கோளரியே குலத்தருவே
துணவா வண்மைச் சகம்பேசச் சகமே தாங்கும் பூதரமே
பிணவா வென்று பகரார்வாய் பிளந்து சோரிப் பெரும் பூதக்
கணம்வாய் மிரப்புங் குந்தன்போற் காணேங் கேளோங் கற்றோரே

கண்டியூரான்.

மிண்டி டாமன் மேவலீர் விளம்பிடாம லோருமின்
றெண்டி டாமல் வாழ்வ தெய்யவன் சூர பன்மன் பட்டிடக்
கண்ட வீரவதூரு தேவர் கால்வருங் குலத்துமன்
வண்டெ லாவு கண்டி யூரான் வயிரவாகு குந்தமே.

முது குன்றமணியன்.

மூத்த முதுகுன் றக்குரிசின் முதிரு மனைவைப் பாராளன்
பார்த்த னென்னு மணியன்கைக் குந்தங் கொடுத்துப் பகரவே
பூத்த மார்பத் தார்பறித்துப் பூழி படவே வீழ்ந்திறைஞ்சிக்
கோத்துச் செங்கை மலர்கூப்பிக் குறகார் சிறுகி வரக்கண்டான்.

தஞ்சை வேம்பன்.

பஞ்சம் வெம்பத் தரும்பனையே நாவான் மிகவே பாடாது
தஞ்சை வெம்பனைப்புகழ்ந்தே மதுமுன் செய்த தவமேயாம்
எஞ்ச வெளிதோ ஆழியுருத் திரன்கைக் கொளுமூ விலைவேலே
வஞ்ச மாயை யவதரித்த திவன்கைக் குந்த வரவாமால்.

மங்கிலியப் பிச்சையிட்டது.

வல்லான்றன் றிருத்தேவி மங்கிலியம் பிழையர்மன் மடிதா னேற்றிச்
செல்லோரு மங்கிலியப் பிச்சையிடு மெனத்தாள் வீழ்ந்திரப்ப வேண்டிக்
கொல்லாமல் விடுதல்புக ழெனக்கருதி யோகற்பின் கொண்ட வாய்மை
நல்லார்க ளிருந்தவையின் புகழ்கைக்கோ காத்ததுகோ னஞ்செங் குந்தம்.

உயிர்க் கோடை.

எல்லாக்கா லத்தினுமொன் றேற்பவருக் கில்லையெனுஞ்
சொல்லானது கற்றுஞ் சொல்லறியா ரேந்துகுந்தம்
வல்லானைக் கொல்லாமன் மனைவிக்கு மாங்கலியம்
உல்லாசத் துட னளிக்கு முதவியதொன் றறிந்தேமால்.

மெய்த்தலை கொடுத்தல்.

முத்தமி ழிராசரா சேந்திரான் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெறுமென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே.—ஈட்டியெழுபது.

வெற்றி முரசம்விடாது முழங்கும் கடைத்தலையை யுடைய குலோத்துங்கமன்னனே நின்குல மூதாதையான பராந்தகச் சோழன் அரசாண்ட காலத்தில் தீவினை யெல்லாம் ஒருருக் கொண்டு தோன்றியது போன்ற விக்கலன் என்னும் இரட்டன் நோன்பு செய்து காளிதேவியிடம் பெற்ற வச்சிரவாள் தண்டம், கவசம், நினைத்தவிடத்திற் செல்லும் விமானமாதிய

பலத்தாற் செருக்கி கள்ளனென நள்ளிரவில் நகர்தோறுஞ் சென்று அரிய பொருளெல்லாம் விரைவிற் கொள்ளை கொண்டு தடுத்தவர் தலைகளைத் தரையிற் றள்ளி வேந்தரும் மாந்தரும் அஞ்சி அலக்கணுற நஞ்சுபோல் துன்புறுத்தி யாவரும் தனக்கெதிரில்லையென மதித்து, கடலென அகன்றவோரேரியினிடையில் எழுத்தம்பங்கள் நாட்டி அதன்மேல் வானளாவி மதில்கள் சூழ மாடவரிசைகள் நிறைத்தமைத்த மலைபோலும் கோட்டையின்கண் வதிந்தனன்.

நாளும் இவ்வாறு இன்னல்புரியும் அவன் கொடுஞ் செயலை யுணர்ந்த பாராந்தகச் சோழன் இக்கொடியோனை எங்ஙனம் வெல்வதென, அமைச்சர் அறையலாயினர். அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னுங் குரவர் மூவர் பாடலும் பெற்ற திருப்பழூர் என்னும் நகரில் கோமதி என்னும் செங்குந்த குலவரசன் மக்களை வேண்டி நோன்பாற்றச் சிவனருளால் மன்னவன் மனைவி கருவுற்று நாளுங்கோளும் தக்க நிலையுறு நல்லோரையில் இரட்டை ஞாயிறு உதித்ததென இரண்டு ஆண்மக்களை ஈன்றனள். அம்மன்னன் வடமூல நாதனருளினால் பெற்ற மக்களுக்கு வீரன் நாராயணனெனப் பெயரிட்டு மகிழ்ந்து வளர்த்து வந்தனன். அம்மக்கள் இளம்பிறையென வளர்ந்து, கலைகள் யாவையுங் கசடறக் கற்று, மன்னர்க்குரிய வில்தொழில் முதலியன பயின்று, பதினாறுயாண்டு நிறைந்து, வீரன் வீரவாகு தேவனையும் நாராயணன் தயரதராமனையும் போன்று திகழ்கின்றனர்.

அன்னவரே விக்கலன் செருக்கழிக்கவல்லாரென அமைச்சர் சொல்லக் கேட்ட சோழமன்னன் உடனே திருப்பழுவூருக் கெழுந்தனன். வளவன் வருகையைக் கேட்ட வீரநாராயணர்கள் எதிர்சென்று நல்வரவேற்றுப் போற்றினர். வந்தமன்னன் மைந்தரை வாழ்த்தித் துன்பமுஞற்றும் விக்கலனை நீவிர் விரைவில் வாட்டி மாநிலமக்கட்கு இன்பந்தருதிர் என்றனன். என்னலும் வீரன் மன்னவ எம் துணைவர் பதின்மர் உளர் அவரொடுஞ் சென்று அத்தீயவன் தலையைக் கொண்டு வருகின்றேம் நீர்சென்று உறையூரிலிருப்பீராக வென்று அரசற்கு விடைதந்தனுப்பி விட்டு துணைவருக்குச் செய்தி குறித்து திருமுகமனுப்பினன். அத்திருமுகங்கண்ட கச்சித்தனியன், ஒற்றியூரன், களந்தையரசன், புற்றிடங் கொண்டான் கோளாந்தகன் புலியூர்ப்பள்ளி கொண்டான், பிணவன் முதுகுன்றமணியன், தஞ்சை வேம்பன், கண்டியூரன் ஆகிய மன்னர் பதின்மரும் பழுவூர்வந்துகுழுமினர். வீரநாராயணர் அன்னோர்க்கு இன்சொல்வழங்கி வரவேற்று மந்திரத்திருந்து விக்கலன் என்னும் வல்லானை வெல்லும் வகை தேர்ந்து நீதி நினைந்து வீரநாராயணராகிய வீரர் விக்கலன் றலையை வீழ்த்தத் துணிந்துளர் என எங்கெங்கும் பறை சாற்றுவித்து வானில் இயங்கும் ஊர்திபயின்ற பன்னிருவரும் வெற்றியளிக்கும் பெற்றி சேரோரையில் தீயசூர்தடிந்த சேயவன் திருவருளே துணையாகக் கொண்டு ஊர்தியிலெழுந்து விக்கலன் வாழும் கடம்பூர் ஏரியைச் சூழ்ந்த காட்டையடைந்தனர்

ஆங்குகாவல் செய்யும் ஆளியூர்தியாகிய காளிதேவியைக் கண்டு தேவீ! நீயவற்குத்துணை செய்த லொழிந்து எங்கட்குவழி விடுதியென வேண்டி வணங்கித் தேவியின் அருள்பெற்று வான விமானத்தேறி, நள்ளிரவில் கொன்னை கொள்ளும் விக்கலனை நள்ளிரவில் வாட்டுதல் நவையன்றென மதித்து, கோட்டைக்குட் புகுந்து, உலகத்துப் பொருள்கள் யாவையுங் களவிற்கொண்டு மலையெனக் குவித்து விளங்கு மாடங்களும், பந்தாடு மேடைகளும், தடாகங்களும், நாடக சாலைகளும், மற்றும் அங்குள்ள வளங்கள் யாவையுங் கண்டு, ஆண்டு எண்டிசையிலும், இருந்து காக்க வீரர் எண்மரை நிறுத்தி, வீரன், நாராயணன், கச்சித்தனியன், ஒற்றியூரன் ஆகிய நால்வரும் உள்நுழைந்து மற்றுள்ளன யாவையும் ஆராய்கையில் ஓர் மண்டபத்தின்மேல் வல்லான் ஏறி வானில் திரியும் விமானத்தைக் கண்டு அதை தீக்கிரையாக்கினர். விமானம் எரிவது கண்ட காவலாளிகள் பல்லோர் சூழ்ந்து பொருதனர். அன்னவரைக் கச்சித்தனியன் மாய்த்தனன். அவர்களினின்று அஞ்சியோடிய சில காவலாளிகள் அருந்ததிபோலுங் கற்புடைய அனங்கவல்லி அடிவருடத்துயில்கொண்டிருந்த விக்கலன் மாடமணுகி இரட்டர் கோவே; யாரோ பகைவர் உட்புகுந்துவிட்டனர். தங்களது வான விமானத்தையும் எரித்துவிட்டனர். வந்தவர் நால்வராவார். காவலர்யாவரு மாண்டனர். அஞ்சி எஞ்சிய யாங்களே மீண்டோமென நடுக்கமுற்றறைந்தனர்.

கேட்ட விக்கலன் மிக்க சினமூண்டு, அவரெங்குளாரென்றெழுந்தனன் எழக்கண்ட அனங்கவல்லி தடுத்துங் கேளாது என்னையும் எதிர்ப்பாருண்டோவென்ன இகழ்ந்து, சென்று வீரனைக்கண்டு சினங்கொண்டு சிரித்து, வைரவாளை விதிர்த்து புலிபோலப் பாய்ந்து வந்தனன். வீரன் மற்றை மூவரை நீண்மினென நிறுத்தி வாட்படை கொண்டெதிர்த்தனன். இருவரும் சக்கிராகாரமாகச் சுழல்வார், ஒருவரை யொருவர் தாக்குவார், விலகுவார், வீரந்துறிப்பார் இவ்வாறு கண்டவர் வியப்பக் கைவன்மை காட்டி வெற்றி தோல்வியின்றி நெடும்பொழுது போராற்றினர். ஈற்றில் விக்கலன் கைவாளை வீரன்பாய்ந்து பற்றிப் பறித்து அவனை நிலத்தில் வீழ்த்தி மேலே பாய்ந்தபோது அக்கொடியோன் மனையாகிய அனங்கவல்லி கண்ட கனவு பலித்ததேயெனக் கதறி கொழுகொம்பில்லாக்கொடி யெனத்துவண்டு கூந்தல்சோர அழுது அடியில் வீழ்ந்து செவ்வேளனையீர் வேறு திக்கிலேன்; உடன்பிறந்தார் நீரே யான் உமது தங்கையாவேன்; தங்கை மங்கலமற்றுத் துயர்வது அறமாமோ? உங்கள் திருவடியை அடைக்கலமாக அடைந்தேன் பெண்ணென இரங்கி மங்கலப் பிச்சையளித்துக் காத்தல் நுங்கடனென மடியேற்று வேண்டினள்.

அவன் படுந்துயரைக்கண்ட வீரன் அடைந்தவரைக் காத்தலேதகவெனக் கருதி, நங்காய்; அஞ்சேல் எனக்கையமைத்து மங்கலம் தந்தோம் என்றனன். யாங்கள் உரைத்தசொல் வழுவாமல் நின் கொழுநன் தலையை வளவர்கோனுக்குக் காட்டி நிகழ்ந்ததைச் சொல்லி விட்டுவிடுதும் எனமேலும் அந்நங்கைக் குரைத்தனன். துணைவந்த மற்றைய வீரரும் நன்றென்றிசைந்தனர். நாரணன் அவனை விலங்கிற்றளைந்தனன். பின்னர் அவனால் சிறைப்பட்ட வேந்தரையும் மாந்தரையும் மகளிரையும் விடுவித்து, அன்னார்க்கு அவன்திரட்டிய பொருள்களைப் பகிர்ந்தளித்து, தத்தம் நகர்க்குச் செல்கெனப்போக்கி, அக்கோட்டையை அக்கினிதேவற்களித்து, பன்னிருவீரரும் வீக்கியவிக்கலனை காவலர் சூழ்ந்துவர அவன்மனைவியை சிவிகையிற்கொண்டு, ஆலந்துறையையண்மி, அறுமுகனைத்தொழுது, சேனைகள் சூழ்வர யானையாதிய ஊர்தியினிவர்ந்து உறையூரை நண்ணினார்கள். வீரனாதியர் வெற்றியுற்று வரும் வருகையை யுணர்ந்த பராந்தகச் சோழன் எதிர்கொண்டழைத்து கோயிலின் மேவியிருந்து வல்லான் தலையைக் கொடுவந்தீரோ எனக் கேட்கையில், அவனை வளவன் முன்விலங்கொடு நிறுத்தி மன்னரேறே இவன் தலையைக் காண்க; தங்கையென வடைக்கலம்புக்க நங்கையிவள் மங்கலங் காத்தற் பொருட்டு இவனுயிரைப் பிச்சையீந்தனம். தலையைத் தள்ளுதலினும் மங்கலப்பிச்சை யளித்து புகழைக் கொள்ளுதல் சிறப்பாகலின் இதற்கொருப்படல் வேண்டுமென்றனர். அது கேட்ட மன்னவன் அன்னதே தக்கதென வீரநாராயணரை வியந்து நோக்கி வீரர்காள்; நும் உதவிக்கு கைம்மாறு கண்டிலேன் நீவிர் இன்று தொட்டு வீரநாராயணச் செம்பியரெனப் பேர் பெற்று எமது தமராயுறை வீரென மகிழ்ந்துரைத்து மற்றைப்பதின்மர்க்கும் வரிசை பலவழங்கி விக்கலனை விலங்கினின்றும் விடுவித்து ஆன்றகற்புடைய அனங்க வல்லியோடு சேர்ந்து நன்னெறியில் வாழ்கவெனப் பொன்னும் பணியும் தந்து போக்கினன். அவனும் தன் இல்லாளோடு வேந்தன்தாளினும் வீராதிய பன்னிருவர் தாள்களிலும் பணிந்தெழுந்து வாழ்த்தி விடை கொண்டேகினன். பன்னிருவீரரும் மன்னன்பால் விடைகொண்டு ஆலந்துறையை யடைந்து அறுமுகனைப்பரவி வழிபட்டபின்னர் கச்சித் தனியனாதியபதின்மருக்கும் வீரநாராயணர், உற்றுழி உதவிய உற்றாராகிய நமக்கு இயற்றுங் கைம்மாறு யாதென நல்லுரை வழங்க அன்னோர் பிரியாவிடை கொண்டு தத்தம் நகருக்குச் சென்று இனிது வாழ்ந்திருந்தனர்.

மற்றிருவரும் பழுவூரடைந்து வீரநாராயணச் செம்பியரென உலகம் போற்றப்பரமன் ஆலயப்பணி பலபுரிந்து பாராண்டிருந்தனர். இவ்வாறு வல்லான் மனைவி அனங்க வல்லிக்கு மாங்கிலியப் பிச்சையளித்த நன்றியை மறவாமல் இன்றும் இரட்டர் குலத்தார் தம் இல்லின் மணஞ்செய் காலையில் பன்னிரண்டு கலயத்தில் பொங்கல் வைத்து பன்னிரு வீரரையும் நினைந்து, தாலியும் கூரையும் வைத்து வழி படுகின்றனர்.

தொண்டர் குழுப்படலம்.

தூர மாகி நினையார்க்குத் துலங்குமுளத் தினிடை நீங்கா
தார நினைப்பார்க் கணித்தாகி யல்லற் பிறவி மருந்தாகு
மீர மதிச்செஞ் சடைமுடியார்க் கிம்மாண்மரபோர் தொண்டினிலும்
வீரஞ் செலுத்து மெய்யன்ப ரேனோர் காதை விளம்புதுமே. (1)

மெய்ப்பொருள்.

வேறு

மதியாண்ட நெடுமாட மணிமருகு வளங்காட்டு
நிதியாண்ட நெடுங்குடிமை நிலைத்திருப்ப நன்னெறியின்
கதியாண்ட வமைச்சரொடு கவினூருந் திருக்கோவற்
பதியாண்ட முடிமன்னன் பகைகரியஞ் சரியானேன். (2)

முப்பொருளு முணர்ந்தரசு முறைவழுவா மற்காத்திங்
கெப்பொருளை யார் யார் வாய்க் கேட்பினுந்த னியலுணர்வா
லப்பொருளின் மெய்ப்பொருளை யாய்ந்துணரு மன்னேற்கு
மெய்ப்பொருளென் றேபேரு மேதினியில் வழங்கிற்றால். (3)

மறைமொழியுந் திருநீறு மணியணியு மடியவரை
யிறையவனா மெனவழிபட் டிலகிடுநாட் பகை மன்னன்
முறைவேறாப் பொருவான் போர் முனையிற்பன் முறையாற்றான்
கறை மிடற்றா னடியான்போற் களங்கமிலான் முனங்குறுகா. (4)

தனித்தவிடத் திருவேடஞ் சார்ந்திருப்பின் பொன்வரையைக்
குனித்தபிரான் மொழிநூலைக் கூறுவலென் றானங்கே
நுனித்ததொரு படையவிழ்த்து நுழையக்குத் தினன்மார்பிற்
பனித்தவிழிக் கிமையொப்பப் பரிவொடுகாப் பவன்கண்டான் (5)

கொல்லியவன் தானிவனைக் கொல்வனென வாளோச்சிப்
புல்லியவன் தாற்றகைந்து புரவலனு மெய்ப்பொருளும்
நல்லியல்சேர் மெய்ப்பொருளை நாடுமடி யாரிவரை
யல்லலுறா துய்த்திடுக நகர்ப்புறத்தென் றறைந்திட்டான். (6)

வேறு.

சென்றுமெய் காப்பவன் நீங்கி லாவகை
துன்றிய காட்டிடைத் துகளு ளான்றனை
யொன்றியாய் செலவிடுத் தூரடைந்தவன்
நின்றவன் போமெதிர் நின்று கைதொழா. (7)

நீதிலா தடியரைச் சேனுய்த் தேனென
வோதிரு ளேதன வுயிரைத் தாங்கிய
நீதிசேர் மன்னவ னேதிரி னின்மலன்
மாதிடத் தோனென் காண வந்தனன்.. (8)

வந்தவன் வேடமு நீறு மெய்ப்பொரு
ளைந்தம ரென்றுகொண் டுயிரு நல்வினை
யந்தமி னம்மரு ளிருந்தி யாலெனத்
தந்தனன் றன்றுல கதனைத் தானரோ, (9)

எறிபத்தன்.

பொன்மணி கொழிதி ரைக்கைப் பூம்புன ணுட்ட கத்து
மன்முசு குந்தன் முன்ன மானில முழுது மாண்ட
சொன்மரு தொழுக்க முற்றுங் தூயநற் குடிகள் வாழுந்
தன்மவா னிலையார் மன்னுந் தலைநகர் கருவூ ராமால். (10)

அன்னமா நகரிற் செவ்வேட் கருந்துணையான வீர
மன்னிய புகழின் மேய மரபினை விளக்க வந்தோன்
சொன்ன நற்கலைக ளெல்லாந் துரிசற வுணர்ந்தோ னுண்மை
பன்னகா பரணர்க் கன்பர்க் கன்பினைப் பண்பிற் கொண்டோன். (11)

இருமையும் பயக்குஞ் செல்வத் திவன்சிவ னடியார்க் குற்ற
வொருவலாத் துன்பங் காணி லுயிரையுங் கொடுத்துக் காப்பான்
மருவலார் சுற்ற மற்றோர் வழித்தொண்டர்க் கிடையூ றாற்றி
லுரிமையி னொருத்துத் தண்ட முஞற்றலே தொண்டாக் கொண்டான்.

ஏற்றவிக் காரணத்தா லெறிபத்த னென்றி யாருஞ்
சாற்றுவ னிவன்றன் றொண்டைத் தனிமையி னடத்து நாளி
லாற்றவும் புலரு முன்பே யாற்றினின் மூழ்கிக் காவிற்
போற்றுபூக் கொய்த லங்கல் புண்ணிய னடிக்கே சாத்தும். (12)

தவச்சிவகாமி யாண்டா னென்றுமோர் மறையோன் றூய
நவநவ மலர்கள் கொய்து நறியபூங் குடலை யிட்டுக்
கவையுறு தண்டிற் கோத்துக் கவின்புறந் தாங்கிக் குந்தி
நவையுறு மயிர்கண் மெல்ல நடந்துசென் னெறியி னூடே. (13)

மன்னவன் னுரையாலும் வளவன் பட்டத்தி யானை
நன்னய நவமி னாளி னறிப்புன லாட்டிக் கொண்டு
செந்நெறிப் பாகரோடுஞ் சேர்ந்தது மதமீக் கொண்டு
முன்னர்செல் தொண்டன் றன்னை முட்டிப்பூங் கூடை தன்னை. (14)

துண்டினிற் பறித்துச் சிந்தி தரைதனிற் கவிழ்த்தங் கோடக்
கண்டனன் மறையோன் முந்திக் காற்றினிற் கடுகிச் செல்லு
மிண்டிய களிற்றின் பின்போய் வெகுண்டொன் றுஞ் செய்க லாதா
னண்டர் நாயகனைக் கூவி யரற்றியே யோல மிட்டான். (15)

என்னுற்ற இவனுக் கென்றே யெறிபத்த னெறியின் வந்தான்
மின்னென விரைவிற் கூடி விறலவ னுற்ற தோர்ந்து
கொன்னுனி வாட்கை யோடுங் கொதித்தெழுந் தடியான் பாங்க
ரின்னல்செய் களிற்றைத் தேடி யெதிர்ந்தனன் பாகரோடும். (16)

மடங்கலே றென்னப் பாய்ந்து மலர்சிதை களிற்றின் கையை
யிடியென முழங்கி வீழ விடைதடாப் பாகரோடு
மிடல்கெழு வாளால் வெட்டி வீழ்த்தின னெஞ்சி னோர்சென்
றடல்வலி யரசற் குற்ற துணர்த்தின ராயா தன்னோன். (17)

கடுஞ்சினத் தோடெழுந்தான் கடுகிய படைஞர் சூழ
படுகடக் களிறு சாய்ந்த படுகளங் குறுகிக் கேட்க
வடுகளிற் றருகு வானோ டரியென விருந்தான் றன்னை
படுதொழி லிவனே செய்தா னென்றன ரருகி லுள்ளார். (18)

கண்டமாத் திரத்தன் பூரக் கவினமான் றுறந் திழிந்து
மண்டிய பிழைகண்டன்றி வாட்டிடா னிவனென் றத்தன்
றொண்டனைப் பரவித் தாழ்ந்து தூயவ விதன்பாற் குற்றங்
கண்டதுண் டென்னத் தோன்றக் கழறின னிகழ்ந்த வெல்லாம். (19)

திரும்பவு மிறைஞ்சி மன்னன் றீங்கிதோ டகன்ற தன்று
விரும்புமென் னுயிருங் கோடல் வேண்டுமென் றிரந்து வாளைப்
பருங்கையிற் கொடுக்க வாங்கிப் பதைத்துமன் னன்பு நோக்கி
யரும்பெற லன்பற் கேத மாற்றியென் செய்தே னென்று. (20)

தானேதன் கழுத்தை யீர்வான் றந்தவாட் பூட்டுங் காலைக்
கோனேதான் கண்டிருப்பான் குதித்திரு கையைப் பற்ற
வானேறின் றுனேற் றின்மேல் வள்ளலார் தோன்றி நின்றே
யூனேறின் றுருகு மன்ப வொழிகவிச் செயலை யன்றே. (21)

உம்முடை யுண்மைத் தொண்டை யுலகுளோர் காணவேண்டி
நம்முடைய யருளா லிங்கு நடந்தன வெல்லா மென்று
தம்முடைய யுலக மெய்தத் தனியரு ளன்பர்க் கீந்திங்
கிம்மென வுருக்க ரந்தா னெங்குமா மிறைவ னம்மா. (22)

அருள்வியந் தவச மாகி யாருயி ருணர்ச்சி தோன்றப்
பொருளிழந் தவர்பெற் றாங்குப் பொன்றினு ருயிர்த்தார் பின்றை
யுருளுறு சக்க ரத்தா னுயிர்த்ததோ ரும்ப லேற்றி
யருளுறு தொண்டன் றன்னை யணிநகர் வலங்கண்டானே. (23)

எறிபத்தன் றொண்டின் மேன்மை யித்தகைத் தென்று நீர
வறிந்துரை செய்ய நம்மா லாகுமோ வருளின் மேன்மைக்
குறிபெருந் தொண்டு பன்னாட் கொண்டிருந் தமலன் செய்ய
நறுமலர்க் கமலபாத நளிர் நிழ லுற்றுன் மாதோ. (24)

பெருமிழலைக் குறும்பர்.

அருமைபெறு மன்பினுரு வரனுருவென் றெடுத்துக்காட்டாக மன்னு
மிருமையினு நலம்பயக்கு மின்னலொழி நன்னெறியை யினிதிற் கொண்
டோன், பெருமிழலை யூராளி குறுநிலம னிலைவடிவம் பிறங்கு வைவே
லொருமுருக னிளையாரோர்ன் பான்வீரர் மரபுதித்தா னுலங்கொள்தோளான் (25)

ஆளாகத் தடுத்தாண்டு மாரூரிற் பரவையிடத் தழுந்த வைத்துங்
கோளாகச் சங்கிலியா லார்த்து மகன் முதலையின்வாய் கொடுப்பித் துந்தன்
கேளாகுந் தோழனென மெய்ப்பொருளைக் கொண்டருளுங் கிழமை நோக்கி
மீளாத வாளா வேன் வன்றொண்டற் கெனமனத்தின் விழைவுகொண்டான் (26)

நனவாகப் பயில்போதுங் கனவாகத் துயில்போது நம்பி தன்சீர்
மனமகலா திவ்வாறு வாழ்ந்திருப்பத் தனதுளத்தில் வழியு மன்பான்
முனங்கண்டு பணிந்திடுவேன் சுந்தரனை யென்றெழுந்து முடுகி யாரூர்
தனந்தனியே சென்றணுகித் தம்பிரான் றிருத்தோழன் றாளில் வீழ்ந்தான். (27)

பித்தாவென் றிறையவன்சீர் பேசியவெம் பெருமானே பிரியா வன்பாற்
கத்தோதக் கடலுலகிற் றிருத்தொண்டத் தொகை பழுத்த காவே பாணுண்
மெய்த்தேவைத் தூதாகப் பரவைபால் செலவுய்த்த விமலா வென்றே
கொத்தாரு மலரடியில் வீழ்ந்துபணிந் தாற்கபயங் கொடுத்தா னன்றே. (28)

நம்பனரு ளுண்டாக வெனத்தலையின் மலர்க்கையா லளிவரு குட்டி
யும்பருக்கு மெட்டாத வுயர்ஞான வரம்பருளி யுரிய நாடான்
டிம்பரா சியைந்திருக்க வென்றேவி ளுன்முதுகுன் றீச னேவச்
செம்பொன்னே யாற்றிட்டுக் குளத்தெடுத்த சுந்தரனுஞ் செம்மலம்மா. (29)

பிரியாத விடைகொண்ட மிழலையர்கோன் றன்னாசு பிறழா வண்ண
மரியாத திருவாருந் தன்னகரம் புகுந்திருந்து வாழு நாளிற்
பெரியான்ற னருண்மொழியைக் கடைப்பிடித்தந் நெறியதனிற் பிரியாளுக
வுரியானு மிவனென்றே யெண்வகைய சித்திகளு முற்றவன்றே. (30)

மன்னுரிமை மாருமன் முறை செய்தும் பற்றறுதா மரைநீ ரொத்து
தன்னிலையிற் பிரியாத வக்கோவிவ் வாறிருப்பத் தன்னை யாண்டான்
பொன்னூர் மேனியன் கைலைப் பொருப்புற்றுன் வெள்ளானைப் பொருப்பி
லென்றே, கொன்னூர்யோ கத்துணர்ந்தான் குரம்பையொடு மவனேகுங்
குறிகொண்டானே. (31)

விட்புலத்தி ஞருகத் தான்பயின்ற யோகத்தின் மேன்மையாலே
கட்புலத்துக் கெட்டாத வணுவுருவங் கொடு சென்றுன் கணத்தி னுற்றுன்
பட்பகைய மொழியுமையாள் பங்கன்வாழ் கைலாய பருப்பதத்தை
நட்பினெடு வந்தணைந்த நம்பியா ரூரடிகண் ஞாங்கர் மாதோ. (32)

திருமூலர்.

வெள்ளியங் கிரியி ருப்போன் வேண்டுமெண் சித்தி பெற்றோன்
தள்ளியோன் மூன்று குற்றந் தடங்கடல் முற்றுங் கையா
லள்ளியுண் முனியைக் காண்பா னத்திசைத் தலங்க ளெல்லா
முள்ளிய வன்பாற் கண்டா வடுதுறை யுவப்பினுற்றுன். (33)

ஆயிடை மூல னென்பா னினிரை மேய்க்குங் காலை
மேயநா ளுலப்ப வீந்தான் வீழுடல் சூழ்ந்தவ் வாக்கள்
கூயின கண்ணீர் சோரக் குலைவகண் டினெகி ழ்ந்து
தாயின னன்னேன் மெய்யிற் றன்னுடற் புறம்பே வைத்து. (34)

இன்னுயிர் பெற்றெழுந்தா னிவனென வாக்க ளெல்லா
மன்னிய வில்லஞ் சார்ந்து மகிழ்ந்தன வீற்றி லோராத்
துன்னிய விடத்தை நண்ணத் தொடர்ந்தவன் புறத்தி னிற்ற
வென்னிவ னில்லுள் வாரா னிங்கிருந் தானென் றெண்ணி. (35)

மூலனிற் இழுத்தி கையை முன்பிடித் தழைப்ப யானுன்
கோலநற் கணவ னல்லே னென்றவ ணகன்று தன்கூ
டேலமுன் வைப்பிற் காணக் காண்கலா னிறைவு மீசன்
மூலமே விருப்பச் செய்த தண்ணரு ளென்ன வெண்ணி. (36)

காண்டகு மரசி னீழற் கலந்தமர் யோகி னின்று
றாண்டொரு பாடலாமூ வாயிர வாண்டு காறு
மாண்டகச் சரியையாதி மருவிய ஞான மீறு
வீண்டிய பிறவி யென்னு மிருங்கடற் றோணி யாக. (37)

மானில மக்க ளுய்ய மறைதிரு மந்திரத்தை
யானமூ வாயி ரந்தா னருளின னமுத மொப்ப
மேனிலை யோகத்தாலே விண்ணவர் தமக்குங் கூடாக்
கூனல் வெண் பிறைமு டித்தா னுலகினைக் கூடினானே. (38)

தண்டியடிகள்.

துறக்க நாட்டின் முசுகுந்தன் தோலா வசுரர் குழுவெல்ல
மறக்க லாகா நன்றிகொடு வலாரி கொடுப்பக் கொடுவந்து
சிறக்க வமர்த்த வெழுந்தருளுஞ் செல்வ விடங்கப் பெருமான்வாழ்
பிறக்க வீடு தருமாரூர் பிறந்தான் கைக்கோட் குலத்தண்டி. (39)

மண்ணிற் பிறந்த வஞ்ஞான்றே மலஞ்சேர் புறக்கண் டெரியாதாய்க்
கண்ணிற் களங்க மறுமகக்கண் காணும்பண்பாற் காட்சி யுற
விண்ணிற் பொலியு மதிமுடியார் மிளிர் பொற்பாத மறவாம
லெண்ணிற் கடங்கா வன்புமுளை யெழுந்து கிளைத்தோங்கியதம்மா. (40)

வாக்கா லரனார் சீர்பாடி மனத்தஞ் செழுத்து மறாதுன்னி
நோக்காலறியா வுண்மையுரு நுண்மை யுணர்வா னுனித் துணர்ந்து
தாக்கா தாகி யெப்பற்றுந் தனித்தங்கிருந்தா னோர்நாளிற்
பூக்கா வுடலா னோர்தொண்டு புரிய நினைந்தான் புறம்போந்தான் (41)

திரைசேர் நீரார் குளமொன்று செய்ய விடையிற் றறிநிறுவி
வரைசேர் கயிறத் தறிதொடுத்து மற்றக் கயிற்று வழியாக
புரைசேர் மண்ணைக் கூடைகொடு புறத்தே கரையிற் கொட்டுதலுந்
தரைசே ருயிரைக் கொலவேண்டா வென்றார் தடுத்தார் சமண்
சார்ந்தார். (42)

வடபாற் செல்வார் தென்றிசையின் வழியை நோக்கிச் செல்வார்போ
லுடலா லடையும் பயனடையு மொழுக்க நீத்து மண்டோண்டி
லடைய லாமோ வீட்டின்பம் புறக்கண் போல வகக் கண்ணு
மடனுற் குருடு பட்டனவோ வென்றூர் பின்னு மாண்பில்லார். (43)

ஆயா திகழ்ந்தார் சொற்கேளா வடக்க மில்லீர் நுங்கண்ணே
தேயா நிற்கு மொளியென் கண் தெரியு மதனை யினிக்காண்பீர்
சாயா வுண்மை யிதுவென்னத் தனியே பரனூர் தளிசென்று
பாயா வேங்கை யன்னூர் சொல் பயனில் கூற்றை முறையிட்டான் (44)

பின்ன ரிருக்கை மேவியனுர் பெரிது முற்றுத் துயில் கனவிற்
பொன்னஞ் சடையா னஞ்சாதி போயப் பணியைப் புரிகென்றுன்
மன்னன் றனக்கு மிவர்செயலை நடுநின் றறிதி யெனவழுத்தி
மின்ன லொளியிற் கரந்திட்டான் வேந்தன் விழித்தான் வியப்புற்றான். (45)

தொண்டன் றடந்தோண் டிடநண்ணி தூயன் றன்னை வினவுதலும்
விண்ட தனது மெய்யுரையும் வேண்டா ருரையும் விளம்புதலு
மண்டே மிவ்வூ ரிவன்கண்ணை யடைந்தா லென்றூர் மற்றவருங்
கொண்ட வாய்மையைக்கூறிக் குளித்தான் கமலக் கோயிறடம். (46)

கண்பெற் றெழுந்தான் மெய்த்தொண்டன் கரவுள்ளத்தார் கண்
ணிழந்து, புண்பட் டுளைநந் தவ்வூரை யகன்று ரரசன் புகழ்ந்தேத்தி
நண்புற் றவனு யிருந்தனன்மே னல்லதண்டி யித்தகைய
பண்பிற் பன்னு டெண்டாற்றிப் பரமன் கைலைப் பதமுற்றான். (47)

களந்தைக்கோன் கூற்றுவன்.

வேறு.

நென்மலி வயனிறை நிலவ ளத்தினுற்
றன்மநற் குடிதழைத் தோங்குந் தன்மையா
லின்மையுற் றவருறி லீயு மிற்களாற்
பொன்விளை களந்தையென் றுலகம் போற்றுமே. (48)

அத்தகு நகரையா ளசனி யேறனான்
நெய்த்தவேற் கையினு னிகரி லாற்றலான்
றுத்தியொள் ளரவினிற் றுகள்செய் துன்னலர்க்
கெய்த்தவில் கலுழனி விலங்கு காட்சியான். (49)

சுத்த வெண்ணீரணி துலங்கு நெற்றியா
னத்தனை யைந்தெழுத் தவிரு நெஞ்சினன்
நித்தலும் பூசனை நெறியி னுற்றுவான்
மெய்த்தகு தொண்டருக் கேவன் முற்றுவான். (50)

விக்கலனுடன் பொர வெழுந்த வீரறு
செக்கர்வேல் வேந்தரிற் சீர்க ளந்தையா
னக்கவின் கோவழிக் காதி யாயினன்
புக்கவெச் சமர்க்கணும் வெற்றி பூணுவான். (51)

நாற்றிறப் படைக்கட னடத்தித் தன்னுடை
யாற்றலின் மாநிலத் தரசர் யாவருந்
தோற்றனர் புறந்தரத் தொலைச்சி வெற்றிவேற்
கூற்றுவ னெனும் பெயர் கொண்டு மீண்டுளான். (52)

மன்னவர் மன்னனாய் மரபின் மேவிய
வின்னருட் பேற்றினு லேற்று மாமுடி
தொன்னிலம் புரந்தனன் றெண்டர்க் காவன
நன்னலம் பெறவள நாளு நல்கியே. (53)

ஈண்டிறை யமர்தளி யெங்கு நாடினன்
மாண்டரப் புதுக்கினன் வாழ்ந்து மையறீர்த்
தாண்டடி யார்க்கெலா மன்னை யாயவன்
றாண்டலி லவிர்சுட ரடியிற் றுள்ளினன். (54)

நரசிங்க முனையரையன்.

வேறு.

தினஞ்செய் நல்லறப் பயனெனத் திருமுனைப் பாடி
யெனவி ளங்குநாட் டிருந்தர சாள்நர சிங்க
முனைய னன்பின னாற்றலிற் பொன்னனை முனிந்தோன்
றனையொப் பானுயிர்த் தொகைக்கெலாந் தாயினு மினியான். (55)

துன்ன லார்தமைத் தோள்வலியாற் புறங் கண்டு
மன்னு மாவளம் பெருகுற வளமெலாம் வாய்ந்து
முன்னு மற்றவற் றுவர்ப்புமீ தாரலின் முடுகு
நன்னர் நெஞ்சனாய்த் தனித்திருந் திவையிவை நாடும். (56)

உடல முற்றன வுலகினி லலகில வுயிர்கண்
மடமிகச் செயும் வினைத்தொகை யளவில மதிக்கின்
கடவு நாளவம் கழிவன கணிப்பில வாக
யடையு மேனெறி யாதென வறிவதிங் கரிதே. (57)

உலகுயிர்க்கெலாந் தனிமுத லொருபொரு ளூற்று
ரலைவறுத் துயர் நிலமிசை யழிவிலின் பார்வர்
தலைவ னச்சிவன் றனையடை நெறியினைச் சாற்றும்
புலமை யுற்றவர் பொய்யிலா மெய்யடி யாரே. (58)

என்றிவா றெணி யன்றுதொட் டீசன தடியார்க்
கொன்று நல்லுடை யறுசுவை யுண்டியோ டளித்து
மன்று ளாடியோ னற்றினம் வரின்விழா வயர்ந்துங்
குன்று போலுயர் தோளினான் கூடினன் றொண்டே. (59)

நீறு கண்மணி யுடையரைக் கண்டிடி னீங்கா
தூறு மன்பினி லேவரா யினுமுள முவந்து
நாறு மாமலர் கொண்டடி வழிபடு நலமார்
பேறு பெற்றனன் பிறவியின் பயன்பெறு வானே. (60)

பன்னெ டும்பக லிடையறு தாற்றுமிப் பணியாற்
றுன்னி யின்னருள் வாழ்ந்தன னீற்றினிற் றூய்தாச்
சொன்ன மாமறை யீற்றினிற் றுலங்கிய சுடராய்
மின்னு மாமுடி வேணிய னுலகின்மே வினால். (61)

வேறு.

சத்தி.

சேரிய நாட்டிற் சத்தி நீங்கலாக் கையனூர
யாரணி யவனிணைக்கத் தாலருட் சத்தி யென்பா
னீரணி சடையான் றன்னைப் பழித்துரை நினைவினாருட்
காரிரு ளகலச் சத்திக் கதிரினா னாவை யீர்வன் (62)

தண்ணருட் டாயை யொக்குஞ் சங்கரன் றந்த வாவா
லுண்ணெகிழ்ந் தவனை வாழ்த்தார் பழியுரைக் குள்ளா னாரை
மண்மிசை வாழு மற்றை மாந்தரு முணர்வான் சத்தி
யண்ணலு மவர்புன் னாவை யரிதலே தொண்டாக் கொண்டான். (63)

இத்தகைச் செயலா லெங்கு மிறைவனைப் பழித்து ரைக்கும்
பித்தருக் குணர்வை யூட்டிப் பேதமை யொழித்து வாழ்ந்து
அத்தனைப் பிழைகண் டன்னோன் காறுணித் தானை யாண்ட
சித்தன துலகம் புக்கு வீடுபே றின்புற் றானே. (64)

கணம்புல்

கள்ளிருக்குஞ் சரக்கொன்றை முடியுடையா ரடியார்கள் கலந்து வாழும்
புள்ளிருக்கும் வேளூரா னன்னெறியா லீட்டுபொருள் பொருந்தி வாழ்வா
னெள்ளிருக்கு நெய்யென்ன வெங்குமா மச்சிவனை யேத்தி நாளு
முள்ளிருக்கும் பேரன்பா னெய்விளக்குத் திருத்தொண்டை யூழிற்.
[செய்வான். (65)

எம்பெருமான் றிருவருளா லிலம்பாடு வந்தெய்த வில்லநீங்கி
யம்பலத்தான் றில்லையடைந் தப்பணிக்குக் கணம்புல்லை யறுத்து மாறி
பம்புசுடர் விளக்கேற்ற நெய்பெற்றுத் திருக்கோயிற் பணிமுட் டின்றி
தம்பெருமை யறியாதாற் கியற்றிவரப் புல்லும்விலை தான் செல்லாதால். (66)

திருப்பணிக்குத் தடைவரலு மப்புல்லையே நெய்யாத் தீபமேற்ற
விருப்பமுறும் பணிக்கப்புற் போதாமற் றன்முடியை விளக்கிவிட்டான்
பொருப்பரையன் மகள்கணவன் பொறுப்பானோ வவன்முன்னம் போந்து
நம்மு, னிருப்பையென வருள்புரிந்தான் கணம்புல்ல னப்பேற்றை யெய்தி
னானே. (67)

வேறு,

காரி.

தப்பா வாய்மைக் காரியெனத் தாவாத் தமிழின் புலமையினா
லொப்பா ரென்ன மூவேந்த ருவப்பக் கோவை முதலாய
செப்பா நின்று மற்றவராற் றந்த வளப்பில் செல்வமெலா
மிப்பார் மகிழ வடியார்க்கு மீசன் பணிக்கு மீந்துவப்பான். (68)

பண்ணைப் பழித்த மொழியுமையாள் பாலற் கிளையோர் மரபுதித்து
மண்ணற் கரிய நல்வினையார் நாளும் போற்றும் புலவனிவ
னெண்ணான் மொழியா விசையுடலா லெட்டாப் பொருளை யின்னரு
ளாய், கண்ணாற் கண்டு பிறவாத கதியுட் புகுந்து கலந்தனனே. (69)

முனையடுவார்.

வேறு.

உடையா னடித்தொண் டொருநெறியா லன்றியோரும் பலநெறியா
லடையா நிற்பர் மெய்யன்ப ரவ்வா றேற்ற போர் முனையி
லிடையா விளைத்த வேந்தரிடை யேற்ற பொருள்பெற் றடையாரை
யடையா முனையில் வெல்லுமுனை யடுவா னெனும்பே ரொருவனரோ (70)

சீறார் மன்னாய்த் திகழ்ந்திருந்து தேரார்க் குடையாப் படைபெருக்கி
மாறேற் பார்த மிடைபுக்கு வாட்டி யவரா லுடைவேந்தர்
பாறேர்ந் தமைந்த பொருள்வாங்கி பானெய் குய்சே ரடிசிலொடு
மேறூர் பொன்னா மகிழ்சிறப்ப நாளு மீவா னோவாமே. (71)

சூட்டு மணிமா முடிவேந்த ராரும் போற்றத் துனைசெய்வா
னீட்டும் பொருளைத் தனக்கென்ன வெவ்வாற் றானுங் கொள்ளானாய்
வாட்டும் பொறியைத் தவியடியார் மாட்டு வழங்கி வாழ்ந்துலகி
லாட்டும் வினைதீர்ந் துமைபங்க னருளாற் கைலை யுற்றானே. (72)

கோட்புலி.

நிறையார் நங்கை தொண்டானை நெஞ்சத் தென்று நீங்காள்போற்
கறையூர் களத்துக் கண்ணுதலைக் கனவின் கண்ணு மறவாதா
னறையூர் பூங்கா நிறைநன்னீர் நாட்டுக் கெல்லாந் தலையாய
வுறையூ ரான்வேற் குற்றுழிநேர்ந் துதவும் படைக்குத் தலையானான். (73)

மண்ணாள் சோழ மன்னற்கு மாற்றா ராய்நின் றேற்றாரை
விண்ணோர் புகழப் போராற்றி விறல்வெம் புலியை யங்கேற்றிக்
கொண்ணா னிலத்தை மிகப்பெருக்கிக் கோன்பொன் னரையார் தரநிரப்பி
பண்ணா நின்ற வீரத்தாற் பாய்கோட் புலியென் றிசைப்பாரால். (74)

முர்தைக் கோளாந் தகன்போல்வான் முரண்வெவ் வலியாற் பகை [யொறுக்கச்
சிந்தை மகிழ்ந்து வளவர்பிரான் சிறப்புச் செய்பொ னளப்பிலவாய்த்
தந்த பொன்னைக் கொடுசென்று தம்பி ராற்கு மடியார்க்கு
முந்து மன்பி னாலாற்றுந் தொண்டுக் காக்கி யுளமகிழ்வான். (75)

அத்தன் றொண்டிற் காவனவு மடியா ருண்டிக் காவனவு
நித்த மளித்த வவைநீங்க வெஞ்சி நின்ற நெடும்பொருளை
வைத்துக் காக்க வெனக்கிளைமாட் டகன்றான் வளவன் றன்பகைமே
லுய்த்த வவற்றை வற்கடத்தா லொழியச் செய்தா ருற்றாரே. (76)

நீண்ட பொழுது போராற்றி நேரா ரோடப் புறங்கண்டு
மீண்டா னிருந்து காவல்செய விரும்பு கிளைமாட் டெய்த்தவனை
காண்ட லிலனாய்ச் சினந் திவற்றைக் கவர்ந்துண் டாரை யொழிப்பலென
வேண்டி யழைத்து வாள்கொண்டு வீசித் தணித்தான் விருப்பில்லான்.(77)

எங்கு மாய விறையோனு மிணையில் லோனே யெம்பொருட்டாற்
பொங்கு மன்பா லிஃதுஞற்றப் போமோ வினையோ ருயிரீந்தே
தங்கி யுலகிற் சென்றனி னமது தோழன் றன்னருளாற்
றங்க மடைதி யெனவிண்ணிற் றோன்று துரையாற் றுலக்கினனால். (78)

அத்தே யவரு முயிர்பெற்றா ரடங்கா வன்பு மீதூரப்
பெற்றே னருளை யின்றென்று வியந்து பெயர்ந்து கூத்தாடிக்
கற்றார் பரவு மாளுடைய நம்பி விரைப்பூங் கழல்சார்ந்து
நற்றா யன்னான் வரப்பெற்றான் றன்ன தகத்தே நவையில்லான். (79)

நீரால் விளக்கிப் பொன்னடியை நெகிழு மன்பா லுண்பித்தாங்
காரா வமுத மன்னானை யருள்பெற் றிருந்து பிறவியெனுந்
தூராக் கடலின் கரையேறித் தூக்கி யாடும் பொற்பதத்தை
யேரார் மக்கண் மனையோடு மெய்தி னனக் கோட்புலியே. (80)

இடங்கழி.

மையார் பொழில்சூழ் கொடும்பாளு ராளு மன்ன னிடங்கழியான்
கையார் மேரு வரைவில்லா னடியார் கருது வன செய்வா
னெய்யா வன்பி லீசனெழுந் தருளுங் கோயி லெங்கெங்குஞ்
செய்யா நிற்கும் பூசைவழாச் சிறப்பி னுற்றுஞ் சிந்தையுளான். (81)

கற்றோர் பழிச்ச விவ்வண்ணங் கடவாப்பணியி னிற்குங்கா
லுற்றா ரடியா ரெனவவர்க்கே யூட்டு மொருவன் கைவரப்ப
வெற்றே செய்வ லெனவெண்ணி யிவ்வேந் தமரு மிருங்கோயி
லுற்றா னெல்லைக் களவாட வறிந்தார் காவ லுஞற்றுனரே. (82)

கள்ள னிவனென் றுறப்பற்றிக் காவற் கோமுன் கொடுபோந்தா
ரெள்ளுங் களவென் செய்தாயென் றிறைவன் கேட்ப வெம்மண்ணால்
வெள்ள வேணி யானடியார்க் கூட்டவேண்டு நெல்லில்லேன்
கொள்ள வந்தே னிவனென்னக் குளிர்ந்தா னுள்ளங் கொற்றவனே. (83)

நம்பனடியார்க் குணவூட்ட நந்தம் வைப்பி னெற்கொண்டா
னும்பர் போற்று மிவனோநம் முற்றா னென்றந் நாடொடங்கி
யிம்பரடியார்க் கிவ்வெல்லா மென்றே யுதவி வாழ்ந்திருந்து
செம்பொன் மன்றி னடமாடுந் தேவன் கைலை யுற்றானே. (84)

செருத் துணை.

மருமலர்ச் சூழ்பொழிற் றஞ்சை மன்னனுய்க்
கருப்பயி லாதவன் காமர் சேவடி
யொருப்படு மனத்தினு றுற்ற வேந்தர்பாற்
செருத்துணை யாயவர்க் கேற்ற செய்குவான். (85)

இறைவனுக் காம்பொரு ளியாவ ராயினுங்
குறைசெயி லொறுத்திடுங் கொள்கை மேற்கொடு
கறைமிடற் றவன்றலங் காணும் வேணவா
முறையுறச் சென்றவ ணுரூர் முன்னினான். (86)

அவ்வயி னலயத் தமலற் போற்றினான்
செவ்வைநன் மலர்தொடு மாடஞ் சேர்பொழு
தவ்வழி யயல் விழுமலரை யாய் விலாள்
நவ்விநோக் கோர்மனன் றேவி நாடினாள். (87)

முந்துற வெடுத்தனள் மோப்ப நோக்கின
னிந்தையில் செருத்துணை நிமலற் காகிய
விந்தநன் மலரைமோந் திட்ட மூக்கினை
முந்தறுப் பேனென முடுகி யீர்ந்தனன். (88)

கண்டவள் கணவனுங் கருதி யுண்மகிழ்ந்
தண்டிய தீவினை யகன்ற தாலென
விண்டன னின்னணம் விளங்கு மெய்ப்பணி
கொண்டிருந் தரனடி குறுகி னனரோ. (89)

வேறு.

நீங்கா நிழலில் வினைத்தொகை வெவ் வேருய்த் துய்ப்ப நேரிடும்ப்
பாங்கா லதனை யிறையூட்டும் வண்ணம் பற்பல் விதமாகுந்
தூங்கா வண்ண மிறைவனடித் துன்னும் பற்றென் றுடையார் செய்
தீங்கா வனவு நல்லனவாஞ் சித்தஞ் சிவமாய்த் திகழ்தலினே. (90)

தொண்டர் குழுப்படலம் முற்றிற்று.

ஆக படலம் 20-க்குச்செய்யுள் 858.

உருக்கொடு பணியா தாரை யுளத்திலைந் தெழுத்தை யுன்னிப்
பெருக்கொடு தவள நீற்றைப் பேணியே யணியா தாரைக்
கருக்கொடு நின்று கண்ணீர் ததும்பமுன் னோடா தாரைத்
திருக்கோயில் வலம்வரா தாரைச் சினத்தொடு பொருஞ்செங் குந்தம்.

கூவிளை யிதழி தும்பை கொண்டருச் சித்த பேர்க்கும்
மூவர்தம் பாட லோதி முன்னின்று பணிந்த பேர்க்கும்
ஆவலோ டைந்தெ ழுத்தை யகத்துளே நினைந்த பேர்க்கும்
தேவர்நா டாள வைக்குந் திருக்கைவேற் றுணைச்செங்குந்தம்—ஈட்டி
[யெழுபது.

மெய்ப்பொருள்.

நிலவளம் குடிவள நிரம்பிய திருக்கோவலூரில் பகையரசராகிய யானைகளுக்கு ஆண்சிங்கம் போன்ற மெய்ப்பொருள் என்னும் ஓர் மன்னனிருந்தான். அன்னோன் செங்கோல் வழுவாமல் நீதி செலுத்தி வந்ததனால் உண்மை யுணர்ச்சி தோன்றப்பெற்று, பதிபசுபாசமென்னும் முப்பொருளாராய்ச்சியால் உண்மைப் பொருளை யுணரு நல்லுணர்ச்சி பெற்றிருந்தமையால், மெய்ப்பொருள் என்ற பேர் பெற்று, வேதங்கூறிய திருநீற்றையும் உருத்திர மணியையும் அணிந்த சிவனடியாரைச் சிவனென வழிபட்டு, அவருள்ளக் குறிப்பின் வண்ணம் ஒழுகி வருங்காலத்தில், பகையரசனொருவன் பன்முறை எதிர்த்துப் போராடித் தோல்வியுற்று, வஞ்சனையால் கொல்லக் கருதி, சிவவேடம் பொலியும் முனிவன் போல் விபூதி உருத்திராக்க மணிந்து, சிறுவாள் முதலிய படைகளைப் புத்தகம்போல் கட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு, அம்மெய்ப்பொருள் மன்னன் முன் வந்து வணங்கப்பெற்று, அரசே; நினக்கு சிவபெருமானருளிய ஒப்பற்ற ஓர் நூலின் உண்மைப்பொருளை உணர்த்த வேண்டுமென்னும் அவாவுள்ளோம்: நாமிருவரும் தனியிடத்திருப்பின் நன்றென்றனன்.

அவ்வாறே இருவரும் தனியிடத்திருக்கும்போது வஞ்சகன் புத்தகக் கட்டை அவிழ்ப்பான் போல் ஓர் ஈட்டியை அவிழ்த் தெடுத்து தாழ்ந்து கேட்கும் முறையில் வணங்கியிருந்த அரசன் மார்பில் அழுந்தக் குத்தி விட்டனன். இதை அருகிருந்த மெய்க்காவலன் உணர்ந்து, அவ்வஞ்சனைக் கொல்லப் புகும்போது குத்துண்ட அரசன் தடுத்து, இவ்வடியாரை யாரும் தீங்கிழைக்கா வண்ணம் ஊருக்குப்புறம்பே விட்டு வருக என்று கட்டளையிட்டனன். அவனும் அவ்வணமே விட்டு வந்து அதுகாறும் உயிரைத் தாங்கிக்கொண்டிருந்த அரசனுக்கு கட்டளையின்படி செய்தேன் என்று

சொல்லுமளவில், சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சி தந்து அன்பனே; திருநீறு திருவேடமுமே மெய்ப்பொருளென்ற உறுதியினின்றும் வழுவாதிருந்தமையால் நீ நம்முலகை யடைந்திருப்பா யென் றருளினன். அன்பனும் பூத உடலை யொழித்துப் புண்ணியன் உலகை நண்ணினன்.

எறிபத்தன்.

முன்னம் முசுகுந்தமன்னன் அரசாண்ட கருவூரிலே வீரவாகு தேவன் மரபிற் றோன்றியவனும், எல்லாக்கலைகளையும் ஐயந்திரிபற உணர்ந்தவனும், அடியார் பத்தியிற் சிறந்தவனும், அவ்வடியார்க்கோர் இடுக்கண் நேருமாயின் உயிரையுங் கொடுத்துக் காக்குந் தொண்டைமேற் கொண்டவனுயும் இருந்தமையால் எறிபத்தனென்னும் பெயர் பெற்ற ஒருண்மைத் தொண்டனிருந்தனன். அவன் அத்தொண்டை அஞ்சாது செய்துவருங் காலத்தில், அவ்வூ ரரசன் பட்டத்துயானை பாகரோடு நீராடி வரும்போது ஈசனுக்குப் பூத்தொண்டியற்றும் ஓரன்பன் கொண்டுசென்ற பூங்குடலையைப் பிடுங்கி யெறிந்து செல்லுதலைக்கண்ட அவ்வன்பன் துயருற அதனைக் கேள்வியுற்ற எறிபத்தன் விரைந்து வந்து, அவ்வியானையின் துதிக்கையை வாளால் வெட்டி வீழ்த்தி தடுக்காது மேலிருந்த பாகரையும் கொன்றுன்.

அஞ்சி எஞ்சினோர் இச்செய்தியை அரசனுக்கறிவிக்க அவனும் கடுஞ்சினத்தோடு படைகள் சூழ வந்து எறிபத்தனைக்காட்டக் கண்டு யானையைக் கொன்ற காரணத்தை வினவி யறிந்து பணிந்து, இவ்வடியவர் செய்த செய்கை யேற்றதே; ஆயினும் இத்தண்டனை போதாது என்னு யிரையும் கொள்க; என்று தன்கைவாளை அன்பன் கையிற் கொடுத்து வெட்டச் சொல்லினன். அடியானும் அரசன் அன்பை வியந்து இவர்மாட்டுத் தீங்கிழைத்தேனே யென்று அவ்வாளாற் றன்கழுத்தை அரியப்புகும் போது சிவபெருமான் அன்பனே நும்மிருவர் அன்பையும் உலகத்தார் அறியவேண்டியே இவ்வண்ணம் செய்தனம். யானையும் பாகரும் பிழைப்பர் இன்னம் சின்னாளில் நம் முலகடைக என்று அசரீரிவாக்காலறிவிக்கத் திருவருளை வியந்து தன்வயங் கெட்டு நின்றனன். பிறகு யானையும் பாகரும் உயிர் பெற்றனர். அரசன் எறிபத்தனை யானையின்மேலேற்றி நகர்வலஞ் செய்வித்தனன் இவ்வாறு இவ்வன்பன் பன்னாள் தான் கொண்ட தொண்டைப் புரிந்திருந்து இறைவனடி நிழலை யடைந்தனன்.

பெருமிழலைக் குறும்பன்.

அன்பே சிவமென்றறிந்த அடியா ரன்பிற்சிறந்த பெருமிழலைக் குறும்பன் என்னும் சிற்றரசன் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் இடையறவன்

புரிந்த பெருங்கருணையை எண்ணி எண்ணி அவருக்கே அடிமையாவே னென உறுதிகொண்டு திருவாரூரை யடைந்து சுந்தரர்பாதங்களில் வீழ்ந்து பணிந்து போற்றினான். இவ்வாறுபணிந்த அவனது சிரத்தில் சுந்தரர் தன்கரத்தை வைத்தருளி ஒரு மொழியை உபதேசித்து, நின்னூர்சென்று முன்போல் அரசு வீற்றிருந்து ஆட்சிபுரிக என்று பணித்தனர்.

அவருரையை மறுக்காது அரசன் தாமரையிலைநீர்போற் பற்றின்றி அரசாண்டும், குருமொழி மாறாத நன்னிலையில் நின்று இராஜயோகியா யிருந்தமையின் அட்டமாசித்திகளும் வாய்க்கப் பெற்றிருந்தனன். இவ் வண்ண மிருக்குங்காலத்தில் சுந்தரர் வெள்ளையானையின் மேற்கொண்டு கைலாயஞ் சென்றாரென்பதை உணர்ந்து தான்பயின்ற யோகவன்மையால் விண்வழியாகச் சென்று அவரையடைந்து அவருடன் திருக்கைலாய முற்றனன்.

திருமூலர்.

திருக்கைலாய மலையிலிருந்த யோகி யொருவர் அகத்தியரைக் காணும் அவாவுடையராய் தென்றிசை நோக்கி வருங்கால் இடையிலுள்ள தலங் களைத் தரிசித்து திருவாவடு துறையை யடைய ஆங்கே ஆனிரை மேய்க்கும் மூலன் என்னும் இடையனொருவன் ஆக்களை மேய்க்கும் போது வினை வழியால் உயிர் நீத்தான். இதைக் கண்ட ஆக்கள் கதறித் துயருறுவதைக் கண்ட முனிவர் அவ்வாக்கள் படுந்துயருக்கிரங்கித் தன்னுடலை ஓரிடத்தில் வைத்து, அவனுடலிற் புகுந்தெழுந்தனர். கண்ட ஆக்கள் பெருமகிழ் வெய்தி தத்தம் இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றன. இறுதியிற் சென்ற பசு இடையன் வீட்டிற் புகப் பின் சென்ற முனிவர் உள் புகாது வெளியே நின்றார். அவன் மனைவி இடையன் தன் கணவனுமென அழைக்க மறுத்து, முன் தன் உடலைப்பதனம் செய்த இடத்தே வந்து பார்க்க அஃதில்லாமை யால், இறைவன் திருவருளிது வென்று ஓரரசமர நிழலில் மூவாயிரம் ஆண்டு யோகத்தமர்ந்து ஆண்டுக்கொன்றாக மூவாயிரம் திருமந்திரத்தைப் பாடி உலகுக்குதவி இறைவனருளால் முன்னிருந்த கைலைமலையை யடைந் தார்.

தண்டி.

பிறக்க முத்தியளிக்கும் திருவாரூரில் தண்டி யென்பவன் பிறக்கும் போதே கட்புலனின்றி பிறந்தவன் ஆயினும் அரனருளால் அகக்கண் விளங் கப் பெற்று அஞ்செழுத்தை நெஞ்சில் மறவாதவனாய் பற்றின்றி, இருக்கும் நாளில் திருக்குளமொன்று கல்ல எண்ணி, சில குறிகளை வைத்துக்கொண்டு தோண்டுங்காலையில் சமணர்கள் அவரைப் பழித்து, புறக்கண் தெரியாத உமக்கு அகக் கண்ணும் குருடாயிற்றோ? மண்ணிலிருக்கும் உயிர்களுக்கு துன்பம் இழைக்கலாமோ? எனத் துன்புறுத்தினர்.

அதைக்கேட்ட தண்டி உங்கள் கண்ணே குருடாம். எனது கண் தெரிவதை இனிக்காண்பீரென்று கோயிலையடைந்து, பரமனைப்போற்றி விண்ணப்பித்து தம்மிருக்கையடைந்து துயின்றனர். கண்ணுதற் பெருமான் கனவில்தோன்றி திருக்குளந் தோண்டுந் தொண்டை நீ செய்க அவ்வமணர் கண்ணே மறையுமென்றருளி அவ்வாறே அரசனுக்கும் அறிவிக்க அரசன் அதிசயித்து அவர் குளந்தோண்டுமிடமடைந்து வினவி சமணரையும் வினவ, அவர் தண்டி கண்பெற்றால் யாங்கள் இவ்வூரிலிரோம் என்றனர். பிறகு தண்டி யான் சிவபெருமானுக்கு உண்மையன்பனாயின் என்கண் தெரிக. என்று கமலாலயத்தில் மூழ்கியெழுந்து கண் பெற்றனர் சமணர்கள் கட்புலனிழந்து அவ்வூரை விட்டகன்றனர்.

அரசனும் அத்தண்டியடிகள் செய்யும் திருப்பணிக்கு உடனிருந்துதவினன். இவ்வாறு பலகாலம் தொண்டாற்றியிருந்து பரமன் கைலையை அடைந்தனர்.

கூற்றுவன்.

பொன்விளைந்த களத்தூரையாண்ட கூற்றுவன் என்னும் அரசன் திருநீற்றையும் ஐந்தெழுத்தையும் அடியார்பத்தியையும் மறவானாய் இருந்து தன்வலியாலும், தன்படை வலியாலும் மாற்றரசரை யெல்லாம் புறங்கண்டு வெற்றி கொண்டு பகைவருக்குக் கூற்றுவனென்னும் பெயர் பெற்று இறைவனருளால் முடிபுனைந்து அடியார் வேண்டுவன தந்து ஆலயங்களைப் புதுக்கி நெடுநாள் வாழ்ந்திருந்து சோதிப்பிழம்பாகிய சிவனடி நிழலையடைந்தனன்.

நரசிங்க முனையரையன்.

திருமுனைப்பாடி நாட்டை யரசாண்ட நரசிங்க முனையரைய னென்னு மரசன் தோள்வலியால் இரணியனை உடல் பிளந்த நரசிங்கத்தை யொத்தவனாய் மாற்றரசரை வென்று எல்லாச் செல்வங்களும் பெற்றிருந்தானாயினும் உலக வாழ்வில் வெறுப்புற்று உண்மை யுணர்ச்சி தோன்றி அடியார் தொண்டே வீடடைய நெறியெனத்துணிந்து நீறு கண்மணி புனைந்து அடியாரேவலிற் பன்னாளிருந்து மறைமுடிவில் விளக்கும் இறைவன் உலகமடைந்து இன்புற்றனன்.

சத்தி.

சேரநாட்டிலிருந்த சத்திவேல் கையிற்கொண்ட சத்தி யென்பவன் அரசன் அனுமதியால் சிவநிந்தை அடியார் நிந்தை செய்பவர் நாவையறுத்து அனையோரையும் நல்லுணர்வு பெறச்செய்து வாழ்ந்திருந்து ஈசனுலகடைந்தனன்.

கணம்புல்.

புள்ளிருக்கும் வேளூரில் பெருஞ் செல்வமுடைய ஓர் மெய்யன்பன் ஆலயங்களில் விளக்கேற்றுந் திருத் தொண்டை மேற்கொண்டிருக்குங் காலத்தில் சிவபெருமானருளால் வறுமை வந்தடைய சிதம்பரத்தை யடைந்து இப்பணியை யியற்ற வழியின்றி கணம்புல்லறுத்து விற்று மாற்றி நெய் பெற்று விளக்கேற்றி வந்தனன்.

அதுவும் ஓர் சமயம் விலைபோகாமல் திருப்பணிக்குத் தடை நேர்ந்தமையால் அப்புல்லையே நெய்யாக விளக்கேற்ற அதுவும் போதாமையால் தன்முடியை விளக்கிலிட்டெரிக்க அவ்வன்பைக்கண்ட சிவபெருமான் காட்சியளித்து தம்முலகில் தம்மருகிலிருக்கும் பேற்றையருள அவ்வரிய பேற்றையடைந்து பேரின்பவாழ்வை யடைந்தனன்.

காரி.

காரியென்னும் புலவர் பெருமான் மூவேந்தரைப் பாடிப் பெரும் பரிசு பெற்று பெற்ற அவற்றை அடியாருக்கும் ஈசன் திருப்பணிக்கும் அளித்து வாழ்ந்திருந்து அப்புண்ணியத்தால் பரமேசனது அருட்கண் பெற்று பிறவாத வீட்டின்ப முற்றனன்.

முனையடுவோர்.

முனையடுவோனென்னும் குறுநில மன்னனொருவன் பகைவருக்குத் தோற்ற அரசரிடத்துக் கூலிபெற்று அப்பகைவரைப் போர் முனையில் வென்று இவ்வாறு முடிமன்னருக்கு உற்றுழியுதவி அவராற் பெற்ற பொருளை சிவனடியார் வெறுப்பக்கொடுத்து வாழ்ந்திருந்து ஈற்றில் திருக்கைலாயத்தை யடைந்தனன்.

கோட் புலி.

கோட்புலி யென்பவன் உறையூரையாளும் சோழமன்னனுக்குப் படைத் தலைவனுயிருந்து பகையரசரை வென்று சென்ற திசைகளில் எல்லாம் புலிக்கொடியை நாட்டி நிலத்தையும் செல்வத்தையும் பெருக்கி மதிக்கப்பெற்று அவ்வரசன் ஒவ்வொரு சமயத்திலும் அவ்வப்போது சிறப்புச் செய்து தந்த பெரும் பொருளை அடியார் பொருட்டுச் செலவு செய்து எஞ்சிய பொருளை சுற்றத்தாரிடம் காவல்புரிய வைத்து மற்றொரு முறை அரசன் பகைமேற் சென்று நெடுநாள் அப்பகைவரிடம் போர் புரிந்து வென்று மீள்வதற்குள், பஞ்சம் நேர்ந்தமையால் சுற்றத்தினர் காக்க வைத்த

பொருள் முற்றும் உண்டொழித்தனர். மீண்டு வந்த கோட்புலி இதைக் கண்டு ஓர் சூழ்ச்சியால் அவரை யழைத்து அடியார்க்கென வைத்த பொருளையுண்ட அனைவரையும் வாளால் வீசி யெறிந்தனன். இவன் மெய்யன்பின் உறுதியைக் கண்ட சிவபெருமான் ஆகாய வாணியால் அன்பனே நம்மடியார் பொருட்டால் இச்செயலைப் புரியலாகுமோ? அதனையுண்டவரும் நம்மடியாரே. அவரும் உயிர் பெற்றெழுவர் இனி நமது தோழனாகிய சுந்தரனை யடைந்து அவனருளடைகவென மொழிந்தனர்.

இம்மொழியைக் கேட்டு உள்ளமுருகிய கோட்புலி இறைவனருளால் சுந்தரர் தம்மில்லத்தில் வரப்பெற்று அவர் பாதத்தை விளக்கி யுபசரித்து மனைவி மக்களோடு வழிபட்டு அமுதூட்டி அவனருள்பெற்று, பிறவிப் பெரும் பிணி யொழிந்து மனைவி மக்களோடு வீட்டின்ப முற்றான்.

இடங்கழி.

கொடும்பாளூர் என்னும் ஊரை யாண்டிருந்த இடங்கழி என்னும் சிற்றரசன் சிவனடியார்க்கு அறுசுவை யுணவூட்டி அவர் வேண்டும் பொருளீந்து ஆலயங்களில் நித்திய பூசையும் திருவிழாக்களும் நடத்திவருநாளில் அடியார்களுக்கு அமுதூட்டும் வழக்கமுடையான் ஒருவன், அவ்வடியார்க்கமுதூட்டத் தன்னிடத்து நெல்லின்மையால் இவ்வரசன் பண்டசாலையில் கன்னம் வைத்துக் களவாடக் காவலர் கண்டு பற்றிக்கொண்டு அரசனிடம் விட்டனர். அரசன் ஏன் களவாடினை என்று கேட்க அரசே அடியார்க்கு உண்பிக்க அரிசி யின்மையால் களவாடினே னென்றான்.

அதைக்கேட்ட அரசன் இவனன்றோ நமக்குற்றானென்று மகிழ்ந்து அவன் வேண்டுமளவும் நெல்லீந்து அன்று தொட்டுத் தன் செல்வமெல்லாம் அடியார்க்கே உரிமையாக்கி வாழ்ந்திருந்து சிவபத முற்றான்.

செருத்துணை.

மருமலர்ப் பொழில் சூழ்ந்த தஞ்சையில் அரசருக்குற்ற செருவில் துணை செய்யும் செருத்துணை யென்னும் ஓரரசனிருந்தான். அவன் ஈசனுக்குரிய பொருளை எவரேனும் கவர்ந்தாலும், பிறிதொரு பிழைசெய்தாலும் அவரைத் தண்டிப்பதென்ற உறுதிகொண்டு தலயாத்திரை செய்ய விரும்பிச் சென்று திருவாரூரையடைந்து இறைவனை வணங்கி ஆலயத்தை வலம் வரும் போது மலர் தொடுக்கும் மண்டபத்தருகே வீழ்ந்துகிடந்த ஓர் மலரை ஓர் அரசன் தேவி எடுத்து மோந்தனள். இதைக்கண்ட செருத்துணை அப்பனுக்குரிய அரிய விம்மலரை மோந்து தவறிழைத்தனை யென்று அவள்

மூக்கை வாளாலரிந்தனன். இச்செயலை அயற்புறமிருந்த அந்நங்கையின் கணவனாகிய அரசன் கண்டு நன்று செய்தீரென மகிழ்ந்து இன்றோடு எங்கள் தீவினை யொழிந்ததென்று போற்றினன். இவ்வாறு இவ்வரிய தொண்டை மேற்கொண்டிருந்து ஈசன் திருவடி நீழலை யெய்தினன்.

அம்பலக்கூத்தன் அவதாரப் படலம்.

ஈறி லாதவற் கொருமொழி யோதிய விறைவ
னாறு மாமுகத் தையனுக் கிளைஞராய் முந்து
கூறு நோன்பினோன் வேண்டலிற் குவலயம் வந்தார்
தேறு தங்குல வீரரு மடியருந் தெரிக்கின். (1)

எண்ணிறந்தவர் மற்றவர் சீருமெண் ணிலவா
மண்ணை லேயெனக் கூத்தனீ ரறைந்தன னவனிம்
மண்ணி றெய்தவப் புலவனாய் வாழ்ந்தன னன்னாள்
பண்ண ருஞ்செய லறிந்தவா பகருது மன்றே. (2)

வேறு

ஈட றுபுன னாட் டின்க ணிமையவ ருலக மேய்ப்ப
நீடிய மறுகு தோறு நிரைநிரை கொடிக ளாடு
மாடமா ளிகைக ளார்ந்து மங்கல வியம மூதான்
மாடுறு மணலூ ரென்று வழங்குவர் பெயரு மாதோ. (3)

இருமையு மீயுங் கல்வி கற்றலாற் கற்ற தேய்ப்ப
மருவுமா னெறியி னின்று வசையுறாச் செல்வம் பெற்று
பெருகுமச் செல்வ மீயும் பெற்றியாற் பீடுபெற்றே
யொருவலா வின்பந் துய்க்கு மூரெனி லுரைப்ப தென்னே. (4)

இத்தகைத் தாய சீர்த்தி யெழினகர் புரக்கு மாற்ற
லுத்தம குணத்தி னல்லா னுன்னலர் வெருவ வங்கை
வைத்தசெங் குந்தன் வீர வாகுவி னருங்கு லத்தோ
னச்சிவ சங்க நாம வாண்டகை யருளின் மிக்கான். (5)

ஞாலமுன் னுயிர்க ளெல்லா நம்முயி ரென்ன வெண்ணிக்
காலமுஞ் செயலு நோக்கிக் காத்திடுந் தனிச்செங் கோலான்
சீலமுஞ் சாந்த முல்லாற் செய்தவ முண்டென் றெண்ணு
மாலமுண் டவரை யல்லா லகத்திருந் ததியா வன்பன். (6)

தன்றிரு வரசுஞ் சோழத் தலைமக னரசு மென்ப
தொன்றலா விரண்டு காணா வுள்ளமுங் கண்ணுமுள்ளான்
வென்றியா னென்னக் கேளா வேந்தர்க ளாரும் போற்றிடக்
கன்றிய பதத்த னன்னார் கப்பணங் குவிமுன் றில்லான். (7)

முனிவரு முனிவிலாத முத்தர்க டிருவ ருட்கே
கனிவரு மன்பி னாய்ந்து நாண்மறை முறையி னோம்பி
யினிவரு மகமு றைக்கே யெக்கமுற் றுடையான் மற்றும்
பனிவருஞ் சொல்லா னெங்கும் பரவிய சீர்த்தியாளன். (8)

பாயிருட் பருகிச் சீக்கும் படரொளி காலும் பைம்பொ
னாயிரம் பசுங்கா லத்தி னகநில மணிமேற் பக்கந்
தூயின மணியாற் செய்து துளங்கொளி துளும்பு கின்ற
கோயிலிற் சிங்கந் தாங்குங் குளிர்மணித் தவிசி வர்ந்து. (9)

ஆரணக் கிழவ ரெல்லா மறிறப வாழ்த்தப் பெண்மை
வாரண நடையி னல்லார் மங்கலக் கவரி வீசத்
தாரணிப் புலவர் பாடச் சதுரரா மமைச்சர் சூழ
வேரணைச் செங்கோ லோச்சி யிருந்தமன் னவன் விளம்பும். (10)

யானிது காறு மிந்த வவனியைப் புரந்தே னெற்பின்
கானமுங் கடலுஞ் சூழுங் காசினி தன்னை யாளப்
பானலங் குதலைச் செவ்வாய்ப் பாலக னிலையே யென்னாக்
கோனவன் சமயச் சைவக் குருவயி னிதனை யோர்ந்தான். (11)

தரங்கவா ரிதிவைப் புள்ள சராசர மியங்கத் தில்லை
யரங்கநின் றாடு கின்ற வம்பலத் தரசை வேதச்
சிரங்கடந் தவனைப் போற்றிச் சேயனை யருள வேண்டி
வரந்தரப் பெறுவே னென்ன மனந்தெளிந் தெழுந்த மன்னன். (12)

மாதர்கட் கரசி மாதர் வடிவெலா மொருங்கு கூட்டிப்
போதினான் முகன் படைத்த தொத்தவள் பொற்பின் மிக்கா
ளாதவன் குலத்துட் டோன்றி யரியசெங் குந்த ரென்னு
மேதகு குலத்துட் புக்கு விளங்கிய விளக்கு போன்றாள். (13)

மங்கலப் பயிர்ப்பு நாண மடமச்ச மணியாக் கொண்டாள்
பங்கமி றவத்தெய் வத்தன் பதியெனக் கொண்ட சீராள்
கொங்கவி ழலங்கன் மாறாக் குழலருந் ததியே மானுந்
தங்கிய கற்பை யிந்தச் சகமெலாம் பயில வாய்த்தாள். (14

காப்புடைத் தயவி லன்னை கலவியிற் கணிகை பொற்பிற்
பூப்பொலி திரும டந்தை புத்தியி லமைச்ச ளாத
ளுப்பணிச் செயலிற் செய்யு நவைதபு மடிமை யாளா
மாப்பெரும் புவிமா தன்ன மாண்புறு பொறையின் மிக்காள். (15)

இந்நலங் கொண்ட தேவி யின்பமா விகைபாற் சென்று
நன்னலர் தரவ லமைந்த நாகிளங் குயிலே நம்பா
லெந்நல மிருந்து மென்ன மெச்சமொன் றிலதா லுண்டாம்
பொன்னலத் தரங்க மாடும் புனிதனைப் பரவ வென்றான். (16)

நன்றென விசைந்த பெண்க ளுயக மனையா ளோடுங்
குன்றென வீங்கு தோளான் கூர்ந்தவேற் படையா னன்றே
வென்றிகொ டானை நீத்து மீச்சிவ வேடந் தாங்கி
மன்றினு ளடைந்து பூசை மறைமுறை யாற்றிச் சொல்வான் (17)

சித்தையுங் கடந்து சித்தத் திரிதரா மலமாம் பஞ்சக்
கொத்தையுங் கடந்து மூன்று குணங்களுங் கடந்து மேலாந்
தத்துவங் கடந்து நின்ற தலத்தி லோர் சரண மூன்றி
யத்தெருட் காண வாடு மம்பலத் தரசே போற்றி (18)

இருட்டரை கிடந்த சீவர்க் கிறைகுண மறைத்து நின்ற
மருட்பரை யோடு நான்கு மறைகளு மறிய மாட்டாத்
தெருட்படு வியோமா தீதத் திருத்தலத் தொருதா ளூன்றி
யருட்பரை காண வாடு மம்பலத் தரசே போற்றி (19)

கஞ்சனே முதலா யுள்ள கத்தரு மற்று மாய
விஞ்சுமைந் தொழில்களண்டப் பரப்பெலாம் விளங்கியோங்கப்
பிஞ்சக மாட வொன்றும் பிரணவத் தொருதா ளூன்றி
யஞ்சிவை காணவாடு மம்பலத் தரசே போற்றி. (20)

இப்படிச் சிரங்கை கூப்பி யெரியனன் மெழுகாப் பொங்கி
கைப்பிடி யுழையி னானே கணலொரு கரங்கொண்டானே
செப்பிளங்குயத்தாள் பங்கா தில்லையு ணடன மாடு
மைப்படி கண்டத் தெந்தாய் மைந்தனென் றளித்தி யென்றான் (21)

உம்பலை யுரித்தோ னன்ப னுருகவும் பொறுப்ப னக்கா
னம்பனம் பலத்தே நின்று நல்லருட் செயலை நோக்கி
யைம்புல னவித்து நோற்றோ னருகுவிண் ணுரையெ ழுந்த
செம்புல மகப்பே றெய்தி சிறப்பொடு திகழ வென்றே. (22)

கேட்டனன் புளக மீக்கொள் கிளவிய னளகை யென்ன
வாட்டம னியம்பி றங்க மன்றமும் பதியு மாக்கி
நாட்டமூன் றுடையான் றன்னன் னுட்பல சிறப்பு மாற்றி
வேட்டனன் மணவூர் புக்கு மின்னொடுஞ் சுகித்திருந்தான். (23)

சிற்றினங் கடந்த வெல்லைத் திருந்திழை கருப்ப முற்று
னற்றளிர் வீங்கிக் கொங்கை நணுகின கருமை சென்றுண்
முற்றின வுருக்கி வார்த்த முழுத்தம னியத்தை யேய்ப்பப்
பெற்றனள் மகவைக் கோள்கள் புலமையே பிறங்கு நன்னாள். (24)

அருந்தவச் சிவசன் கப்பே ராண்டகை மகிழ்மீ தூற
விருந்தவர் மறையோ ராசை யிறந்திட விரப்போர்க் கெல்லாம்
பெருந்தன மாரியாகப் பெய்துபொற் றூசு நல்கித்
திருந்தவள் ளுவரா லண்டஞ் செவுடுறப் பறைய றைந்தான். (25)

பண்ணளிக் குயிலிற் பேசும் பனுவன்மங் கலந்த நல்லார்க்
கொண்ணிற மலர்சாந் தாதி யுகப்புட னல்கு வித்தான்
புண்ணியம் பலித்த நங்கோன் புகழிகம் பலித்த தென்னச்
சுண்ணமும் வாச நீருந் தூவினர் மணவூர் வாழ்வோர். (26)

சனியலா தருவர் தங்க டலைத்தலம் பொருந்தி நின்றார்
புனிதவிச் சாதகன்றான் புலவர்தங் கோமா னென்றே
துனியிலா மனத்தி னுய்ந்த சோதிடத் தவரின் மிக்கோ
ரினியவா மந்த ரார்த்தத் திரணியத்தகட்ட டைந்தார். (27)

சுவைபடுங் குதலை மைந்த னில்லெனுந் துயர நீத்தோன்
நவையிடந் தொளிரு மூத்தோர் நாவினுன் மகற்கு நாம
மெவையெனத் தேர்ந்து தேர்ந்தே யிட்டனன் பரமனுடெ
மவையிடத் தெழுந்த வாக்கா மம்பலக் கூத்தனென்றே. (28)

வேறு.

மற்றுள கருமமும் புரிக்கைதந் தாண்டின்மே
லற்றவப் புதல்வனை ஞாலத் தாரினுங்
கற்றவ ரிடத்திலே கல்விகட்பயில்
வித்தனன் கற்றனன் விரிந்த நூலெலாம். (29)
வாரண முகித்தவன் வயினு றித்தா
லாரணச் சத்தமு மங்கச் சங்கையு
மோரனு மகத்தெனு முப்பு ராணமாங்
காரண முடிவையுங் கருத்தி ருத்தினன். (30)

இலக்கணத் தொகேசப் பொருத்த காதிய
விலக்கண மைந்தின்மே லென்னென் றேவிருய்
விலக்கலும் விலக்கிமேல் விதித்த சொற்கடன்
மலக்கறப் பயின்றனன் மழலை வாயினே. (31)

தனுமுறை சொலு முதற் றரும மன்றியு
மனுவர சியற்றிய மறுவி னூல்களுந்
தினகர னுமெனத் தெரிந்து தேர்ந்தனன்
பனிமதி யாமென வளரும் பாலனே. (32)

கரதலத் திருள் கெடக் கதிர் செய் வாடொடா
விரதமு மிவுளியு மேறி வீதிவாய்
மரதலக் கான்றிரீஇ வரும ரன்றரும்
வரதலத் துதயமா மழவி ளந்தையே. (34)

மருச்சனைப் படிந்தலர் வனத்துட் புக்குபூப்
பரிச்சினன் கொணர்ந்தெழிற் பால னேங்கிய
கருச்சினை யிரிதரக் கங்கை வேணியர்க்
கருச்சனை பூசனை யாற்று மென்றுமே. (35)

தேவென் பண்டைநூற் றெரிந்த சங்கமுங்
கூவென் மேலவர் குறித்த பாவினம்
பாவை னல்லினும் பகலினும் வீளை
யாவென் மணப்பதிக் கரும ருந்தனுன். (36)

காண்டிப மெடுத்துவெங் கணைதொ டுத்தெதிர்
வேண்டிய விலக்குற விடுத்த பாலகன்
தூண்டரு சுடர்முடி துளக்கி நோக்குவ
னுண்டிரு நான்கிரண் டாய காலையே. (37)

உள்ளமுங் கண்டவ ருரையு மொன்றியிப்
பிள்ளைதான் கைலையாள் பிரப்பங் கையனே
தள்ளையுந் தந்தையுஞ் செய்த முற்றவக்
கொள்ளையோ வம்பலக் கூத்த னென்றனர். (38)

வேறு.

அறந்தாங்கு கையுடைய விளைன்றந்தை யென்னேற்று னறியோ மென்பார்
பிறந்தமக னெனக்கேட்ட தாய்க்கெய்து மிரும்பூது தெரியோ மென்பார்
மறந்தபுகழ் கேட்டவரும் பார்த்தவரு மம்பலமம் பலம தாக்கி
மறந்தனரோ வினி வினையுங் காரணத்தோ கூத்தனென வழங்கி வந்தார். (39)

கொண்டலென வரையின்றிப் பொழிகின்ற னெடுத் தெடுத்துக் கொள்ளை யாகப், பண்டறியாப் புறக்கொளிகா லரும்பாரக் காவியத்தின் பகுதி யெல்லா, முண்டறியாப் பேரிரத மூற்றுகின்றான் செவி வாயி லுள்ளாத் தேக்கக் கண்டறியோ மென்பாருங் கேட்டறியோ மென்பாருங் கணிக்கற் பாற்றோ. (40)

பணித்தாருந் தெய்வதம்ப ராய்ச்சிறுவ னல்வினையின் பால ருட்கண் கணித்தாரு மம்பலத்தெங் கண்ணுதலே யென்பாருங் கண்ணுற் கண்ட வணித்தாருஞ் சேய்மையரு மிவன்பெருமை சொலத்தூய வுருத்தி ராக்க மணித்தாரு மணித்தாருந் திகழ்நிறத்தம் பலக் கூத்த மன்வி ளங்கும். (41)

அம்பலக்கூத்தன் கலைமகள் வழிபாடு

வாரணத்தெழுந் தூவாமதி யுதையநாண் மறுநாட்
பூரணக்கலை புலவர்கள் விழுமுறை யதிலச்
சீர ணத்தினத் திரவினிற் கண்படு சிறுவன்
வார ணக்குரல் வரவறிந் தெழுந்தருண் மதித்து. (42)

சிதந னீறணிந் தம்பலத் தாடலைச் சிற்போ
திதயத் தூன்றியே யிருந்தன னித்திய வனித்தம்
புதைய நோக்கினன் றேர்ந்தன ஞேர்மதிப் புந்தீ
யுதைய மாயது தினமணி யாயின னுதையம். (43)

சத்த மாதிய விடயமு மோர்ந்திலன் றனது
புத்த கந்தனிற் புத்தகத் துட்பொருட் பொருத்தி
யெத்தி ருந்தலர் பறிப்ப ரோ வெனவெண்ணு மாசோ
வித்த லத்தினி விருப்பது கல்வியோ வென்றான். (44)

வைக றைச்செயுங் கருமமு மறந்தொரா யிரமாங்
கைப ரப்பிய சுடரையுங் கண்டில னாகி
செய்கை யற்றுவா ளாவிருந் தனனெனத் தெரிந்து
வைத லுற்றுதீப் புழுவெனப் பதைத்தனர் பயந்தோர். (45)

அந்நெ றிப்படர்ந் தன்னையுந் தந்தையு மணுகி
யெந்நெ றிச்செயற் கண்டனை யீதெவ ருரைத்தார்
மன்னெ றிக்கடா வகைபுரிந் தனையடா மகனே
பின்னெ றிக்கரன் றனைவினைத் தியோகிகளின் றனையோ. (46)

அறந்த வாதநூற் படிப்பதுங் கேட்பது மான்றோர்
சிறந்த நற்பிரன் சேர்வதுஞ் செய்வதும் பூசை
மறந்த யங்கிய படைபயில் வதுமலால் வாளா
பிறந்த வித்துணைப் போதுநீ யிருந்தனை புகலாய். (47)

தேடு கைவிடா ராகியே யிருவர்க டிகைக்க
நீடு கைவிடா வுழையினான் றருமரு ணெறியால்
நாடு கைவிடா யென்றக மகிழ்ந்தன னாளு
மேடு கைவிடா திருந்ததி லாம்பய னிதுவோ. (48)

பன்னி யின்னண மழுங்குறு மீன்றவர் பாங்கர்
மன்னி யந்தண ரமைச்சரு மற்றுளோ ரெல்லா
மென்ன மன்மகன் செயலென வியம்பிடு மரவ
முன்னிக் கண்டிறந் தாரையு நோக்கின னொருவன், (49)

கண்டனன்பக லெண்ணிரண் டாகிய கடிகை
மண்டி ருந்தவர் வதனமுந் தாயுடன் றந்தை
ரூண்ட கத்திரு வதனமு மவர்தரு மொழியும்
பண்டை யப்பொரு டன்னையுந் தன்னையும் பாலன். (50)

களங்க நீங்குவா மதியனான் கஞ்சமா மலரின்
விளங்கு வாரையு நோக்கித்தன் றூதையை விளித்தே
யுளங்க வன்றில னரசினுங் கல்வியே யோங்கி
வளந்த ரும்புவி யுள்ளன வெணமன மதித்து. (51)

போது மாதலா லரசொரு பொருளெனப் பொருந்தேன்
றூது குஞ்சுவே தச்சரோ ருகமலர் தாங்கு
மாது கத்திரு வடியடைந் தருடர வருவேன்
யாது நீமன மையுறே லையவென் றறைந்தான். (52)

என்ற வாசகஞ் செவியுறு முனமன மிளகி
கன்ற னித்திலாப் பிரிவுறு பசுவெனக் கரண
மொன்றி னொன்றுபட் டலமரு மரசிவ னேம்பு
மென்றி ருந்தவ னேங்குறு மின்னண மியம்பும். (53)

ஊற்ற மொன்றினி லுற்றவர்க் காம்பல வுரைகள்
சாற்றி யென்பயன் வேறொரு செயன்மனஞ் சாரா
வேற்ற தங்குரு மீமொழியும் புகா தென்னூற்
றேற்ற மிக்குளார்க் கையமுண் டாகுமோ தெரிக்கின். (54)

அற்றைநாண்மக னகக்குறிப் பிதுவென வறிந்து
கொற்ற வெண்குடை மன்னவன் றூதனாய்க் குடைந்து
துற்ற வண்டுகே டென்சொரி மலர்வனர் தருவி
நற்ற வத்திடஞ் செய்கென வமைச்சரை நவின்றான். (55)

அரச னுவெழுந் தாமுன் னெழுந்தன னமைச்சன்
பிரச நற்கணம் பிரசமுண் டிசைபயில் பெருங்கான்
முரச மார்த்தன னெவ்வினை யாளரு முயன்று
சிரசெ ழுந்திருப் பணியெனாச் சொற்றன செய்வார். (56)

அக்க ணந்திரு மணைப்பதி யாயமா:புரிக்கு
தெக்க ணத்தலர் பதுமபீ டிகையெனச் செய்காற்
பக்கி யுட்டடப் பாங்கரோர் பூம்பொழிற் பாராப்
புக்கு பூசனை யிடம்பல வணிபெறப் புரிவார். (57)

காவ கத்தொரு சதுக்கமாய்க் கண்டரு மறைவாய்
தாப தத்தவர் வசித்திடுஞ் சாலையுந் தாங்கு
பூப தத்தவாய் மரகதக் காணிறீஇப் பொன்று
மாப தத்த வைங் காவெனக் காவண மமையா. (58)

வனையுங் கீழகம் வெண்மணல் வரிசையிற் பரப்பித்
தினமெ ரிந்திடும் பகலெனத் திசையெலாந் தீபக்
கனக மாமணித் தம்பமுங் கதிர்செய நாட்டி
யனம ளித்திடு சாலையு மடைவினி லமைத்து. (59)

நாப்ப ணேதளிக் குலமரு நந்தனச் சாலை
நாப்ப ணோர்தனி யம்புய வாசன நட்டார்
மாப்ப ணுமுடிப் பணவர சிலையக னெய்யாற்
றீக்க ணஞ்சிருக் கொடிசிரு வமுந்தரச் செய்தார். (60)

மடல விழ்ந்தவெண் மலர்பொதி குடலைக ளனந்தம்
குடம னந்தமாக் குசைக ளுமனந்தம் வெண்பட்டார்
படம னந்தமாத் தாழையின் வாழையின் பலங்கள்
புடைய னந்தமாப் பிறவுள பொருள்களு மமைத்தே. (61)

சென்ற மைச்சிறை திருவுளப் படியவண் செய்தே
மென்ற போதகத் தீதிலாப் பெருமகிழ் வெய்தக்
குன்றெ னத்திர டோளினான் கூத்தனெம் பெருமா
னன்ற ருந்தவக் கோலமா யாவயி னுறைந்தான். (62)

உத்த ராயண மீனவீ டாதவ னுதைய
முத்த மாமதி கன்னியிற் சேர்தரு முதனு
ளொத்த செந்தமி ழியலிசை நாடக மோங்கிப்
புத்த ரும்பலர்ப் பூவணி பெறவதிற் புக்கான். (63)

அங்க ணோர்தவி சிருந்துவெண் டாமரை யலர்வா
ழெங்க ளுமக டிருவடி யிருதயத் திருத்தி
தங்க வொள்ளிலை விரித்ததிற் றண்டுலம் பரப்பி
பொங்கு மாறிதழ்க் கமலநாற் கோணநப் பொறித்து. (64)

மாவி லைக்குட மைங்கரற் றொழுதவண் வைத்து
தேவி யக்கரஞ் செபித்தனற் காரிய முடித்து
சாவ விற்குழு தெய்வதம் பரவியக் கதைவெண்
பூவி லைக்கொடந் நாமகட் போற்றினன் புனிதன். (65)

நாண வம்புரிந் திவ்வண மெல்லியி னடுநா
ளாண வங்கடிந் தருவியிற் கண்கணீர் வார
வீண வஞ்செலா மனத்தனுய் வெண்மரை யாளை
சாண முந்தெழு மன்பினுல் வழுத்தினன் கரைவான். (66)

வேறு
கலித்தாழிசை.

என்னன்றி யறியாத விளங்கையினே னுயிடினும்
பன்னன்றி வேண்டுகிலேன் பாதர்ர விந்தநிதி
முன்னின்று தரல்வேண்டு முதுமறைகள் கலைமகளா
மின்னன்றி யென்னென்ற வறைகாண நறவிழியும்
வெண்டாம ரைத்தவிசில் வீற்றிருக்குந் தூமணியே. (67)

நெஞ்சமொரு வழிநில்லா நிலைகெடுவே னுயிடினுங்
கஞ்சமெனுந் திருவடியைக் கண்டுதொழ வேண்டுகின்றேன்
மஞ்சனைய வடிவுடையான் மருமத்தா மாமகளும்
விஞ்சுமலை மகடானும் விரும்புகலை வித்தகமே
வெண்டா மரைத்தவிசில் வீற்றிருக்குந் தூமணியே. (68)

தேகம்பொன் னுறற்குந் திருவகலம் பூத்தாற்கு
நீகந்த மலரயனு நின்றிலையே லுரையுண்டோ
மாகந்தா னின்புறுமோ மாகத்து வீந்திரனுன்
மேகந்தான் பொழிதருமோ வுலகந்தா னின்புறுமோ
வெண்ட மரைத்தவிசில் வீற்றிருக்குந் தூமணியே. (69)

வேறு

பரமுன தன்னா யென்னப் பாலகன் வருந்தும் போதம்
பரமுதற் பெரும்பூ தத்தின் பாலதா யண்டமுள்ள
சரமெலாந் தானே யாகுந் தாயெனற் பொய்யா வண்ணம்
வரமெது தருவ லெந்தன் மைந்தகே ளெனமுன் வந்தாள். (70)

மண்ணுறுத் தியவெண் பட்டு மாசிலாத் தவள மேனிக்
கண்ணுறுத் தியமுத் தாரக் காந்தியுங் கான வீணைப்
பண்ணுறுத் தியவங் கையும் பாதபங் கயமுங் கண்டான்
பெண்ணுருக் கொண்ட னந்தந் திங்களிற் பிறங்குவாளை. (71)

கண்டுரை குழறியென்புங் கரைந்துகண் வழித்தாய்ப் பொங்கி
விண்டுரை தரளஞ் சிந்தி மெய்ந்நடு நடுங்கி வையம்
பண்டுரை பந்த வெம்மை பாறவா னந்த வெள்ளத்
தண்டுறை படிந்தா லென்னத் தளர்வகன் றகம கிழ்ந்தான். (72)

ஓடினன் வலமாய் வந்தா னொன்றல சென்ற நாட்கு
வாடினன் றண்டாச் சீர்த்த வாணியா யிரநன் னாமம்
பாடினன் வணங்கி யேத்திப் பரவினன் பேரின் பக்கூத்
தாடினன் பின்னு மன்னை யடிமலர் துதிசெய் கின்றான், (73)

வேறு

குருமணி வெண்மரைக் கோமணித் தண்ணார் குலமலையிற்
கருமணி பாற்கடற் செம்மணி யாரணங் கண்டறியா
வொருமணி நீயன்றி வேறறி யேன்மனத் துண்மலரின்
மருமணி யாய பதுமா லயத்தவெண் மாணிக்கமே. (74)

பாமக ளேமக ரந்தங் குலாய பதுமனது
நாமக ளேசுர வங்கண மேத்த நளினமமர்
கோமக ளேவடி யேனிடர் தீரக் குறுகிவந்த
மாமக ளேநற் பதுமா லயத்தவெண் மாணிக்கமே. (75)

தந்தா யிலையென வேதங்க ளின்னந் தடவுபதஞ்
சிந்தா குலமடை யாவடி யேன்முனஞ் சேவைதரு
மெந்தாய் பலகலை யாஞான மூர்த்தி யெனவளியார்
மந்தார னேத்தும் பதுமா லயத்தவெண் மாணிக்கமே. (76)

வேறு

பண்ணரும் பனுவ லெந்தாய் படிகவெந் நாவி லந்நா
கண்ணரும் படியே யோதுங் கருமமுண்டாக வென்ன
வுண்ணெகக் கரைந்து விம்மி யுருகினன் பெருகு மன்பான்
மண்ணைப் படிந்தே யிந்த வரமெனக் கருடி யென்றான். (77)

என்றவ னியம்பக் கேளா விசைமகண் மைந்த கேட்டி
யுன்றவம் பெரிது வந்தே னுள்ளமுங் கனிவு கூர்ந்தே
னன்றுநீ விழைந்த தந்தேன் னங்கலா கிலய மீந்தேன்;
வன்றிறற் புலவ னாகி வாழிநீ வாழி யென்றாள். (78)

வாழ்த்தொலி கேட்ட விண்ணோர் மலர்மழை பொழிந்தா னந்தத்
தார்த்தன ரெங்கள் வாணி யந்தரத் தான மானாள்
பூத்தநன் மகிழ்ச்சி யென்னும் பொருவிலாச் சலதி மூழ்கிக்
கூத்தனும் வெளிவந் தாண்டாள் குரைகழ லேத்தி நின்றான். (79)

மேவரும் பேறு பெற்றான் விமலைபா லென்னப் பெற்றோர்
மேவின ருவகை யென்ன விளம்பவும் வேண்டுமோ தான்
யாவரு முவகை கூர்ந்தார் யாத்தனன் கோயில் வெள்ளைப்
பூவில்வாழ் பாம கட்குப் பொற்பினில் விளங்க வாண்டே (80)

மீட்டவ னாளும் பூசை மேவர வினிதி னாற்றி
வாட்டமின் மணவூர் புக்கான் மற்றவன் றன்னை யீன்றோன்
கூட்டிய வைப்புற் றென்னக் குலவிய களிமீக் கூர்ந்தான்
நாட்டிய கொடிக ளாடு நகரெலா மணிவித் தன்றே. (81,

கோனவன் மைந்த னாற்றன் குடிநலம் விளங்க வெண்ணிப்
பூநவ வீரர் வீர புரந்தரன் குலத்தோன் றன்பாற்
பானலக் குதலைச் செவ்வாய்ப் பைங்கிளி யனைய வின்சொல்
ஞானப்பூங் கோதை யென்னு நங்கையா ளிருப்ப தோர்ந்தான். (82)

வேறு

கிணமுறு கரவயினிலவிய வலமார்—குணமுறு மிறையவர் குலமொரு
சுவிலக், கணமுறு வதுகுண கணமவை யமையு—மணமுறு தருகுழன்
மகள்பிதிர் வினவா. (83)

கணமுறு மிழைபல கவினுற வெழிலார்—மணமகள் கலைமகள் வரமுடை யவனும், குணமக ளிருவரை குருவிணை யமையா—வணிதரு மணவினை யதுசெய முயலா. (84)

தங்குல குருவுரை தந்திரம் பதிறு—றங்கம தறைவழி யவையவை நெறியா லங்கிமு னருந்ததி யம்மியுங்கரியாய்—மங்கிலி யமுமுடி வினைதர வியலா. (85)

தகுதிரு மணமுடி தருமண மகனோ—டகமகிழ் வொடுமமர் தரவவ ணிலவா மகன்மரு மகளையு மணவுல வணிகண்—டகமகிழ்ந் தனன்மண நகரதிபதியே. (86)

அம்பலக்கூத்தன் அவதாரப் படலம் முற்றிற்று

ஆக படலம் 21-க்குச் செய்யுள் 944.

முதலீறில்லாப் பரமனுக் கொருமொழி யோதிய குமரகுருநாதனுக் கிளையாராகிய நவவீரர்கள், சூரரை வென்று கந்தமாதனத்தி லறுமுகப் பெருமானடித் தொண்டாற்றி யிருக்குங்கால் முசுமுக மன்னன் தவப் பேறாய் உலகையடைந்து தம்பேரால் விளங்கச்செய்த மரபில் தோன்றிய வீரர்களும் உண்மையடியார்களும் எண்ணிறந்தவராவர்; அவரது புகழும் எண்ணிறந்தனவாம்; என்று குலோத்துங்க மன்னனுக்கு ஒட்டக்கூத்த னென்னும் புலவர் பெருமான் புகன்றனன். இவ்வாறு கூறிய கூத்தப் பெருமான் தெய்வப் புலமையோடு வாழ்ந்து வருநாளில் செய்த அரிய செயல்களை யாமறிந்தவாறு கூறுவோம்.

பொன்னி நன்னீரால் பலவளங்களும் குறைவின்றி யமையப்பெற்ற சோழவள நாட்டில் ஆளுடைய பிள்ளையாரால் பாடப்பெற்ற அருள்வள்ள லதப் பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருமண வூரென்னும் நகரத்தை அரசாண்டுவந்த சிவசங்கனென்னும் செங்குந்த வரசன் புத்திரப்பேறின்றிச் சிதம்பரம் சென்று சின்னாள் சபா நாயகனை ஒருமித்த சித்தமுடையவனாய் தரிசனஞ் செய்து வருநாளில் ஓர் நாள் அம்பலக்கூத்தனருளால் மகப்பேறுண்டாமென ஓரசரீரி வாக்குண்டாயிற்று அவ்வரிய திருவாக்கைச் செவியுற்ற அரசன் பரவசனாய் அன்றே மகப்பேறு பெற்றவனாக மகிழ்ந்து அந்நடராஜப் பெருமானைப்போற்றி விழாவாற்றி, தனதூரடைந்து இன்பமாலிகை என்னும் இல்லக்கிழத்தியோடும் வாழ்ந் திருந்தனன். சின்னாளில் அவ்வின்பமாலிகை கருவுற்று இளங்கதிரென ஓராண்மக வீன்றாள். மகப்பேறு பெற்ற மன்னன் தேவாலயங்களிலெல் லாம் சிறப்பாற்றி, அருந்தவர்க்கும் ஆதுலர்க்கும் வேண்டுவன ஈந்து ஊரும்

உறவும் கொண்டாட மிக மகிழ்வுற்றிருந்தனன். மகளே நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாகச் சீராட்டிப் பாராட்டி அம்பலக்கூத்த னருளால் தோன்றிய மகவுக்கு அம்பலக்கூத்தனென்னும் பேரிட்டு வளர்த் துவர இளம்பிறை போல வளர்ந்துவரத் தக்க பருவத்தில் கல்வி பயில் விக்க அவ்விளங்குமரனும் எல்லாக் கலைகளிலும் வல்லவனுய் தன்னெத்த இளங்குமரரோடும் அளவளாவியாடும் விளையாட்டின் மிகுதியாலும், பல கலைகளையும் பல்லோரிடத்தும் ஆராய்தலையே ஆடலாகக் கொண்டமை யாலும், யாவரும் அம்பலத்தை அம்பலமாக்கி கூத்தன் கூத்தனென அழைக்கலாயினர். நற்றவத்தாற் பெற்ற பெற்றோரும் களிப்பென்னுங் கடலில் மூழ்கியிருந்தனர்.

இப்பாலிக் கூத்தன் இகத்திற் புகழுடம் பெதனு லுண்டாமென உன்னோக்கிக் கல்வித்திறமுடைமையே அஃதுண்டாதற்குக் காரணமாமென வும், அக்கல்வியே மறுமைக்கும் இன்றியமையாத் துணையாமெனவும் உய்த்துணர்ந்து, அக்கல்விக் கரசியாராகிய கலைமகளாருடைய திருவுரு வைச் சிந்தித்து நோற்க எண்ணித் தம்மூரையடுத்த ஓர் பூஞ்சோலையில் சாலையமைத்து, அலங்கரித்து அதன் கண்ணிருந்து ஒரெந்திரம் அமைத் துப் பூசித்து அத்தேவியாருடைய திருமந்திரத்தை யெண்ணி ஊணுறக்க மின்றிப் பலநாள் நோற்று வந்தனன். இவவாறு நோற்று வருநாளில் ஓர் நாளிரவில் இந்நோன்புக்கிரங்கிய கலைமகளார் வெண்கலையுடுத்து முத்த மாலை யணிந்து யாழும் புத்தகமும் செபமாலையும் எந்திய கையுடையராய் வெண்ணிலாப்பல நண்ணியதெனக் காட்சி தந்து அன்பனே நீவேண்டியது யாது கூறுகவென அக்காட்சியைக் கண்ணுற்ற கூத்தன் மெய்ம்மறந்து கூத்தாடி மும்முறை வலம் வந்து பலவாறு போற்றிப் பணிந்து கைகூப்பி நின்று, தாயே; நீ என்னுவில் நின்று யான் பெரும் புலவனுகவும் யான் சொல்லிய வண்ணம் நிகழவும் கடைக்கணிக்க வேண்டுமென்று இரந்து விண்ணப்பிக்க. கலைமகளாரும் கடைக்கணித்து அன்பனே! நீவேண்டிய வாறே ஆகுக என்றருளி சசல கலா நிலயமென்னும் ஓர் புத்தகத்தையுங் கையிற் றந்து இப்புத்தகம் நின்கை விட்டகல லாகாதெனப் பணித்து மறைந்தனர். கண்டகாட்சி கண்ணகலாது நின்ற கூத்தன் மீட்டும் பலவாறு போற்றி, மறுநாள் வைகறையில் நித்திய நியமங்களையும் நோற்ற நோன்பையும் முடித்து அருந்தவர்க்கும் ஆதுலர்க்கும் அன்னதான முதலி யன வெறுப்ப வழங்கி, அம்மையாரை எழுந்தருளச் செய்திருந்த அப்பூசா மண்டபத்தில் தக்க சிற்பர்களைக் கொண்டு ஆலயமமைத்து அம்மையை எழுந்தருளப் பண்ணி வேதாகம முறையால் வழிபட்டு வந்தனர். இவ்வா லயம் இன்று முளது. இதன் கண்ணெழுந்தருளிய தேவியாரைப் பலரும் வழிபட்டுத் தாங்கள் வேண்டியவற்றை யெய்துகின்றனர்.

குறிப்பு :— ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர் இக்காலத்து மணக்குடி என்று வழங்கும் மணலூர் ஆயினும், தம் பெயரால் நிறுவிய கூத்தனூரில் அவரால் கட்டப்பெற்ற சரசுவதி ஆலயம் அரிசொல வந்த ஆற்றங் கரையில் உளது. இவ்வூர் தென்னிந்திய ரயில் பாதையில் மாயூரம் கிளையிலிருந்து திருவாரூருக்குப் போகும் வழியில் பூந்தோட்டம் ரயிலடிக்கு ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இவ்வூரார் எழுதும் பத்திரங்கள் முதலியவற்றில் மட்டும் "ஒட்டக்கூத்தனூர்" என்று எழுத்தில் காணப்படுகின்றது. அரிசொல வந்த நதி யென்பது அரிசிலாறு என வழங்குகின்றது.

அம்பலக்கூத்தன் உறந்தையடை படலம்.

கொத்தலர்சே ரளியினங்க ளிசைபாடக் குழுமியவேய்ங் குழலி சைப்ப
மைத்தமுகின் முழவதிர்ப்பக் கோகிலங்கள் சுதிகூட்ட மயில்க ளாட
வித்துருமச் செங்காந்தட் கையேற்பப் பொன்சொரிந்து வேங்கை யென்
னும், பைத்தமரந் தலையசைக்கும் பொழிலாரு மெழிலுறந்தைப் பதியொன்
றம்மா. (1)

மாசிரிய சூதமர சஞ்சமித்தி னுள்ளரவ மணிகொ ளுந்தப்
பேசரிய மலரிதழ்ப்பெய் கலம்பசிய தேனிழுது பெய்யச் செய்யப்
பாசிறைய கிள்ளையரு மறைபயிலப் பூவைமுதற் பறவையாகும்
பூசுரர்கண் மகம்பயிலல் போன்றொளிரு மவ்வூரின் பொழில்கண் முற்றும்(2)

மாகனக வில்லியருண் மாமறைகண் மறையவர்நா வழங்கு மென்று
மேநக முடியிருந்தே திங்களொரு மும்மாரி விளங்கிற் றொப்பிற்
கோகனக முகமடவார் தம்பதிதே வென்னமனங் கொள்வ ரந்த
வேகாக ரத்தரும நகர்ப்பெருமை யெவ்வகைகண் டெடுத்து ரைப்பாம். (3)

சேயவிதழ்ச் செறிகனகப் புண்டரிகத் தவிசிவர்ந்து திகழ்த மால்
மாயகுடை நிழல்பரப்ப வெள்ளொளிகாற் சுரிசங்க விரையார் மேவ
போயவலை நித்திலமாந் திரையளக்க வண்டெனாம் புலவர் பாடத்
தூயவய னெற்கதிர்ச்சா மரையிரட்ட வரசமருஞ் சூழ லவ்வூர். (4)

அப்பெரிய நகரின்மனு மாந்தாதா வழிவந்தோ னவர்வி தித்த
செப்பரிய மனுமுதலா நூலெல்லையுந் தேர்ந்தவழி செங்கோ லோச்சு
மெப்பகையும் புறங்காணு நிணங்கமழும் பார்த்தினஞ்சு மெழிலேக மேந்தும்
மெய்ப்பெரிய நீதிநெறிச் சோழனென்னும் பெயருடைய காவலோனே. (5)

அனையவிறை யொளிகாலும் பொற்றகட்டி னுட்டதும்பு மரத னத்தின்
வினையினதென் றறியாது பொன்னுலகத் தச்சுளுனி வியப்பச் செய்த
புனையுமொரு மந்தார முதலாகச் சொலவந்த பூம்பொ தும்பர்
சினையவிழு நறியமலர்க் குலமுதிர்க்கு நெடுங்கொடிய செம்பொன் மாடம். (6)

மாடக்குச் சித்திரங்கள் செய்தாங்கு நவமணிகண் மண்ணு கூடங்
கூடக்குச் சித்திரங்கள் செய்தாங்கு பொன்னிலவு குலவு பீடம்
பீடக்குச் சித்திரங்கள் செய்தாங்க வரசரசன் பெரியோர் சொன்ன
பாடற்குச் சித்திரங்கள் செய்தாங்கன் னவன்முடிசேர் பதுமந்தானே. (7)

நீதியினாற் றவறில்லா நெறியுடையான் பரமசிவ நேய தன்மச்
சாதியினான் ருதகிதண் டாருடையான் புலிக்கொடியான் றன்கு லப்பேர்
சோதியினான் முசுகுந்தன் முதற்கொண்ட செங்குந்தந் துணையாக் கொண்
டான், பூதியினான் மாசில்லா மணியனையான் றிசைபரந்த புகழுளானே. (8)

பொன்னனைய திதலையடர்ந் தடிபரந்து திரண்டடர்ந்து பூரித் தொன்பான்
மன்னுமணி வடஞ்சுமந்து மார்பிடமெல் லாங்கொண்டு மலையை மானு
நன்னகில மயிலனையார் கவரிபாடக் கவிபாட ஞால மன்னர்
சென்னியுற வடிவணங்க வருமுறைமந் திரிகள்சொலச் செங்கோற் கொண்
டான். (9)

பொருந்தணைசே ரிறைநம்ம தவையகத்துச் சிறப்பில்லாப் புலவர் பல்லோ
ரிருந்தென்ன வென்றெண்ணி யச்சவையி லுள்ளவர்மே லிருகண் சாத்தி
மருந்தனைய சொன்னயமும் பொருணயமு மருணயமும் வாய்ப்பக் காட்டும்
பெருந்தவராம் புலவோரிப் புவியகத்துள்ளனர் கொல்லோ பேசுகென்றான். (10)

ஆங்கொருசா ரணித்தாக விருந்த வமைச் செழுந்துகர மதரம் பொத்தி
பூங்கமல நறுந்தேற லுண்டளிகள் பாண்மிழற்றும் பொன்னி நன்னீர்
தேங்குபழ னச்சூழற் றிருவுறந்தைப் பெருமானே தெண்ணீர் வையந்
தாங்குபுயத் தண்ணலிங் குன்னடியே னொருமாற்றஞ் சாற்றக் கேணீ. (11)

கங்காலி லொருகுரண்டஞ் சிவயோகி யெனநிற்பக் கண்டு மீனஞ்
செங்கால வெண்குருகு முத்திபெறக் கண்டிதுவுந் தேர்ந்த தென்ன
சங்காலப் பின்றுள்ளி விளையாடும் பழனமணைத் தனியூ ரொன்றுண்
டங்காளுஞ் சிவசங்கப் பேருடையான் செங்குந்த வரசன் றானே. (12)

அவன்றந்த மகனொருவ னொப்பில்லாப் புகழுடையா னருமை யான
தவன்றந்த வறிவுடையோய்ச் சேணுலகை முடுருவச் சாரசத் தூர்ப்
பவன்றன்னா வாழமலே வரக்கண்டு பணிந்தன்னுள் பரிந்த ளித்த
சிவன்றந்த வருளுமிலக் கணத்தெருளு முறக்கூத்த நாமத் தோனே. (13)

செய்யதமிழ்க் கவிசொல்லப் பொருளுரைக்குந் திறனில்லாத் தெளிவி
லாதா, ருய்யவகட் டுணைக்கும் புன்கவிகட் குளமகிழ்வ ருளரா னந்த
மையவவ னிதலையி னலமறியத் தக்ககவ் வான்றோ னிந்த
வையமிசை நீயன்றோ மெய்ப்புலமை வலமறியு மன்ன னென்றான். (14)

பூவாருங் கற்றிணிதோள் வேந்தனது கேட்டுள்ளம் புளகித் தன்னா
னாவாகங் காட்டினிது நந்துணைவ ரரியகுலத் தவத ரித்த
பாவாரு நாவலனைக் கண்டிலனீ தென்னென்று பாங்க ருள்ள
வேவாள ராரென்றான் பலரோடி வந்தெதிரி லிறைஞ்சி நின்றார். (15)

கண்டரைய னன்னவர்க டனையாலோ விதமுகமாய்க் கடிதே கென்ன
மண்டுபல வனங்கடந்து விரைந்தோடி வந்தவர்கண் மணவூ ரெய்தி
தொண்டரகத் துள்ளாகுஞ் சிவக்கொழுந்தை விளக்கமிகுந் தொடர்பாற்
பூசை, புண்டரிக முதன்மலர்கள் கொடுகூத்தன் செயுங்காலம் புக்கா
ரன்றே. (16)

உடையவனை வழிபடுவோற் குறுகலுநேர் நற்குறிகண் டுனிமுற் றாயக்
கடையகன்று கடையடைந்த தூதுவர்க ளவன்கோலங் கண்டு போற்றித்
தொடையலங்கு நெடுமாற சோழவர சேந்திரனின் றூய்மை காண்பா
னடையவிடுத் தனனெம்மைத் திருவுள்ளக் குறிப்பின்வழி யாவோ மென்றார். (17)

புலவர்பெரு மானொருவன் பாற்சென்று கற்பகமே பொருடா வென்னப்
பலவிதமாய்ப் புகழ்ந்திட்டு நாடோறுந் தூராத பண்டி யோம்ப
செலுமவரி னிலையெஞ்ச மன்றெனினு நந்தமது சென்னியுன்னு
நலனமது நலமென்ற துட்கருதிப் போதலுனி நன்றே யென்றான். (18)

வேறு

இன்ன நன்மொழி கேட்டலும் புளகமுற் றெழுந்தார்
மன்னர் மன்னனு முறந்தைவேந் தவையிடம் வந்தார்
பொன்னலம்பலை காவிரி நாடபூம் பொழில்க
டுன்னு மம்மண வூரடைந் தவனடி தொழுதேம். (19)

வெந்த வெண்பொடி மேனியா னுருத்திர வக்கம்
வந்த மாமணி மாலையான் சேணுள வெவர்க்குஞ்
சிந்த யஞ்சுறக் காண்டரு சிங்கவே றனையான்
முந்த டைந்தவர்க் கின்னமு தூட்டிடு மொழியான். (20)

அந்த ரஞ்செலுஞ் சீர்த்தியா லலர்மண மென்மோ
செந்த மிழ்க்கிவன் பொதிகையிற் றேவனே யென்மோ
சுந்தர ந்தனிற் சுப்பிர மணியனே யென்மோ
வெந்த ரஞ்சொலற் பாலதோ வேந்தவென் றிசைத்தார். (21)

அரச னின்றிருப் பணித்தலை மேற்றரித் தன்னான்
பிரச மாமல ரகத்திடஞ் சேர்ந்தனம் பின்ன
ரிரச வாக்கினு விசைந்தன னென்றன ரின்னுர்
பரசு தாளினு னிருந்தனன் மகிழ்வெனும் பண்பால். (22)

தூத ராங்குரைத் தேகலுங் கூத்தனுந் தூயோன்
மேத கில்லிடை விருப்புடன் புகுந்தவண் விளங்கும்
தாதை வாண்முக நோக்கிநஞ் செம்பியன் றனகட்
போத லுன்னினேன் வாழ்த்தெனப் பொன்னடி பணிந்தான். (23)

புலவர் தம்பெரு மானிது தகவொடு புகல
கலைவ லாய்மக னேயுறை யூரனைக் காணுஞ்
செலவி லாடக மலர்மணஞ் சேர்ந்தெனச் சீர்த்தி
யுலக முள்ளள வும்மடைந் தாயென வுரைத்தே. (24)

வாழி யேகுக மைந்தவென் றுதரங் கூறம்
பாழி யாந்தயை யையனம் புயவடி வணங்கி
நூழி லாதிய தானைகண் மற்றுள நொடியில்
கோழி யேகுவ னம்பணிச் சேடர்காள் கொணர்மின். (25)

என வருங்கவி மன்னவ னேவிய வணமீண்
டனைவ ரும்வர வெனப்பறை யார்த்தன ரவ்வவ்
வினைய ரங்ஙன மாயின ரத்தலை யிருந்தார்
கனக கஞ்சிகை யிவர்கஙம் காவல வென்றார். (26)

ஆங்க தேற்றுரை வெண்டுகின் மடிப்புடை யகடு
வீங்க வீக்கினன் செந்தமிழ் விரிகடற் றிரைகட்
பாங்கர் பாரதி யாசனம் புரைசரோ ரகமே
தாங்கு மாறென யாவரும் புகழ்பெருந் தகையே. (27)

யாண்டை யாண்டென புன்கவி மாக்களா லாக்கி
நீண்ட சொற்சரந் தோன்றிய விடம்புகா திற்பக்
காண்ட குஞ்சுடர் காந்திய விரத்தின வங்கி
பூண்ட வன்வலி வச்சிரக் கவசமே போலும். (28)

உன்ன தத்திருத் தலைத்தலை யணிந்தன ளொளிகான்
மன்னு மாமணி யுறவலமர்ந் தெழின்மிகு பாகை
சென்னி மன்னவன் மேதகு கவித்திறந் தெரிந்து
தன்னை யுன்னதத் தவிசுழி யிருத்துதல் போலும். (29)

பாய வின்மணிப் பொன்னிழை யாற்புரி யுத்த
ரீய நாலுத லஞ்சிலைப் புரை புயந் தெரிய
ஓய மன்னவ னளப்பரும் பொருட்படுந் தோற்ற
மேய மேருவி னிருந்திழி யருவியே போலும். (30)

தொந்து வாள்வலங் கொண்டனன் கொண்டன னிடக்கை
சந்த னாசலக் குறுமுனி வழிவருந் தமிழ்நூ
விந்த நன்கலை நன்குண ராதிளங் கவிகள்
வந்தவே லினி மத்தகந் துணிபடு மென்ன. (31)

பனிய நீர்த்துறை பிறந்துமுட் டாட்டரும் பருவங்
கனிய மொட்டுடைந் தன்றலர்ந் தெழின்மிகுங் கமல
மினிய செந்தமிழ்த் தேறலுண் டேலிணை யில்லாப்
புனித நாயகன் றிருமுகத் தழகினைப் பொருவும். (32)

பருவ மித்தின மிருபதா முகத்தெழு மீசை
வருவ தாங்குறிப் பிதுவெனக் காண்குறு மதியம்
பொருவு முள்ளதே லெனச்சொல வொண்முகப் பொலிவார்
நிருப நந்தனன் புலவர்தங் கோலமாய் நின்றான். (33)

மெய்ய னீகரை நோக்குபு சிவிகையின் மேவல்
செய்ய கிற்றிலேன் கடுப்பினின் மனமெனச் செல்லுங்
கொய்யு ளைப்பரி கொணர்கவென் றுரைப்புழி கொணர்ந்தார்
பைய வப்பரி யேறினன் படைகண்முன் படர்ந்த. (34)

வேறு

நாக மிருந்தவ மெய்ப்பல னால்வரு நாரித்தன்
பாக மிருந்த பரஞ்சுட ராடிய பாம்புங்கா
லூக மிருந்த சபாநட னார்தன துள்ளுள்ளே
யேக மிருந்த சுகாசனனாகி யெழுந்தனனே. (35)

தொற்பிர பந்தம தற்றெழு திக்கை துலங்கிப்பி
னற்புதக் கூத்த விழுக்கவி முன்பணி யாளாகிக்
கற்பவை கற்பமெ னக்கனெஞ்சுறு னையேடார்
பற்பல மாணவ ராயின ரங்கிரு பாலாலோ. (36)

முன்னதெ னுங்கவி யிருகான் மற்றைய முக்காலே
சொன்னவி டந்தனிற் றெரிதரு மென்றிடு தொடர்பெல்லாங்
கன்னலெ னும்படி நவரச முந்தரு கற்றுச்சொல்
தன்னவர் வந்து நிறைந்து மலிந்து தருக்குற்றார். (37)

பஞ்சநி லங்களி லுள்ளவ ரோதரு பண்ணெல்லாம்
விஞ்சநி றைந்து தெளிந்தி லையமி லர்தாலே
கஞ்சமு கத்தவ ருங்கவி முன்பல கவிபாடி
கொஞ்சம லாதவ ராகவி ருந்தனர் கூட்டத்தே. (38)

பைந்தமி ழொண்கவி நண்குண ராதெழு பாவாணத்
தந்திகண் மத்தக மூளையு றுஞ்சுபு தாகந்தீர்
சந்தமி ருந்தச லஞ்சல மங்கவி தைச்சிங்க
முந்தினன் வந்தனன் வந்தனனென்று முழங்கிற்றால். (39)

மண்டு தளங்க ளெழுந்திட வென்றுயர் வானத்தார்
கொண்டலு மஞ்சுற வவ்வினை யாளர் குறுந்தண்டங்
கொண்டட மார மொடுஞ்சய பேரி குலம்பல்ல
வண்டமு கட்டுடைபட்டன வென்ன வதிர்த்தாரால். (40)

நூலணி கொண்ட புகழ்க்கவி யிப்புவி நுவல்கின்ற
மாலணி கொண்ட மணப்பதி நின்றனர் வாடண்டம்
வேலணி கொண்ட கரப்பொலி வான்மிகு வீரங்கொள்
காலணி நின்றன முந்தியெ ழுந்திரு காதத்தே. (41)

மேலைநி லத்தெழு மின்னினு முன்னதி வேகங்கொள்
காலநி லத்தசு வங்க ணடந்திடு கந்தத் தூள்
போல நிலத்து பறந்தெழு செந்துகள் பொடியாலே
நீல நிறத்தது காயமெ லுஞ்சொ னிகழ்ந்தன்றே. (42)

எஞ்சலி லாதுமு களம ரலம்பெறு மேரேடு
மஞ்சணீ ராட்டி விதைதெளி யக்கதை மணிதூவ
கஞ்சநீ ராஞ்சன மேந்தசு மங்கல கரமாக
வஞ்சம ணம்புரி பழன மணப்பதி யதுவிட்டே. (43)

காகள மாதிய சின்னமொ டும்பர் கவிவாணன்
வாகிளை மார்மலை கண்டெடுத்தனன் வழியாலே
நாகிளை வண்டுகண் மொட்டுடை யப்பெறு நறவுண்டு
பாகிளை மென்குரல் பேடையொ டாடுபல் லையங்காவே. (44)

துன்றிடு காட்டக மேபொலி வானுயர் சோலையெலாஞ்
சென்றிடு நாளென தன்னது பின்னது சென்றேக
நின்றிடு நாளி னறும்பய னென்றெதிர் நிற்கின்ற
னன்றல கோடியி ராகியு மன்னையு மானவனே. (45)

திரிசிர புரமுறு சினகர மேவு சிவங்கண்டு
பரிசன ரொடுகர மஞ்சிர மிவரப் பாவாண
வரச னகத்தி றதும்பிய வன்பினி லானந்த
விரசமு திர்ந்தெதி ரீசனை யின்னண மேத்துவனே. (46)

தத்துவ முற்று மடங்கி யொடுங்கிய தானத்தே
முத்தர கங்குளி ரத்தெரி தருமுழு முதலோனே
பித்தக மேறிய நாயின னின்னடி பெறுபேறன்
றெத்தனை செய்தனன் சிரகிரி மேவிய வெந்தாயே. (47)

பந்தமெ னுந்தொடர் பற்றவர் பற்றிய தூநெறியார்
நந்தலி லாதமெய்ஞ் ஞானியர் காண்குறு நாயகமே
சிந்தைய னந்த முளேனுன சேவடி சேவிக்க
வெந்தத வப்பயன் சிரகிரி மேவிய வெந்தாயே. (48)

காயமெ னுஞ்சிறை யுட்கம லோதக கரணத்தார்
தூயன வாம்பரி பூரண மறிதரு தொல்லோனே
மாய தலத்தி லிணங்கிய வேழைவ ணங்குஞ்சீ
ரேயது முன்னருள் சிரகிரி மேவிய வெந்தாயே. (49)

கோசம றைப்பை யிகந்தவர் கோசர குணமுள்ளார்
பூசனை யேற்ற புராதன னேபுல னொன்றில்லா
நீசனுமேத்த வருட்கரு ணாகர நிருவாண
வீசபராபர சிரகிரி மேவிய வெந்தாயே. (50)

துவ்வினை யாடலி யற்றும ஞ்திசுடர்க்கோவே
யெவ்வினை யாடல்பு ரிந்தெனை யாட்டவி ருக்கின்ற
யவ்வினையாடல ஞகுவ னிமமிகு மசலத்தா
மிவ்வினை யாளொரு பாதிய னேயரு ளெந்தாயே. (51)

இன்னவ முத்துப மீளவணங்கி யெழுந்நீசர்
பொன்னடி யிற்பல பூவணி பாவணி புனைந்திட்டு
முன்னவ னுற்றரு நல்வர மேற்றம் முதுகுன்ற
மன்னிய மாடநெ டும்பதி நின்றும் வழிகொண்டான். (52)

வேறு

தேனைக் காவற் கொள்ளரும்பு சிதறத் துதைந்துண்டளியாலுங்
கானைக் காவற் கொண்டதலாற் காவ லெவைக்குந் தானாகி
யேனைக் காவ றனக்கில்லா வெம்மான் பெருக்கு மும்மதத்த
வானைக் காவற் கொண்டசிவ னகத்தைக் கண்டா னகங்குளிர்ந்தான். (53)

பொங்குங் கடலி னொலியென்னப் புடைசூழ்ந் திருக்கும் பரிசனராஞ்
சங்கத் தோடு நீல்வானந் தடவு மரணத் திருக்கோவில்
கொங்கு கமழு மொருசம்பின் குளிர்ந்த நீழ லமர்ந்தருளுந்
திங்கட் சடையெம் பரம்பரனை வந்து காணுஞ் செந்தமிழோன். (54)

ஆக மஞ்சொன் னெறிமுறையே மாவெண் பூக்க ளகங்கொண்டு
தேக நடுங்கி யுரைமாறிச் செய்கை நீங்கிப் பின்றெளிந்து
சோக மீறிக் கண்டரளஞ் சொரிந்தான் பொன்னித் துறைபடிந்தான்
போக முண்ட சிவநேசர்க் கீதுண்டாதற் புதி தாமோ. (55)

நார மெல்லா மோருருவாய்த் தோன்றும் படியந் நாவலவன்
கீரந் துயிலக் கிடந்தானுங் கிளர்வெண் மறையி லிருந்தானுந்
தூரம் பறந்தும் பூவகழ்ந்துந் தொடர்பா லிருவ ருங்காணு
நீரந் தணியாச் சிவலிங்க நெருப்பை யின்ன நினைக்கின்றான். (56)

வினையின் றொடக்கு மலத்தொடக்கும் வேதன் றொடக்கும் விரிசடையோன்
முனையுந் தொடக்கு மிதனிடையே முகுந்தன் றொடக்கு மிவையொருவன்
றனையெப் பிறப்பும் விட்டிலவிச் சனனத் ததுவு முண்டாங்கொ
லனையென் றன்னை யடைந்தக்கா லானைக் காவி லம்மானே. (57)

பாசத் திரிபும் பசுத்திரிபும் பரத்தின் றிரிபு மொருபஞ்சக்
கோசத் திரிபு முருமாறி வந்து தாக்குங் குணத்திரிபுந்
தேசத் திரிபுங் காலத்தின் றிரிபு மின்ன முண்டாங்கொ
லாசிற் றம்மை யடைந்தக்கா லானைக் காவி லம்மானே. (58)

கொடிய கரண வேடுவர்கள் கூடி யுலவுங் குறிஞ்சிநிலம்
புடைபட் டிருக்கு மித்தனுவுட் புக்குச் சிக்கும் பசுவானேன்
விடயப் புலியின் பெருவாயின் மேவ லின்ன முண்டாங்கொ
லடியிற் பரவ வந்தக்கா லானைக் காவி லம்மானே. (59)

என்றிவ் வண்ணம் பரவிச்சென் றிரவி குலத்துத் தன்முன்னோர்
தொன்று தொட்டு வழிபட்டுத் தொன்மை யிலங்கை வீடணனுற்
கொன்று வரிவிற் சிராம னுதவ வவனுற் பொன்னரங்க
நின்ற பரம னெயிலேழ்சூழ் விமான நெறியிற் றேன்றிற்றால். (60)

கண்டுட் புகுந்து நாகணையிற் கமல மாதும் புவிமாதும்
வண்டு பாடும் பூம்பாதம் வருடத் துயில்கூ ரொருமுதலை
தொண்டு புரியு மடியார்க்குச் சொரியு மருளார் கருமுகிலை
பண்டு மூல மேயென்ன வழைப்ப முன்சேர் பரஞ்சுடரை. (61)

திருமுன் சென்று வீழ்ந்திறைஞ்சிச் சென்னி யேறக் கைகூப்பி
யுருகி யரிய பசுந்தேற லொழுகு செந்தா மரையடியைப்
பெருகு மன்பிற் றெருபூதேத்தும் பீடா ருண்மை யடியாரு
ளொருவா னினது தண்ணருளெற் குளதா நன்று ளெங்காளோ. (62)

வலவ னாகிப் பார்த்தற்கு மாபா ரதத்தை முடிப்பித்தாய்
நிலவு வுலக நான்முகனை நீ ளுந்தியினிற் பூப்பித்தாய்
குலவு பனுவற் பாவலங்கற் கோவை செஞ்சீ ரடிசூட்டு
புலவன் றமிழின் பின்சென்ற யடியேற் கியாது புரிவாயே. (63)

என்னப் பேசிக் கவிமடங்க லெம்மா னரங்கற் றெழுதேத்தி
முன்னஞ் சின்ன முதலாய முழங்கச் சோலை மயிலால
மன்னு வளிசென் றசைத்தலினுன் மாவின் றளிர்க்கை கொண்டழைப்பத்
துன்னு மலர்க்காச் சூழுறந்தை நகர மணித்தாத் துன்னினனால். (64)

அந்தண் மலர்க்கா வொன்றினுட னடுத்தா ரோடு முறைந்தாங்கு
வந்த செய்தி வினையுரைப்போர் வாயி லாக வளவற்கு
முந்த வறிவித் தனனூக வறிந்த வன்னுன் மூதறிஞர்
சிந்தை யுரைக்கு மமைச்சரொடுந் தேரிற் சென்று வரவேற்றான். (65)

சங்க நரலப் பல்லியங்க டழங்க நான்கு தானைகளி
னங்கம் பரவி வரக்கொடிக ளாடக் கல்லாப் பாவலர்மா
தங்கம் வெருவி யிரிந்தோடி யொளிப்பத் தகைய தனிக்கவியாஞ்
சிங்க மெழுந்த நல்வரவு கண்டா னின்ன சிந்திப்பான் (66)

மின்னுர் நெடிய தகட்டிலைக்கை வேலொன் றரிய வலமுறலான்
முன்னு ளெங்கட் கருண்முருக வேளா மென்னின் முதிர்விடஞ்சேர்
பன்னு கத்தின் படம்புடைக்கும் பசிய கலாப மயிலிலையம்
பொன்னு லாய காற்றண்டைப் புரவி யூர்ந்து வருகின்றான். (67)

கத்துங் கடல்சூழ் பூமிப்பாரிற் கவிக ளென்றால் வீரமிலை
சித்தத் திளையா வீரனெனிற் செப்புங் கவியிற் றிறமிலையோ
ரத்தம் படையு மற்றொருகை யரிய கலையு முடைய விவன்
சுத்த வீர மொடுபுலமை யுள்ளா னென்னத் துணிவுற்றான் (68)

அரச னாவ வருமமயம் புரவி யிழிந்தம் பலக்கூத்தன்
பரவு நினது குலந்துங்கம் பயக்க வென்றோர் வாழ்த் தமைந்த
விரசஞ் சிந்து மோர் கவிதை தந்தான் கொடையி லிணையில் லாப்
பிரசக் கமலக் கரங்கொடுதன் பெரிய மார்பிற் றழுவினனால் (69)

அக்கா லனிகத் தியங்கலிப்ப வலர்மா மழையும் புவி போர்த்த
தெக்கா லுள்ள மக்களுளஞ் சிறந்த நனியுங் களிதூங்கி
திக்கா ளரசற் கோர்கவலை யிருந்த தொழிந்த சிந்தைதனி
லெக்கா லுஞ்சீ ரொன்றுகவி யீச னினைக்கி லேதாகா. (70)

வாழ்த்தும் புலவன் றனைப்பண்டை வைப்பி னுப்பக் கண்டவிறை
யாழ்த்த பயனுட் டிருவாக்கி னருமை யென்னென் றுரைதருமுன்
சூழ்த்த மதியி னுண்ணியனெம் மைய சுதனென் றிலையென்ற
வூழ்த்த னுமம் போயினநின் குலந்துங் கஞ்சொ லுரை யானே. (71)

மருண்மூ கைப்பெண் பேசியதும் மதலை முதலை தந்ததுவு
மெரியுணங்கம் பூம்பாவை யாயும் வெள்ளங் கன்மிதந்துஞ்
சுரியென் றுருவந் தலையசைத்துச் சங்கப் பலகை யெழுந்ததுவு
மருளுங் கவியு முடையவர்சொல் யாப்பி னன்றோ வெங்கோனே. (72)

ஆய்ந்த துணைவ னிதுபுகல வரச னெஞ்சத் திரும்பூது
வாய்ந்த தாகப் பசியனலம் வாட்ட மெலிந்த வொருவற்குத்
தோய்ந்த வமுத நல்விளையின் றொடர்பா லொருவன் கொடுவந்தங்
கீந்த தேர்ந்திக் கொண்டரிய வினிய சொல்வி யூட்டுதல் போன்ம். (73)

கந்தங் கமழுங் பேராரக் கண்ணி மிலைந்த வளவர் பிரா
னுந்துங் களியாற் கூத்த னெனும் புலவர் பெருமா னுடனிருந்து
நந்தம் படைகா னினிமீள நடமி னென்ன வப்படைக
ளந்தண் கோழி செல்பாக்கு நாடி நின்ற வணி பெறவே. (74)

வேறு.

மன்ன னும்மண வூரனு மாசிலாப்
பொன்னந்தேரிற் புரவியிற் காண்குறின்
முன்னாரண் முசுகுந்தனெ னும்பெரு
மன்வ ரப்பிர சாதனை மானுமே. (75)

ஒருபு டைக்கவி பாடிய ராதிய
ரொருபு டைக்க ணமைச்சரு மேனைய
ரிருபு டைக்க ணெருங்கினர் சூழ்வர
திருவு றந்தை நகரணித் தெய்தினார். (76)

மொட்ட லர்ந்தன வாவிகண் மின்னனார்
கட்ட வீழ்ந்தர விந்த முகத்தொளி
யுட்ட யங்கிய வுற்பலங் கண் விழித்
திட்ட மேலெதிர் காண்பன வென்னவே. (77)

பண்டு பாடும் பதிகர்க் கருளரன்
றொண்டு பாடுந் தொழும்பரின் றாரெனக்
கண்டு பாடுங் கவிவர வுங்களி
வண்டு பாட வனமலர் சிந்துவ. (78)

சாக ரங்க டிரண்டன முன்னர
னேக ரங்க ணடப்பத் துகண் மழை
யாக ரங்க ளிருண்டன தண்டலை
யோகரங்க ணடன முனாற்றுவ. (79)

வேறு

சங்கலம்புந் திரைப்பொன்னித் தாயமுத முண்டெழுந்த தருக்க டெல்லாங்
கொங்கலம்புந் தளிர்க்கையான் மலரேந்தி வணங்கிமகிழ் கூரக் கூத்தன்
றெங்கலம்புந் தெருவியங்க வெதிர்கொண்ட வளவனுடன் திரண்டெழுந்த
வங்கலம்பு முலையநலா ராலிக்கத் திருவுறந்தை யகலுட் புக்கான். (80)

வீசொளிய வாட்கையால் வீரனென்று மெய்யழகாற் காமனென்றும்
பாசிலைய வேனம்பி யிளங்காளை கவிச்சிங்கம் பார்மினென்றுங்
காசிழைய வல்குனலா ராடவர்க டனித்தனியே கழறி நிற்பப்
பூசுரர்கண் முதன் மறுகுங் கடந்தடைந்தான் புரவலன்றன் பொன்னங்
கோயில். (81)

அரைய னொருநவமணியாற் குயின்றநறுந்த விசுதவி யரிக டாங்கும்
பெரியவணை யகமிருந்து நன்மொழியாற் பேசுவன பேசி நம்பா
லரிய பெருங் கருணையினாற் சிவந்தந்த தெனநெஞ்சி னுவகை பொங்கி
விரியவருந் தமிழ்ப்புலவ வெம்மகத்தி னீயிருத்தல் வேண்டு மென்றான். (82)

மூதாதை தேடுபொரு ளெம்மிடத்தி லிருக்கவென மொழிய வேறோ
ராதார மேதேனும் வேண்டுவரோ நின்மொழியெற் கான தன்றோ
தாதாடி மதுவுண்டு பெடைமயங்கி யடைகிடைப்பத் தனதாணஞ்சி
சீதார விந்தமலர் மீதாடு பொன்னிநதி சென்னிமன்னு. (83)

கவிபுகலு மின்மொழியை யுண்ணினையாக் களிதூங்கக் கலைக ளோதுஞ்
சிவமகிமை யனவரதஞ் செவிவாயி லுண்டுநனி தேக்க வாக்கு
நவரசமும் பருகுமணிப் பாப்பலவு மெங்கூத்த னவிறு ளெல்லாம்
பவமெடுத்துப் பயனடைந்த நாளாக வினிதிருந்தான் பாராள் வேந்தன். (84)

விற்பனரென் றெவரேனு நம்மவையை யெய்திலவர் மிடிகடிரச்
சொற்பனமுங் கண்டறியாக் கனகமழை பொழிவதுநந் தூய்மை யன்றோ
வற்பமுமோர் பொற்காசு மொருவர்கர மேலாத வான்றோ னெஞ்ச
மெற்பரமோ வறிதரலென் றோவாது தன்னகத்தி லுவகை பூத்தான். (85)

சின்னாளிற் பெருந்தகையைக் கண்டபெரும் பேற்றிலொரு சேயு திப்ப
வின்னுத பேருவகை கொண்டுநக ரணியாற்றி யிசைநால் வேத
நன்னுவர் பிறருள்ளார் நசையோட நாடுவன நளினக் கையாற்
பொன்னாலு மணியாலுந் தூசாலும் பெறக்கொடுத்தான் பொன்னி நாடன். (86)

தருமமெலாம் புரிந்துசிவ தலங்க ளெலாம் விழவாற்றிச் சாதகத்தின்
கருமமெலாம் புரிந்திறைவன் குழவிதனை குழையன்பாற் கையிற்கொண்டு
மருமமுற வணைத்தேந்திக் கூத்தனருள் வாக்கிடமாய் மண்ணுள் பாக்குத்
தருமகனுக் கரிதாகக் குலோத்துங்க னென்றொருபேர் தகவினிட்டான். (87)

இளந்திங்க ளனுமொரு கலையோங்கி வளர்வதென வெச்ச நன்காய்
வளர்ந்தங்க மாதவனோர் தமனியமே யெனப்புகன்று வந்து கைத்தாய்
குளந்தங்கு கரியநறுந் திலகமிட்டு மழலைமொழி குழறிப் பேச
வுளந்தங்கு மகிழ்வெய்தி யீன்றவர்கள் களிகூர வோங்கைத் தாண்டில். (88)

தரியலர்கள் வெருவவிடந் தங்கிலைவேல் வளவேசன் தகையின் கண்ணி
லரியபல கலையுணர்வி லையமிலான் குலநல்லா னன்பு மிக்கான்
துரிபகிலங் கடந்தநில நடமுடையான் றண்ணருளாற் றோன்று நல்லான்
பெரியகுண முடையபிரான் கட்டுரையான் கூத்தனெனப் பெரிது கண்டான். (89)

எண்ணியவா மன்னினிய நன்னாளி னகரமெலா மெழில வாற்றிப்
பண்ணியமாப் பசும்பந்த ருட்போந்து கூத்தனெனும் பாவல லோனைத்
தண்ணியமெல் லணையிருத்தித் தன்மகனை யருகிருத்தித் தழைத்த வன்பாற்
புண்ணியவா வெனப்போற்றி மற்றவனாற் கல்விநலம் பூப்பச்செய்தான். (90)

தாதவிழும் பேராரக் கண்ணிமகிழ் வொடு சென்னா டாணி யாண்டு
பூதலமு மொப்புவித்துப் புதல்வனையுங் கைப்பிடித்துப் புலவர் சிங்க
மாதரசீ யெனக் கொடுத்து மண்ணுலகத் தாசையெலா மறவிட்டன்றே
பூதவுடம் பிங்ககலப் புகழுடம்பி னுடன்கைலை புக்கான் மன்னோ. (91)

வற்றாத மழைக்கையான் வானேக மற்றவற்கு மழலை மாறாக்
கற்றாவைப் பிரிகன்றிற் கலுழுமகன் கையாற்செய் கருமமெல்லா
முற்றான்றா னேயாக முற்றுவித்தான் புலவர்பிரா னுலகமாளும்
பற்றாகப் பணித்தனனீ தரன்செயலே யென்னவதைப் பரித்திட்டானே. (92)

இவ்வணமம் பலக்கூத்த னிளவரச னருகிருப்ப வினிமையாகச்
செவ்வண்ண மரசோம்பிச் சிறப்புறுபைங் கூழ்நலனார் செவ்வி நோக்கி
யவ்வண்ண மழையுதவ லெனக்குடியி னலமமைய வைம்பயத்தி
லுய்வண்ணங் கோலோச்சி யொருகுறையு நேராம லுதவினானே. (93)

அம்பலக்கூத்தன் உறந்தையடை படலம் முற்றிற்று.

ஆக படலம் 22-க்குச் செய்யுள் 1037.

அக்கால் அச்சோழமண்டலத்திற் கிராஜதானியாகிய உறையூரின்கண் செங்கோல் செலுத்தி யரசாண்டிருந்த இராஜேந்திரச் சோழன் இவ்வம்பலக் கூத்தனது புலமைத்திறத்தைக் கேள்வியுற்று, தனது மரபினர்க்குப் பண்டை நாள் தொடங்கிப் பேருதவி புரிந்துவந்த செங்குந்தமரபின ரென்பதையும் உணர்ந்து இப்பெருந்தகையை நமது அவைக்குப் புலவர்பெருமானாகவும், மந்திராலோசனைத் தலைவனாகவும் கொண்டிருப்பின் மிகவு நன்றென்று நினைந்து தன்னவையிலுள்ளார் சிலரை ஏவினன். அன்னோர் மணவூரையடைந்து அவ்வம்பலக் கூத்தனது மாளிகையை நண்ண, அங்குள்ள ஏவலர் சோழன் அவையிலுள்ளார் வரவை அறிவிக்க அவரைக் கூத்தன் வரவழைத்து வந்தசெய்தி யாதென வினவ, அன்னோர் சோழன் கருத்தைத் தெரிவித்தனர். அவருக்குச் சோழமன்னன் கருதியவாறே உயையூர்க்கு வருகின்றேன் எனத் தன் உடன்பாட்டை யறிவித்தனுப்பினன்.

அவரும் சோழனையடைந்து அம்பலக்கூத்தன் உடன்பாட்டைத் தெரிவித்தனர். பிறகு புலவர் பிரான் தந்தை யுத்தரவேற்றுத் தன்னிளவலாகிய ஆனந்தக்கூத்தனுக்கு மணவூரரசுரிமை யனைத்தையும் ஒப்புவித்து, பரிசனர் சூழப் பரியிவர்ந்து உறையூரையடைந்தனன். வரவையுணர்ந்த சோழன் அமைச்சர் முதலாயினாரோடும் எதிர்கொண்டு அவனது உளப்

யையும் இளமையையும் வாளொருகை ஏடொருகை ஏந்திய தோற்றத்தையும் புலமையையும் நோக்கி வியப்புற்று நின்றான். அரசன் குறிப்புணர்ந்து புலவர் பெருமான் அவனை நோக்கி

வாளொருகை யேடொருகை வைத்திருக்குங் காரணத்தைக்
கேளிருகை யீதலரக் கிள்ளிக்கோ—நாளுங்
கலாத்துங்கன் காணக் கவிவாணர் தங்கள்
குலோத்துங்க மாகும் குறி.

என்றிந்த வெண்பாவைக் கூறினன், இதைக்கேட்ட மன்னவன் தன்னருகில் நிற்கு அமைச்சர் முதலானோரை நோக்கி இவன் கவிராஜ கண்டீரவம் போலுமெனக்கூறி மகிழ்ந்து தமது கொலுமண்டபத்திற் கழைத்துச் சென்று உயரிய ஓரிருக்கையிலிருத்தித் தானும் சிங்காசனத்திருந்து புலவரேறே நீர் இன்றுதொட்டு புவிச்சக்கிரவர்த்தியாகிய நமது அவைக்கோர் கவிச்சக்கிரவர்த்தியாகவும், மந்திரத் தலைவராகவும் இருமின் எனக்கூறி, பலவிருது வரிசைகள் தந்து போற்றிவந்தனன்.

அன்று தொட்டு அம்பலக்கூத்தன் சோழன் அவைப்புலவனாயும் அமைச்சனாயும் அமர்ந்திருந்தனன். இவ்வாறிருக்கையில் இவனது நல்வரவால் அதுகாறும் மக்கட்பேறின்றி வருந்தியிருந்த வளவனுக்கோராண்மகவுதித்தது. அப்போதரசன் பெருமகிழ்ச்சியுற்று, அக்குழவிக்கு கணிதர்களைக்கொண்டு சாதக முதலிய எழுதுவித்துப் பெயரிட எண்ணி முன் புலவர் பெருமான் கூறிய வெண்பாவின் ஈற்றடியிலுள்ளவாறு குலோத்துங்கனென அவராலேயே பெயர் புனைவித்து வளர்த்துவர அம்மகவும் இளம்பிறைபோல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து ஐந்து வயது நிரம்பிய காலையில் தன் அவைப்புலவராகிய அவரையே ஆசிரியராகக்கொண்டு கல்வி பயில்வித்தனன். மன்னன் மகனும் ஆசிரியனை நிழல்போல் விட்டு நீங்கானாய் எல்லா நூல்களையும் ஓதிப் பயின்று வந்தனன்.

இவ்வாறு நிகழுங்காலையில் இராஜேந்திரச் சோழன் தனக்கு மூப்பினால் உடலைவிட்டு உயிர் பிரிந்து போமென உணர்ந்து, மகனையும் மணவூர்ப் புலவனையும் அருகிலிருத்தி மகனுக்குச் சொல்லவேண்டுவனவற்றைச் சொல்லிக், கூத்தனை நோக்கிக் கவிச்சக்கிரவர்த்தியாரே நீர்தான் இன்று தொட்டு இவ்வரசை யேற்று இப்புதல்வனுக்குத் தந்தையாயிருந்து மண முடித்து முடிசூட்டி வைக்கவேண்டும் எனச்சொல்லி விண்ணுலகுற்றனன்.

பின்னர் புலவர்கோனும் இளவரசாகிய குலோத்துங்கனைக்கொண்டு அவன் தந்தைக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன் முதலியவற்றைச் செய்து முடிப்பித்து அவ்விளவரசோடிருந்து சோழநாட்டைக் காவல்புரிந்து வந்தனன்.

கவியரசுப் படலம்.

தோட்டலர் கமலப் பொருட்டுறை புத்தே டொன்முறை படைப்பினி
வழியாப், பாட்டலர் படைக்கும் புலவர்கோன் றண்காற் பண்ணையால்
வளம்பெறு முறந்தை, யாட்டிறல் வளவனுட்சியை யேற்றே யசைதர
வெற்றியக் கொடியை, நாட்டியிவ்வுலகிற் கவியரசாண்ட நடைத்திற
மறிந்தவா றறைவாம். (1)

பிள்ளை வெண்மதியங் கங்கையஞ்சடிலப் பிஞ்ஞகற் றொழுதெழில் மணவூர்
வள்ளனூல் வல்லார் மாப்படைத் தலைவர் மாகதர் முப்பொழு துணரும்
தெள்ளிய வறிவினமைச்சர் மற்றுள்ளார் சேர்ந்தது தேவர்கோ னவைநேர்
நள்ளிருட்சிக்கு மணியொளிபகலி னருசபாமண்டப மடைந்தான். (2)

ஆங்களிமுரலப் புதுமதுப் பிலிற்று மாத்தியர் தாரினன் றனக்கென்
றோங்கொளி யிமைப்ப நவமணியாற்செய் யுன்னத வரியணைப் பாங்கர்
தாங்குற வமைத்துத் தந்தவாதனத்திற் றுயெனத் தாரணி புரப்பான்
பாங்குற வதனின் மிக்கெழுந் தருளிப் பாவல னிருந்தனன் மாதோ. (3)

தம்முழை வந்தார் வேண்டுவ வீயுந் தருவினும் பெரிதெவ ரிடத்தும்
பொம்மெனக் காலாற் சென்றவர் வேண்டும் பொருளெலாங் கொடுத்தருள்
பொன்னி, விம்மிதம் பயப்ப வுலவெழினுடாள் வேந்தனு மம்பலக் கூத்தன்
அம்மவென்றெவரும் விருப்புறச் செய்தானரசிய னெறிவழாதன்றே. (4)

நூலுணர் மறையோர் பற்பல கலையினுண் பொருளுரைப்பவ ரொருபால்
வாலியவறிவி னமைச்சர்க ளொருபால் வருவன நிகழ்வன வுரைப்பக்
காலமுங் கோளு நாள்களுமமையக் கணிப்பன கணிப்பவ ரொருபான்
ஞாலமன்னவர்க டிரைகொடு வணங்கு நகுமுடி யிமைப்பன வொருபால் (5)

ஆரணமுடிவு மாகமமுடிவு மமையகின் றளவையா லறியுங்
காரண மூன்றே தசமுமன் றெட்டே காணென வறிபவ ரொருபால்
பூரணப் பொருளை யிலக்கணக் குறியாற் பொருந்த சம்பவமுதற் குற்றஞ்
சேரொணு தாயுந் தார்க்கிக ரொருபாற் றெளிந்த வேதாந்திக ளொருபால்.
(6)

ஈசுரர் தேவர் முனிவரர் வேந்த ரிராக்கத ரிவர்பெரும் புகழைப்
பேசுவ காலஞ் செயலினுன் மாறிப்பிறழ்வமற் ருென்றையொன் ருெழிப்ப
நேசமு மறமு நிகழ்த்திய வட்டா தசத்தினு நிகழ்முர ணறியாத்
தேசொளி யொன்றே யாதலா லென்னத் தெரிபுராணிகரின மொருபால். (7)

ஆயிடையிருந்த சிங்கவேறனைய வம்பலக் கூத்தனு ரருட்கண்
டோய்பவர் தமக்குக் கடாவிடையாகச் சொல்லுவ சொல்லிமற் றவர்க்கு
நேய மோடுதவி மன்மகன்றன்னை நித்தலுந் தன்புடையிருத்தித்
தாயினுஞ் சாலக் கருணையாற் கலைகள் சாத்திரவகையெலா முரைப்பான் (8)

உத்தியாற் பலவாய் விரிதலாற்றெளிய வுசாவினே ரகமயக்கறலா
லெத்தரையுள்ளு மியங்கிப பனுவ லியாவையு மாய்ந்தறி திறனல்
முத்த மிழ்ப்பனுவன் முதிர்சுவைபருகு முக்கனியென வழங்கிடலால்
வித்தக முனிவர்குழுமு நான்முகன்றன் வேத்தவையென விளங்கியதே(9)

இன்னண மியங்கு மவைதனில் வேந்தா யிருந்திடு மம்பலக் கூத்தன்
சொன்னெறி மருது சோழநாடனைத்துந் தொழவர சோங்கிய காலை
மன்னுறு மன்றம் புகுந்துவாய் வந்த வழுத்துபு புன்கவிமாக்க
ளின்னலோடலவு மீனமிங் கொழிய லிசைப்பனு லேவருங் கேட்ப. (10)

வேறு

உலகினி லெவரேனு மொண்பொரு ளுறைவிடமாம்
பலகலை யுணராமல் பாவல ரெனவந்தால்
தலைதுணி படுமீது சரதம தென மொழிமின்
கலையறி நவையார்க்குக் கட்டளை யீதென்ருன். (11)

சொன்மொழி யெதிர் நோக்குந் தூதுவர் பல ருள்ளார்
தன்புடை யுள்ளார்க்குச் சாற்றலு மறிவித்தார்
புன்கவி மாக்க ளெலாம் புரவலர் தமையேத்தி
யின்புறு நெஞ்ச முடைந்தீரன டுங்கினரால். (12)

நாவல ரென்பாரு நவையறு நூல்வல்ல
பாவல ரென்பாரும் பாவரசவை காண
மேவுவிர் நமதாணை விதியென மதியுள்ளான்
நாவசை தரவுலகுண் ணுடசை வுற்றனவே. (13)

புவியிடை நனியேகிப் பொய்யரை மெய்யரெனத்
தவிதே வாதவரைத் தானவு தாரனெனக்
கவியொரு வழிபுனையாக் கடைதொறு நின்றுழல்வார்
செவிவழியிது கேளாச்சிந்தை கலங்கினரே. (14)

துண்டினிற் றலைவீழத் துணிவது மறமாமோ
தண்டனை யிதுதானோ வென்றெணி தளர் சில்லோர்
மண்டலத் திதுகாறு மன்னவரிது செய்தார்
கண்டனிர் முதியோரே காண்மினென் றனர் சில்லோர். (15)

கொலைதலை மறமென்னக் கூறுவ தறியானோ
விலையவனுள நேய மெங்ஙன மென்பாரும்
சிலையென நின்றாராய்ச் செல்லது மின்னுமற்
றலமிசை யிடிவந்து தாங்கின தென்பாரும். (16)

பாட்டல தோர் தொழிலும் பழகில மினிப் பொருளை
மீட்டுவ தெவ்வாறென் றேங்கின ரொருசாரார்
பூட்டிய வாயாகப் புரவல னவையேகிற்
கூட்டுறு முயிரென்பர் கூடின ரொருசாரார். (17;

பண்டித னுவலவன் பாவல னெனு மகுட
முண்டெனி றலையேகம் மொழி யொழி யென்பாருங்
குண்டிய ரெவரேனுங் கூறுவ ரென வஞ்சித்
தண்டமிழ்க் கவியல்லேஞ் சான்றவ ரென்பாரும். (18)

தயவொரு வடிவாகித் தாரணி வரு வீரன்
வயமிகு கவிவாணன் மனநிலை யறியாதா
ருயிருகு மெனிலாரே யுளநலி வடையாதார்
பயமதி லிதுபேசும் பண்பின ரானாரே. (19)

இன்னணம் வெருவந்தா ரெவர்களு முருமாறிச்
சென்னியி னரசுறுவார் தெறு செயல் செய்யாரென்
றுன்னிய புலமையுற வுன தருடாவென்ன
மன்னவை குறுகுற்றே வழிபடு முடியானார். ((20)

வாக்கினன் மைந்தவுயர் மலர்மகண் மாமகனே
காக்கவெ மன்னவனே யெனவரு கவிகளெலாந்
தூக்கது புனைவறியோந் துரிசறு மவைநிற்காண்
பாக்கிவண் வெளிவந்தோம் பதமலர் பணிகின்றோம். (21)

கற்பன வாழுற்றேங் கசடற நின்னெறியிற்
பொற்புற நிற்கின்றேம் பொன்னடி தொழுகின்றேம்
அற்புத நின்னருளை யடைவுறு நசையுள்ளேம்
விற்பர் வயிலுடையாய் வேண்டுவ மிதுவென்றார். (22)

வேறு

மருவினோர் விரும்பிக் கேட்ட வான்பொருள் வரையா தீயுந்
தருவெனுந் தகைமை சான்ற புலமையோன் சார்ந்தார் சொற்கேட்
டிருமினென் றிருத்தி யேற்ற வின்னுரை வழங்கி நீவிர்
வெருவலி ரென்னக் கையா லமைத்திவை விளங்கக் கூறும். (23)

வன்புலர் தனிற்கருங்கண் மக்களில் வரையாதீவோர்
கொன்பெறு பேறுதன்னிற் குணமுடை மைந்தர்பேறு
மன்புடைப் பொருளிற்கல்வி யரியகோன் பிற்கொலாமை
யின்பவின் றமிழ்மொழிக்கு ளேற்றமிவ் வுலகத்தம்மா. (24)

வடவெல்லை யிமயந்தென்பாற் பஃறுளி யாறுமற்றவ்
விடைவெளி நீண்டகன்ற யோசனை யெழுநூற்றுள்ளு
நடைபெறுந் தமிழ்முச்சங்க நண்ணுதென் மதுரையந்நாட்
குடமுனி வரைந்தானம்பே ரகத்தியங் குலவவென்ப. (25)

திரிபுர மெரித்தார்குன்ற மெறிந்தவேள் சிடன்சைவ
விரதமார்க் கண்டரெண்வான் மீகிகோ தமன்மற்றுள்ளா
ரரிறபத் தமிழ்முன்னாய்ந்த தாரண முதலாமென்னக்
கரிசொலா நின்றதாற்றெல் காப்பியந் தான்முன்னின்றே. (26)

அங்கபா டப்புரத்தி லகத்திய னாதிமேலோர்
சங்கமற் றிடையினாய்ந்த தமிழகத் தியந்தொல்காப்பி
யங்கலை மாபுராண மாங்கடைச் சங்க மாய்ந்தார்
துங்கநக் கீரராதி தோமறு புலவரென்ப. (27)

எந்தைவீற் றிருந்தவெண்பொன் னிலங்கலி லிவர்ந்தேறார்ந்தோன்
சந்திமா நடத்தினார்கைத் தமருகத் தொலியுட்பேசு
மைந்திலக் கணத்தமிழ்க்கே ரகத்தியன் வடநூற்கந்த
முந்துபாணினி யென்கின்ற முனிவர ரறிந்தாரம்மா. (28)

வேதமா கமபுராணம் வியன்றமிழ் மொழியினின்ற
போதவா ரியரு மத்தின் பொருண்மொழி புணர்த்தா ரென்கை
மாதவ மூவர்சைவ வைணவ குரவர்சொற்ற
வாதரங் காண்மின் கேட்ப வற்புத மமித மாமே. (29)

திசைவட சொலேவேண் டாது செந்தமிழ்ப் புலவீர் முன்ன
மிசைபெற வறிந்தீ ருய்ந்தீ ரிலக்கிய விலக்க ணத்தோர்
வசைவறிற் கற்ற கேட்ட மாண்பெனும் பொருண்மேற் கொண்ட
நசையினும் கல்லாச்செய்யு ளுவெழிற் றலைபோ மின்றே. (30)

பமரமுண் ணலர்தே னென்கோ படர்தரு கோற்றே னென்கோ
அமிழ்தமி ழ்தென்கோ பாகி னணைந்தமுக் கனியா மென்கோ
சமரச வரசன் மார்க்கர் சாந்தமா ருள்ள மென்கோ
தமிழெனு மினிமைக் கொப்பே துயர்வெவை சாற்ற வல்லேம். (31)

அற்புத மிகுமனுநிதி யருந்தமி ழுதனுற் கற்றோர்
சொற்பொருட் சோர்விலாத நூமொழி யென்பர் மேலும்
பற்பல புகல்வ தென்னே பாவலீ ரென்றுன் வெள்ளை
யெற்பொலி கமல மேயா ளின்னரு ளமுதுண் டானே. (32)

பலகலை யுணர்ந்த கூத்தப் பாமணி யின்ன கூற
நிலத்துயர் மலைபோன் மன்னு நின்னுரை போற்றி நிற்போ
மலமரும் புந்தி நையே மாறினே மனமா லென்ன
விலைமறை காய்போ லாங்காங் கிருந்தன ரிருக்கு மேல்லை. (33)

சீரிய பன்னூ லாயாத் திருக்குளோர் சின்னூ லுள்ளு
மோரிய லேனு மாயார் மற்றத னுண்மை யோரா
ரேரிநேர் வயிற்றூ ணச்சிச் செவிக்குண விடுதல் வேண்டார்
பூரியர் கற்றோர்ப் பேணிப் பொழுதொடு கல்லாச் சோம்பர். (34)

இனிச் செய லென்னென் றுரு மெழுந்தனர் தலைபோ மென்ற
பனிப்புட றுங்க வேங்கிப் படர்ந்துநற் போத காசான்
மனித்தரி லேவ னென்ன மதித்துநூன் முறையிற் கற்பா
னினிதரோ செய்தான் கூத்த னெனவுளத் தூக்கங் கொண்டார். (35)

பண்டையே டெங்கே சான்ற பாவல ரெங்கே மேலாந்
தண்டமி ழெங்கே யச்சீர் தணந்தநா மெங்கே யென்ன
கொண்டபே ராவ றூண்ட குறைநிறை வாக்க வூக்கி
மண்டுமெய் வருத்த நோக்கா மாண்புளா ரானா ரன்றே. (36)

நூல்பல வற்று மையந் திரிபற நுணுகிக் கற்றோர்
பால்படர் முறையாற் பேணி படித்தறிந் துசாவித் தேறுஞ்
சிலராய்க் கற்ப கற்றுத் தெளியவன் தங்கை வெற்றி
வேல்வலக் கூத்த மேலோன் வியனவைக் கருக ரானார். (37)

மன்னிய தமிழ்மொ ழிக்கோ ரிழுக்குற வழுக்குற் றோர்தஞ்
சென்னியை முடிந்து சேர்த்து வெட்டுவன் றெரிமின் சேரும்
கன்னியர் திங்க ளாற்றுங் கலைமகள் வழிபா டற்றி
லென்னுமத் தண்டோ பாயத் திகமெலா மடங்கிற் றம்மா. (38)

வலம்படக் கிளர்ந்து காந்து வரிவடி வியன்று பன்னெண்
குலம்படு மொழிகட் கெல்லாந் தாயெனக் குலவி யோங்கி
நலம்படு தமிழை யோம்பு பாண்டியன் போல நாளும்
வலம்பட வளர்த்து வந்தான் மணப்பதி வந்தான் முனே. (39)

புன்கவி மாக்க ளாகும் புல்லிரு ளகல வோடி
நன்கவி மக்க ளாகு நற்பகற் பொழுதைச் செய்வா
னன்பினுற் றேன்றி ஞனென் றறிவுளா ருளங்க ளித்தார்
மன்கவி கைக்கு ளாகு முலகமென் பதும தித்தே. (40)

சீரிய நெறியா லாளுஞ் செந்தமிழ்ப் புலவ ஞேர்நாட்
சூரியன் குலத்தோன் முன்னஞ் சொல்லிய வண்ணஞ் செய்பு
நேரிய செவ்வி யுற்று ணிளவர சென்று நேடிப்
பேரியற் கற்பு வாய்ந்த நங்கையைப் பேச வுன்னி. (41)

நட்பின ருள்ளா ரேனை யனீகமுன் னடப்பத் தானோர்
கட்புலன் கதுவல் செல்லாக் கடுப்புடைப் பரியி வர்ந்து
புட்படர்ந்தாடல் செய்யும் பொழிலணி மதுரை மூது
ருட்புகச் செழியன் றானு முளமகிழ்ந் தெரிர் கொண் டன்றே. (42)

தன்பொலன் கோயில் கொண்டு சார்ந்தூர லிருக்கை யீந்து
நன்மையை யளவளாவி நற்றமிழ் வளர்க்கு நின்னை
யின்னரு ளதனுற் கண்டே னென்வயி னுடியுற்ற
தென் னென விசைப்ப தானுன் மணவுரை மணவூ ரேந்தல். (43)

தீந்தமிழ் மொழிவ ளர்க்குஞ் செழியனின் மகளைப் பேசப்
போந்தன னெங்கோ வுக்குன் பொன்னினைத் தருதி யென்ன
வாய்ந்தவெங் குலச்சீ ருக்கு வளவர்சீ ரொப்போ வென்றான்
தேந்தொடை வேம்ப னேற்றஞ் செப்புவன் புலவர் கோமான். (44)

மன்கதிர்க் குலமாண் பெல்லாம் வரிசையிற் புகல வந்தத்
தென்னவன் குலத்து மேன்மை சிரிதுங் குலத்தி னென்று
மன்னவைப் புலவன் கூற மற்றிவா ரிசைத்தி சைந்தான்
கன்னிநா டாள்வோன் கூத்தன் கடிமணச் செயன்மேற் செய்வான். (45)

வளமலி யுறந்தை யேகி வனிதைய ராய மிக்கோர்
பளகறு முறவோ ரார்க்கும் பகர்ந்திதைச் செவ்வே ளொக்கு
மிளவர சொடுநீர் வைகைத் துறையவ னெழிலூ ரெய்தி
புளமகிழ் தூங்க வாங்கே மணமுடித் துறந்தை புக்கான். (46)

ஆங்கரு ளுகரப்பே ராண்டகை யமிழ்திற் றந்த
மாங்குயி லினுக்கு வேண்டும் வரிசையோ டமுத வின்சொற்
றேங்குகா வதனால் வெண்பா செயும்புக ழேந்தி யானைப்
பாங்குற வளித்தா னேனைப் பார்த்திப ரெவரும் போற்ற. (47)

பொன்னலை கொழிக்கு நீரார் காவிரி பொலிநா டற்குச்
சொன்னநன் மணிமா மௌலி சூட்டுவா னுளத்தி னெண்ணி
நன்னல முளநாட் கண்டு நாடெலா முடங்கல் போக்கி
யந்நக ரணிந்து கோயி லலங்கரித் திலங்கச் செய்தான். (48)

சிங்கவே றனையான் வைத்த தினத்தள வறிந்த வன்றே
மங்கலங் காண்பான் வந்த மன்னவர் மற்றோ ரெல்லா
மங்கணே ரிடமு மேனை யலர்வனந் தடம டங்க
வெங்கணு நிறைந்தார் வந்தார் மணவரை யினிதிற் சூழ்ந்தார். (49)

பூத்தழை மாலை நாற்றிப் பொங்குபல் லியங்க ளார்ப்ப
நீத்தவர் மறையோர் வேந்த ரமைச்சர்நன் னிமித்தஞ் சொல்வோர்
முத்தமிழ்ப் புலவர் மற்றுந் தொன்னகர் மாந்தர் சூழ
வாத்தியந் தொடையல் வேந்தை வழுதித னணங்கி னோடும். (50)

அரியணை யிருத்திக் கங்கை யாதிய நீரா லாட்டி
விரிமண மாலை வேய்ந்து விதிமுறை முடியை யேந்தி
பெரியனம் பலக்கூத் தன்றான்சூட்டினன் பெரிது வந்தா
ரரியவிக் காட்சி காணப் பெற்றவ ராரு மாதோ. (51)

ஆன்றவர் வாழ்த்து ரைத்தா ரரசர்க ளிறைமுன் வைத்தா
ரேன்றனர் கடைக்க ணோக்க மிறைஞ்சின ராகி நின்றார்
தோன்றினர் மற்றை யோருந் தொழுதனர் வாழ்த்தா நிற்ப
வீன்றவ ளொத்த கூத்த னினிதுவாழ்த் துரைப்பா னுன்னி. (52)

கடைமணி யாடாச் செங்கோற் கைக்கொள்வா னென்றெ டுத்த
தொடையலோர் பாதி முற்று முன்னந் தொல் முடிபு னைந்தோ
னிடை யெடுத் திந்தக் கூத்த னிணையடி முடிமேற் சூடி
யடை குலோத் துங்க னென்றே யையறந் தனன் பணிந்தா னன்றே. (53)

சென்னியிற் புலவன் பாதஞ் சேர்த்தலாற் செல்வி யென்றே
நன்னயப் பேரும் பெற்றா னண்ணிரோ ரெவர்க்கு மொப்ப
வின்னமு தேய்ச வைத்த வடிசிலை யினித ளித்துப்
பொன் முதற் பரிசளித்துப் போக்கினன் விடைதந் தன்றே. (54)

சென்னியுஞ் செங்கோ லோச்சித் திரிபிலின் பார்த்தி ருந்தான்
மன்னவன் முன்னர்த் தந்த மண்பொறை மைந்தற் காக்கி
புன்னுமவ் வரசு வாழ வுத்தமக் கவிகள் வாழ்த்த
தன்னலங் கருதான் கூத்த னிருந்தனன் சதுரான் மாதோ. (55)

வேறு

ஆசா னுன தன்றிகம தலையற் கன்னையென் னுலகம்
பேசா நிற்பக் கல்விநலம் பெருகக் கூத்தன் கவியரசு
தேசார்ந் திலகச் செய்தவகை தெரித்தாம் புவனிச் செங்குந்த
ராசா சேசத் தொருங்கெய்து மரங்கத் தருமை சிறிதறைவாம். (56)

கவியரசுப் படலம் முற்றிற்று.

ஆக படலம் 23-க்குச் செய்யுள் 1093.

இன்னணம் சோழவள நாட்டிற் இராஜப் பிரதிநிதியாய் அரசையேற்ற அம்பலக் கூத்தன் அரசவை யடைந்து, மறையவர் அமைச்சர் மாகதர் நிமித்திகர் பற்பல கலைகளிலும் வல்லுநர் படைத்தலைவர் முதலானோர் சூழ வீற்றிருந்து, இளவரசை அருகில் இருத்தி அரசு நெறிமுறை வழுவாமல் காவல்புரிந்து வருநாளில் ஓர்நாள் புன்கவிப் போலிப் புலவர் பலரை ஆங்காங்கு சென்றுழலும் ஈனநீக்கி நன்கவிப் புலவராக்க வெண்ணி, தன்னவையி லுள்ளாரை நோக்கி, அவையீர்! நந்தமிழ் நாட்டில் இன்று தொடங்கி தமிழ் மொழியை ஐயந்திரிபற நன்குணரார் புலவர் பாவாணர் எனப் பெயர் புனைந்து வருவராயின் அன்னோர் தலைகள் துணிபடும். ஆகையால் நாவலர் பாவலர் புலவரென்போர் நம்மவைக் கண்வந்து தேர்வு பெறல் வேண்டும். எனக்கட்டளை பிறப்பித்தனன். இதைக்கேள்வியுற்று பொய்யரை மெய்யரெனவும், ஈனரை ஈகையாளரெனவும் கூறி வயிறு வளர்த்து வந்தோ உள்ளங் கலங்கி, இவ்வாறு தலையைத் துணிப்பதும் தருமமோ என்பாரும், அரசரானோர் இதுகாறும் இவ்வாறு கட்டளையிட்டோர் உளரோ என்பாரும், இதுதானோ தண்டனை என்பாரும், ஈதென்னை மின்றுமல் இடித்து தலையில் வீழ்ந்ததென்பாரும், பாடிப்பிழைக்குந் தொழிலொழிய வேறு தொழிலறியே மென்பாருமாய் அஞ்சி நடுங்கி யொன்று சேர்ந்து, சோழன் அரசைப் பெற்றோர் கொலை செய்யாரெனத் துணிந்து, இராஜசபையை அடைந்து, ஐயனே! நின்னைக்காணும் பொருட்டு ஈண்டுவந்தோம் கல்விப் பொருளில்லா யாங்கள் நின்னருளால் அப்பொருளை அடையவிரும்பி நின்னை அடைந்தோம் எம்மைக் காக்க வேண்டுமென்று பணிந்திரந்தனர்.

விரும்பிய வாறளிக்கும் தெய்வத் தருவை யொத்த புலவர்கோன் அன்னோர் கூறியவற்றைக் கேட்டு அஞ்சன்மின் எனக் கையமைத்து இருக்கை ஈந்து இன்னுரை வழங்கி, ஐம்புலன்களில் கண்ணும், பெறும் பேறுகளில் மக்கட்பேறும், பொருளிற் கல்விப்பொருளும், நோன்பிற் கொல்லாமையும், எவ்வாறு மேம்பட்டதோ அவ்வாறு எம்மொழியுள்ளும் தமிழ் மொழியே, ஏற்றமுள்ளதாம்; முச்சங்கத்தாரும் ஆராய்ந்துறிந்தது இத் தமிழ் மொழியென்றறியீரோ! இம்மொழியிலிருந்த வேதாகம புராணே திகாசங்களை ஆரியர் மொழி பெயர்த்துக்கொண்டனர் என்பதைச் சைவ வைணவ குரவர் கூறிய தமிழ் மறைகளே சான்று பகருமன்றோ! இதனால் இத்தமிழ் மொழி தூய்மையான முதன்மொழி யென்றறிமின்; ஆதலின் பலவாறு கூறுவதென்னை; முறையாக இத்தமிழிற் றேர்ந்து வெளிவருவராயின் பிழைப்பர் இன்றேல் நாமுன் கட்டளை பிறப்பித்தவாறு தலை துணிபடப் பெறுவர் என்றான்.

இவ்வாறு கூறக்கேட்ட போலிப் புலவர்கள் வேறு செயலின்றித் தலை போமென்று அச்சுற்றவராய் நல்லாசிரியனை அடைந்து முறையிற் கற்றுத் தேர்ந்து நிறைந்த கல்விப் பொருள் பெற்றவராய் கூத்தன் அவைக்கு அருகராயினர். இத் தண்டோபாயத்தால் புன்கவிகளாகிய இருளை யோட்டிய கதிரவன் போன்ற கூத்தனது செயலை அறிவுள்ளோர் மதித்துக் களித்தனர்.

இவ்வண்ணம் கவியரசு செலுத்தி வருங்காலத்தில் சோழ மன்னன் தனக்குரைத்தவாறு இளவரசன் முடிபுனையுந் தருணமடைய முதலில் மணவினை செய்யவெண்ணி, பரிசனர் புடைசூழப் பாண்டியனிடஞ் சென்று பெண் பேசி, இசைவு பெற்று, இளவரசுக்கு மணவினையை முடிபபித்து, அப் பாண்டியன் மகளுக்குத் தந்த வரிசை பலவற்றுடன் தம் நாடடைந்து, அரசற்கு முடிபுனை நன்னாள் குறித்து அரச ரெல்லார்க்கும் அறிவித்து நகரை அலங்கரித்து குறித்த நாளில் யாவரும் வந்து குழுமிய பின்னர் இளவரசனை அரியணை யேற்றி கங்கையாதிய புனித நீராட்டி மலர்மாலை புனைந்து விதிப்படி தொன்று தொட்டுவந்த முடியை அம்பலக்கூத்தன் தன் கையால் சூட்டினன். இக்காட்சி காணப்பெற்ற அருந்தவர் வாழ்த்துரைத்தனர். அரசர் இறை இறுத்து வணங்கினர். மற்றையோரும் தொழுது வாழ்த்த தந்தை யொத்தோனாகிய கூத்தனும் அரசனை வாழ்த்த வெண்ணி

"ஆடுங் கடைமணி நாவசை யாம லகில மெங்கும்
நீடுங் குடையைத் தரித்தபிரான்"—என வொரு வாழ்த்துச் செய்யுள் மொழியும் போதில் அரியணையிலிருந்த அரசர் கோன் தன்னை ஆசான் புகழ்வதற்குமுன் அச்செய்யுளை, "இந்த நீணிலத்தில்

பாடும் புலவர் புகழ்கின்ற கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே யென்னைச் செப்புவரே.'

எனக் கூறி முடித்து புலவனடியைத் தன்சென்னியில் புனைந்ததால் சென்னி யென்னும் பெயர்க்குத் தக்கவனாயினன்.

பின்னர் முடிசூட்டு விழாவிற்கு வந்திருந்தோர் யாவர்க்கும் அவரவர்க்குத் தக்கவாறு இனிய அமுதொத்த அறுசுவை யுண்டி யளித்து பொன் முதற் பரிசளித்து விடை கொடுத்தனுப்பினன். அதுமுதல் குலோத்துங்க வளவனும் செங்கோல் கொண்டு உலகையோம்பி இன்புற்றிருந்தனன். முன் சோழன் தந்த அரசுரிமையை அவன் மைந்தனுக்களித்த அம்பலக் கூத்தனும் மன்னவனுக் குறு துணையாயிருந்து புலவர் வாழ்த்த வாழ்ந்திருந்தனன்.

ஆலூராங்கப் படலம்.

மாத்தி ரைப்பொழு தாயினு மனமொருப் படவித்
தாத்தி ரிக்கணிற் றலம்பல நதிசிவ மூர்த்தங்
கேத்தி ரத்துலா வரனறும் புனிதமன் கெழுமக்
காத்தி ரம்படைத் ததிற்பய னெனுமறைக் காதை. (1)

சூலை நோய்விடச் சமணுறு பொய்ந்நெறி துறந்தோன்
மூல வோலையின் வன்பினு லடிமையா முத்தன்
ஞால மீன்றரு ளம்பிகை யருளிய ஞானப்
பாலை யுண்டவன் பாடிய தலம்பல வதனுல். (2)

மாட நீடிய கோயினுன் மணிமுத லளவிற்
பாட லாற்பல தலமுலாய்ப் பற்றெலா மொருங்கே
வீட லாற்பரஞ் சோதியா யிலிங்கமா யெவெண்
காட னுரெதா லடைந்தன ரழிவறுங் கதியே. (3)

குருந்த நீழலிற் குருவரு ணிறைந்தபின் கொற்கை
யிருந்த மன்னக நின்றெரீஇப் பலதலத் தெழுந்த
மருந்தை யுண்ணினை தழுதழு தவன்றிரு வடிவாய்ப்
பரந்த சோதியிற் கலந்ததெத் தவமதைப் பண்ணல். (4)

நன்றெ னத்தல யாத்திரை நாடிய கூத்த
மன்ற னக்கிறை யாங்குலோத் துங்கனு மாணன்
முன்றெ ருட்சொலை யோதிமற் றவன்விடை மொழியாற்
சென்ற னன்பழு வடியவர் நடந்துபின் செல்ல. (5)

பங்க மில்லரும் பெண்ணைநிக் கிலமெறி பாலி
துங்க பத்திரை நருமதை கிருட்டிணை யமுனை
தங்க ளாற்றவ ரெவர்க்குமீங் கருள்செய்வோன் றன
வங்க மாகிய பயனெனுஞ் சானவி யாறே. (6)

சொன்ன விக்நதி யுபநதி யுளவெலாந் தோய்ந்து
பொன்னி னல்லற மிறந்தவர் தங்கடன் புரிந்தங்
கன்ன பூரணி வாமபா கத்தம ரையன்
சன்னி தானமுற் றருச்சனை மலர்களாற் சாற்றி. (7)

அத்த மத்தகங் கூப்பிகின் றகங்குழைந் துருகி
யுத்த ரத்தபி முகத்தனாய்க் கைலையை யுகந்து
சித்த முன்னுபு துதிபல பாப்புனை சீர்சால்
புத்த கக்கர முடையனாய் மீண்டனன் புலவன். (8)

இடையி டைப்பல வூர்த்த முந்தலங்களு மிறைஞ்சி
மிடைபொ தும்பர்பூத் தேனெனும் பொன்னிகால் விரைந்து
மடையு டைத்தெழும் பண்ணைகண் மலிதருந் தில்லை
யடைய வந்தனன் புவனைபுக் கிருந்தன னண்மி. (9)

வேறு

பத்திசைப் பாட லுருதவா வூருட் பசுபதீச் சுரந்துதி நாவென்
றித்துதி புரியு மாளுடைப் பிள்ளை யின்றமிழ்ப் பாடலாற் சிறந்த
நத்தமின் றடைவ லின்றெனு மறிவு நாடமற் றரனரு டிரோதை
பொத்திய தென்னத் தமமுற வருணன் போர்த்தனன் குடக்குடைப் புணரி. (10)

எடுத்தெடுத் திளைத்த பவமெலாஞ் செய்த விருவினை யொப்புமும் மலமும்
விடுத்தெழும் பாச மெனவெழுந் துதய விரோசன ஞானமொத் திருளை
கெடுத்தொரா யிரங்கை யாதவப் புத்தேள் கீழ்கடற் றோன்றுமுன் மறைவாய்
மடுத்தவர் கரமுங் குமுதமுங் குவிந்த மலர்ந்தன புலவன்கண் மரையும். (11)

உணர்ந்தவின் மயனீத் திறையுளி வெண்ணீ றணிந்தெலிற் செயுங்கடன்
முடித்து, கனம்படர்ந் தலவி சூன்முதிர் சோலைக் கண்மல ரிடையடை
டந்து, கனையுறு துயங்கி கருவுயிர்த் திருந்த நாகிளம் பேடையைச் சுரும்
பர், மனையொடு சிறகா லணைத்திதங் கூறி மதுகர மூட்டுதல் கண்டான். (12)

பூந்தரு வரும்பு கட்டுடைந் தலரப் புட்குலம் படிந்துறும் பசுந்தேன்
மாந்திநின் றெழுந்து களிமிகக் கைவேன் மன்னவ ரரங்கமின் றறிதி
நீந்தமிழ்ப் புலவ வென்பது கடுப்பச் சிறுமிடற் றுலொலி செய்வ
மாந்தளி ரருந்திக் கூங்குயில் விரைந்து வம்மென விளிப்பது மான. (13)

அத்தலை யொருசார் பூப்பிளந் தாவி கமழ்தரு முட்புறக் கனியைக்
கைத்தலந் தருதி யென்றொரு மந்தி கடுவனோ டேவக் கணங்கு
நித்ததைப் பறித்துச் சுளைபல வகிர்ந்து தேங்கனி யுண்கெனப் பெண்வாய்
வைத்தக மகிழா வூட்டிநின் றோடும் வானரத் தாடலைக் கண்டான். (14)

சண்பக மல்லி முல்லைமந் தாரந் தாதளாய்த் தென்றலங் காலோர்
நண்பகங் கருதி யெம்முட னுதித்த நற்றமிழ்க் கலையெலாம் பயின்ற
பண்புடைக் கவிநீ யயர் வயர்த் தேகற் பார்க்கில னெனப்பரி வுளதாய்க்
கண்படா தருவாய் வீசுமென் காற்றைக் கண்டன னடந்தனன் கணத்தே. (15)

வஞ்சநெஞ் சகத்தோ ருளமெனக் குவளை மலர்முகங் குவிந்தன வாசக்
கஞ்சமக் கவியி லகமென மலர்ந்து காண்பன வலம்புரிச் சங்கம்
விஞ்சுதண் டடத்து மேலெழு மலைக்கை வீசுநுண் ளிநெறி தெளித்தே
யஞ்சலில் குந்தர் செலவிலாந் துகளை யடக்குவ கண்டுவந் தனனால். (16)

தற்றொடர்ந் துறுவோர் முன்செல வுள்ளத் தருக்கறு பாவலன் படர
விற்செயு மணியாற் சித்திரம் பொறித்து வெண்சுதை தீற்றிய வெயிலார்
பற்பல மாடத் தும்பரி லியாத்த பதாகைகட் படமெனுங் கையால்
விற்பன வருக வரங்கமின் றென்ன வீசுவ வழைப்பன மான. (17)

தத்துதண் ணீரிற் படிந்துடை யுடுத்து தவழொளி மணியணி புனைந்து
சித்திரம் புரையு மங்கைய ருயிர் போற் றிகழ்தருங் காதல ரணவப்
பத்திர மணக்கு மலரணி மாலை பசுபதீச் சுரரவர் பாகம்
வைத்தருண் மங்க ளாம்பிகைக் கென்ன வருபவ ரன்புகண் டுவந்தான். (18)

கண்ணகன் றாழ்ந்துட் கிடையமைந் தார்ந்த கவிப்பொருள் சொல்வது செவி
வா; யுண்ணநின் றகத்துட் டோன்றிய வைய முசாவுவர் பாலெழு மோதை
தண்ணுமை முழக்கம் வீணையி னுதம் சங்கொலி மங்கலத் தரவம்
பண்ணொலி யகலா மறுகினைக் கூத்தப் பாவலன் கண்டுகண் டுவந்தான். (19)

அள்ளிலை நெடுவே லறுமுக னக்கா லரசனு முசுமுகற்களித்த
வெள்ளியங் கிரிவாழ் நந்தியங் கணத்த வீரர்த மருமர் பான்ற
தெள்ளிய செங்குந் தப்பெயர் வாய்ந்த செல்வரோர் காரணங் கருதி
யுள்ளுமா வரங்கங் கூடமெண் டபங்கண் ணுற்றனன் வியந்தன னுளத்தே. (20)

மின்னகு மிந்து காந்தவெண் சிலையால் விளங்கின வடித்தல மதன்மேல்
பொன்னெனத் திரட்டிச் சித்திரித் ததன்மேற் போதிகை யதனதன் முகட்
டிற், பன்னெடுந் தம்ப நிறுவிமற் றதன்மேற் பரப்பெலா மரகத மணியே
மன்னிய கோல மிமைத்தொளி காந்து மண்டப முளததன் வாசல். (21)

பாசொளி கான்ற காணிறீஇ யதன்மேற் பாங்கரம் பன்னம்வேய்ந் துயர்ந்த
தேசொளி காலு மொன்பது மணியாற் குயிற்றிய சித்திரப் பாவை
பேசுத லிலையக் கண்கவர் வனப்பிற் பிறங்கிடப் பீடுயே ரணியான்
மாசிலாப் பந்த ரலர்பல தொடுத்த மாலைக டேங்குவ மருங்கே. (22)

புலியடிப் பைங்காய்க் குலையொடு மரம்பை பொலிவன தெங்கிளங் காய்கண்
மலிதருங் கமுக மரனிரை நிரையாய் வயங்குவ வட்டமங் கலங்க
ணில்வுவ வாங்கே பகல்விளக் கேந்தி நிற்பன பற்பல பதுமை
புலியணி கொடிக ளாடுவ வந்த புகலரும் பந்தரின் மாதோ. (23)

அத்தகு கோயி னுப்பணி லரிதாங் காதனம் விளங்கிய ததன்மேற்
சித்திரப் பட்டாற் செய்யணை சாரத் திகழ்ந்ததத் தேசகத் திருப்ப
சத்தமா வடியே கம்பர்வாழ் காஞ்சித் தொன்னக ராண்டவாண் டவனை
முத்தவெண் சிவிகை யேந்தினர் வருகை முந்திய காட்சிகண் டுவந்தான். (24)

கச்சிமா நகரஞ் சூழ்வரக் கிடந்த விரிஞ்சையா ளேந்தலுங் காம
ரச்சிவ புரமா ளரசனுந் தொந்தி யாண்டகை தானுமம் மறுகி
லுச்சித மான சோளிங்க புரமா ளொருவனு மந்நவர் புரங்க
ணச்சிய நாடாள் பவரெலா முறையி னுடினர் சூழ்வரக் கண்டான். (25)

அன்னவ ரணியிற் பல்லிய மொலிப்ப வாசறு சங் கொலி விம்ம
முன்னநன் கமையு மரங்கமண் டபத்துட் புகுந்தனன் முறைமுறை யன்
னோர், மன்னியங் கேத்திக் கைத்தலங்கூப்பி வாழ்த்தந மாண்டவ னினிதாம்
பொன்னணை யிருந்தான் முருகனைப் போற்றிப் புங்கவர்கோமகற் பொருவ. (26)

சாரணை யமர்ந்த வாண்டவற் கொருசார் தனிக்குடை நிழற்றவங் கிருபால்
பூரண கும்ப மெனவடி பரந்து பூரித்துத் ததும்பி யண்ணுந்து
வாரணி நகிலச் சைலநல் வாச மலரணி குழலலங் காரஞ்
சேரணிப் பொறையா லசையிடை மடவார் திருத்தகு சாமரை யிரட்ட. (27)

மாவரங் கணிமுன் சங்கொலி தூதர் வந்தனர் வணங்கியெம் மைய
காவல னுறந்தைப் பதியரங் குறுநங் கவியென முன்னர் யாங் கேட்ட
நாவல, னுற்றா ணீண்டையா னென்ன நவின்றனர் கொணர்கென நவின்றான்
சேவலங் கொடிய வீரமா தேவச் செல்வனுங் கச்சியஞ் செம்மல். (28)

ஆதுவ ரோடிப் புலவர்தங் கோனைத் தொழுதெம னையாநன் னெறிநாற்
போதக வாலூர்ப் பேரரங்கத்துப் புதியதோ ரிந்நா ணின்னை
யாதரத் தோடுங் கச்சியா ளண்ண லழைத்தனன் வருகவென் றுரைத்தார்
சீதமா நதிநீ ராடிய புனிதன் றிருமுனங் கண்டுகை தொழுதான். (29)

வேறு

மூதறிஞன் றாழ்ந்துதொழ வாழ்த்தியருண் முந்து
நீதமொழி தந்துகை யமர்த்தவனை நேர்ந்தா
னோதவனி ருந்தபின ரும்பருறை கச்சி
நாத னருள் கூரவொரு நாட்டரச னோதும். (30

ஆண்டவவி கத்துளவ னந்தகுல மக்கள்
பூண்டனர்கள் சீர்த்திபுல வோர்கவிதை யாலே
மாண்புலவர் கோளரிவ யங்கவுந மக்கோர்
நீண்டகுலச் சீர்க்கவிதை நேரகில மென்றான். (31)

என்னவிதை யானுமுன மெண்ணியது முண்டா
னன்னரென முன்னருறு நாவலனை நோக்க
வன்னவனெ ழுந்துதொழு தன்பொடெதிர் நின்றான்
முன்னவனு மற்றவனை நோக்கிமொழி கின்றான். (32)

சிந்தலைய கங்கைமர பாளர்பெறு சீரை
நிந்தைதவிர் வன்னியர்க ணீள்புகழை யேரா
லுந்துசிலை யாலெனவு மொப்பவுரை கம்பன்
தந்தனனொ வொன்றுமெழு பத்துசெயு டானே. (33)

தாயெனு நலெளவை தமிழ்த் தாரணியி லன்றே
யாயிர குலத்தவரை யாயவரையு மற்றே
வேயபுக ழுன்னியிரு நூலினையி சைத்தா
ளாயினம தீட்டியினை யாரறைவ தம்மா. (34)

மற்றைமர புற்றவரும் வண்ணமுறு காதை
பெற்றனர்க ளென்னுமுரை பேசுமுல கத்தாற்
கற்றகவி வாணவுள கட்டுரையி னாலே
யிற்றைபிர பந்தமுரை யென்னகவி கூறும். (35)

கச்சிநக ராண்டகைநின் கட்டுரையு நன்றே
நச்சுபுக ழுள்ளன நவின்றுநமை நாமே
மெச்சுபொருண் மேன்மையல வேறொருவர் கூற
லுச்சிதம தாமென வுரைக்கவவ னோதும். (36)

தேடியடை செல்வமென நம்மரபின் சீரை
நாடியுரைக் கிற்பவல ரல்லர்பிறர் நாமே
கூடியவர் தம்மையுரை கூறுகென வேலேம்
நீடுபுக ழோய்நமரை நீமொழிக வென்றான். (37)

ஆறுமுகன் றம்பியரென் றுருநமை மிக்குக்
கூறவொளிர் வேன்முருகன் கோதில்கதை கூறுந்
தேறவது சாலுமெனக் கூத்தனுரை செய்தா
னேறுபுகழ்க் கச்சிபுரப் போனுமிதை யேலான். (38)

வேறு

தனித்ததொரு பிரபந்த நமர்க்கொன்று சாற்றுகென
நுனித்தவயி லோற்கிளையோ ரிவர்க்கென்ன நூனவிலி
லினித்ததெனப் பொருணச்சி யிசைத்திடுவார் போலாமற்
குனித்தலறு சிறப்பினதாய் கூரமைப்பை யுறல்வேண்டும். (39)

மற்றூர்க்கு மில்லாத வான்புகழெய் துதற்கிடனாய்க்
கற்றோரு மற்றோருங் கண்டோருங் கேட்டோரு
மிற்றென்றுங் காணாத விரும்பூதென் றுள்ளுன்னத்
தெற்றென்ன விளக்கமுறு தெய்வவரு டான்வேண்டும். (40)

என்றினைய தன்னிதயத் தெண்ணியவப் புலவர்பிரா
னின்றளிர்மா வடிக்கச்சிக் கிறைவகுலச் சீரோதின்
முன்றருமப் பரிசெற்குத் தரநும்மான் முடிவதல
வென்றனனங் கவன்கேட்டு வெறுத்துரைப்ப வெழுந்தனனே. (41)

பரிசுதர நுமக்கியலா தெனப்புலவன் பகர்ந்தமொழி
கரிசன்றே நம்மவருக் கெனப்பெரிது கறுவினரா
யரியெனவார்த் தென்மொழிந்தா னவாவென் றவையேச
வெருவிமதி தவழ்மாட மிளிர்புவனே புக்கனனே. (42)

குலநலத்தை வேண்டியசெங் குந்தரெலாங் கூடியுநங்
கலைநலத்தை யுணராரென் கருதுவதென் னெனமேரு
மலைநலத்தை யில்லாக்கி மாற்றவர்கட் புரமெரித்தார்
தலைநலத்தைக் காணவெழுந் தக்கோனும் புறம்போந்தான். (43)

சில்லோர்சொல் சொன்மறுக்கிற் றீருமுறை யுண்டெனிற்
பல்லோர்சொல் சொன்மறுக்கிற் பகையன்றி வேறென்னும்
வல்லோர்க்கு நாமுமொரு மாற்றுனெ னப்பொருவோம்
நல்லோர்கள் குலமக்கள் பகைவரலர் நமக்கென்னும். (44)

சவைநோக்கு முறைமறுத்தோர் தண்டிப்பரிது திண்ண
மெவனோக்கிச் செல்வமென வெண்ணியெணிப் புலவர்பிரா
னவை நோக்கார் நாடாத விடஞ்சார னலனென்று
தவனோக்கி வந்தோனுந் தன்னுள்ளே யாய்கின்றான். (45)

கிள்ளியினு டாண்டுகவி கேதனத்தைக் கொண்டிடுநாட்
டெள்ளுமறை யவர்குலத்தான் றேசகத்தா னுபகாரி
வள்ளலெனுங் கொடையுடையான் மந்திரியா யிருந்தவனிப்
பள்ளியுளான் கேண்மையினான் பாலடைவ னெனத்தேறு. (46)

கைவரையான் மாத்திரையைக் கணித்துகணித் திருக்காதி
மெய்வகையா மாரணஞ்சொல் வேதியர்கண் மறுகேகி
யைவகைய வேள்வி செயுஞ் சோமாசி யாண்டான்மை
தைவருமா ளிகை நோக்கிச் சார்ந்தவனைக் கண்டனனால். (47)

பண்டெடுத்த வைப்பென்னப் பாற்கடலைக் கடையாமற்
கொண்டெடுத்த வமுதென்னக் கூத்தனெனும் பாவாணன்
முண்டகப்போ தெனவலர்ந்த முகம்பனிபெய் காலத்தே
விண்டலர்ந்த தெனவிருப்ப வியந்தானீ தோதுவனால். (48)

பாப்புனையும் புலவர்சுகம் பஞ்சரநின் றுரையாட
யாப்பதிலோ ரளைமறிபாப் பதின்மறுக்கு மாசுகவி
நீப்பரிவின் வரலறிந்தே னெஞ்சகத் தஞ்சலையென்று
மாப்பெரிய தனதகமா மாளிகைபுக் கமரென்றான். (49)

கவளமிடு களியானை காத்தவனு னன்மறையோன்
றவளநிறத் தவளருளைச் சார்ந்தவனெஞ் சுண்மகிழ்ந்தே
யுவளகத்தி னீராடி யறுசுவைய வுணவருந்திப்
புவனைவருங் காரணத்தைப் புகன்றனனந் தணன்வியந்தான். (50)

கறுத்தார்க ளவ்வேலை கடையனல்போ லவையுள்ளார்
மறுத்தானஞ் சொற்கூத்தன் மதியானுய்ப் புறத்தகன்றான்.
சிறுத்துபுக முரையென்ன நேராரி னிங்ஙைத நிலை
பெறுத்தானைக் கோறற்குப் பிழையாது கொணர்கென்றார். (51)

தண்டஞ்செய் வல்லுனரைச் சவையேவ விரைந்தவர்கள்
கண்டஞ்சேங் கொணர்கிற்பேங் காண்மின்க ளென்றுநூ
ரெண்டிக்குந் தேடியலுத் தெழிற்புவனை யந்தணன்பா
லுண்டென்ப தறிதாலு முறுசினத்தா ரவணுற்றார். (52)

காலன்றன் றூதுவரோ கடல்கடைய மூண்டெழுந்த
வாலந்தா னிதுவேயோ வந்தோவிக் கொடியவர்கண்
மேலையுளுற் றியவினைதான் மீண்டிம்மை யடைவதெனச்
சீலமுளா னடைக்கலமாச் சேரில்லஞ் சூழ்ந்தனரால். (53)

தாளாள ஞடோறுந் தவவேள்வி முறைசெய்யுங்
கோளாளன் றீதறியாக் குலமறையோ னென்னென்ன
மாளாத வசைதருவான் மரபிட்ட கட்டளையைக்
கேளானை விடுகென்றார் கேட்டைய னுட்புகுந்தான். (54)

அடைக்கலமாய் வந்தானிவ் வரும்புலவ னன்னவர்கள்
கடைக்கனலி னிற்கின்றார் காலமிலை வேறுரைக்க
நடக்குமொரு செயலுமில நம்மகனை யவனுக்காக்
கொடுக்குமதே துணிபென்னக் குறிகொண்டான் மறை யோனே. (55)

அருந்ததியேய் மனைக்கிழத்திக் கவர்வந்த செயலோதி
மருந்தனையாய் நீயுன்றன் மகன்றன்னைத் தருகுவையோ
பொருந்தவரு மடைக்கலத்தைப் போவென்னச் சொல்குவையோ
விருந்தமன மேதென்ன வென்செய்வாள் கற்புடையாள். (56)

நெறிமாறிச் சென்றவர்க்கு நிரையமெனல் கண்டனமால்
குறியாது நம்மகவைக் கொடுத்துமென வொருப்பட்டா
ளறிவாளன் றிரையிட்ட சிவிகையில்வைத் தருமகனை
தறுகண்ணு ரிடைதந்தான் றங்கினர்கொண் டவைசேர்த்தார். (57)

திரையிட்டுக் காத்துவரச் சிவிகையொரு பெருமைத்தோ
வுரையிட்ட நூற்சொல்லாற் கெனச்சொல்லியுண் ணேக்க
புரையட்ட மறைவல்லோன் புத்திரனு வது நோக்கி
நிரையிட்ட வவையுள்ளோர் நெஞ்சமருண் டாய்கின்றார். (58)

கூத்தனைத்தா ரான்புவனை யந்தணன்றன் குலக்கொழுந்தை
யீத்தனனு மென்றக்கா லவன்பெருமை யெணியன்றே
மாத்தவத்தோ னுளக்கிடக்கை மற்றறிவா மென்றுஆர்
சேர்த்தவராங் குள்ளார்தஞ் சினந்தணிந்து செப்புவரால். (59)

அந்தணனைக் கொடுவெம்மின் கூத்தனொடு மென்றேவ
முந்தேவ லாளர் சிலர் முதுமறையோன் றனைச்சார்ந்து
வந்தவினை யுரைப்பவவர் வந்தவரோ டவையடைந்தான்
சிந்தையினி லஞ்சலிலாச் செம்மல்கவிச் செல்வனொடே. (60)

மற்றவரை வரவேற்ற மாவவையின் றலைவனினைப்
பற்றுபுல வர்க்காகப் பரிந்தீன்ற மகற்றந்தாய்
கற்றமறை யோயெதற்கோ கழறுகவென் றலு மறையோன்
குற்றமறு புலவருளங் கோணுதல்செய் யாரெவரும். (61)

உள்ளமகிழ் வொடுகவிஞ ருரைபெறுத லேசிறப்பாங்
கொள்ளுபொரு ளேதென்னக் கூத்தனுளக் குறிப்பறிந்து
வள்ளன்மை யுடைநீயிர், வழங்கிடி நுஞ் சொன்மாறுன்
றெள்ளுதமிழ்ப் பிரபந்தஞ் செப்புவனென் றறைந்தனனே. (62)

சேர்ந்தசவை யுடன்பாட்டாற் சீர்காழி நாடாளி
வார்ந்தபுகழ் நங்குலத்தின் வண்மைசொலற் கென்வேண்டு
மோர்ந்ததமிழ்ப் பெரும்புலவோ யோதிடுக வென்றனனுற்
கூர்ந்தபெரு மகிழ்வோடு கூத்தனிது கூறினனே. (63)

பொருள்வேண்டிப் பாடினர்முன் புலவரெலாம் பிரபந்த
மருள் வேண்டிப் பாடினர்மெய் யடியரெலா மரனடிக்கே
மருள் வீரென் றோதுகிலன் கேட்டதும ருதெற்குத்
தருவீரே னூலொன்று சாற்றவொரு தடையாமோ. (64)

என்றபொழு தெல்லோரு மெதுவேனு மீயவலே
நன்றறைதி யெனப்புலவ னல்லவிலக் கணமுடையோ
ரொன்றெனத்தாய்க் கொருபேறு யுற்றோரா யிரத்தெண்ம
ரின்றலையா சனத்திரத்தப் பாவாடை யதுவிரித்தே. (65)

பாடவலேன் றருவீரே லருளானம் படையாய
பீடுடைய வீட்டியெழு பத் தென்னும் பிரபந்தம்
நாடரெலாம் வியப்பெய்த நகுநிலவுஞ் சூரியனு
நீடியமண் ணுளவரையு நிலையாகு நினைமி னென்றான். (66)

வேறு.

உயுமுயிர்த் தலையீகென்ற வுரையினைக் கேட்டோ ரெல்லாஞ்
செயுந்திற னறியாராகிச் செப்பிலா ரூம ரொப்பப்
பயன்பெற நாமுன்னீது மற்றையோர் பரிசெற் றென்று
வியன்கட லொலி யோய்ந் தென்ன விளம்பில ரொன்றுந் தோ
(67)

என்னையீ தென்னை யார்க்கு மினிதுயி ரென்ப தோரா
தின்னணம் பரிசு வேண்டு மியல்புளா ருலகி லுண்டோ
பொன்னுள மணியுமுள்ள பூமியுமுள்ள வென்னைப்
பன்னின ரெழுதிவைத்த பாவைபோ லாயினூரே. (68)

பாவல னவையை நோக்கிப் பார்த்தனன் பயந்தீ ரென்னே
நாவுளீ ரொன்றுஞ் சொல்லீர் தலைதர நடுக்கமுற்றீர்
சாவதற் கஞ்சார் நந்தந் தலைத்தலை முறையா ரென்கை
நீவிர்நன் கறியீர் போலு நினைவுறுத் துவனுன் கேண்மின். (69)

முன்னொரு பொழுது வல்லான் முடித்தலை கொணர்து மென்று
பன்னிரு வீரர் தங்க ளுயிர்பொருட் படுத்தா தாரு
முன்னவு முடியா வன்றே னெயிலினை முற்றி வென்று
ரன்னவன் பன்னி வேண்ட வவன்றலைப் பரிசீந் தாரே. (70)

குமணனு நங்கோன் றம்பி யமணனுற் பரிசு கொள்வா
னமுதவாக் குடைய கல்வி யாளனுக் கரிய சென்னி
சமதமென் றீந்த தோரீர் சங்க முள்ளீர்க ளின்ன
நமரிசை யளவிலாத வுள்ளன நவிலற் பாற்றோ. (71)

இவறன்மை யில்லாக் குந்த ரிருங்குலம் வந்தோர் நீவிர்
தவமன தொன்று பட்டுத் தலைதரத் தக்க தாகும்
பவமெலாம் புகழு டம்பாய்ப் படைத்திட முயலு மக்க
ணவமென வுயிரை நச்சும் பொருளென நாடா ரன்றே. (72)

தரவுவப் புடையீ ரெல்லாந் தலைதனை யுறந்தை வந்து
திரனிரை யாகத் தம்மின் கன்னிமா மதியி னேரும்
பெருகுமா நவமி யீற்றிற் பேரவை மன்னன் காண
வுரமுளீ ரென்றான் கூத்த னுறுதுமவ் வணமே யென்றார். (73)

மன்னிய வவையோ ரிந்த வாய்மையை யேனை யோர்க்கும்
பன்னுவான் றந்த நாட்டைப் படர்ந்தன ரெவருமாகப்
பொன்னெயிற் புவனை புக்கான் புலவனைக் காத்த நூலோன்
சென்னியை யுற்றுக் கூத்தன் செப்பின னிகழ்ந்தவெல்லாம். (74)

பேரவை தலைத ரற்குப் பெட்புட னிசைந்த வீரச்
சீரிதை யறிந்த வண்ணஞ் செப்பினேஞ் சேய ருந்த
ரோரிய லாகிச் சென்றா ருறந்தையா னவையி லிட்ட
சோரிவீழ் தலையி லாஞ்சிங் காதனச் செயலைச் சொல்வாம். (75)

ஆவூரரங்கப்படலம் முற்றிற்று.

ஆக படலம் 24-க்குச் செய்யுள் 1168.

இப்பால் சின்னாள் கழித்துப் புவியரசாகிய குலோத்துங்க மன்னன் போற்றும் கவியரசாகிய அம்பலக்கூத்தன், மூர்த்திதலம் தீர்த்தங்களை முறையே வணங்க எண்ணி அரசனுக் கறிவித்து, அன்னேன் உடன்பாடு பெற்றுஆன்றோர் சிலருடன் ஓர் நன்னாளிற் புறப்பட்டு வடநாடுற்று, ஆண்டுள்ள காசியாதிய தலங்களைத் தரிசித்து, கங்கையாதிய நதிகளில் நீராடித் தென்றிசையடைந்து, தில்லை முதலிய தலங்களைத் தரிசித்து, ஆளுடைய பிள்ளையார் பாடல் பெற்ற ஆவூரை அணுகினன். ஆங்குக் காஞ்சிநாடாதிய எழுபத்தொரு நாட்டவரையும் ஓர்காரணங்கருதி சீர்காழி நாட்டாரால் சேர்க்கப்பெற்று தேவசபைபோல் சீர்பெறவிருந்த அவைத்தலைவருக்கு அம்பலக்கூத்தன் ஆங்குற்றதை அறிவிக்க அத்தலைவரும் ஈண்டழைத்து வம்மின் எனக் கூறினர். அவ்வாறே சிலர் சென்றழைக்கக் கூத்தன் சென்று சபையை வணங்கச் சபையோர் வரவேற்று முகமன் கூறி இருக்கை யீந்தனர். அப்போது ஓர் நாட்டுத்தலைவன் அவைத் தலைவராகிய ஆண்டவனைப் பணிந்து நின்று, ஐய! நந்தமிழகத்தில் பல குலத்தினரும் தந்தம் குலச் சிறப்பைக் கூறும் பிரபந்தங்களைப் பெற்றிருக்கின்றனர். நங்குலத்தவராகிய இப்புலவர் கோனிருக்கவும் அதனைப் பெறாதிருப்பது ஏனோ என்றனன்.

இதைக் கேட்ட அவைத்தலைவர் என்னுள்ளமும் அதனை எண்ணியதுண்டென்று அம்பலக் கூத்தனை நோக்கிப் புலவர்பெரும! கங்கை குலத்தாரையும் வன்னியரையும் சிறப்பித்து ஏரெழுபது சிலையெழுப தென்னும் பிரபந்தங்களைக் கம்பனும், பணவிடு தூதெனவும் ஐவேலசதியெனவும் எட்டியரையும் யாதவரையும் சிறப்பித்து ஔவைப்பிராட்டியாரும் பாடியிருக்கின்றனர். மற்றும் பல குலத்தவரும் தங்கள் தங்கள் குலப்பிரபந்தங்களைப் பெற்றிருக்கின்றனர். ஆதலின் நம் சிறப்பை விளக்கும் பிரபந்தமொன்று நீரே பாடித்தரல் வேண்டுமென்றனர். இதைக் கேட்டுக்கூத்தன் ஆண்டவ! நம்மை நாமே சிறப்பித்துக் கூறுதல் நேரிதல்ல பிறர் கூறுதலே சிறப்புடையதாகும் என்றனன். எனவும் நம் குலச்சீரை முற்றும் நன்கறிந்து பிறர் கூறவும் இயலாது நாமும் அவரை ஓர்பிரபந்தம் பாடித்தருக வென்று கேளோம் ஆகையால் நீரே சொல்லுக என்று ஆண்டவன் கூற ஐய! அறுமுகப்பெருமான் தம்பியராகிய நவவீரரையும், அவர் வழிவந்த நம்மவரையும், சிறப்பித்துக் கூறும் கந்தபுராணமொன்றே போதுமானதல்லவோ என கூத்தன் கூறினன்.

அதை ஆண்டவன் ஏற்காது நம்மவருக்காக நீர் ஒரு பிரபந்தம் பாடித் தரல்வேண்டும் என்று வற்புறுத்தப் புலவர் பெருமான், பொருளை விரும்பிப் பாடும் நால்போலன்றி யாவரும் மதித்து அதிசயிக்கத் தகுந்த தெய்வீகம் விளங்கப் பாடுதலே சாலச் சிறந்ததெனத் தன்னுள் எண்ணி, சக்கிரவர்த் தலைவ! நான் பாடும் பிரபந்தத்துக்குப் பரிசுதர நும்மால் இயலாதே என்றனன். இவ்வாறு சொல்லக் கேட்ட ஆண்டவனும் அவையுள்ளோரும் சினந்து வெறுப்புற்று, பரிசுதர நம்மனால் இயலாதென்ற சொல்லானது நம் குலத்துக்கே நிந்தையல்லவோ, என்று ஆரவாரித்து வைதனர். கூத்தன் என் செய்வரோ என அவைக்கஞ்சி அவர் காணாதவாறு ஆரூரை யடுத்த புவனையென்னும் ஊரில் தனக்கு மிக்க நண்பனாகிய சோமாசியாண்டானென்னும் ஓரந்தணச் செல்வனிடம் அடைக்கலம் புகுந்தனன்.

இவணிங்கிருக்க ஆரூரவையோர் இக்கூத்தன் நம் சொல்லை மறுத்துரைத்ததுமன்றி நம் குலத்தையே பிறர் நிந்திக்கும் இழிவையுண்டாக்கினான் அவனைக் கொலை செய்தலே தகுதி யென்று ஏவலர் சிலரைத் தேடிக் கொண்டுவருமாறு அனுப்பினர். சென்ற ஏவலர் பல இடங்களிலும் தேடிப் புவனையில் இருப்பதாகத் தெரிந்து சோமாசியாண்டான் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டவர்களாய் அந்தணா! நின்னிடமுள்ள கூத்தனை விடுக என்று நெருக்கினர். இவர்கள் எவ்விதத்தாலும் விடார் எனத் தெரிந்த மறையோன் தன்னொரு புதல்வனை மூடுசிவிகையில் வைத்து இதற்குள் கூத்தனிருக்கின்றான் எடுத்துச் செல்மின் என்று அவ் ஏவலரிடம் கொடுத்தனன். அவர்கள் அவையோர் முன் கொண்டுவந்து ஒப்பித்தனர். அவையோர் திறந்துபார்க்க அந்தணச் சிறுவனாயிருப்ப அறிந்து உள்ளமருண்டு அந்தணன் கூத்தனைத் தராமல் தன்மகனைத் தந்தானென்னில் அவன் அருமையுணர்ந்தவன் அவனன்றே ஆதலின் இதனை ஆராய்வோமென்று சினந் தணிந்து, அவ்வந்தணனைக் கூத்தனோடும் அழைத்து வம்மின் எனச் சிலரை ஏவினர். அவையோர் கோபந்தணிந்து அழைத்துவரச் செய்தமையை அன்னோர் புவனைக்குப் போயுரைக்க அந்தணன் கூத்தனோடு ஆரூரவையை அடைந்தனன். வந்த மறையோனை அவையோர் நோக்கி மறையோய்! கூத்தனைத் தருக என்று கேட்டால் நின் மகனை ஏன் தந்தனை என்றுகேட்க மறையோன் ஐயன்மீர்! கற்றறிந்த புலவரது உள்ளம் வருந்தத் தகுந்த செய்பவை எவரும் செய்யார்; அவர் மனமகிழ்ந்து பாடித்தர ஒன்றைப் பெறு சில சிறியது பிரபந்தம் பாடித்தர அவன் வேண்டும் பரிசை நீங்கள் தருவீராயின் உங்கள் எண்ணப்படியே பாடித்தரத் தடை சொல்லான் என்றனன்.

அப்போது சபையோர் உடன்பாடு பெற்ற சீர்காழி நாட்டுத் தலைவன் கூத்தனை நோக்கி நின்பாட்டிற்கு வேண்டும் பரிசுயாது? சொல்லுக என்றனன். அதற்குக் கூத்தன் ஐய! நீவிர் நான் கேட்கும் பரிசைத் தவறாது தருவதாயின் உங்கள் கட்டளைக்குத் தடையில்லை யென்றனன். அச்சீர்காழி நாட்டுத் தலைவன் புலவ! எதைக் கேட்பினும் அதைத் தடையின்றித் தருவோம் சொல்லுக என்றனன். எனலும் கூத்தன் எழுந்து நின்று அவையோரே! நல்லவனப்புள்ளனவாய் தாய்க்குத் தலைமக்களாயிருக்கும் நம்குலத்தோராது ஆயிரத்தெட்டுத் தலைகளை அரிந்தடுக்கிய ஆசனத்தின்மேல் இரத்தப்பாவாடையிட்டுத் தருவீரேல் மதியும் கதிரும் மண்ணும் உளநாள்வரைக்கும் நிலைத்திருக்கும் ஈட்டியெழுபதென்னும் பிரபந்தத்தை பாடுவேன் என்று சொல்லினன்.

இச் சொல்லைக் கேட்ட அவையோர் யாவரும் ஈதென்னை ஈதென்னை ஒவ்வொருவர்க்கும் தம்முயிரென்பது எதனினும் இனிதல்லவோ? இவ்வாறு பரிசுகேட்பாருமுண்டோ பொன்னேனும், பணியேனும், நிலமேனுங் கேட்கலாகாதா என்றிவ்வாறு தத்தமக்குள் பேசிக்கொண்டு, நாம் நமது தலைகளைத் தந்தாலும் அங்கங்கே யிருப்போர் உள்ளம் எவ்வண்ணமிருக்குமோ என்று ஒன்றுந் தோன்றாது திகைத்து எழுதிவைத்த சித்திரப்பாவை போல் அசைவற்று ஒன்றுஞ் சொல்லாது வாளாவிருந்தனர்.

இவ்வாறிவர்கள் இருப்பதை நோக்கிப் புலவர்பெருமான் அவையீரே! கேட்டதைத் தவறாது தருவோம் என்ற நீங்கள் தலைகளைக் கேட்ட பிறகு வாளாவிருத்தல் தகுமோ? தலைகொடுக்கப் பயமுற்றீர் நம்முன்னோர் சரிதங்களை நீங்கள் கேட்டறிந்திலீரோ! வல்லாளனென்றும் விக்கலன் தலையைக் கொணரச்சென்ற பன்னிரு வீரர் ஆருமணுக வொண்ணாது அவனிருந்த நீரகழி நடுவிலுள்ள அரண் புகுந்து அவனை வென்று, அவன் மனைவி அநங்கவல்லி வேண்டுகோளால் அவ்வல்லான் தலையை அவளுக்குப்பரிசாக அளிக்கவில்லையோ? நம் குலமன்னனாகிய குமண வள்ளல் ஓர் புலவன் பொருட்டுத் தன் தலையைக் கொடுக்க இசையவில்லையோ? இன்னம் நம்மவரால் இவை போன்ற செயல்கள் எண்ணிறந்தன நிகழ்ந்திருக்கின்றன ஆதலின்; நம் குலத்தவர் ஒருபோதும் தலைதரப் பின் வாங்கார் என்றனன்.

இவையனைத்தையுங் கேட்ட அவையோர் யாவரும் வீரங்கொண்டு மனமொருமித்துப் புலவரேறே! நீர் கேட்ட வண்ணமே ஆயிரத்தெட்டுத் தலைகளைத் தருகின்றோம் என்றனர். இவ்வாறு தருகின்றோம் என்ற சொற் கேட்டுக் கூத்தன் வருகிற கன்னி மாதத்தில் மகாநவமி நாளின் முடிவில் உறையூருக்கு வந்து ஆயிரத்தெட்டுத் தலைகளையும், குலோத்துங்க மன்ன

னது அத்தாணி மண்டபத்தில் ஆசனம்போல் அடுக்கி அதன்மேல் இரத்தப் பாவாடை யிடவேண்டும் என்று சொல்ல அவ்வாறே ஆகுகவென்று அனைவரும் தத்தம் இருப்பிடம் சென்றனர். கூத்தனைக் காத்த மறையோனும் புவனையைப் போய்ச் சேர்ந்தனன். அம்பலக் கூத்தனும் உறையூரை யடைந்து நிகழ்ந்தவை யனைத்தையும் அரசனுக்குச் சொல்லிக் குறித்த நாளை எதிர் நோக்கி யிருந்தனன்.

சிரச் சிங்காதனப் படலம்.

திருமலரின் பொகுட்டனைய லரசிருக்குஞ் செல்விவளஞ் சேர்ந்தவாரூர்
தருமநெறி பிறழாத வழிநிறுத்துஞ் செககுந்தர் தனிச்சங் கத்துட்
டெரு ளறிவோர் குலோத்துங்க னவைநடத்துங் கவியரசச் சிங்கங் கேட்ட
வரமதனாற் றாமடையும் பெரும்பேற்றை யுண்ணினையா மனமொத் தாரால். (1)

அயற்கணொரு கருமமுறார் தத்தமது நாடடைந்தா ரவையை நீத்து
வியக்கவவ ணிகழ்ந்தவெலாஞ் சொலக்கேட்டுக் கேட்டுபுகழ் வேண்டுமென்ன
கயற்கணிள வஞ்சியர்த மொருமகனை யதுசெயெனுங் கருத்த ரென்றாற்
செயற்கரிய செய்வரே பெரியரெனும் பெரியர் சொலுஞ் சிறந்த தம்மா. (2)

உலகனைத்துந் தந்தபரா பரைபாதச் சிலம்புமணி யொளியிற் போந்த
திலகநுத லாரழகிற் சிவநோக்கம் பாய்ந்தவர்பாற் செனித்து லாவி
பலவிளையாட் டாறு முகவ னுடனாடு காலையினம் பரையாற் றந்த
விலைய நெடுங் கையயிலை யேந்தியவன் றிருந்துபுக ழேந்தும் வீரர். (3)

காயசுரன் குருகுவரைக் குயிரீந்து பின்னவனைக் கதிர்வேற் கீந்தே
யாயிரத்தெட் டண்டமுமா ளசுரனொரு மகற்குதலை யளித்து மீண்டு
ஞாயிறிகற் கொடுஞ்சூரன் றலைதுமித்தவ் வரும் பெரிய ஞாட்பிற் செய்த
பாயிரமெத் தனையுரைக்க வேட்டங்கா வென்றிபுனை படைக்கை வீரர். (4)

ஆலங்காட் டரனோடு மிகல் காளி கைத்தாள மங்கை வாங்கிக்
கோலங்காட் டிடுபெரியர் விரதவரப் பிரசாதங் கொண்ட மன்னன்
பாலெண்டிக் கிறைவர்க்குந் தந்தலையீந் தவர் தலையாற் பணியச் செய்து
மேலியமன் வலிதொலைத்துத் தன்மகட்குக் கிள்ளைதரும் வென்றி வீரர். (5)

சந்தானக் கனிதாராச் சேரலனைச் சாடவவன் சரண்புக் குற்றுத்
தந்தவரு நறுங்கனியை யடைந்துவலா னெனுமசுரன் றலைது மித்து
மந்தார நீழலமர் மகபதிமாட் டெழுவிடங்கர் மகிழ வாங்கி
வந்தாரும் வாழ்த்துதிரு வாரூரா தியதலத்தில் வைத்த வீரர். (6)

நாரதனோம் பியசெந்தீ நந்துமுருகர்க்குடைகோட்டு மறியைப் பற்றி
பாரதிரத் தம்முன்னோ னூர்ந்துலவத் தந்தண்டம் பந்தென் றாடும்
வீரமுளோர் தம்மடைந்தோ ரிலம்பாட்டைக் கடப்பாட்டால் வீட்டு மேலோர்
காரனைய கொடைக்கையர் சிவன்மேவுந் தளியனைத்துங் காக்கும் வீரர். (7)

பூவினிடந் தனுர்வேதங் கைவந் தோன் வின்னாணிற் பூட்டி விட்ட
வேவிலகி னுந்தமது தலைதகரப் பழவினைவந் தேற்ற போது
நாவிலகா மாண்பாள ரற்புதங்கள் விளையவரு ணால்வர் சொன்ன
பாவிலகா நாவாளர் சரவணத டோற்பவர்க்குப் பத்த சீலர். (8)

தன்றருமக் கிழமைவழா வகைமாட்சி பெற்றியவச் சபையோர் சார்ந்த
தென்றருமா தெட்பகத்தன் னழுந்தணவா தேற்றவ்வா றியற்றக் கற்ற
மன்றருமக் குலவாண ரவையிலினு டலைகள்வரல் வரவென் றிட்ட
சொன்மறவா தவ்வவர்தந் தலைதரலே தலையென்னத் துணிந்திட் டாரால்.(9)

பன்மாலை பூண்டுநித மன்மாவிற் செம்மாந்த பரந்த பாரின், மென்மாலை
பெற்றாரு மிகபரத்தென் னாளிருந்துங் காய மாலைப், புன்மாலை குடம்பை
விடும் புட்பறந்தாங் கெனநினைந்தோர் வீரன் பொன்றாச், சொன்மாலை
யெங்குலந்தான் பெறச்சென்னி யீவனெனத் துணிந்தெழுந்தான். (10)

பிறந்தவுட லிறக்கவெனப் பொறித்தவய னேவர்க்கும் பேத மில்லா
னிறந்தவுட லிம்மணிற்கோ நாய்நரிக்கோ மூண்டெழுந்த வெரித னக்கோ
சிறந்தமற மிகமுளநா ளளவுமொளி நிலவுமென்றன் சிரங்கொய் கிற்பான்
மறந்துமிரே னென்றெழுந்து வாளேந்தி யொருவீரன் வந்தா னன்றே. (11)

நில்லாவிவ் வாக்கைக்கு நிற்கின்ற சீரெய்த நெடுநாட் செய்த, தல்லாதிப்
பிறவியிலே வந்ததல வித்தவமென் றறிந்தே னீது, கல்லாது விடுவதிலை
கைலாய பதப்பேறு காண்பே னார்க்குஞ், சொல்லாதென் றலையீவே
னென்றெ ழுந்தான் வாள்கொண்டோர் சுத்தவீரன். (12)

தற்கொலைசெய் மக்கட்டுத் தனிப்பேயா யலையண்டச் சுவர்க்குட் டாழ்ந்த
வற்கரிய நிரயமென வான்றோர்க ளறைந்துளர்ந மறிவன் பாங்கர்
சொற்கலையொன் றெழவேந்தித் தலைதந்து சீரெய்தித் துலங்கு மாறு
கற்கலைநீ நெஞ்சகமே யென்றெழுந்து சென்றானோர் காளை யன்றே. (13)

நாற்றனி சடக்குடிலாற் றோற்பையா லாரேனு நன்குற் றார்முன்
றேற்றமிகுந் ததீசிமுனி வரனல்லா லென்னவொரு தெளிஞன் வாளாற்
றோற்றமுறு மித்தலையீர்ந் தெங்குலத்திற் கெஞ்ஞான்றுந் தொலைவி லாத
ஆற்றமுறச் செய்வலெனா வாளூர் மண்டபந்தேடி யோடி னானால். (14)

சாவாத காற்போகாப் புனல்வேவாத் தலையென்னச் சாற்றி யென்று
மோவாத யோகியர் சொற்பொருளிதுவே யாமென்ன வுணர்ந்தே ஞரு
மூவாத மிக்கூற்ற நமர்நிலவத் துணிவுற்றேன் முடியைத் தந்தே
னுவாணற் கிதுபரிசென் றொருகுரிசி லவைநேடி நடந்தா னன்றே. (15)

நிலையாமை நோய் மூப்புச் சாக்காடித் தாற்காய நிலையா தென்று
தலையேறி யிசையுலவி நிலைநிற்பச் செய்தனனோர் தோன்ற லென்னுங்
கலையோதி னேனுங்கு நந்தமரு மிசையெய்திக் களிப்ப வென்றன்
றலையீயும் பெரும்பேறு பெற்றனனென் றொருவீரன் சவைக்க ணுற்ருன் (16)

வேட்டுவன்றன் பெடைகவரக் கண்டுவெந்த தூதுணம்புள் வேடற் கக்கான்
மூட்டுமெகட் டனலவிப்ப மூண்டெழுந்த தீப்புகுந்து முடிந்த காதை
கேட்டிருந்தே னென்னுமன் மானவனுய்ப் பூவுதித்தேன் கிளரிவ் வாளால்
வீட்டியென தொருதலையைத் தருவலென வெளிவந்தோர் வீர னின்ருன்.

(17)

பொய்யாமிப் புற்கலத்திற் கூனூட்டி யுடைபுனைந்து பொற்பூண் பூட்டி
மெய்யென்னும் பெயர்தன்னை யிட்டிருமாந் திருந்தமதி வீயி லென்னுஞ்
செய்யாமற் செய்நன்றி செய்யாம லீங்கிருப்பேன் செங்குந்தச் சி
ருய்யாநின் றுலகிருக்கத் தலைகொடுப்ப லென்றொருசே யோடி வந்தான். (18)

சத்தத்தாற் றலைதருவேன் றலைதருவே னெனுநியமஞ் சார்ந்தோ ரன்ப
னத்தங்கத் துறுப்பினிலொன் றொன்றீத னன்றல்ல நானென் சீர்த்த
வுத்துங்க மானவுத்த மாங்கந்தந் தென்மரபுக் குறுதி யீவே
னித்திங்க ணற்றிங்க ளென்றெழுந்தா னூரவைக்க ணெய்தி னுனல். (19)

தாஞ்சாக மருந்தருந்த லுண்டாங்கொ லென்றுலகஞ் சாற்று மாற்ற
மாஞ்சாலு மாயாத சீர்த்திதருந் தாவெனவென் மனமே சொல்ல
நான்சாகா வழியறிந்தே னென்றலையை யிவ்வாளா னறுக்கித் தந்தேன்
பூஞ்சோலை சூழா வூரெங்கேயெங்கே யென்ருன் போத முள்ளான். (20)

நத்தாலும் பேராழி வைப்புள்ளா ரயன்விதித்த நாளு லந்தா
லெத்தாலும் பிழைப்பரிதே யரிதென்னு மூதுரையை யேவ ரோரார்
செத்தாலு மவ்வீர சுவர்க்கர்க் கோர் விருந்தினனுய்ச் செல்வ னென்றோர்
கைத்தாங்கும் வாளுருவி வயுவீரன் றலைதுமிப்பக் காமுற்றுனல். (21)

நீதமண வூராளி யென்சொன்னு னஞ்சலவயி னோர்ந்த தென்ன, வோ
தெனமற் றொருவனவ னுற்றதுரை செய்தேக வுயிரீதற்கே, யாதரங்கொண்
டொருவன்கைச் சாயகத்தை விதிர்விதிர்த்தா னுர்த்துப் பொங்கிப், பூத
வுடம் பிங்ககலப் புகழுடம்பி னுடன்சுவர்க்கம் புகுவே னென்ருன். (22)

நான்செத்தால் வைகுந்தம் வைகுந்த மென்றவங்கோர் நம்பி சொற்கே
பாஞ்சசன் னியமுடையோன் பரமபதந் தருமென்றும் பாவான் மிக்கோர்
தான்சொற்பிர பந்தர்க்கென் வரவதுவே வரவென்றன் றலையைத் தந்தே
னுன்சற்று மனமிலையே னென்றொருசே யவைநோக்கி நடந்து போனான். (23)

கரணமெலாங் கடந்தோனுக் கரசனொரு துரும்பெவர்க்குங் கால னேர்ந்தான்
மரணமதே முன்னின்ற தின்றெனது சிரங்கொய்தால் வண்மை முற்றி
யரணமது வாம்வீரர் குலப்பிள்ளை யாய்ப்பிறந்தே னொரு லாவி
திரணமிது காண்மின்க ளென்றொருசேய் வாள்கொடுகெண் சிவக்க நின்றான் (24)

வேறு.

சொற்ற வெற்றித் திறல்வீரர் துணிபிற் காஞ்சி நாடாதி
யுற்ற வேழுபத் திரண்டு மொருங்கே குழுமி தந்தமக்குட்
சற்ற வீரங் கொண்டாலு ரேக வவரைக் கருவுயிர்த்துப்
பெற்ற தாய ரென்புரிவர் பெரிது பாவ மிதுபுகல்வார். (25)

தலைஞ்செ யருமை கண்டிருந்த தாயே நீயே காமாட்சி
சிவஞ்செய் யருளி னுன்பெற்ற சிறுவ னொருவன் றலைதரற்கே
நவஞ்செய் யவைக்கே சென்றனனெற் கார்தான் றுணைநீ நாடென்ன
வுவந்து நினைந்து நின்றிருந்தா ளொருத்தி யுறக்க முணவின்றி. (26)

அன்னையாகி மாவடிக்கீ ழமர்ந்த வெங்கள் பெருமானே
பொன்னை யனைய வென்மகனே போந்தான் றலையைத் தருபாக்கு
பின்னை யாரே காப்பவரெம் பெம்டா னேயென் றொருமாது
முன்ன நீயே போவெனத்தன் முன்றனைக்கை யேந்திநின்றாள். (27)

கரும மெவைக்கு முன்னேகுங் கயமா முகனே யென்றொருசேய்
தரும மகலா வெங்குலப்போர் சபைக்க ணேகித் தலைதரற்கே
துருமங் காயஞ் சென்றேங்கு சோலை யாவூர் சென்றனனம்
மரும மறியே னென்றொருதாய் மடியை யேந்தி நின்றனளால். (28)

முருகா வென்ற வொருமகட்கே முன்னங் கைதந் தருள்புரிவோய்
தருகா வலன்றன் மகட்கணவா தனையனொருவ னென்புரிவல்
பெருகா வீரா வேசத்தாற் றலையைத் தரவெற் பிரிந்தனனென்
னருகே னழுகே னென்றொருதா யோதி யுணர்வற் றிருந்தனளால். (29)

போக்கும் வரவு மில்லாத பொருளே யசர சரமெல்லாங்
காக்குங் கருணைக் கடலேமுன் கயத்தைக் காத்தாண் டசந்தடிந்தோ
யேற்குங் கவிக்கென் றலையீவே னென்றான் சென்று னென்விளையும்
பார்க்கும் பொருணீ யென்றொருதாய் பணிந்த வண்ண மிருந்தனளே. (30)

செல்வ மெவர்க்கு மீந்தருளுஞ் செந்தா மரையா சனத்தாளே
செல்வ மெங்கட் கருங்கூத்தன் செப்புங் கவியே யாதலினாற்
செல்வ மெனக்கா யிருந்தவொரு செல்வன் றலையைத் தருவலென
செல்வ னவனைக் காவென்னச் செயலற்றிருந்தா ளொருதாயே. (31)

நாவி லிருந்திவ் வுலகநல நடத்த வல்ல நாமகளே
சாவித் திரிவெண் மரைநடுவாழ் தாயே யெனக் கோர் தனயனவன்
சேவித் தவையிற் சிரந்தருவான் சென்று னீதென் றிருவிளையாட்
டாவித் துணைநீ யென்றொருதா யஞ்ச லிக்கை கூப்பிநின்றாள். (32)

ஈன்ற தாயர் திருவருளை யெண்ணி நிற்ப வயலுள்ளார்
மான்ற னேக்க மங்கையர்கண் மதிவந் தமைந்த யடிபேசி
யான்ற மதியாற் குலநலநன் காக வென்றே யகமகிழச்
சான்ற வீசன் செயனலமே சாலு மென்று ராடவரே. (33)

மட்டிற் கடங்கா வற்புதமீ தென்ன வுலக மன்பதைகள்
கிட்டிக் குறுக வஞ்சினராய்க் கேண்மையோரும் பகையோரும்
வெட்டித் தலையைத் துணிப்பலெனும் வீரமென்னு மெனக்குழுமி
யெட்டிப் பார்த்து மணித்திருந்துங் காண்பா ரிதுதா னென்னென்றே. (34)

சேவூர்ந் தருளும் பசுபதியைத் திருக்கோ யிற்கொண் டெழுத்தவஞ்செ
யாவூ ரிடையே குழுமியெழுந் தடைந்தா ருறையூர் வாளுருவி
யேவூ ரென்னு முன்றலையை யெறிந்தா னொருவன் றலைரவிழவே
சாவோர் பொருளோ வென்றொருவன் றலையை யறுத்தா னுதிரமெழ. (35)

கெட்டதீதோ வென்றொருவன் கிளர்நாங் தகத்தாற் றன்னைத்தான்
வீட்ட வஞ்சா தறுத்துதலை வெட்டி யெறிந்தா னங்கொருவன்
பூட்டிக் கண்ட மறத்துணித்தான் புட்க ரங்கொண் டாங்குகள
மாட்டி யரிந்தா னொருவீர மன்னன் கண்டோ ரதிசயிக்க. (36)

உயிர்க்கு நிலையாங் கந்தரத்தை யுடைவாள் கொண்டோர் சேயரிந்தான்
செயிர்த்தா வேசமுற்றொருவன் சேதித் தானொள் வசிவீசி
பயிர்ப்புற் றெவரு மஞ்சவிஞ்சிப் பாய்ந்து கண்டந் துண்டித்தா
னயிர்ப்பின் மனத்தா னிக்காளை யச்சோ வென்று ரயனின்றார். (37)

மிடற்றைக் கரவாள் கொண்டரிந்தோர் வீர னெஞ்சி லச்சமிலா
தடுக்குந் தலையைத் தந்தனு லரிதோ வெனது தலையென்ன
வெடுக்கு நவிரங் கைப்பற்றி யீர்ந்தா னிரத்தப் பெருக்கோட
நடுக்க மில்லோர் வாளுழவ னறுக்கிச் சிரத்தை விட்டெறிந்தான். (38)

கண்டார் குந்தங் கையோங்கக் கண்டார்தலைக டரைபுரளத்
தண்டாச் சீரார் பாலருடன் குமரர் விருத்தர் தலைத்தொகைக
ளெண்டான் குறித்த படிகுவிந்த வெல்லாஞ் சொல்வ தென்னம்மா
வுண்டோ முன்னு ளிதுபோலு முளுற்ற லென்றார் கண்டோரே. (39)

தம்மைத் தாமே கொன்றிறக்க வேண்டு மென்னத் தலைபொறித்த
தும்மை வினையோ விதுபுரிந்தோர்க் குறுமோ மறுமை யென்பாருஞ்
செம்மை யோவிச் செயல்கண்டு சித்தங் கலங்கிற் றென்பாரு
மம்மா விந்தக் கண்காட்சி யறியோ மென்று மென்பாரும். (40)

உதிரப் பெருக்கஞ் சேர்ந் தொன்று யுந்தி யாகிச் செல்கின்ற
ததிரப் பூமி சிலகவந்த மாடி யோடி வருகின்ற
சதுரப்பாடாய்ச் சிலகவந்தஞ் சவையை வலமாஞ் சிலகவந்தம்
விதிரப் பிடிக்குங் கூர்வாளை விட்ட தில்லை யென்பாரும். (41)

வாள்கை யேந்தித் தலைகொடுப்பேம் வம்மி னென்று ரிவரிந்த
நாளென் செய்வார் காண்டுமென நடந்து வந்தே நமரங்காள்
மூளநின்ற கொடும்பழியோ பாவமேயோ மூண்ட னகைக்
கோளார்க் கூழியென்பாரு மாகிக் குழுமி நின்றாரே. (42)

ஆவா வென்றே கண்பொத்தி யரனைத் தொழுதா ரொருசாரா
ரேசீ ரேசீ ரென்றுரையா விதயந் துடித்தா ரொருசாரா
ரோவோ வென்றே கையும்ப ரோச்சி நின்று ரொருசாரார்
கூகூ வென்றே பேரொலியே கொண்டா வித்தா ரொருசாரார். (43)

கையைப் புடைத்துப் பரசிவமே காகா வென்று ரொருசாரார்
மெய்யைப் புடைத்து மனமிளகி விம்மா நின்று ரொருசாரார்
தெய்வந் தனையே நொந்து நொந்து திகைப்புற் றிருந்தா ரொருசாரார்
சைவ ராளுர்க் கிச்செயுறுன் றகுமோ வென்பா ரொரு சாரார். (44)

ஆண்பா லாஞே ரெண்ணியவா றிவ்வா றுறையப் பெண்களி லோர்
மாண்பா லரியள் கண்டந்தோ வயிறு வாய்த்த விவர்தாய்மார்
காண்பா ராயின் பெற்றவயி றெரிந்து காந்து சாந்துன்பம்
பூண்பார் மக்கா ளென்றழுது புலம்பா நின்றாள் கண்கலுழ. (45)

வெட்டக் கண்டு புந்திநைந்து விட்டாள் கண்ணீ ரொருமாதங்
கிட்ட மீதோ மக்காணிற் கென்றே கலுழ்ந்தா ளொருமாது
துட்டத் தனத்தாற் சிரமறுக்கத் துணிந்தீ ரென்றார் சிலமாதர்
மட்டிற் றுயரால் வயிறலைத்து வாட்ட முற்றார் சிலமாதர். (46)

கூத்த னிதற்கோ வாரூரைக் குறுகி வந்தா னிக்கோல
நேர்த்தி யேயோ சிரமுருள னெறியோ வென்றார் சிலமாதர்
யார்த்த பலவாம் வருணத்தோர் பறையா துடலந் தலையீயப்
பூத்த மலர்தீ யுற்றதெனப் பொருமி யழுதா ரென் செய்வார். (47)

பறந்து குலாவித் திரிகின்ற பறவை யழுத பதியழுத
நிறைந்த பூங்கா மலர்க்கண்க ணீர்விட் டழுத நிலம ழுத
வுறந்தை நிகழ்ந்த வினைகேட்ட வுயிருள் ளனவில் லனவ ழுத
சிறந்த பொன்னி யாறழுத வென்றான் மற்றென் செப்புவதே. (48)

வேறு

மன்ற முன்றில் வந்த ரிந்த வண்சிரங் களைக்க ணுற்
சென்று கண்டு குந்த ராரு நன்று நன்றெ மக்கிஞுள்
வென்றி வந்த தென்று புந்தி யுந்தவங் கரங்களாற்
குன்றெனப்பு ரிந்து வந்து கூத்த னுக்கு ரைப்பரால். (49)

பெற்ற வாயி ரத்திநெண் டலைகளைப் பிறங்க விங்
குற்ற பெற்றி யாமுஞற்று மாறுரைக்க வுற்றென
நற்ற வத்தி னுமடந்தை நல்லருட் பெரும்பயன்
பெற்றசீ ரிவுலகு காணப் புலவ ரேறு பேசுமால். (50)

உள்ளியெம் முரைதணு துகந்து வந்தி ரெம்மனீர்
துள்ளி நந்த மைந்தர் தங்கை தொட்டரிந்த தலைகளைக்
கிள்ளி மண் டபந்துலங்கக் கேடிலா சனத்தக
வள்ளி யள்ளி வாரிவந் தடுக்கி ரத்தத் தூசிடீர். (51)

கூத்த னிட்ட கட்டளை குறித்துணர்ந்த வக்கண
மாத்தனீ யுரைத்த வண்ண மாக வென்ன மகிழ்வொடுஞ்
சேர்த்துகை யரிக்கொணர்ந்து வந்து வந்து சேமியா
தீர்த்த ராரு மிச் செயற் செயத்திரண்டு சென்றனர். (52)

சிரங்களைச் சிரங்கள்மே லெடுக்குநர் திருந்துதம்
முரங்கள் புல்லி யேகுந ருரைத்த வாறு செய்குநர்
கரங்க ளேந்திச் செல்குநர் கதித்த கூடை தாங்குந
ரரங்க வாவி னூரிருந் தகன்றுறந்தை சேர்குநர். (53)

வந்தநங் குலப்பெருக்கம் வாய்ந்த தென்ன மகிழ்குநர்
கந்தவே ளருந்துதி கரைந்து கைந்து பாடுநர்
சந்தனு சலத் தெழுந்த தண்டமிழ்ச் செயுட்பெற
சொந்தமென் றரிந்த சென்னி யொன்றலாது தூக்குநர். (54)

ஆகி யேகி சோழமன் னரங்கமா டறுஞ்சிரம்
போகியா சனம்பெறப் புரிந்திரத்தத் தூசுற
நாகிளஞ் சரோருகத்த மாலை நால விட்டனர்
வாகை வேற்கை புலவர் கோனின் வருகை நோக்கி நின்றனர். (55

வேறு.

மலர்தலை யுலகத்துண் மக்கட்குட் டமதுகுலம்
பலமலரப் பொருளீந்து பாடுவித்த வியல்பாக
குலமலரத் தலையீந்தி கூத்தனுற் செங்குந்த
ரிலகுகவி கேட்பரென வெங்கெங்கு மறிவித்தார். (56)

முச்சங்கத் தாடிருந்த முதலியர்க ளாரேனு
முச்சங்க ளில்லாத வோங்குதலை பலவரிந்த
வச்சிங்க வினையிருக்க வார்பெற்று ரெனக் கூடன்
மச்சங் கொண்டிடு கொடியோன் மற்றிதனை யறிந்தனனால். (57)

தன்னவையுட் பாவாணர் சான்றவர்கண் மந்திரிகண்
மின்னகு வேற் படையாளர் வேழம்பற் றுரகதங்கள்
முன்னமெழுந் தணிந்தேக முந்நீரந் திரண்டவணம்
பொன்னனந்தே ரூர்ந்து வந்து போந் திருந்தான் மருமானில். (58)

சிரச்சிங்கா தனமிருந்த திருக்கூத்தைக் காணவெணி
முரசங்கா தத்துமெழ மூரித்தே ரானைசிரை
பரிசெல்லுந் தூளியெழப் பனந்தாரான் சேரனெனு
மரசன்கோ ழிப்புரத்தி னணித் தாக வந்தடைந்தான். (59)

கொங்கணங்கன் னடஞ்செழிய கோசலஞ்சீ னந்துளுவம்
சிங்களஞ்சா லவமரிய சிந்துபப் பரமகதம்
வங்கங்கௌ சிகஞ்செய்ய வண்டமிழ்த்தே சத்தவர்க
ளங்கமரா டங்கலிங்க மருணங்காம் போசமுளார். (60)

அரிந்ததலை யாசனமென் ஞமோவென் றயலுள்ள
விரிந்தபல பூரியத்தா ராரியத்தார் வியப்பெய்தித்
தெரிந்தவர்க டெரிவிக்கத் தேர்ந்தவருஞ் சூழ்ந்தவரும்
பரிந்துவந்து செம்பியன்றன் பதியணுகி நின்றனரால். (61)

இன்றிங்க ளாயிரத்தெண் டலைபீத வெள்ளைத்தென்
ளொன்றியசெஞ் சத்தவரு மிருடியார மூத்தமரும்
பொன்றியலை கனைபரமாய்ப் போமோபோ மூயிர்பெறுமோ
சென்றறிவோ மென்றபயன் சிரவைகண் டதிசயித்தார். (62)

நாண்மலருட் சோலைபுக்கு நனைசிறகர் குருகாற்று
மாண்முகமுஞ் செங்கமல மலரணையிற் சிறை யெகினங்
தாண்மிதிக்குந் தடங்கரையுஞ் சார்ந்தவைக ணகர்ப்புறமும்
பாண் மிழற்றுந் தாரரையர் பரிசனர்க ணிறைந்தனரே. (63)

கொள்ளிடமுங் காவிரியுங் கொள்ளிடமி லாதல்கு
மெள்ளிடவி டந்தரலு மில்லாமன் மிடை மக்க
டள்ளிடவு மாங்குற்ற தராபதிகண் மகுடமணி
துள்ளிடவு மாயவவை தொகுகடல்போன் றிருந்ததுவே. (64)

வேறு.

தகரே றியசா மியடிக் கமலத்
துகளே றியசென் னியர் தூயகவி
தகவேற நிரந்தர முந்தரையிற்
புகழே றியவிந் தைபுகன் றிடுவாம். (65)

ஆத்தித் திருமா லயனுங் கெவரு
மேத்தித் தொழவே ரணையிற் பொலிய
சீர்த்திப் பெறுசே ரனும் வைகை யெனு
நீத்தத் துறையோ னுநிறைந் தனரே. (66)

நாவா னலநாடு விதந் தெரியும்
பாவாணரு மந்திர தந்திரரும்
பூவாரு நராதிப புண்ணியரு
மூவா முதலோது முதிர்ந் தவரும். (67)

மன்னு யிரமான தொளாயிரவர்
பொன்னு யிரவெல்லியிலா தொளிசெய்
மின்னு நெடு வேலனை யுன்னினைவார்க்
கென்னு மென யாரு மியம்பினரே. (68)

வேதா கமமே தும்வி ளம்பிலவே
தாதா தலையென்ற தனிக்கவி சொல்
லேதா மென வெண்ணினர் வந்தவருள்
ளோதா மறை நாவின ருற்றனரே. (69)

ஓரா யிரவொண் குலமுற் றவருங்
காரா ளருமற் றுளகண் ணியருஞ்
சீரான வுளத்தெளி வாலிருகண்
பாரா வொருபக் கமிருந் தனரே. (70)

பாயும் புலியன்னர் பனங்கனிபோ
லீயுந்தலை தம்முடலீர்ந்தனவுஞ்
சேயின் னருளின் செயலென் பதுவோ
வேயின்கவி கூத்தனிரும்புகழோ. (71)

புருவங்க ணெறித்தன சில்ல பொறி
பரவக் கண் விழித்தன சில்ல பக
லுருவென்ன வொளிர்ந்தன சில்லசயத்
திருவந்த மலர்ந்த முகஞ் சிலவே. (72)

பயனுற் றனமிப் பாரிற் பிறவி
மயலற் றெனநன்கு மலர்ந்தனவே
சயமுற்றவரிற் சிலவன் றலைக
ணயனத்து விளக்கி நயந்தனவே. (73)

சிலமீசை துடிப்பன செய்யமுகஞ்
சிலவென்றி யுறுஞ் செயலிற் றிகழுஞ்
சிலபல் லொளிதேய் விலதாய்த் திகழுஞ்
சிலபுண் டரகெற்றி தெரிந் திலகும். (74)

பலவா யெயிறும் பருகுந் தலையிற்
பலசிட்டையினிற் பவர்பார் வையுறும்
பல கண்கள் பரப்பி சிவப்ப நகும்
பலவெஞ் சினமுற்று பதைத்திடுமே. (75)

இவ்வாறிவ ணேர்தலை யாசனமேற்
செவ்வா யொளிர் செம்புன லாடை விரித்
தொவ்வா திதை யாதுலகத் திதுபோ
லெவ்வாற்றினு மென்ன விலங்கினவே. (76)

மலைநேர் மணவைப் பதியா னவிர்வான்
கலைமுற்றவு நன்குணருங் கவிஞ
னுலகிற் புதிதா மியரா சனமாந்
தலைமே லெனச்சங்க முழங்கினவே. (77)

நியமங்கண் முடித்தன னிளவையில்
வியமொன் றறியே றனையான் மகிழ்வா
னுயவந்தனன் வந்தன னெய்யெனவே
செய நல்லிய மின்னொலி செய்தனவே. (78)

கலைபூண் முடிவெண் மையவாய்க் கவினு
ருலவுஞ் சிவிகைக் கடையூர்ந் தனனைப்
புலவோர் பலர்பின் றொடரப் புவிமே
லுலைவில் புகழா னவையுற் றனனே. (79)

கண்டார் கயிலாய பரம்பொருளோ
தண்டா மரைசா ரதியா ளுருவோ
கண்டோமென வெண்ணினர் கைகுவியா
மண்டா ரவை வந்து வணங்கினரே. (80)

அப்பே ரவைவந் தவரா ரையுமே
மெய்ப்போத முளாரென வேறறியான்
கைப்போது குவித்துமுன் காண்டல் செயாத்
துப்பாசன மேறி துலங்கினனே. (81)

துங்கத் தலையா சனமேற் றுணிபாற்
சிங்கஞ் சயிலத் தமர்தல் சிவண
வங்கைத் தலைமே லமைவிற் குவியப்
புங்கக் கலைமா தவளைப் புகழ்வான். (82)

வேறு

பிறந்த வினத்தைப் புகழ்ந்தனனென் றிந்த பேருல கோர்
மறந்துஞ் சொலா தொரு சித்தரு ளாய்மக ராலயத்திற்
பிறந்த திருவை துணைவிய ளாய்க் கொளும் பீடுடையோய்
சிறந்தவெண் டாமரை மேவிய சாரதா தேவி யம்மே. (83)

முத்தேவர் கும்ப முனிவாத ராயணர் முன் புகழப்
பெற்றெ விளங்கிய செங்குந்தர் சீரையிப் பேதை சொல
வைத்தா யிதிற்குறை வாராமற் காத்தருள் வாணியிகச்
சித்தாய்ச் சகல கலைவல்ல சாரதா தேவியம்மே. (84)

கருவி லிருந்தெனைக் காத்தவ ணீயெனைக் கண்டுவந்துன்
திருவிளை யாடலின் சீர்வியந் தோதச்செய் வாய் கருணை
மருபடி கம்புத்து கஞ்சுர வீணை வயங்க வெள்ளைத்
திருமல ராசனத் தேறிய சாரதா தேவியம்மே. (85)

பெற்றவ ணீயிந்த வாயிரத் தெண்மரைப் பேதையினேன்
செற்றவ னாயின னென் செய்வை யோதெளிந் தோராதிவான்
முற்றிய வன்பினி லேத்த நிரந்தர முன்ன நின்று (86)
நித்தக நாவு மிருந்தருள் சாரதா தேவியம்மே.

சாதாரக் கேட்டவர் பார்த்தவர் பின்னிக் கதையறிவோர்
மீதாரு நின்னருள் வெள்ளப் பெருக்கின் விளைவெனச் செய்
வேதா கமங்களுஞ் சித்தரும் பத்தரு மேதினியுஞ் (87)
சீதார விந்த வடியுனுஞ் சாரதா தேவியம்மே.

வேறு.

இத்திறங் கலைவ லாளை யெண்ணிமுப்பத்து பாடி
முத்தமிழ் வேந்தர் தம்முண் முதல்வனுஞ் சோழ மன்னை
சத்திய வாலூர்ச் சங்கத் தலைவனை விளித்துச் சொல்வான் (88)
சித்திரக் கவிச் சக்ரேசக் கூத்த னுஞ் செம்மன் மாதோ.

வானநா டளித்த குந்த வண்மைமைய விளக்கி யென்றும்
பேனநீர் வளமார் பூவார் புவனையென் றெடுத்துப் பெட்பி
னீனமி லம்பர் நாடென் றியலுற முடித்தி ழிந்தான் (89)
பானலத் தமிழா வீட்டி யெழுபதைப் பாடி யன்றே.

ஆசனத் திழிந்து நின்ற வம்பலக் கூத்த னஞ்சிங்
காசன முன்னர் நின்றங் கமரர்பெய் மலராற் போர்த்த
மாசில் வெண் மரையின் மேவும் வாணியை நினைப்ப வாங்கத் (90)
தேசிகஞ் சூழ வாக்காள் சிரவணை யிருப்பக் கண்டு.

மாங்குயி லனைய வீணை வயங்குமின் னிசையோ டெட்டெட்
டாங்கலை யகத்து லாவி யமர்பவள் கலைவ லாளர்
தேங்கிய நாவி னீங்கா திருப்பவள் புவன மேழு (91)
மோங்கிய சரமெ லாநீ யென்பது முண்மை யாமே.

மாணக்க மாயர் பாடி வளர்ந்தருட் கண்ண னந்நாட்
கர்ணவந் தடர்ந்த போரிற் கைகளா யிரங்க ளற்ற
வாணனு விருந்து காத்த வகையினுஞ் சீவ னுற்றுன் (92)
சேணவாங் கருணை யாழிச் சிறப்புரைப் பரிய தன்னே.

நாம்பிர பந்தஞ் சொல்லக் கேட்பதை நாடி யீங்கே
தாம்பல தலையைக் கொய்தார் தவிசிக மறியத் தந்தா
ராம்பவ முய்ய வற்ற தலையெலா மங்கத் தொட்டத்
தேம்பர வருளீ கென்னச் செய்பின னெழுப்பு நாதே (93)

வேறு.

சுகவி யானவனி தோதகலை வாணியரு ளாற்றவி செழுந்த தரனார்
பாசுபத வத்திரமெ னத்தெரிய விண்டது படரென வெடித்த வகையாய்த்
தேசுபெற வோங்குசிர மாவணைய கத்துவிரி செம்மைநிற மானவுதிரத்
தூசுதுக ளாய்த்தலைகள் பொம்மென வெழுந்தன துடித்தவவை யஞ்சி, வெருவ. (94)

சீரணவு மவ்வவைமு னிர்ந்துதலை யற்றவுடல் சேரவொரு சேத மிலவாய்த்
தோரணமி ருந்தபட மாமெனவெ ழுந்துதுடை தட்டின வுடுத்த தலைக
ளேரணவு தத்தமது டற்றலைபொ ருந்தின்மு னிர்ந்தவடு வேது மிலவாய்ப்
பூரணவ ரும்பொனையு ருக்குமுக மாம்பொலிவு பொங்கின வொர் மங்கலில, வாய். (95)

அனந்தலிலெ ழுந்தவர்க ளாயினர்க ளித்தனர்க ளாயிரர்க ளெண்ம ரெவருந்
தனந்தனி விரைந்தனர்ந டந்தனர்சி ரித்தனர்பெ ருந்தகையைத் தாயி னெனினர், மனங்களிமி கத்தலையி ருக்கைமு னிருந்தவுழி வந்துகலை மாதை யுருகா, நினைந்துதொழு தங்கைதலை மேற்குவிய நின்றுமலை மானு மணி தோள்க ணிமிர. (96)

மாக முரு மேறெனவு ரப்பினர்க ளைத்தனர்வ லக்கரமி ருந்த சுடர்வா ளோகையுள ராயினர்வி திர்த்தனர்கண் மீசையை முருக்கினர் செருக்கி யொளிரு,மாகமுள ராகிநுத னீறுபொலி நெற்றியொடு மங்கணணி கொண்டு நிலவச், சோகமில ராயவவை சூழ்ந்துளவெ லாருநனி வாழ்த்துரைகள், சொற்றனரரோ. (97)

விச்சையிது வல்லவெனச் சேரலனு மாமதுரை வேந்துமகிழ் கூர்ந்து மணவூ ருச்சிதவ ருங்கவிய மைச்சென்வி ருந்தறிவு றுத்தவல வாசி ரியனை யிச்சவையி ருக்கமுன மெத்தவமி யற்றினெய னப்பொனிவ ளத்துறவனை மெச்சினர்க ளாகவவ னுற்றபுல வோரெவரு மேன்மையை வியந்த னரரோ (98)

வேறு

இன்னண மிருப்பப் பொன்னித் துறையிறை யிறும்பூ தெய்திக்
கன்னெனக் கவச மென்னக் கருதுறும் புலவர் கோமான்
றன்னெனுந் தலைக ளொட்டுத் தூக்குறாத் ததனு ளுளு
மெண்ணலா மொட்டக் கூத்த னெனும்பெய ரியைந்தா னென்றான். (99)

மாசரர் வானம் போர்ப்ப வந்திமை யாம னின்றார்
பூசுர ராதி யாய வருணரும் புலவ ரியாரும்
பேசுவ ராரூர் நம்பி முதலைவாய்ப் பிள்ளை தந்தான்
மூசுவண் டாலுஞ் சோலைப் புகலியான் முன்னை நாளில் (100)

மயிலையி லனலால் வெந்த வென்பினை வனப்பி னுன்ற
குயின்மொழி யயில்வே லொண்கண் கோதையா ளாகச் செய்தா
னயில்வலக் கூத்த மன்ன னுயிரத் தெண்மர் சென்னி
யுயிர்வர வொட்டச் செய்த ஆற்றமே யுயர் வென் றார்த்தார். (101)

கூத்தனூர் கவிக்கு வேண்டும் பரிசெனத் தலையைக் கேட்ட
தேற்றமுங் கைக்கோள் வீர ரிசைந்தவர்க் கிட்ட சென்னி
மாற்றருந் தவிசு மேலோன் மற்றதி லிருந்து பாடுஞ்
சீர்த்தியுந் தலைக ளொட்டச் செய்ததும் வியப்பே யென்றார். (102)

ஆங்கவர் தம்மிற் சில்லோ ரறுந்தலை யுடலி லொட்டித்
தேங்கிய விரணமாறற் றழும்பறற் சீவ னீதற்
றுங்கிய விசல்லி யஞ்சந் தானஞ்ச மானந் தேகந்
தேங்கிய சஞ்சீ வப்பேர் கரணியோ வெனச் செம் மாந்தார். (103)

மற்றிது கேண்மின் கூத்தன் வாய்மொழி வண்மை யாலுங்
கொற்றசெங் குந்தவீரக் குலத்தினர் தருமத்தாலு
நற்றவப் பெற்றி யாய நாமக ளருளி னாலு
மிற்றிவை நிகழ்ந்த வென்ன விருஞ்சபை யுள்ளோர் சொன்னார். (104)

இன்னண மவையோர் கூற விருங்கவிப் பரிச தாக
மன்னிய தலைக டந்தார் மாண்புடை யொட்டக் கூத்த
னென்னு மோர் பெயரெனக் கீண்டினிவழங் கிடவுந் தந்தார்
நன்னிலத் துலவுங் குந்த ரெனப் புகழ் நவின்றான் கூத்தன். (105)

மாமுசு குந்த வேந்தன் வரப்பிர சாத ராகிப்
பூமிசைப் புனித ராகிப் போந்தநாண் முதலிந் நாளுஞ்
சாமித ஞணை யாற்றி னின்றவர் தகவின் மிக்கோர்.
போமுயி ரெனினு நன்றி மறக்கிலர் புகழே பூண்பார். (106)

கோதகன் மனத்த ரென்றுங் குறையிராப் பரிக்கெஞ்.ஞான்றுந்
தீதகல் கான்யா றென்னச் செய்யுநன் றுடையார் வேத
நீதியர் பாவ நேரா ரெய்தலான் மானங் காத்துச்
சோதிவேன் மயிலூர் தங்க டுணையென நம்பு ளத்தோர். (107)

சிரந்தரு மணையைத் தந்தோர்க் கேற்றன சிறப்புச் செய்து
சுரும்பிமி ரலங்கன் மாலை தோளணிந் தினிய கூறி
விரும்பிய வபயன் றானும் வியன்கவிக் கூத்தன் றானுந்
தரும்விடை கொண்டார் தந்த நகருற்றோர் தருக்கி வாழ்ந்தார். (108)

நிலைபுக ழொன்றே வேண்டி நினைப்பவு மரிய: தான
தலைப்பரி சுமந்து பெற்று மற்றதைத் தந்த குந்தர்
குலப்புகழ் விளக்கி யொட்டக் கூத்தனென் றொரு பேர்பெற்று
மலைவிளக் காகி வாழ்ந்தான் புலவர்கோன் மன்னனோடே. (109)

ஆக படலம் 25-க்குச் செய்யுள் 1227,

சிரச்சிங்காதனப் படலம் முற்றிற்று.

செங்குந்தபுராணம் முற்றுப்பெற்றது.

பின்னர் குலோத்துங்கச் சோழன் தன்னாட்டிலுள்ள சிற்றரசர்கட்கும், கருணாகர பாண்டியன் சேரன் முதலிய தமிழ் நாட்டரசர்கட்கும், தமிழ் நாட்டைச் சூழ்ந்த ஏனைய நாட்டு மன்னர்க்கும், தன்னவையில் புலவர் பெருமானாகிய கூத்தர் நிகழ்த்த விருக்கும் செயலை இன்ன நாளில் எனக் குறித்துத் திருமுகம் வரைந்து விடுத்தறிவித்தனன். முன் ஆயிரத்தெட்டுத் தலைகளைத் தருவோமென்றிசைந்த ஆவூரவையிற் குழுமியிருந்தோர் தங்கள் தங்கள் நாடடைந்து நங்குலப் பெருமையை விளக்கும் பிரபந்தம் ஒன்றை அம்பலக்கூத்தன் பாற்பெறும் பொருட்டு அப்பிரபந்தத்திற்குப் பரிசாக தாய்க்கொரு பேறாயிருக்கும் தலைப்பிள்ளைகளின் ஆயிரத்தெட்டுத் தலைகளைத் தருவதாகத் தாங்கள் தந்த வாக்குறுதியை அறிவித்தனர். இதை அறிந்த அவ்வந் நாட்டிலுள்ள குலமக்கள் ஒவ்வொருவரும் நம்மொரு தலை தந்தால் நங்குலப் பிரபந்தம் நீடு நிற்குமன்றோ எனத் துணிவுகொண்டு வீராவேசமுற்று வாளேந்திய கையினராய் ஆவூரையடைந்து ஒன்றுசேர்ந்து குறித்த நாளில் உறையூரை நண்ணி மனமகிழ்ச்சி பூப்பத் தந்தந் தலைகளை தாங்கள் தாங்களே வெட்டி யெறிந்தனர். இவ்வாறு இரத்தப் பெருக்குட னிருந்த தலைகள் ஆயிரத்தெட்டினையும், காஞ்சி நாடாகிய நாட்டினரெல் லாம் அரசனவையிற் கொணர்ந்து குவித்து கூத்தருக் கறிவித்தனர்.

அவரும் அன்னோரைப் பரிந்து நோக்கி மொழிமாரு முதலியர்களே; ஈமது குலோத்துங்க வளவன் வீற்றிருக்கும் கொலுமண்டப வாசலில் வீர லட்சுமி மகிழ நீவிர் கொணர்ந்த தலைகளை சிங்காசனம் போலடுக்கி, அதன்மேல் இரத்தப் பாவாடை விரித்து அலங்கரித்து வைம்மின்; யாம் வருது மென்றுரைத்தார். அவ்வாறே அவர்கள் ஆங்கு கூடியிருந்தோர் யாவரும் கண்டு வியக்குமாறு சிங்காசனம் போலடுக்கி அலங்கரித்து, இரத்தப் பாவாடை விரித்து கூத்தர் வருகையை எதிர்நோக்கி இருந்தனர். இவ்வளவில் முன் அனுப்பி அறிவித்த திருமுகத்தினைக் கண்ணுற்ற கருணாகர பாண்டியன் சேரன் முதலிய அரசரும் ஏனைய நிலத்து மன்னரும், கற்று வல்ல புலவரும், அந்தணர் முதலிய எல்லா வருணத்தாரும் வந்து சேர, வந்த அவரவர்க்குத் தக்க இருக்கையளித்து குலோத்துங்கனும் தனதர்சனத்தில் வீற்றிருந்தனன்.

சிங்காசனம் போலடுக்கியிருக்கும் ஆயிரத்தெட்டுத் தலைகளில் எல்லியு மஞ்சப் பல்லொளிகாட்டிச் சில சிரித்தன. புருவ நெற்றியிலேற உறுத்துப் பார்த்தன சில. கண்கள் சிவப்பநோக்கி அச்சத்தை விளைவித்தன சில வெற்றித் தன்மையை ஓதுகின்ற தருக்கொடு விழிகள் சுழல விருந்தன சில சில தாமரை மலர்போல் முக மலர்ந்திருந்தன. சில முருகப் பெருமான் திருவருளைச் சிந்தித்த வண்ணம் மோனமுற்றிருப்பன போலிருந்தன. சில வெண்பிறை சூடிய வெண்குணனுக்கே யாங்கள் எக்காலும் அடிமையென் பதற்குச் சான்ருக நெற்றியில் நீறு துலங்கத் தோன்றின. சில பகைவரைச் சினப்பனபோல வீரட்டகாசத்தோடு விளங்கின. இத்தகைய காட்சியைக் கண்ணுற் ரோரனைவரும், இவ்விளைவு கவிச்சக்கிரவர்த்தியின் வல்லபந் தானே? செங்குந்தர்களின் மாறுபடாத வீரந்தானே? கலைமகளாரின் திருவருள் தானே? எத்தகையோர்க்கும் விம்மிதம் விளைக்கும் இத்தினக் காட்சியின் புதுமை எவ்வாருய் முடியுமோ என்னும் எண்ணங்கொண்டவராய் பலவாறு பேசி அமைந்து அலையற்ற கடல்போல் அசைவற்றிருந்தார்கள்.

அதுபோது கூத்தர் தமது நித்திய நியமங்களை முடித்து வழிபடு கடவுளைப் பூசித்து வணங்கிச் சிவிகையிலேறிப் பலவிருதுகளும் பரிசனரும் புடைசூழ மங்கள வாத்திய முழங்கச் சபாமண்டபத்தை யடைந்து அங்குத் தமக்கென அமைத்துள்ள சிரச் சிங்காசனத்தி லேறி, பதுமாசனமிட்டு வீற்றிருந்து, இருகரங்களும் தலைமேலேறக் குவித்து, கலைமகளாரது திருவுருவை யுன்னி வணங்கித் துதித்து காப்புச் செய்யுள் கூறி, அவரது திருவருளைப் புகழ்ந்து, சரசுவதி அந்தாதி என வழங்குவதாக முப்பது

டாக்களால் ஒரு பிரபந்தம் பாடி முடித்து, அவரது அருளால் அற்புதமாகவும், அதி சாதுரியமாகவும், வீரச்சுவை தோன்ற குலோத்துங்கச் சோழன் முதலிய மன்னரும், மற்றுள்ள புலவர் பெருமக்கள் முதலானோரும் சிரக்கம்பம் செய்துவியக்க பூர்வம் உமாதேவியார் கொடுக்க வாங்கிய ஈட்டியென்னும் ஆயுதத்தைச் சுட்டி விண்ணுலகத்தார் நறுமணம் வீசும் மலர்மாரி சொரிய எழுபது பாக்கள் பாடி முடித்து, அப்பிரபந்தத்திற்கு ஈட்டி எழுபது எனப் பெயர் புனைந்து தாமிருந்த ஆசனத்தினின்றும் கீழிறங்கினர்.

கீழிறங்கிய கூத்தர் கலைவாணியின் திருவுருவை உன்னி நின்று நோக்க அச்சிரவணையில் அக்கலைவாணி எழுந்தருளியிருக்கும் காட்சியைக் காணப் பெற்று

"கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல் லோரை
நிலையாகப் புரப்பதுவு மவர்நாவி லிருப்பதுவு நிசமே யன்றோ
சிலைவாண னாவிருந்தா யிரம்புயங்க டுணிந்து முயர் சிவ னாற்றான்
தலையாவி கொடுத்திடுஞ் செங்குந்த ருயிர் பெற்றிடநீ தயை செய்
யாயே"

என வோர் பாடலைக் கூறிப் போற்றி மீண்டும் எழுபது செய்யுளால் எழுப்பெழுபது என்னும் பிரபந்தத்தைப் பாடினர். அவ்வளவில் சிங்காசனமாயமைந்திருக்கும் தலைகளெல்லாம் வாணியருளால் புதைபாணமெழுவது போல் ஒன்றன்பின் னொன்றாய் மேலெழும்பிச் சென்று ஆங்காங் கிருந்த தத்தமது முண்டமாயிருந்த உடல்களில் ஒட்டிப் பண்டைய வுருவைப் பெற்று உயிர்வரப் பெற்றன. உடனே அவ்வாயிரத்தெண்மரும் இடிமுழக்கம்போலுரக்கக் கனைத்துத் தோள் புடைத்து மீசை முறுக்கி நகைத்து ஜயம் ஜயம் என்று ஆரவாரித்து அரசவையை அடைந்து ஆங்குவீற்றிருக்குங் கூத்தரைக் கண்டு வணங்கி நின்றனர்.

இவ்வனைத்தையும் கண் கூடாகக் கண்ட கருணாகர பாண்டியனும் மற்றதேயத்து மன்னரும் அடங்காத வியப்பும் களிப்புங் கொண்டு குலோத்துங்கனை நோக்கி அண்ணல்; இத்தகைய தெய்வீகமாய கவிபாட வல்ல புலவர் கோனை ஆசிரியனாகவும் அமைச்சாகவும் படைத்த நின்தவமே தவம் இவருக்கு நினது தந்தை கவிச்சக்கிரவர்த்தி யெனப் பெயர்புனைந்ததோர் வியப்பன்று தெய்வக் கவியென்றே கூறவேண்டும். இவரால் இருமைப் பயனும் பெற்றனையென்று கூறிக் கொண்டாடினர்.

மற்றும் அங்கு கடல்போற் குழுமியிருந்தோரிற் சிலர் தலை ஒட்டம் பெற்று உயிர்வரப் பெற்றுவந்த வீரர்களை அன்புமேலீட்டால் மார்புறப்புல்லி மகிழ்ந்தனர். அந்தணர் வாழ்த்தினர். வேறு சிலர் தம்மரபுக்கோர் பிரபந்தம் பெறும்பொருட்டு உயிர்போன்ற தலைப்பிள்ளைகளின் தலைதந்ததே வியப் பென்றனர். சிலர் இவர்கள் தலைதரினும் புலவர்பெருமான் ஈட்டி எழுபது என்னும் பிரபந்தம் பாடி முடித்து அற்ற தலைகள் ஒட்டுமாறு எழுப்பெழு பதும் பாடியதே வியக்கத்தக்க தென்றனர். சிலர் விசல்லியகரணி, சந்தான கரணி, சமானகரணி, சஞ்சீவகரணி என்னும் பர மௌடதங்கள் இக்கூத்தர் பாலிருக்கவேண்டும். அதனாற்றான் உயிர்வரப்பெற்றெழுந்தன ரென்றனர். சிலர் அஃதெல்லா மன்று இச்செங்குந்தரது வீரதருமத்தாலும் கூத்தரது சொல் விசேடத்தாலும் கலைமகள் அருளாலுமே இவ்வற்புதம் நிகழ்ந்தது ஆதலால் இதுமுதல் இக்கவிச்சக்கிரவர்த்திக்கு அற்ற தலைகள் ஒட்டப்பாடி யதால் ஒட்டக் கூத்தரென்னும் சிறப்புப்பெயரும், இவருள்ளிட்ட செங்குந் தர்க் கெல்லாம் சிரச்சிங்காசனாதிபதிகள் என்னும் பெயரும் இந்நிலவுலக முள்ளளவும் நிலவுக வென்றனர்.

இன்னவாறு பலரும் பலவாறு மொழிய அங்கிருந்தோர் யாவரையும் நோக்கிச் செங்குந்தரைக் குறித்துப் புலவர்கோன்

நிலைதந்தார் புவியினுக்கும் யாவருக்கு மபிமான நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய் திடவென்றே கையிற் றந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த ரென்கவிக்கு விலையதாகத்
தலைதந்தார் எனக்கொட்டக்கூத்தனெனப் பெயரினையுந் தாந்தந்தாரே

என்றொரு பாடலைப் புகழ்ந்து பாடி அவரை மகிழ்வித்தனர். பின்னர் குலோத்துங்கச் சோழன் காஞ்சிநாடாகிய எல்லா நாட்டினர்க்கும் தண்டி கைமுதலிய விருது வரிசைகள் பலவும் வழங்கி மகிழ்வித்தனன். அப்பால் யாவரும் விடை கொண்டு தத்தமது நாடு சென்று வாழ்ந்திருந்தனர். ஒட் டக்கூத்தரும் குலோத்துங்கச் சோழனோடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தார்.

பக்கம் எண்.	செய்யுள் எண்.	பிழை.		திருத்தம்.
11	13	யிந்தகர்ப்புஜ	...	யிந்நகர்ப்புற.
12	16	வோர்களிலினின்னி	...	வோர்களினின்னி.
21	5	லிலையாயென்று	...	ல்லையாமென்று.
23	21	பெண்கணிக	...	பெண்மணிக.
	23	வெண்ணீரக்க	...	வெண்ணீறக்க.
25	35	தெலிந்தேந்	...	நெலிந்தேந்.
28	1	கொன்னி	...	சொன்னி.
		சூரமன்மா	...	சூரபன்மா.
	5	அரயைனு	...	அரையனு.
26	9	வொதிமக்கொடி	...	வோதிமக்கொடி.
38	9	அத்தகுயொழுதி	...	அத்தகுபொழுதி.
39	15	வார்த்லைதயைக்	...	வார்த்தைதயைச்.
	17	குனறந்	...	குன்றந்.
40	18	பெற்றனள்	...	பெற்றன
		வருனருவாற்	...	ளரனருளாற்
41	30	வந்தவாறுதினு	...	வந்தவானுதினு
56	16	நண்ணினயன்னை	...	நண்ணினனன்னை
58	2	றலைவரோடுஞ்	...	றலைவரொடுஞ்.
60	22	படைகளோடுந்	...	படைகளோடுஞ்.
61	30	வாழ்த்தினின்றனர்	...	வாழ்த்திநின்றனர்.
66	9	வெந்படைகள்	...	வெம்படைகள்.
		யிருக்கிவேந்	...	யிருக்கிவெம்.
	14	தேரிதேறி	...	தேரதேறி.
	15	வீந்தழுமேடுத்தெரி	...	வீந்தழுமெடுத்தெறி.
67	16	பல குறைந்தனர்	...	பலர் குறைந்தனர்.
	23	லன்றேன்	...	லன்றேன்.
68	29	மஞ்கு	...	மஞ்சு.
70	44	படையேலாமிழந்	...	படையெலாமிழந்.
74	80	வெம்கணை	...	வெங்கணை.
	81	சார்ரென்று	...	சார்சென்று.
75	91	கடந்தோங	...	கடந்தோங்.
77	102	கனித்தனன்	...	களித்தனன்.
79	120	மிருக்கைகநின்றுந்	...	மிருக்லைகநின்றுந்.
	125	வாழ்த்திச	...	வாழ்த்திச்.
		யாஙக	...	யாங்க.
85	7	காங்கேயின்	...	காங்கேயன்.
		மூந்துந் சூரன்	...	மூந்துஞ் சூரன்.
89	43	மகவைத	...	மகவைத்.
92	1	திங்களெவெண்	...	திங்கள்வெண்.
	4	யன்மையைக்	...	யன்பமையைக்
63	7	தேர்த்துயின்	...	தேர்த்துயின்.
	14	குவரும்	...	ரவரும்.

94	20	குழுசகுழக்	...	குழுச்குழக்.
95	22	வுன்றுதறகுமா	...	வுன்னுதறகுமா.
	23	குன்றுயா	...	குன்றுயர்.
	28	புலிப்பசாகைக்	...	புலிப்பதாகை.
96	35	வீண்	...	விண்.
99	6	லாாா	...	லாரா.
102	27	யேற்ற சேயலென்	...	யேற்ற செயலென்.
	30	காணமிலி	...	நாணமிலி.
	33	மரல்கொண்	...	மால்கொண்.
103	36	டீங்களி	...	டீங்கனி.
106	17	மறவிதனக்கு	...	மறலிதனக்கு.
107	20	நக்குறுத்துச	...	நக்குறுத்துச்.
	21	மூவினுக்கே	...	முனிவினுக்கே.
108	33	கருமை மாற்றி	...	கரும மாற்றி.
111	3	ஆழ கடற்றுறை	...	ஆழ் கடற்றுறை.
	6	இளப்பாள்	...	இளப்பான்.
	5	மேவலாலே வேல்	...	மேவலானே வேல்.
112	16	தோளு வீற்று	...	தோளும் வீற்று.
114	32	னுன்னினே	...	னுன்னின.
116	42	பண்ணுண்	...	பன்னுண்.
	47	கந்த வேற்படைந்து	...	கந்த வெற்படைந்து.
119	2	யோல் குமங்கல்	...	யோங் குமங்கல.
	3	சிந்து குழச்	...	சிந்து சூழச்.
		திகுநகர்	...	திருநகர்.
	10	செற்றமுற்மெழமுக்	...	செற்றமுற்றெழுந்.
120	12	சாய்ந்தன	...	காய்ந்தன.
121	18	றங்குமன்மதை	...	றங்குமன்பதை.
	25	யளவிடங்கரிதே	...	யளவிடற்கரிதே.
122	28	மாழ்கடர் கீசன்	...	மாழ்கடற் கீசன்.
	33	றேரினை துகள்	...	றேரினைத்துகள்.
	40	யிருந்தலேறள்ளி	...	யிருந்தலேதள்ளி.
123	37	செற்றவண்	...	செற்றவள்.
124	46	யோர்ந்தனள்	...	யோர்ந்தனன்.
125	51	பயந்த ன் மன்னே	...	பயந்தாண் மன்னே.
	55	விளங்கனர்	...	விளங்கினர்.
		வயிதாழுர்ந்த	...	வயதாழுர்ந்த.
126	59	னிருப்பவன்	...	னிருப்பவன்.
	62	சிற்றத்ததானினி	...	சிற்றத்தானினி.
	64	திருமுகம் விடுத்தார்	...	திருமுகம் விடுத்தான்.
	62	சிற்றத்த	...	சிற்றத்.
127	67	கொய்தலிற்மேனி	...	கொய்தளிர்மேனி.
	68	ஞருராளும்	...	ஞருராளும்.
129	83	னிழிந்தர்யாரு	...	னிழிந்தார்யாரு.

130	90	வான்விளாநிய	...	வான்விலாநிய
	93	புறப்பேபோந்தா	...	புறம்பேபோந்தா
	97	ருண்டிபோதாங்குவ	...	ருண்டிபொதாங்குவ.
	102	ண்ணெனப்	...	கண்ணெனப்.
132	105	மன்றன் மேலோதி	...	மன்றன்மெல்லோதி
	115	கோராக்	...	கோரருக்.
133	114	ழுய்யநுந்	...	ழுய்யநுந்
	118	மொழிந்துவான்	...	மொழிந்துய்வான்.
145	21	செயலையன்றே	...	செயலையென்றே.
146	22	நம்முடையயருளா	...	நம்முடையருளா.
		தம்முடையயருளா	...	தம்முடையருளா.
	25	னுளங்கொள்	...	னுரங்கொள்.
	27	னவாக	...	னனவாக.
147	29	யுரிய நாட்டான்	...	யுரியநாடாண்.
	35	நிற்றவென்னிவ	...	நிற்றலென்னிவ.
149	47	டெண்டாற்றி	...	டொண்டாற்றி.
150	50	வெண்ணீரணி	...	வெண்ணீறணி.
153	72	துனைசெய்வா	...	துணைசெய்வா.
	75	செய் பொதளப்பிளவா	...	செய்போதளப்பிலவா,
154	79	வியர்ந்து பெயர்ந்து	...	வியந்து பெயர்ந்து
	82	காவலுஞற்றுனரோ	...	காவலுஞற்றுநரே.
162	2	மண்ணிறெய்தவப்	...	மண்ணிறெய்வதப்.
	6	மூண்டென்டெண்ணு	...	மூண்டென்றெண்ணு.
153	7	வரசுங் சோழத்	...	வரசுஞ் சோழத்;
		போற்றிடக்	...	போற்றக்.
	9	மணித்திவ சீவர்ந்து	...	மணித்தவ சிவர்ந்து.
170	69	வெண்டமரைத்தவி	...	வெண்டாமரைத்தவி.
172	78	தங்தேன்னங்களா	...	தங்தேனங்கலா.
176	7	மண்ணு	...	மன்னு.
	9	கவரிபாடக்	...	கவரியாடக்.
178	20	சிந்தயஞ்சுறக்	..	சிந்தையஞ்சுறக்.
		காண்டரு	...	காண்டகு.
	23	றனகட்	...	றன்கட்.
179	35	பரஞ்குட	...	பரஞ்சுட.
180	39	கந்திகண்	...	தந்திகண்.
	42	காய மெனுஞ்சோ	...	காய மெனுஞ்சொ.
		னிகழ்ந்தன்றே	...	நிகழ்ந்ததன்றே.
182	53	காவலெலைத்குந்	...	காவலெலைக்குந்.
	56	மறையி	...	மலரயி.
194	42	தானெர்	...	தானோர்.
		தெளிர்	...	தெதிர்.
	44	தேர்தொடை	...	றேங்தொடை.
195	53	யைறந்தனர்	...	யலறந்தனன்.

	54	பாதஞ் சொர்த்தலார்	...	பாதஞ் சேர்த்தலார்.
301	28	ணிலண்டையா	...	ணிண்டையா.
204	47	செயுங் சோமாசி	...	செயுஞ் சோமாசி.
207	71	நமரிஸசை	...	நமரிசை.
212	13	ருராமுன்	...	ருர்முன்.
213	9	வுததுங்க	...	வுத்துங்க.
	19	சத்தத் தாற்தலே	...	சத்தத் தாற்றலே.
	22	ஞாத்துப்	...	ஞார்த்துப்.
214	24	யாப்றந்தே	...	யாய்ப்பிறந்தே.
215	33	யடிபேசி	...	படிபேசி.
	36	ஒெட்ட	...	சேட்ட.
216	43	ரென்குரைய	...	ரென்றுரையா.
219	62	வெவ்வகை	...	லெவ்வகை.
221	84	பெற்றெ விளக்கிய	...	பெற்றே விளங்கிய.
223	93	னெழுப்புநூே	...	னெழுப்புநூலே.

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
https://senguntharmudaliarhistory.blogspot.com